
# மீண்டும் வசந்தம்



திருமலை. வீ.என். சந்திரகாந்தி

# "மீண்டும் வசந்தம்"

## நாவல்

**திருமலை.வீ.என்.சந்திரகாந்தி**

வெளியீடு
தி/ஜெயகாந்தி கலை கலாச்சார
விளையாட்டு மேம்பாட்டு கழகம்,
572/A, ஏகாம்பரம் வீதி,
திருக்கோணமலை.

# நூல் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| வெளியீடு | : | **03** |
| நூல் | : | மீண்டும் வசந்தம் |
| இலக்கிய வகை | : | நாவல் |
| ஆசிரியர் | : | திருமலை.வீ.என்.சந்திரகாந்தி<br>572/A, ஏகாம்பரம் வீதி,<br>திருக்கோணமலை. |
| தொலைபேசி | : | 026 2224706 |
| முதற்பதிப்பு | : | 2004.12.28 |
| பக்கங்கள் | : | 200 |
| பதிப்புரிமை | : | திருமதி.செல்வச்சோதி சந்திரகாந்தி |
| கணனி வடிவமைப்பு | : | தனபாலசிங்கம் வசந்தரூபன்<br>கோப்பாய் வடக்கு கோப்பாய் |
| வெளியிடுவோர் | : | தி / ஜெயகாந்தி கலை, கலாச்சார<br>விளையாட்டு மேம்பாட்டு கழகம்<br>திருக்கோணமலை. |
| அச்சுப் பதிப்பு | : | றெயின்போ மினிலாப்(பி.ரி.இ)லிமிட்ட்<br>361,நீதிமன்ற வீதி,திருக்கோணமலை<br>0262227498, 0777303938 |
| அட்டைப்பட ஓவியம் | : | செல்வன்.சிவகுருநாதன் தபோதனன்<br>அரசவிடுதி, லவ்லேன்,<br>திருக்கோணமலை |
| விலை | : | **150.00** |
| **ISBN** | : | **955-98979-0-X** |


ஒரு நூலினை கொள்வனவு செய்வதானது புதிய நூல் ஒன்றின் பிரசுரத்திற்கு வழிவகுப்பதாகும்.

# சமர்ப்பணம்...

2004.12.26 தினம் கடற் கோள் அனர்த்தத்தால் தெற்காசியா மற்றும் ஆபிரிக்காவைச் சார்ந்த

இந்தோனேசியா

இலங்கை

இந்தியா

அந்தமான், நிக்கோபார் தீவுகள்

தாய்லாந்து

மலேசியா

மாலை தீவு

சோமாலியா

மியன்மார்

பங்களாதேஷ்

ஆகிய நாடுகளில் பலியாகிவிட்ட ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களுக்கு இந் நூல் படையல்...!

# முன்னுரை

யாழ்ப்பணம் அச்சுவேலியில் 28.12.1946ல் பிறந்த வீ.என்.சந்திரகாந்தி, திருமலையைத் தனது வசிப்பிடமாக வரித்துக்கொண்டு 'திருமலை.வீ.என்.சந்திரகாந்தி'யாக ஈழத்து இலக்கியத்திற்கு பெருமை சேர்த்து வருபவர்.

திருகோணமலை மாகாணத் திறைசேரியில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை புரியும் இவர், ஈழத்து இலக்கிய உலகில் தனக்கென ஓர் இடத்தை வகுத்து 'ஸ்திரீ இலட்சணம்' (2002), 'தொடரும் தலைமுறைகள்' (2003) ஆகிய சிறுகதைத் தொகுதிகளை ஏலவே வெளியிட்டுள்ளார். இப்போது 'மீண்டும் வசந்தம்' என்ற இந்த நாவலை வெளிக்கொணர்வதன் மூலம் நாவலாசிரியர் என்ற தகுதியினைப் பெறுகின்றார்.

தினமுரசு பத்திரிகையில் வெளிவந்த 'எது உண்மை' என்ற சிறுகதையே இவரது முதலாவது படைப்பாகும். 'ஞானம்' சஞ்சிகை வெளியானபோது, அதன் முதலாவது இதழிலேயே 'ஸ்திரீ இலட்சணம். என்ற கதையை எழுதினார். இக் கதை இலக்கிய உலகில் அவரை ஒரு தரமான எழுத்தாளராகத் தடம்பதிக்க வைத்தது. அக் கதைக்குக் கிடைத்த பெரும் வரவேற்பில் உற்சாகமடைந்து மேலும் பல கதைகளை ஞானம் சஞ்சிகையில் எழுதியதன் மூலம் ஞானம் இலக்கியப் பண்ணையில் வளர்ந்த எழுத்தாளரானார்.

சந்திரகாந்தியின் கதைகளில் தூக்கலாகத் தெரிவது மனித உணர்வுகளும் அவற்றின் வெளிப்பாடுகளுமே. உணர்ச்சிபூர்வமான உரைநடை புனைகதை இலக்கியத்தின் இன்றியமையாத பண்புகளில் ஒன்றாகும். அது சந்திரகாந்தியின் எழுத்துக்களில் பளிச்சிடுகிறது. உள்ளத்தில் உருவாகும் உணர்ச்சி மோதல்களையும் கற்பனைகளையும் உள்ளவாறே வாசகர் உள்ளத்தில் பதியவைக்கும் உரைநடை சந்திரகாந்திக்குக் கைவரப் பெற்றிருக்கிறது. இதன் காரணமாகவே அவரது கதைகள் வாசகர் மனதிலே நின்று நிலைக்கின்றன. 'மீண்டும் வசந்தம்' என்ற இந்த நாவலிலும் இத்தகைய பண்பே மேலோங்கி நிற்கிறது.

ஈழத்தின் முதல் தமிழ் நாவல் சித்திலெவ்வை எழுதிய 'அசன்பேயுடைய கதை' 1885ல் வெளியாகியது. இக் கதை

மத்தியகிழக்கு நாடுகள், இந்தியா ஆகியவற்றை நிலைக்களனாகக் கொண்டது. முதன் முதலில் ஈழத்து மண்ணைப் பகைப்புலமாகக் கொண்டு மக்களது சமூகப் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி வெளிவந்த நாவல் மங்கள நாயகம் தம்பையா எழுதிய 'நொறுங்குண்ட இதயம்' (1914) ஆகும். ஆரம்ப காலத்தில் நாவல் என்பது சமுதாயத்துக்குப் பயன்தரும் கருத்துக்களை கூறுவதற்கான 'கதை' வடிவமாகக் கருதப்பட்டது. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் ஈழத்து நாவல் இலக்கியம் பல்வேறு வளர்ச்சிப் போக்குகளை அடைந்தது. ஐம்பதுகளின் பிற்பகுதியில் பொதுவுடைமைச் சிந்தனைகள் தமிழ் இலக்கியத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கியதன் காரணமாக ஈழத்து நாவல் இலக்கியப் போக்கில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தேசிய உணர்வுச் சாயல் இடம் பெற்றதோடு தர்க்கரீதியான வளர்ச்சி காரணமாக சமுதாயப் பிரச்சினைகளின் இயங்கியலான வளர்ச்சிதான் 'நாவல் என்னும் கலை வடிவம்' என்ற கருத்து உருவாகியது. இதன் தொடர்ச்சியாக சாதிப்பிரச்சனை நாவல்கள், மலையகத் தோட்டத் தொழிலாளர்களது முதலாளித்துவத்திற்கெதிரான போராட்ட உணர்வினைத் தூண்டும் நாவல்கள், இனப்பிரச்சினை நாவல்கள், பிரதேசப்பண்பு நாவல்கள், இடம்பெயர்வு நாவல்கள், போராட்ட நாவல்கள், புலம்பெயர்ந்தோர் நாவல்கள் என அவ்வக் காலகட்டத்துக்கு ஏற்ப எரியும் பிரச்சனைகள் நாவல்களின் கருப்பொருள்களாயின. இந்தப் பின்னணியிலேதான் சந்திரகாந்தியின் 'மீண்டும் வசந்தம்' நாவலையும் நோக்க வேண்டியுள்ளது.

வங்கி முகாமையாளரான ராஜநாதர், அவரது மனைவி சீதா, அவர்களது பிள்ளைகளான சுரேஷ், நிலாவினி ஆகியோரைச் சுற்றி நாவல் வளர்கிறது. நாவலின் இயங்கு களமாகத் திருமலை நகர் விளங்குகிறது. குடும்பஸ்தரான ராஜநாதர் வங்கி ஸ்ரெனோவான ஜுலி என்ற பெண்மேல் மையல் கொள்கிறார். அவளது அழகிலும் பேச்சிலும் தடுமாற்றம் கொள்கிறார். ஞாயிறு விடுமுறை தினங்களை அவள் வீட்டில் கழிக்கிறார். பெருந்தொகைப் பணத்தை அவளுக்காகச் செலவிடுகிறார். அவளது சிந்தனையாகவே இருக்கிறார். ஜுலியின் கணவன் ஜோர்ஜ் இவற்றைக் கண்டும் காணாதவன்போல் இருககிறான். இரவில் ஜுலியைச் சந்திக்கச் சென்ற ராஜநாதரை யாரோ மறைந்திருந்து கடுமையாகத் தாக்கி விடுகிறார்கள். அதனால் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்படுகிறார். இதனைத் தொடர்ந்து ஜுலியின் கணவன் ஜோர்ஜ் தாக்கப்படுகிறான். ஜோர்ஜைத் தாக்கியவன் ராஜநாதரின் மகன் சுரேஷ்தான் என்ற சந்தேகத்தில் 'பொலிசார்' அவனைக் கைதுசெய்து சிறையில் அடைக்கின்றனர். சிறையில் அவன் பலரால் நையப்புடைக்கப்பட்டு

மரணத்தைத் தழுவுகின்றான். அதனை அறிந்த அவனது தாய் - ராஜநாதரின் மனைவி சீதா கிணற்றில் குதித்துத் தற்கொலை செய்து கொள்கின்றாள். சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக ராஜநாதர் வீட்டில் அனுசரணையாக இருந்த கந்தவேளிடம் நிலாவினி தவறுகிறாள். ராஜநாதர் வங்கி நிர்வாகத்தால் கட்டாய ஓய்வில் அனுப்பப்படுகிறார். இதுவே மூலக்கதை. இக் கதையின் வளர்ச்சிக்கு பல்வேறு கிளைக்கதைகளும் அவற்றோடு தொடர்பான பாத்திரங்களும் துணையாகின்றன.

இப் படைப்பின் சமூகப்பயன் யாது என்று நோக்கும்போது ஒழுக்கம் தவறுதலும் தீயோர் சேர்க்கையும் தீமையே விளைவிக்கும் என்ற உலகந்தழுவிய அறப்போதனை இந்நாவலின் மூலம் பெறப்படுகிறது.

கதையினூடே உரையாடல்கள் மூலம் சில உண்மைகளை லாவகமாக வெளிப்படுத்திச் சிந்திக்க வைக்கும் ஆசிரியரின் திறன் பாராட்டும் வகையில் அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகுதியைக் காட்டலாம்.

"ஏன் ஜூலி... உன்னால் ஜோர்ஜை உதறிவிட்டு என்னுடன் வாழ முடியுமா?"

ஜூலி அவரை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தாள். குவளையை எடுத்து ஒரு மிடறு மதுவை உள்ளனுப்பினாள். பின்னர் தனக்குத் தடையாக இருந்த கதிரைகளைக் கடந்து வந்து ராஜநாதருடைய முதுகுக்குப் பின்புறமாக வந்து அவரை அணைத்தபடி சிரித்தாள்.

'என் செல்வமே உனக்கு இது போதும்.... இப்போது நீ என்னுடன் தனிமையில் உன் இஷ்டப்படி எல்லாவற்றையும் நிறைவேற்றியபடிதானே இருக்கிறாய்.... என்னால் ஜோர்ஜை தூக்கியெறிந்து விட்டு உன்னுடன் இணைந்து தூரச் சென்றுவிட முடியும்.... ஆனால் உன்னால் முடியாது. பிரிந்து சென்றாலும் அதிக காலம் நிலைக்க மாட்டாய்... நான் சக்கையாகிப் போகும் வரைக்கும் அனுபவிப்பாய். அதன் பின்பு உன் மனைவி பிள்ளைகளை நினைத்து அழத் தொடங்குவாய்.... பின்னர் என்னை அநாதரவாக விட்டுச் சென்று விடுவாய். எனக்கு அப்போது ஜோர்ஜ் என்ற துணைகூட இல்லாமல் போய்விடும்... அவன் வேறு ஒருத்தியுடன் போய்விட்டிருப்பான்....!"

ஆரம்பம் முதல் கடைசிவரை வாசகனை இருத்திவைத்து வாசிக்கத் தூண்டும் ஓர் ஒட்டிழுப்பு இந்த நாவலுக்கு உண்டு. ராஜநாதர், ஜுலி ஆகியோரின் பாத்திரவார்ப்புக்கள் சிறந்த முறையில் அமைந்துள்ளன. வீ.என்.சந்திர காந்திக்குக் கைவரப்பெற்ற தமிழ்நடை ஆங்காங்கே வாசகரை நிறுத்தி வாசிக்கும்படி செய்கிறது.

வீ.என்.சந்திகாந்தி புனைகதை இலக்கியம் பற்றித் தான் கொண்டிருக்கும் கருத்தியலுக்கமைய மிகுந்த நம்பிக்கையோடு இந்நாவலை ஆக்கித் தந்துள்ளார். ஈழத்து சமகால இலக்கியச் செல்நெறிக்கமைய அவரது நாவல்கள் அமைய வேண்டும். சிறுகதை ஆக்கத்திறன் போலவே அவருக்கு நாவலாக்கத் திறனும் கைவரப் பெற்றிருக்கிறது. அவரிடமிருந்து எதிர்காலத்திலும் சிறந்த படைப்புக்கள் வெளிவரும் என்பதற்கு இந்நாவல் கட்டியங் கூறுகிறது.

தி.ஞானசேகரன்
'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர்
28.12.2004.

# எனதுரை

சுனாமி பேரலை பின்வாங்கி விட்டது. அது ஏற்படுத்திவிட்ட பெரும் அனர்த்தங்களிலிருந்து மனிதகுலம் தன்னை நிச்சயம் மீட்டுக் கொண்டு விடும்.........

ஆனால் இலத்திரனியல் ஊடகங்களின் ஆக்கிரமிப்பு இலக்கியத்துறையில் சுனாமி அலையாக வந்து பெரும் பாதிப்பினை உண்டு பண்ணிவிட்டமையை என்னென்பது!

இலக்கியத்துறைக்கு இன்று நேர்ந்துள்ள கதிபற்றி சிந்திக்கையில் ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கும் திறனாய்வாளர்களுக்கும் விமோசனமே ஏற்படப் போவதில்லை என்றே கருதவேண்டியுள்ளது!

தொலைக்காட்சி நாடகங்கள் வீடு தேடி வரும் சுனாமியேயன்றி வேறெதுவுமேயாகுமா?!

எத்தனை சிறார்கள் இலகுவில் மதுவுக்கும் போதைவஸ்துக்களுக்கும் ஆளாகி விடுகின்றார்கள்.........!

எத்தனை இளைஞர்கள் முன்யோசனை எதுவுமின்றி குற்றச் செயல்களுக்கு உட்பட்டு விடுகின்றார்கள்..........!

எத்தனை வயோதிபர்கள் வெட்கம் மானத்தை மறந்து பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டு சிறை செல்கின்றார்கள்..........!

சுனாமி சிறுவர், இளைஞர், வயோதிபர் என்ற வேற்றுமையின்றி அனைவரது உயிரையும் பறித்துச் சென்றது போலவே இல்லம் தேடிவரும் தொலைக்காட்சி நாடகங்களும் கண்ணெனப் போற்றத்தகும் எமது குடும்ப அங்கத்தவர்களை நாசம் செய்துவிட்டு போய்விடுவதை எமது சமுதாயம் எப்போது உணரப் போகின்றது..........?

இந் நிலையில் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் முன்னால் ஒரு பணி விரிந்து கிடக்கின்றது.

யாதார்த்த பூர்வமான மனித உணர்வுகளின் நுட்பங்களை தற்கால சூழ்நிலையின் பின்னணியில் சுவாரசியம் தரும் வகையிலும் தொலைக்காட்சி நாடகங்களை பின்தள்ளும் வகையிலும் ஆக்கித் தருதலாகும்.

சிலந்திப் பூச்சியானது தனது வலையில் தானே சிக்கி மரணிப்பது போல.....

மனிதன் தனக்குத் தானே தளைகளை ஏற்படுத்திக்கொண்டு அதிலிருந்து மீள முடியாதவனாக தவிக்கின்றான்.

மனித உணர்வுகளை கீறிப்பார்க்கையில் அவன் தனக்கு சரியெனப்பட்ட ஒன்றினை செய்யும் போதும் மற்றவர்கள் அதனை பிழையென கருதும் சந்தர்ப்பம் இருப்பதனை உணர்ந்து அச் செயல்களை பிறருக்கு மறைக்க முயல்கின்றான்.

அதேசமயம் அவனது அச் செயல்களால் தமக்கு பாதிப்பு உண்டாகி விட்டது என அவனைச் சார்ந்தவர்கள் நினைப்பதும்.......... அதனால் ஏற்படும் பாதகமான விளைவுகளும் எமது சமுதாயத்தின் வரலாற்றில் நீண்ட காலமாகவே புரையோடிக் கிடக்கின்ற அம்சங்களாகும்.

எமது சமுதாய மட்டத்தில் உள்ள அந்த மனித உணர்வுகளை சீண்டிப் பார்க்க வேண்டும் என்கின்ற எனது ஆதங்கம் தான் இந்த நாவலின் கருப்பொருள்.

ஆனால் எனது அடி மனதில் ஒரு நோக்கம் இருந்தது. அது தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து விலகி யாதார்த்தத்தை மட்டும் இந் நாவல் பேச வேண்டும் என்பதாகும்........... பிரதான கதாபாத்திரங்களான ராஜநாதரதும் ஜூலியினதும் உரையாடல்கள் கதையின் நோக்கத்திற்காக மாற்றி எழுதப்பட்டவையல்ல....... அவை யாதார்த்த பூர்வமானவை..........! நம்புங்கள்............!

விவாகம் செய்யாத ஒருத்தனுக்கும் ஒருத்திக்குமிடையில் தான் காதல் மலரும் என்றில்லை.!

எனது கதையின் நாயகனும் நாயகியும் தனித்தனி விவாகமாகியவர்கள். ஆனால் அவர்களிடையே காதல் மலர்கின்றது. அவர்களை மையமாகக் கொண்டு சுழலும் இந் நாவல் இருபத்தினான்கு அத்தியாயங்களை மட்டும் கொண்டதாகும். அத்துடன் இந் நாவலின் நோக்கம் முடிவடைந்து விடுகின்றது.

பின்னர் இருபத்தைந்தாவது அத்தியாயம் எழுதப்பட்டதன் காரணம் என்ன....?

எம்மிடையே மிகமிக மென்மையான உள்ளம் கொண்டவர்கள் இருக்கின்றார்கள்............

அவர்களுக்காக!

மனித சமுதாயத்தின் பிரதான அம்சமாக அமைந்துள்ள அன்புள்ளத்தை மட்டுமே கொண்ட மாதர்கள் இருக்கிறார்கள்......... அவர்களுக்காக!

நாவல் அதன் முடிவில் நிறைவெய்தியிருக்க வேண்டும் என்கின்ற விதிமுறை ஒன்று இருக்கின்றது....... அதற்காக.......!

ஆனால் நீங்கள் பல நாவல்களை படித்து தேர்ச்சி பெற்ற சிறந்த வாசகர்களாக இருப்பீர்கள்..... அப்படியாயின் இருபத்தினான்காவது அத்தியாயத்துடன் இந் நாவலை படிப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள்........... உண்மையிலேயே இந்த நாவல் அந்த அத்தியாயத்துடன் நிறைவெய்து கின்றது. நாவலின் நோக்கம் அதற்கப்பால் செல்லவில்லை........! நாவலை படித்ததன் பயனை நீங்கள் எய்தும் இடம் அதுவேயாகும்.........!

அன்புள்ளம் படைத்த வாசக நெஞ்சங்களே..........!

எனது 'ஸ்திரீ இலட்சணம்' மற்றும் 'தொடரும் தலைமுறைகள்' ஆகிய சிறுகதை தொகுப்புக்களைப் படித்து இன்றும் கூட நேரிலும் தொலைபேசிவாயிலாகவும் என்னைப் பாராட்டிக் கொண்டிருக்கும் உங்கள் நல்லெண்ணமே இந்த நாவல்.

தவிர இந்த நாவல் எவரையும் சுட்டிக் காட்டுவது அல்ல. நான் கண்டும் கேட்டும் உணர்ந்தவற்றை.. நீங்கள் புக முடியாத மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று படம் பிடித்து உங்கள் முன் சமர்ப்பித் திருக்கின்றேன். அவ்வளவே!

*நன்றி.*

*திருமலை.வீ.என்.சந்திரகாந்தி.*
*572/A ஏகாம்பரம் வீதி.*
*திருக்கோணமலை*
*தொ.பே.:- 026-2224706*

*2004-12-28*

# "மீண்டும் வசந்தம்"

திருமலை நகர் வாழ் அனைத்து மக்களின் காவல் தெய்வமாம் அருள்மிகு பத்திரிகாளி அம்மன் ஆலய வாயிற் கோபுரம் வானத்தை தொட்டு நிற்கின்றது... ஆதவன் அளித்த வெம்மையை கடற்கரைக் காற்று சமன் செய்து கொண்டிருந்ததால் ஆலய மண்டபத்தில் நிறைந்திருந்த பக்தர்கள் எவ்வித அசௌகரியத்தையும் உணராதவர்களாக பஞ்சாராத்தியின் இலாவகமான அசைவிலும் கணீர் என்று சப்திக்கும் மணி ஒலியிலும் கும்மென்று பரவும் சாம்பிராணி வாசனையிலும் திளைத்து தமது வாழ்க்கைப் போராட்டத்தின் அழுத்தங்கள்... கவலைகள்.. நிறைவேறாத எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் ஒரு கணம் மறந்து பேரின்ப சுகத்தின் ஒரு துளி தீர்த்தச் சுவையில் சொக்கி நிற்கின்றனர்...

நிலாவினிக்கு இந்த வாழ்க்கையினுடைய சுமைகளோ ... ஏன் அர்த்தங்களோ கூட இந்த இருபத்தியொரு வயதின் பருவ காலநிலையிலும் கூட புரிபடாத விடயங்களாகவே இருந்தன... எவரையும் சட்டென திசை திருப்பும் அழகு... நிறம்... உடையலங்காரம்...! ஆனால் வெட்டொன்று துண்டு இரண்டாக ஆண்களை அலட்சியம் செய்து தூக்கியெறிந்துவிடும் மனத் தைரியம்... மன ஓர்மம்...!

கருஞ்சிவப்பு சுரிதார் அவளது அழகை மேலும் மெருகூட்டிக்கொண்டிருந்தது... அளவான நகைகள் அணிந்திருந்தாலும் அந்த வெள்ளைக்கல் அட்டியல் மட்டும் அவளது முகப் பிரகாசத்தில் மின்னிக் கொண்டிருந்தது.

பக்தர்கள் கூட்டத்தினுள் நுழைந்து ஆண்கள் எவரிலும் முட்டிக் கொள்ளாதபடி முயன்று பெண்கள் அணிக்குள் வருவதற்குள் அவளுக்கு போதும் போதும் என்றாகி விட்டது.

அவளது கண்கள் அந்த சன நெரிசலில் தாயை தேடியது. தனது அம்மாவை 'ஸ்கூட்டியில்' அழைத்து வந்து கோயிலில் இறக்கி விட்டு நண்பிகளை சந்திக்க சென்றவள் பூசை முடிவடையும் நேரம் அறிந்து அங்கு வந்திருந்தாள். அம்மா என்றால் அவளுக்கு உயிர்..! அதன் பின்பு தான் அப்பாவோ அண்ணாவோ...

நிலாவினியின் மான் விழிகள் பரவலாக மேய்ந்து முன் வரிசையில் பக்தி சிரத்தையுடன் கை கூப்பி மெய் சிலிர்த்து நிற்கும் அவளது தாய் மீது வந்து தரித்தது...

சீதா, தனது கணவன் இரு குழந்தைகள் என்கின்ற கட்டுக் கோப்பான குடும்பத்தின் தலைவி. தெய்வத்தை நினைந்து தெய்வத்தையே வழிபடுவதன் மூலம் அமைதியான வாழ்க்கையை முன்னெடுப்பவள். வீபூதி சந்தனம் பிரசாதம் பெற்றதும் சீதா முண்டியடியாமலும் நிலாவினி இது வரையில் தன்னைக் கண்டிருப்பாள் என்ற நம்பிக்கையுடனும் நிதானமாக ஆலய வாயிலை நோக்கி நடந்து வந்தாள்.

இடையில் நிலாவினி ஓடி வந்து தாயுடன் இணைந்து கொண்டதோடல்லாமல் கோயில் என்பதையும் கருத்துக் கெடுக்காமல் உற்சாகமாக கதை பேசத் தொடங்கினாள். அதனைத் தடுத்த சீதா தனது கையாலேயே மகளின் நெற்றியில் வீபூதி பூசி சந்தனம் இட்டபின் மகளின் கையை ஆதரவாக பற்றி வெளியே அழைத்து வந்தாள்.

"பேசாமல் வா பிள்ளை... மற்றவை பாக்கினையெல்லே..." தாயின் அதட்டலில் சிறிது தூரம் அமைதியாக வந்த நிலாவினி கோயில் வீதிக்கு வந்ததும் வராததுமாக தாயின் தோளைப் பற்றியபடி...

"என்னைக் கதைக்க விடுங்கோ அம்மா..."

என்று கூறி கன்னத்தோடு கன்னமாக குழைந்து கெஞ்சினாள். சீதாவுக்கு தெரியும் மகள் தனது மனதில் தென்படும் எந்த விடயத்தையாயினும் தனக்கு சொல்லாமல் ஓய மாட்டாள் என்பது.

" என்ன பிள்ளை இன்னும் நீ சின்னப் பிள்ளையே.."

சீதா சிரித்தபடி கூறினாள்...

"ஏனம்மா.. நீங்கள் என்னை இன்னமும் குட்டி குட்டி எண்டுதானே கூப்பிடுகிறனீங்கள்.. நான் உங்கடை குட்டி .. குட்டி.. செல்லக் குட்டி தானே?"

நிலாவினி தாயின் கன்னத்தை கிள்ள என்று எண்ணியிருந்த சமயமே தாய் 'நீ இன்னும் என்ன சின்னப் பிள்ளையோ?' என்று கேட்டு குத்திக் காட்டியதால் தனது நினைப்பை செயல்படுத்தாமல் ஒதுங்கி 'ஸ்கூட்டியை ஸ்ராட்' செய்தாள்

பின் ஆசனத்தில் அமர்ந்தபடி சீதா..

" சரி.. சரி.. சொல்ல வந்ததை சொல்லு" என்று தூண்டவும் நிலாவினி வண்டியை ஓட்டியபடியே. "அம்மா நான் இப்ப மலர் அன்ரி வீட்டைதான் போயிருந்தனான். மனோ அக்காவும் ராஜீ அக்காவும் கேட்கினை தங்கடை தங்கச்சியை எங்கடை அண்ணைக்கு செய்து வைப்பமோ எண்டு.."

ஸ்கூட்டியின் முன்புறம் ஆகாய விமானத்தின் முகப்பு போல அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தது... நிலாவினியின் இலாவகமான சவாரியில் அது கடைவீதியை தாண்டி மிதந்து நகர்ந்து கொண்டிருந்தது...

நிலாவினி கூறிய விடயம் சீதாவின் மனத்தில் "சில்" என்ற இதத்துடன் பதிந்தது.. மலரின் இளைய மகள் தர்ஷியில் சீதாவுக்கு இனம் புரியாத பாசம் ஒன்று இருந்தது.

மலர் அன்ரி திருகோணமலையை பிறப்பிடமாகக் கொண்டவள். ஆயினும் சீதாவை நட்புடனும் சகோதர பாசத்துடனும் நெருங்கி பழகி வந்தாள். சில வருடங்கள் முன்னர் கணவனை இழந்துவிட்ட நிலையிலும் தனது பெண் பிள்ளைகள் மூவரையும் தமிழ் கலாச்சாரத்திற்கு எவ்வித முரண்பாடும் இல்லாதபடி 'பொத்தி' வளர்ப்பதில் வெற்றி கண்டிருந்தாள்..

மூத்தவள் மனோ அண்மையில் விவாகமாகியிருந்தாள். ராஜியை கேட்டு வந்திருந்தார்கள்..

மூவரிலும் இளையவளே தர்ஷினி.. மிகுந்த அழகும் நிறமும் அவளது சாயலாக இருந்தது.. குழந்தைத்தனமும் வஞ்சகமற்ற தன்மையும் வயதில் மூத்தவர்களை மதித்து நடப்பதும் அவளது சுபாவங்களாக இருந்தன.

சீதாவுடனான அவளது அன்பில் அதிகம் நெருக்கம் இருந்தது. சீதா மகளை தூண்டினாள்..

" கொண்ணையை தர்ஷிக்கு கேட்டதுக்கு நீ என்ன பிள்ளை சொன்னனி..?"

நிலாவினி தாயின் பக்கம் சரிந்தபடி கூறினாள்...
" அண்ணாவுக்கு நாங்கள் இப்ப கலியாணம் செய்து வைக்க மாட்டம். அவர் எங்களோடைதான் இருப்பார் எண்டு சொன்னனான்.."

'ஸ்கூட்டி' நகர எல்லையை தாண்டி 'பொலிஸ்' நிலையத்திற்கு சிறிது தூரம் அப்பால் உள்ள பாலத்தில் ஏறியதும் நிலாவினி அணிந்திருந்த தலைக் கவசத்தினூடாக 'ஊ'.. என்ற இரைச்சலுடன் புகுந்த காற்று அவர்களுடைய உரையாடலை தடை செய்தது...!

***************************

மலர் அன்ரி விதவையாகும் முன்னர் இருந்தே தினமும் காலையில் முழுகி கேசத்திற்கு சாம்பிராணி புகை காட்டும் பழக்கமொன்றை கடைப்பிடித்து வந்தாள். அதே பழக்கத்தை பிள்ளைகளுக்கும் புகட்டியிருந்ததால் வீடு எந்நேரமும் சாம்பிராணி வாசனையுடன் கோயில் போல புனிதம் காட்டும். பெண் பிள்ளைகள் மூவரும் தேவதைகள் போல அந்த வீட்டில் நடமாடிக் கொண்டிருக்கும் அழகே தனி!

" ஏன் பிள்ளைகள் நிலாவினி பெடிச்சி வந்தாள்... போனாள்... என்னை ஏனெண்டும் ஒரு கேள்வி கேட்கேல்லை... நீங்கள் அவளோடை சண்டை ஏதும் பிடிச்சனீங்களே..?"
மலர் வினாவினாள்.

ராஜி ஏதோ அலுவலாக போனவள் தாயின் குரல் கேட்டு ஒரு கணம் நின்று திரும்பி பார்த்துவிட்டு தனக்கு சம்பந்தமில்லாத கேள்வி என நினைத்தவள் போல போய்விட்டாள். மனோ மூத்தவளாகையால் அவளுக்கு பொறுப்புடன் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் இருந்தது.

" அம்மா.. நிலாக் குட்டிக்கு மூக்குக்கு மேலை கோபம் வாறதுக்கு நாங்கள் ஒண்டும் செய்யேலாது.."

" ஏன் என்னவாம்..? —" மலர் வினாவினாள்.

" அம்மா... தெரிஞ்சோ தெரியாமலோ தங்கச்சி சுரேஷை மனதிலை நினைச்சுக் கொண்டு இருக்கிறாள். அதே போல அவற்றை அம்மா அப்பாவோடையும் அன்பு காட்டி நெருங்கி நடக்கிறாள்... அவையளும் தர்ஷியை தங்கள் வீட்டுப் பிள்ளைபோல நடத்துகினம்.அவளுக்கு ஏதாவது பொருள் தேவையெண்டால் " நீங்கள் வாங்கி கொடுக்கிறியளோ அல்லது நாங்கள் வாங்கி கொடுக்கவோ.." என்று உரிமை பாராட்டி கதைக்கினை. நானும் ராஜியும் சுரேஷோடை விழுந்து விழுந்து கதைக்கிறம்.. பகிடி விடுகிறம்.. ஆனால் தர்ஷி சுரேஷைக் கண்டால் நாணத்தோடை ஒழிச்சு விடுகிறாள்.. நாங்களெல்லாம் நிலாவினி வீட்டை போயிருக்கிறம். ஆனால் தர்ஷியை நீங்கள் இத்தனை வருஷத்திலை ஒருநாள் கூட அங்கை போக விடேல்லை.. 'அவள் முறைப்படி போகட்டும்' எண்டது போலை உங்கடை நடைமுறை இருக்குது... இப்படி எல்லோருமே ஊமை நாடகம் ஆடிக் கொண்டிருந்தால் உண்மையை ஆர் போட்டுடைக்கிறது.. அதுதான் நாங்கள் நிலா குட்டியை கேட்டனாங்கள் ' கொண்ணையை தங்கச்சிக்கு தா' எண்டு... அதுக்கு அவா கோபிச்சுக் கொண்டு ஓடினது போலை போயிற்றா.."

மனோவின் விளக்கமனைத்தையும் காது கொடுத்து கேட்டுக் கொண்டிருந்த சீதா சிறிது நேரம் அமைதி காத்தாள்..

' ராஜநாதர் சீதா குடும்பம் யாழ்ப்பாணத்தை அடியாகக் கொண்டவர்கள்.. அதிலும் அங்கே உயர் சாதிக்காரர்.. உயிரை விட துணிவார்களேயன்றி சாதியை விட்டுக் கொடுக்க முன்வரமாட்டார்கள்.. அதிலும் குடும்பத்தில் பெண்களுக்கு உயர்வான இடத்தை கொடுத்து போற்றி பாதுகாப்பவர்கள்... ராஜநாதர் வங்கி முகாமையாளர் என்ற வகையிலும் பொருளாதார ரீதியிலும் உயர் மட்டத்தில் நிற்பவர். எங்கள் குடும்பம் ராஜநாதர் குடும்பத்திற்கு எந்தவகையிலும் இளக்காரம் இல்லாவிட்டாலும் எமது இரத்த உறவினர்கள் சிலர் இனம், மதம், ஏன் சாதி மாறியும் கூட விவாகம் செய்துவிட்டார்கள்.. தர்ஷியை சுரேஷ் மணந்து கொண்டு விட்டால் பின்னர் நிலாக் குட்டிக்கு விவாகப் பேச்சு என்று வரும் போது சிக்கல் ஏற்படும் என அவளது பெற்றோர் நினைக்கிறார்கள்..'

மலரின் நனவோடையில் அப்படியெல்லாம் எண்ண அலைகள் உருவாகின...

தர்ஷியின் தாய் என்ற ஸ்தானத்தில் மலரும் மூத்த சகோதரி என்ற வகையில் மனோவும் சில விடயங்களை மனம் விட்டு பேசினர்..

“ ஏனம்மா.. நீங்களும் நானும் ஒருக்கால் சீதா அன்ரி வீட்டுக்கு நேரிலை போய் தர்ஷியின் விசயம் பற்றி பேசினால் என்ன?”

மனோ வினாவினாள்.

“ அது சரி பிள்ளை.. அன்பு காதல் எண்டுற விசயங்கள் வேறை.. விவாகப் பேச்சு என்கிற விவகாரம் வேறு...காதல் எண்டு சொன்னால் எதுவுமே தடையாக தெரியாது.. ஆனால் பேச்சுக்கால் எண்டு போனால் முதலிலை சாதகப் பொருத்தம் பார்க்க வேணும் எண்டு சொல்லுவினம்.. பிறகு சீதனம் எண்டும் இனாம் எண்டும் பேச்சு வரும்.. எல்லாமே சரி வந்தால் தங்கைக்காரிக்கு விவாகம் முடியுமட்டும் காத்திருக்க வேணும் எண்டு சொல்லுவினம்... இப்படி பல சிக்கல்கள் வரும் எண்டிறதாலைதான் நான் யோசிச்சுக் கொண்டிருக்கிறன்...”

மலர் தனது உள்ளக் கிடக்கைகளை மகளுக்கு கொட்டினாள்...

இப்போ மனோவுக்கு யோசனை பிடித்துவிட்டது!

**************************

தர்ஷி பற்றி நினைக்கையில் மனோவின் இதயம் கனத்தது. ‘இளையவளாக பிறந்து வல்லமை அற்றவளாக இருக்கும் அவள் எப்படித் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப் போகின்றாள்.... அம்மாவுக்கும் மூத்த சகோதரங்களான எனக்கும் ராஜிக்கும் கட்டுப்பட்டே தனது வாழ்க்கையை குறுக்கிக் கொண்டுவிடப்போகின்றாளா?’ என்று நினைக்கையில் அவளுக்கு அழுகை பீரிட்டுக்கொண்டு வந்தது...

தனது மேசையில் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட குறிப்பேடு ஒன்றினை புரட்டிக்கொண்டிருந்த தர்ஷிக்கு முன்பாக வந்த மனோ...

“ ஏன் தர்ஷி... உன்னுடைய விருப்பு வெறுப்பு எல்லாத்தையும் மனத்திற்குள்ளை வைத்துக் கொண்டு கற்பனையை மட்டும் பெரிதாக வளர்த்தபடி

இருந்துவிட்டு கடைசியிலை சுரேஷை நீ இழக்கப்போறியா?" என்று கவலையுடன் வினாவினாள்.

மனோவின் கவலை என்ன என்பது பற்றி தர்ஷி அறியாதவளல்ல.. கவலை தோய்ந்த முகத்துடன் அவள் சிறிது நேரம் சிந்தித்தபடி இருந்தாள். பின்னர் தனது மூத்த சகோதரிக்கு பொறுப்புடன் பதில் கூறினாள்..

" அக்கா.. என்னிலை நிலாக் குட்டியின்ரை அம்மா அப்பாவுக்கு விருப்பமும் நம்பிக்கையுமிருக்கு.. அவையள் என்னை பிள்ளை போல நேசிக்கினை.. சுரேஷ"க்கு உத்தியோகம் கிடைச்சும் கொஞ்சக் காலம் தானே.. அவரும் தன்னை படிக்க வைச்சு ஆளாக்கிய பெற்றோருக்கு உழைச்சுக் கொடுக்கத் தானே வேணும்.. எனக்கு வயசிருக்கு. நீங்கள் ஏன் அவசரப்படுகிறியள்..?"

தர்ஷி தனது நிலைப்பாட்டை தெளிவு படுத்தினாள்...

மனோவுக்கு தங்கையினது விளக்கம் சரியானதாக படவில்லை..

" உனக்கு விசரடி.. நீ 'ரியூசனிலையும்' 'ரெக்கிலை'யும் காணேல்லையா பெட்டைகள் என்னமாதிரி பெடியன்களை வளைச்சுப் பிடிக்கிறாளவையெண்டு.. ஒருத்தனை மனதுக்குப் பிடிச்சிட்டால் நாலு நாளைக்கு விதம் விதமாய் உடுப்புடுத்திக் கொண்டு அவன்ரை கண்ணிலை படுகிறமாதிரி திரிய வேணும்... தம்பியர் ஒரு நாள் பார்வையை திருப்புவார்.. அடுத்தடுத்தநாள் ஒரு 'சிக்னல்' கொடுப்பார்.. அதெல்லாம் எனக்கு பிடிக்காதெண்டது போல வெட்டி ஒரு பார்வை பார்த்துவிட்டு போய்விட வேணும்.. அதோடை பெடிப்பிள்ளை பின்னாலை திரிய தொடங்குவார். அதெல்லாம் உனக்கு கிடைக்கிற சொத்தில்லை எண்டு உணர்த்துகின்ற மாதிரி கொஞ்ச நாளைக்கு ஆளை அலைக்கழிக்க வேணும்.. அந்த நேரத்திலை இன்னும் நல்லாய் உடையணியிறதோடை குறிப்பிட்ட ஒரு 'பெர்பியூமை' பாவிக்க வேணும்... அதை அவர் உன்ரை வாசனை எண்டு நினைத்து நாய் மாதிரி முகர்ந்து திரிவார்..."

மனோ தர்ஷியின் முக குறிப்புக்களை பார்த்தபடியே கதை சொல்லிக் கொண்டிருந்தாள்...

தர்ஷியோ சகோதரி எப்படி தனக்கு மாப்பிளை பிடித்தாள் என்று அறிய நல்ல வாய்ப்புக் கிடைத்ததாக எண்ணி..

"பிறகு.. பிறகு.. சொல்லன் அக்கா.." என்று கூறி மனோவின் கதை சொல்லும் ஆர்வத்தை தூண்டினாள்.

மனோ சிரித்த படியே மீண்டும் தொடர்ந்தாள்...

"அவர் அப்படி பின்னாலை சுற்றித் திரியிறதை இரகசியமான விசயமாக வைச்சிருக்க அவருக்கு இடம் கொடுக்கக் கூடாது. நாலு பேருக்கும் தெரியிற அளவுக்கு ஆளை கொண்டு உலாத்த வேணும்... அந்த நேரத்திலை அவருடைய நண்பர்களெல்லாம் அவற்றை காதல் விசயத்தைப் பற்றி கேட்க தொடங்கி விடுவினை..."

மனோ கூறவும்...

"அப்படி கேட்ட உடனை என்ன நடக்கும்..?" என தர்ஷி வினாவினாள்.

"அந்தக் கட்டத்திலை அவருக்கு தனது காதல் வெற்றிப் பாதையிலை போகிறதாக கதை அளக்க வேண்டி ஏற்படும்... அதுதான் உச்சக் கட்டம். அந்த நேரத்திலை என்ன செய்ய வேணுமெண்டால் எங்களட்டை இருக்கின்ற 'வீக் பொயின்ற்' எல்லாத்தையும் மெல்ல மெல்ல சொல்லிப் போட வேணும்..." மனோ விளக்கவும்..

"வீக் பொயின்ற் எண்டால்?" தர்ஷி வினாவினாள். " உதாரணமாய் எங்கடை சாதி சரியில்லையெண்டால் அதை... 'நீங்கள் உயர் சாதிக்காரர்.. உங்கடை பெற்றோர் எங்கடை குடும்பத்திலை பெண் எடுக்க விரும்ப மாட்டினம்' எண்டு சொல்ல வேணும்..." — மனோ கூறவும் தர்ஷி உள்ளூர சிரித்தபடியே...

"அப்ப அவர் என்ன சொல்லுவார்?" என வினாவினாள்.

மனோ நடித்தே காட்டினாள்...

"அடியே பொடிச்சி ... நீ ஏன் கவலைப்படுகிறாய்.. சாதி எண்டு எங்கை இருக்கிது..? நாங்கள் பிறக்கேக்க என்ன சாதியிலை பிறக்க வேணும் எண்டு

கேட்டுப் பிறக்கேலுமே... சாதியெண்டிறது மனித குலம் தனக்குத் தானே போட்டுக் கொண்ட பூட்டே இல்லாமல் வேறையொண்டும் இல்லை... நீ ஒண்டுக்கும் கவலைப் படாதை அதுக்கெல்லாம் நான் பொறுப்பு எண்டு விளாசுவார்..."

"பிறகு..?" தர்ஷி

"எங்களுக்கு குடும்ப கஷ்டம் எண்டு வைச்சுக் கொள்ளுவம் 'உங்கடை பெற்றோர் சீதனம் கேட்பினை.. என்னை விட்டு விடுங்கோ' எண்டு அழவேணும்..."

"அதுக்குப் பிறகு..?" தர்ஷி

"அவர் குடும்பத்திலை ஒரே ஒரு ஆண்பிள்ளை. நாலைஞ்சு சகோதரிகள் அவருக்கு இருந்தால்.. ' உங்களுக்கு பொறுப்பு இருக்கு.. நீங்கள் நல்ல சீதனம் வாங்கி உங்கடை சகோதரிகளின்ரை வாழ்க்கையை உயர்த்துங்கோ' எண்டு சொல்ல வேணும்" – மனோ

"அவர்.. 'ஓம் நான் அப்படிச் செய்யிறன்' எண்டால்?" தர்ஷி

"மடைச்சி.. மடைச்சி.. சொல்லிப்போட்டு அவர் அப்படி முடிவெடுக்கிறமாதிரி சும்மா இருக்கக் கூடாது.. அந்த நேரம் வீரிட்டு அழவேணும்.. அப்ப அவர் கண்ணீரை துடைச்சு ஆதரவாகப் பேசுவார்."

"ஆதரவாய் பேசேக்கை..?" – தர்ஷி

"அந்தநேரம் அவரிட்டை ஒரு வாக்குறுதியை எடுத்து விட வேணும்.." மனோ

"என்ன மாதிரி வாக்குறுதி..?" தர்ஷி ஆவலுடன் கேட்டாள்.

"அப்ப என்னைக் கைவிடமாட்டன் எண்டு சத்தியம் பண்ணுங்கோ எண்டு கேட்க... அவரும் 'அலை கடல் வத்தினாலும் என் அன்புக் கடல் வத்தாது' எண்டு வசனம் பேசி சத்தியம் பண்ணுவார். அதை வைச்சுக் கொண்டே பெடிப் பிள்ளையை மணவறை மட்டும் தர தர எண்டு இழுத்து வந்து விடலாம்" – மனோ.

"சரி அக்கா... இப்ப நான் என்ன செய்ய வேணும் எண்டு சொல்லுறாய்?" தர்ஷி.

மனோவுக்கு தங்கச்சியை மடக்க அதுதான் நல்ல நேரம் என்று பட்டது...

"தங்கச்சி... தங்கச்சி... நீ ஒருக்கால் சுரேசைக் கண்டு அவரை விரும்புறதாய் மட்டும் சொல்லு.. பிறகு அவரோடை நான் கதைச்சு சமாளிச்சுக் கொள்ளுறன்" மனோ ஆவலுடன் பேசினாள்.

அதுவரை உற்சாகமாக கதை கேட்டுக் கொண்டிருந்த தர்ஷி இப்போ முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டாள்..

"நான் ஏன் அவரைக் கேட்கப் போறன்? எனக்கு நிலாக் குட்டியின்ரை அம்மா அப்பாவிலை அன்பும் நம்பிக்கையும் இருக்கு.. அவையள் என்னை தங்கட மகனுக்குத் தவிர ஆருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டினை" தர்ஷி உறுதியாகக் கூறினாள்...

"நீ நினைக்கிற மாதிரி இல்லாமல் அவையள் உன்னை கைவிட்டால்?" மனோ கவலை தொனிக்க கேட்டாள்..

"அப்படி ஒரு நிலைமை வரும் எண்டால் " தர்ஷி விம்மினாள்.. அப்படியொரு நிலை வருமெண்டால்?" மனோ அழுத்திக் கேட்டாள்.

"அப்படி ஒரு நிலைமை வருமெண்டால் நான் வாழ்நாள் பூரா கலியாணம் கட்டாமல்தான் இருப்பன்.." தர்ஷியின் குரல்வளை அடைத்தது...

மனோ தங்கையை அணைத்தபடி விம்மி விம்மி அழுதாள்..

## 02

ராஜநாதர் வீடு திருமலை நகரிலிருந்து கிழக்கே மூன்று மைல்கள் தொலைவில் அமைந்துள்ள அன்புவழிபுரம் கிராமத்தில் அமைந்திருந்தது. நல்ல நிலவளம் கொண்ட அக் கிராமத்து மக்கள் அனைவருமே வந்தேறுகுடிகள்.அதேசமயத்தில் அக் கிராமத்தை அபேபுர, மகிந்தபுர ஆகிய சிங்களக் கிராமங்கள் சூழ்ந்திருந்தன. அவ்விரு காரணங்களுக்காகவுமே அக் கிராம மக்கள் தம்முள் ஒரு இன ஐக்கியத்தை பேணுபவர்களாக இருந்தார்கள்.

ராஜநாதர் வீட்டின் 'போட்டிக்கோ' வழமையானதைக் காட்டிலும் சற்றுப் பெரிதாக இருந்தது. அது அந்த வீட்டின் அழகுக்கு மேலும் மெருகூட்டியது. வாயிற் கதவின் அடைப்பற்ற நடுப் பகுதியை நெருங்கி முற்றத்தில் வளர்க்கப்பட்டிருந்த 'குரோட்டன்' வகைகள் மண்டபத்தின் பிரதான பகுதியை தெருவில் இருந்து பார்ப்பவர்களுக்கு மறைத்தது...

'ஸ்கூட்டியை' 'போட்டிக்கோவில்' நிறுத்தியதும் நிலாவினி ஒரே தாவலாக தந்தையிடம் ஓடினாள்.

அவளது தந்தை ராஜநாதர் ஒரு வங்கி முகாமையாளர் என்ற முறையில் அத் தொழிலுக்கு அவசியமான உண்மை நேர்மையை கடைப்பிடிப்பவராக இருந்தார். தனது நாற்பதின் பிற்பகுதியில் மிக இளமையான தோற்றத்துடன் அவர் எவரையும் கவரக் கூடிய அழகுடனும் திடகாத்திரத்துடனும் இருந்தார். அவரது அனுபவத்தின் முதிர்ச்சியில் அவரிடமிருந்து வெளிப்பட்ட எழுத்தாற்றல் அவரை சிறிது பிரபல்யபடுத்தியிருந்ததுடன் வாழ்க்கை பற்றிய யதார்த்தம் பற்றியும் சிந்திக்க வைத்திருந்தது.

தந்தையை நோக்கி ஓடிவந்த நிலாவினி 'சோபா செற்றி'யில் அவர் அருகே அமர்ந்தபடி செல்லம் கொஞ்சினாள்.

சீதா நேரில் அவர் முன்னால் வந்து அவரது நெற்றியில் தனது கையாலேயே வீபூதி பூசி சந்தனம் இட்டாள். பின்னர்...

"நிலாக்குட்டி உங்களுக்கு ஏதோ சொல்ல வந்திருக்கிறா... என்னவெண்டு கேளுங்கோவன்"... என்று கூறி ராஜநாதருக்கு ஆவலை தூண்டி வைத்தாள்.

ராஜநாதர் மகளின் தலையை வருடிக் கொடுத்தபடி கேட்டார்...

"என்ன குட்டி சொல்லன்..." நிலாவினி இழுத்தாள்...

"அப்பா... மலர் அன்ரி வீட்டை போயிருந்தன்... மனோ அக்காவும் ராஜி அக்காவும் சொல்லுகினை தங்கடை தங்கச்சியை எங்கடை அண்ணாவிற்கு கட்டிக் கொடுக்கப் போகினமாம்..."

ராஜநாதர் மனைவியை நிமிர்ந்து பார்த்தார்... அவளது முகத்தில் எல்லையற்ற பிரகாசம் தெரிந்தது.

ராஜநாதர் மகளின் முதுகை தட்டிக் கெடுத்து சமாதானம் பண்ணி கூறினார்...

"சரி பிள்ளை கொண்னை நாளைக்கு வேலைக்கு வெளிக்கிட்டு போனானெண்டால் ஒரு கிழமை செல்லும் வர... அவன் அறையிலை 'கொம்பியூற்றரில் ஏதோ செய்து கொண்டிருக்கிறான். போய்க் கதை..."

நிலாவினிக்கு தமையன் நினைவு வந்ததும் தான் சொல்ல என்று நினைத்து வந்த அனைத்தையும் மறந்து தமையனிடம் ஓடினாள்.

பிள்ளைகளை வைத்துக் கொண்டு கலியாணக் கதை பேசக் கூடாது என்று நினைக்கின்ற பாரம்பரியம் ஒன்று... பிள்ளைகளையே கலியாணத் தூதாக விடுகின்ற புதிய பாரம்பரியம் ஒன்று...!

ராஜநாதர் மனைவியைப் பார்த்து வினாவினார்...

"என்னப்பா நிலாக்குட்டி சொல்லுற புதுக் கதை..."

சீதா திகைத்து விட்டாள்...!

"என்ன... புதுக் கதையோ...? ஆருக்கு கதை விடுகிறியள்... தர்ஷியை பற்றி நல்லாய் கதைக்கிறது...தர்ஷிக்கு வேலை வாய்ப்பு தேடுறது...தர்ஷி வீட்டு விசேடங்களில் முன்னுக்கு நிற்கிறது...அவையின்ரை வீட்டுக்கு அடிக்கடி 'விசிற்றிங்' போறது...இவ்வளவத்தையும் செய்து போட்டு ஆரும் உண்மையைச் சொன்னால் புதுக்கதை எண்டுறதோ...?"

ராஜநாதரின் முகத்தில் அசடு வழிந்தது...ஆனாலும் அவர் மசிந்துவிடவில்லை. தன்னை சுதாகரித்துக் கொண்டு ...

"நீர் மட்டும் வீட்டிலை செய்யிற பலகாரத்தையெல்லாம் தர்ஷிக்கு ஒழுங்காய் அனுப்பிக் கொண்டிரும்....கண் எண்டால் கயல்.....மூக்கு எண்டால் கிளி......நிறமெண்டால் வெள்ளரிக் காய்..... அப்படியெல்லாம் நீர் சொல்லாமல் நானே சொன்னனான்?'

ராஜநாதர் ஒரு போடு போட்டு தள்ளி விட்டார்...

சீதாவுக்கு வேர்த்து விறுவிறுத்து விட்டது. இன்று இவருக்கு விட்டுக் கொடுப்பதில்லை என்ற மன உறுதியுடன் பேசினாள்...

"நான் என்ரை ஆம்பிளைப் பிள்ளையை ஆருக்கும் கட்டிக் கொடுக்க மாட்டன்...அவை என்ன என்னைக் கேட்டு வந்தவையே?" ன்று அடுக்கினாள்...

"அப்ப நீர் ஒருநாள் 'என்ரை பொம்பிளைப் பிள்ளைக்கு கலியாணம் முடிஞ்சால்தான் அவையளுக்கு மகனைக் குடுப்பன்' எண்டு சொன்னீர்தானே... அப்ப உமக்கு தர்ஷியை மருமகளாக எடுக்கின்ற நோக்கம் இருக்குத்தானே..." — ராஜநாதர் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டார். சீதாவுக்கு கண்ணீர் வந்து விட்டது...

"அப்ப நீங்கள் வேறையாரும் எங்கடை மகனைக் கேட்டு வந்தால் அவருக்கு 'பிக்ஸ்' பண்ணியாச்சு எண்டு சொல்லுறியள்...அப்ப அது ஆர்? தர்ஷியை தவிர வங்கியிலை வேலை பார்க்கிற பெடிச்சி ஆரையும் வைச்சிருக்கிறியளே?" சீதா வினாவவும் ராஜநாதர் சிரித்துவிட்டார்.!

அவர்களது மகன் பழைய பஞ்சாங்கம் போல ...தொழில் பார்க்கிற பெண்களை விரும்புவானோ தெரியாது .தங்கையை கட்டுப்படுத்தும் விடயத்தில் தகப்பனைக் காட்டிலும் கண்டிப்பு காட்டுபவன். இந்த தகுதிகளையுடைய மகனுக்கு வங்கியில் பணிபுரியும் பெண்கள் எப்படி பொருந்துவார்கள் என எண்ணியதால் வந்த சிரிப்பு அது!

ராஜநாதர் சிரித்துவிட்டதால் சீதாவுக்கு உள்ளப் படபடப்பு குறைந்து கொண்டு வந்தது...

"ஏன் சீதா...உன்ரை மகனுக்கு தங்கச்சியின்ரை வாழ்க்கை பற்றித்தான் ஒரே நினைப்பு...ஆரும் பொம்பிளைப்பிள்ளையளைப் பற்றி நினைச்செண்டாலும் பார்க்கிறானா...? இவன் ஏழாம் நம்பர்காரன். சில வேளை ஆன்மீகம் அது இது எண்டு துறவறத்திலை போகப் போறானோ தெரியாது.."

சீதா பதில் கூறினாள்...' 'தர்ஷினி லேசாய் விடுவாள் எண்டு நினைக்காதையுங்கோ...இவர் ஒரு நாள் தங்கச்சி எண்டு கதைச்சதுக்கு 'நான் உங்களுக்கு தங்கச்சி இல்லை' எண்டு அடிச்சாப் போலை இவருக்கு மறு மொழி சொன்னவள். இப்ப ஆன்மீகம் அது இது எண்டு நிண்டாரெண்டால் பேசாமல் அவளுக்கு கண்ணைக் காட்டிப் போட்டு இருந்து விடுவன். தர்ஷினி இவரை காதிலை பிடிச்சு இழுத்துக் கொண்டு போய் வைச்சு தாலி கட்டுவிச்சுப் போடுவாள்!"

முகட்டில் இருந்த பல்லி 'டிக் டிக்' என்று ஒலி எழுப்பியது. உச்சத்து பல்லிக்கு அச்சமில்லை என்பது சீதாவுக்கு தெரியும் !

***************************

ராஜநாதர் அந்த வங்கி கிளையின் முகாமையாளராக வந்த பொழுது அவரை சந்தித்து உதவி பெற வந்த பலர் குறிப்பாக வர்த்தகர்கள் இப்போ தமது வியாபார நடவடிக்கைகளை வேறு வங்கிகளுக்கு மாற்றிக் கொண்டு விட்டார்கள். காரணம் பணம் கொடுக்கல் வாங்கல் மேலதிக பற்று ஆகியவற்றில் அவர் கடைப்பிடித்து வந்த கெடுபிடிதான்.

ஜூலி அவரது 'ஸ்ரெனோவாக' அந்த வருட ஆரம்பத்தில் வந்த பின்னர் அவரது அலுவலக அறை புது மெருகு பெற்றது. அவரது எழுத்துக்களை

கணினி மயப்படுத்த அவள் உதவி புரிந்தாள். அதனால் பத்திரிகைகளில் அவரது ஆக்கங்கள் நிறைய வெளி வந்தன.

அவ் வருடம் பிரதேச செயலக மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் நடாத்தப்பட்ட சாகித்திய விழாக்களுக்கான திறந்த சிறுகதைப் போட்டிகளில் அவரது "கருக்கொள்ளும் மேகங்கள்" என்ற சிறு கதை முதலாம் இடத்தைப் பெற்றது.

அக்கதையையும் உள்ளடக்கி பன்னிரு சிறுகதைகள் கொண்ட தொகுப்பு ஒன்றை கணினி மயப்படுத்துவதில் ஜூலி அவருக்கு உதவி செய்தாள்.

'ஏன் சேர்... நீங்கள் சின்னவராக இருக்கேக்கை சரியான கூச்சப் பேர்வழியாக இருந்திருக்கிறியள் போல கிடக்கு...சரிதானே நான் சொல்லுறது? ஜூலி ஒரு நாள் வினவினாள்.

"ஏன் அப்படிச் சொல்லுறீர்?" ராஜநாதர் வினாவினார்.

"'காதலுக்கு மொழியில்லை'" என்கிற உங்கடை சிறுகதையிலை வாற பாத்திரம் ஒரு பெண்ணை மனதார விரும்பியும் கடைசி மட்டும் அவளுக்கு தனது காதலை வெளிப்படுத்தாததால் அவள் வேறொருவனை விவாகம் செய்து கொண்டு போவதை நேரிலை கண்டு மனம் உடைந்து போறதாய் சித்தரித்திருக்கிறியள். அந்த பாத்திரத்தை நான் 'சேர்' எண்டுதான் காணுறன்..." ஜூலி விபரித்தாள்.

எப்போதும் ஒரு கதாசிரியனுக்கு தான் வடித்த பாத்திரம் பற்றி தான் கொண்ட கருத்தை விட வாசகர்கள் அப் பாத்திரத்தை எப்படி புரிந்து கொள்கின்றார்கள் என்று அறிவதில் பேரார்வம் இருக்கும்.

அந்த ஆர்வத்துடன் ராஜநாதர் வினவினார்...

" அப்ப நீர் அந்த பாத்திரத்தை பற்றி என்ன நினைக்கிறீர்?"

ஜூலி ஒரு கணம் அவரை எடை போடுவது போல உற்றுப்பார்த்தாள். பின்னர்...

" அந்த பாத்திரம் நல்லதொரு கட்டுக் கோப்பான குடும்பத்தில் இருந்து வந்திருக்க வேணும்... அவருக்கு மூத்த இளைய சகோதரிகள் இருந்திருக்க வேணும். அவருடைய தாயும் பிள்ளைகளும் கற்பு நெறியிலை உயர்ந்தவர்களாக இருந்ததால் அந்த குடும்பத்தில் உதித்த ஆண் பிள்ளையும் பெண் பிள்ளைகள் போல நடத்தையை உயர்த்திக் கொண்டதோடல்லாமல் மற்ற மற்ற பெண்கள் எல்லோருமே கற்பு நெறியிலிருந்து தவறக் கூடாது எண்ட மன நிலையில் உறுதியாக இருந்திருக்க வேணும்..."

ஜுலி கூறிக் கொண்டே போகவும் ராஜநாதர் சிரித்து இடைமறித்தார்...

"கதையின் முடிவைப்பற்றி என்ன நினைக்கிறீர்?"

"முடிவு எவரும் எதிர்பார்க்காததாய் கதையின் சுவாரசியத்தை உயர்த்துவதாய் இருந்தது...எனது நண்பிகள் பலர் முடிவை வாசித்துவிட்டு கதையில் சொக்கி சிரித்து விட்டார்கள்... எனக்கு மட்டும் அப்படிச் செய்ய முடியவில்லை...அந்த பாத்திரத்துக்காக நான் அழுதுவிட்டேன்."

ஜுலி விளக்கவும் ராஜநாதர் தொடர்ந்தார்...

"கதையின் பிரகாரம் அதிலை சோகத்தை நான் சேர்க்கவில்லை, சேர்க்கவும் விரும்பேல்லை..."

ஜுலி ஒருகணம் மௌனம் சாதித்தாள்... பின் கூறினாள்.

"கதையை மட்டும் படிப்பவர்களுக்கு பிரச்சனை இல்லை. ஆனால் எனக்கு கதையும் தெரியும், அந்த பாத்திரம் 'சேர்'தான் எண்டதும் தெரியும்...அதனாலைதான் எனக்கு கவலை ஏற்பட்டது..."

ஜுலியினது கண்களிலிருந்து நீர் பொலு பொலு என வழிந்தது... விம்மலுக்கிடையில் வார்த்தைகளை ஒவ்வொன்றாக வெளியிட்டாள்...

"நான் மட்டும் அந்த பெண் என்றால்..."

அவளது குரல் வளை விக்கித்தது... ராஜநாதர் தூண்டினார். " சொல்லும் ஜுலி .. நீர்மட்டும் அந்த பெண் என்றால்?"

அவளுடைய விம்மல் மேலும் அதிகரித்தது. இருந்தும் தான் கூற வந்ததை முழுமையாக கூறிவிட அவள் முயன்றாள்...

"சேர்...நீங்கள் விரும்பிய பெண் நானாக மட்டும் இருந்தால்..." தான் நினைத்ததை சொல்லிவிடவே அவள் முயன்றாள்...

அந்நேரம் பார்த்து 'டோகுளோசர்' விரிந்து எவருடையதோ வருகையை அறிவித்தது!

## 03

ஜூலி தனது முப்பதுகளின் முற்பகுதியில் இருந்தாள்... மா வெள்ளை நிறமும் திடகாத்திரமான தேகமும் நல்ல முக வசீகரமும் அவளுக்கு வாய்த்திருந்தாலும் சாதாரண ஒரு பெண்ணுக்கு அமைந்திருக்க கூடிய வாழ்க்கை கூட அவளுக்கு அமையாதது அவள் செய்த வினைப் பயனாக இருக்கலாம் என எண்ணத் தோன்றியது. அவளது கணவன் ஜோர்ஜ் முன்னர் ஒருத்தியை மணம் முடித்து பிரிந்த பின்னர் அவளால் புறக்கணிக்கப்பட்ட ஆண் மகவுடன் ஜூலியைக் கைப்பிடித்தான். அதனால் ஜூலியை பெரிதாக கட்டுப்படுத்தும் அதிகாரம் அவனுக்கு இல்லாதிருந்தது...

ஜூலியின் வீட்டில் ஏழ்மை தாண்டவமாடியது...

சின்னஞ்சிறிய வீடாயினும் அதனை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருந்தாள் அவள். குளிர் சாதனப் பெட்டி, தொலைபேசி வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது. வங்கியில் பெற்றிருந்த கடனுக்காக மாதச் சம்பளத்தில் துண்டு விழுந்தது...

கணவனுக்கு பாதுகாப்பு சேவையில் தொழில் ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்காக ஐம்பதாயிரம் ரூபா பணத்தை 'ஏஜென்ட்' ஒருவனுக்கு கடன்பட்டு கொடுத்திருந்தாள். ஜோர்ஜ் ஆங்கில பாடசாலை ஒன்றில் சாதாரணதரம் வரை படித்திருந்தான்.

அன்று நன்கு இரவான பின்னரே அவளது கணவன் வீடு திரும்பியிருந்தான். அவனது மகன் வீட்டுப் பாடங்கள் எதனையும் செய்யாமல் சாப்பிட்டு விட்டு நன்கு தூங்கிவிட்டிருந்தான்...

" ஜூலி... நீ கஷ்டப்படுவதைப் பார்க்க என்னால் பொறுக்க முடியவில்லை...குடும்பத்திற்காக ஒன்றும் செய்ய முடியவில்லை என்று நினைக்கும் போது அழுகையாக வருகின்றது..."

ஜோர்ஜ் மனம் இளகி பேசும் போது ஜூலியின் கண்களும் கலங்கிவிடும்...

" ஜோர்ஜ்...ஜோர்ஜ்... 'மைடியர்' ஜோர்ஜ்... அழாதே...அழாதே... நீ அழுதால் நானும் அழுதுவிடுவேன்...எங்களுக்கு என்ன குறை...இதோ மேசையில் போதிய ஆகாரம் இருக்கின்றது. 'பிறிட்ஜை' திறந்து பார்... குறையாக 'விஸ்கி' போத்தல் வைத்திருக்கின்றேன். உனக்குத்தான்... எல்லாமே உனக்காகத்தான்... கடன்பட்டாயினும் எல்லாம் செய்கின்றேனே... நீ சந்தோசமாய் இருக்க வேண்டும்... இதோ இப்படி அமர்... நான் உணவு பரிமாறுகிறேன்..." என்று கூறி ஜுலி, ஜோர்ஜ் மனம் ஆறும்படி தேற்றினாள்.

அப்போது பார்த்து பக்கத்து வீட்டு மேட்டின் வருகை தந்தாள். அவள் பரங்கியர் இனத்தை சேர்ந்தவளாயினும் நன்கு தமிழ் பேச தெரிந்து கொண்டிருந்தாள். அவளே ஜுலி ஜோர்ஜின் வேலைக்கு பணம் கட்ட ஐம்பதாயிரம் ரூபாவை நம்பிக்கை அடிப்படையில் கொடுத்திருந்தாள்...

மேசையில் இருந்த 'விஸ்கி' போத்தல் அவளது கண்களில் பட்டுவிட்டது. எழுந்து சென்று எவரது அனுமதியும் பெறாமல் போத்தலை திறந்து சரித்து 'கிளாசை' நிரப்பினாள். கண்களை மூடியபடி அரை 'கிளாசை' காலி செய்தாள். செருமி தொண்டையை சரிசெய்தபடி உச்சியில் தட்டிக் கொடுத்தாள்... 'பைற்ஸ்' என்று ஏதும் மேசையில் இருக்கவில்லை. குழம்பை 'டிஷ்'சுடன் எடுத்து 'சிப்' பண்ணி சுவைத்தாள். பின்னர் சிறிது நேரம் தூக்கத்தில் இருப்பவள் போல் கண்களை மூடி இருந்தவள்...வெறி தலைக்கேறவும் திடீரென்று வலது கையை ஜோர்ஜ் முன்பாக நீட்டி...

"நீ ஒரு பொறுக்கி..." என்று கூறினாள்...

ஜுலி திகைத்து விட்டாள்...! மேட்டின் மீண்டும் பேசினாள்...

"ஜுலி பணத்தில் நீ குடிக்கவா செய்கிறாய்...?"

ஜோர்ஜ் கோபம் அடைந்தான்...அவனது கண்களில் அனல் தெறித்தது.

"நீ பேசாதே ...நீ பேசாதே...உனக்கு இப்போ என்ன வேணும்...? எதற்காக வந்தாய்...? நாங்கள் சந்தோஷமாக தூங்கப்போகும் சமயத்தில் ... எனது மனைவி எனக்கு விருந்து வைக்கும் நேரத்தில் வந்ததுமல்லாமல் ஏன் குழப்பம் விழைவிக்கிறாய்?"

"நானா குழப்பம் விளைவிக்கிறேன்...உனக்காக உனது வேலைக்காக ஜூலிக்கு பணம் கொடுத்திருக்கின்றேன்...நீ நன்றி கெட்டவன்...ஜூலி வேலைக்கு போயிருக்கும் சமயம் பெண்கள் பின் அலைந்து திரிகின்றாய். நான் கூப்பிட்ட சமயம் நீ வரவில்லை... என்னை மதிக்கவில்லை..." மேட்டின் உரத்து கத்தினாள். ஜோர்ஜும் பதிலுக்கு ஆவேசமடைந்தவனாக சத்தமிட்டான்...

"அதுவா காரணம்...? அதுவா காரணம்...? நீ கணவனை இழந்தவள். உனது வீட்டுக்கு வந்தால் என்னை தப்பாக பேசுவார்கள்..."

மேட்டின் அவனது பதிலை கேட்டு ஆத்திரமடைந்தவளாக 'கிளாசில்' எஞ்சியிருந்த விஸ்கியையும் உறுஞ்சினாள்...

"அப்படியா உன் கதை...அப்படியென்றால் எனது பணத்தை கொடு. இப்போதே கொடுத்துவிடு..." என்று கறுவிக் கொண்டே எழுந்து சென்று ஜோர்ஜின் தலைமயிரை பற்றி இழுத்தாள்...

ஜூலி ஓடி வந்து தடுத்தாள்...பெரிய இழுபறியே ஏற்பட்டது. ஜோர்ஜ் அவமானப்பட்டவனாக மேட்டினின் முதுகில் குத்தினான்...

மேட்டின் சாதாரண பெண்ணல்ல...ஆண்களின் வலுவை உடையவள்...

"ஏய்...கோழைபோல் முதுகில் குத்தாதே...இங்கே குத்து...இங்கே குத்து..." என்று நெஞ்சை நிமிர்த்திக் காட்டினாள்...

ஜோர்ஜ் தலை குனிந்தான்...ஜூலி அவளை சமாளித்து வாயில் வரை இழுத்துச் சென்று வெளியே அனுப்பி வைத்துவிட்டு வந்தாள்.

இழுபறியில் அவளது மேற்சட்டை கிழிந்து மார்பின் மத்தி பளிச்சென தெரிந்தது. 'கணவனுக்கு முன்னால் அது ஒரு பிரச்சனையில்லைத்தான்'...ஜூலி எண்ணினாள்...மற்றொரு மாற்றுடை இருந்தால் அது ஒரு பிரச்சனையே இல்லைத்தான்...!

ஜூலி சாப்பாட்டு மேசையை மீண்டும் தயார் செய்தாள். ஜோர்ஜ் உதவி செய்தான்... இருவருக்குமிடையில் மௌனம்தான் நிலவியது... ஒருவருடைய

முகத்தை மற்றவர் பார்க்க இயலாதவர்களாக அவர்கள் அவமானத்தில் கூனிக்குறுகிப் போய் விட்டார்கள்...

இடையில் ஜூலி ஜோர்ஜின் மகனை சென்று பார்த்தாள். அவன் முழங்கால்களின் இடுக்கில் முகத்தை புதைத்துக் கொண்ட சூட்டில் எவ்வித இடையூறுகளுமின்றி நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தான்.

ஜூலியும் ஜோர்ஜும் உணவருந்தி விட்டு 'லைற்ஸ்' அனைத்தையும் 'ஆப்' செய்த பின்னர் படுக்கைக்கு சென்றார்கள்...

சிறிது நேரம் கட்டிலில் தூக்கமின்றியும் ஒருவருடன் ஒருவர் முட்டிக் கொள்ளாமலும் உழன்றார்கள். பெருமூச்சும் விம்மலும் சிறிது சிறிதாக அடங்கி தூக்கம் இமைகளை மூட வைத்தன... கும்மிருட்டு...

"ஏன் ஜூலி...இருந்த இந்த ஒரே சட்டையும் இப்படி கிழிந்து விட்டதே...?" ஜோர்ஜ் வினாவினான்...

"ம்..." என்ற முனகல் மட்டும் ஜூலியிடமிருந்து வந்தது!

***************************

அன்றைய தினம் ராஜநாதர் வங்கி சென்று விட்டதாலும் சுரேஷ் தான் தொழில் புரியும் நிலையத்திற்கு சென்றுவிட்டதாலும் வீட்டில் சீதாவும் நிலாவினியுமே எஞ்சியிருந்தார்கள்.

மதியம் அண்மிக்கும் நேரம் தாயும் இளைஞனான மகனொருவனு மாக இருவர் வருகை தந்திருந்தனர். சீதா சிறிது நேரத்திலேயே அவர்களை அடையாளம் கண்டு முற்றத்தில் இறங்கிச் சென்று வரவேற்று உபசரித்தாள்.

"என்ன ராசம்...இதென்ன கோலம்...இது உன்னுடைய மகன் கந்தவேள்தானே?" சீதா வினாவினாள்.

நிலாவினிக்கு கந்தவேளை அடையாளம் காண்பது கஷ்டமாக இருந்தாலும் ராசத்தை நன்கு நினைவில் வைத்திருந்தாள். எனவே தாயுடன் சேர்ந்து தானும் அவர்களை இன்முகம் காட்டி வரவேற்றாள்.

"எங்கடை நிலாக்குட்டி என்னமாதிரி வளர்ந்து பெரியவளாயிற்றாள்" என்று ஆச்சரியம் தெரிவித்த ராசம் முந்தாணையால் வாயைப் பொத்தியபடி விம்மி விம்மி அழுதாள்.

ஏழ்மை அவளது தோற்றத்தை உருக்குலைத்திருந்தது... சமாதானப் படையாக 1987ம் வருடம் தமிழீழத்தில் கால் பதித்த இந்தியப் படையினர் ஆரம்பத்தில் மக்களால் தெய்வங்கள் என போற்றி துதிக்கப்பட்டனர். நாளா வட்டத்தில் தாம் எண்ணி வந்த பணிக்கு எதிர்மாறாக விடுதலைப் போராளிகளுக்கும் பின்னர் மேன்மை மிகு ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவை தலைமையாகக் கொண்ட அரசாங்கத்திற்கும் எதிராக செயற்பட திரும்பிய போது 1990ல் தமது நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள்!

தமிழீழ விடுதலைப் போராளிகள் இந்த தேசத்திற்கு செய்த மாபெரும் உதவியாக அது வரலாற்றில் பதியவேண்டி இருக்கையில் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் படிப்படியாக விடுதலைப் போராளிகளுக்கு எதிராக திரும்பிய நிலையில் 1990.06.13 தினம் கிழக்கில் இரு பகுதியினருக்குமிடையில் போர் வெடித்தது.

திருமலை நகரிலும் சூழவுள்ள பகுதிகளிலும் வெடிச் சத்தங்கள் சரமாரியாக கேட்க தொடங்கின. விடுதலைப் போராளிகளுடன் தமிழ் மக்கள் கடந்த காலத்தில் அன்னியோன்யமாக பழகியிருந்ததால் பழிவாங்கல் நடவடிக்கைகள் ஆரம்பமாகின...கொள்ளை, தீவைப்பு, பாலியல் வன்முறை, கொலை என குற்றச் செயல்கள் தமிழ் மக்கள் மீது ஏவி விடப்பட்டபோது அவர்கள் பல்லாயிரக் கணக்கில் முதியோர் சிறியோர் என்ற பேதங்களின்றி நகர்ப்பகுதியை விட்டு தமிழ் பிரதேசங்களான சாம்பல் தீவு நிலாவெளி பகுதிகளுக்கு நகரத் தொடங்கினர்.

உப்புவெளியில் 'பொலிஸ்' நிலையம் விடுதலைப் போராளிகளால் தாக்கப்பட்டு பன்னிருவர் கொல்லப்பட்டதால் சிங்கள இராணுவம் மேலும் உக்கிரமடைந்தது. பல திசைகளிலிருந்தும் தமிழ் பகுதிகள் மீது ஏவுகணைகள்

செலுத்தப்பட்டன. அவை மக்கள் வெள்ளத்தின் மீது விழுந்து வெடித்தன. நிலாவெளியில் செல்வம் என்பவரின் அரிசி ஆலை மீது விழுந்த எறிகணையால் பலநூற்றுக்கணக்கான மக்கள் இறந்தனர். பலர் கை கால்களை இழந்தனர். மேலும் பலர் படுகாயமுற்றனர்.

ஒரு தேசம் தனது ஆளுகைக்குட்பட்ட மக்கள் மீது மேற்கொண்ட விரல் விட்டு எண்ணக் கூடிய மிலேச்சத்தனங்களில் அதுவும் ஒன்றாக வரலாற்றில் பதியப்பட்டது.!

எந்த வித போக்குவரத்து வசதிகள் இல்லாமலும் உணவோ நீரோ இன்றியும் அச்சத்துடன் தமதும் தம்மை சார்ந்தவர்களினதும் பாதுகாப்புக்காக முப்பது மைல்களுக்கு மேலாக நடந்து மக்கள் சாம்பல் தீவு, நிலாவெளி, இறக்கண்டி, கும்புறுபிட்டி, திரியாய் ஆகிய தமிழ் பிரதேசங்களுக்கூடாக முஸ்லீம்மக்கள் பெருமளவில் வாழ்வதும் 'இல்மனைட்' என்ற கனியத்தை தன்னகத்தே வளமாக கொண்டதுமான புடவைக் கட்டு பிரதேசத்தை அடைந்தனர்.

புடவைக் கட்டு பிரதேசத்தை ஒரு புறமாகவும் முல்லைத் தீவை மறுபுறமாகவும் கொண்ட தரைப் பிரதேசம் விடுதலைப்போராளிகளால் இதயபூமி என பிரகடனப்படுத்தப்பட்ட மணலாறு பிரதேசமாகும். அரச சிறைக் கைதிகளையும் காடையர்களையும் இப் பகுதிகளில் குடியேற்றியதன் மூலம் தமிழீழத்தின் வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட்டிருந்தது.

மக்கள் வெள்ளம் பின்னால் தம்மை துரத்தி வரும் இராணுவத்திடமிருந்து தப்புவதற்கான பிரதான மார்க்கமாக கடல் வழியே முன்னால் விரிந்திருந்தது.

நூற்றுக் கணக்கான மீன் பிடி வள்ளங்கள் பெரும் தொகைப் பணத்தை அறவிட்டு சேவையில் ஈடுபட்டன.

மக்கள் செம்மலையில் இறக்கப்பட்டு அலம்பிலில் உள்ள தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்டு பின்னர் வன்னிக்கும் வடக்குக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அந்த அவலமான நேரத்தில் இறக்கண்டி கடை வீதி மீது 'ஹெலி'யிருந்து வீசப்பட்ட எறிகணையை தொடர்ந்து அங்கிருந்த மக்கள் திருமலை நகருக்கு திரும்பலாம் என்ற அற்பசொற்ப ஆசையையும் தூக்கியெறிந்துவிட்டு புடவைக்கட்டு

நோக்கி ஓடத் தொடங்கினர். அச் சமயம் குழந்தை குட்டிகளுடன் ஒருவருக்கொருவர் ஆதரவாக இணைந்து கொண்ட குடும்பங்களே சீதா, ராசம் குடும்பங்களாகும்.

அக் காலத்தில் வன்னி புதுக் குடியிருப்பில் துர்க்கா வீதியில் அவர்கள் ஒரே வீட்டில் குடியமர்ந்திருந்தனர். ராசத்தின் கணவர் லொறி சாரதியாக பணிபுரிந்ததால் அவர்கள் அங்கேயே தங்கிவிட ராஜநாதர் தொழில் நிமித்தம் சில மாதங்களில் தனது குடும்பத்தை அங்கேயே பாதுகாப்பாக இருத்திவிட்டு நகருக்கு திரும்பி வந்து விட்டார்.

அந்த நேரத்தில் சீதாவுக்கும் ராசத்திற்கும் இடையே ஏற்பட்ட அன்னியோன்யம்தான் ராசம் இன்று சீதாவை நினைவு கூர்ந்து தேடி வந்தமைக்கான காரணமாகும்!

ராசம் கண்ணீர் சொரிந்து அழவும் சீதாவுக்கும் கவலை பொறுக்கவில்லை. அவளை அணைத்தபடி தானும் அழுதாள்.

பின்னர்...

"ஏன் ராசம் உன்னுடைய அவர் எங்கே?" என வினாவினாள்...

ராசத்தின் அழுகை மேலும் அதிகரித்தது.

"அவர் கடைசியாக குடியை விட்டுவிட்டார் அக்கா. நல்ல மனுசனாய் திருந்தி பெடியளுக்கு லொறி ஓடினவர். மூத்த மகள் கீழ் சாதிப் பெடியனோடை ஓடினது அவருக்கு வாழ்க்கை மீது விரக்தியை ஏற்படுத்தியிருந்தது. காசு கொடுத்து அவனை சுடுவிப்பன் எண்டு எப்பவும் வாயோரியாக அவர் சொல்லிக் கொண்டிருந்தது போலவே பெடி 'ஓட்டோ' ஓடிக்கொண்டு போகேக்கை பாதுகாப்பு படை மறிக்க நிற்பாட்டேல்லை எண்டு சுட்டதிலை மகள் ஒரு கைக் குழந்தையோடை விதவையாகி விட்டா..! அவர் எங்கை ஏது என்ற தகவல் எனக்கு தெரியேல்லை. நான் விசாரிக்கிற எவருக்கும் தெரியேல்லை. இத்தனை வருசம் வன்னியிலை நானும் மகனும் பட்ட கஷ்டம் சொல்லேலாது. கஷ்டத்திலும் மகன் ஓரளவு படிப்பை "ஏ.எல்" வரை செய்ததாலை இப்ப நீர்பாசன திணைக்களத்திலை 'கிளார்க்' வேலை கிடைச்சுது...இஞ்சை வந்து வாடகைக்கு ஒரு சிறிய வீட்டை எடுத்துக் கொண்டு இருக்கிறம்."

ராசத்தின் கவலையில் சீதாவும் பங்கு கொண்டாள்...

பின்னர்...

“ ஏன் கந்தவேள்... எங்களை ஞாபகம் இருக்குதா?” என வினாவினாள்.

“ ஓம் அன்ரி...நிலாக்குட்டியை பார்க்கத்தான் அடையாளம் காணுறது கஷ்டமாய் இருக்கு...எனக்கும் நிலாக்குட்டிக்கும் அன்ரி மாம்பழம் சீவித்தாறது எனக்கு இண்டைக்கு போல ஞாபகம் இருக்குது. நிலாகுட்டியும் நானும் ஓடிப் பிடிச்சு விளையாடுறது நல்ல நினைவிலை இருக்கு...அன்ரி ஒருநாள் என்னைப் பேசினது இப்பவும் எனக்கு நெஞ்சிலை விழுந்த அடிமாதிரி ஞாபகம் இருக்குது”

“ நான் அப்படி பிள்ளையாலை மறந்து விடமுடியாதபடி என்ன மகனே சொன்னனான்?” சீதா வினாவினாள்.

கந்தவேள் நிலத்தை பார்த்தபடி அன்று சீதா கூறியதை திரும்ப சொன்னான்...

“கந்தவேள்...நீயும் நிலாக்குட்டியும் ஓடிப் பிடிச்சு அடிபட்டு விளையாடினது ஒண்டும் பிழை இல்லை...இப்ப நிலாக் குட்டி சின்னப் பிள்ளை இல்லை...என்ரை பொம்பிளைப் பிள்ளையின்ரை உடம்பிலை இனிமேல் உன்ரை கை படப்படாது...”

சீதா அதிர்ந்து விட்டாள்...

இந்தப் பிள்ளை இந்த சின்ன விடயத்தை இவ்வளவு நாளும் ஞாபகம் வைச்சிருக்குதே என ஆச்சரியப்பட்டாள்...

இந்த சாதாரண ஒரு வசனம் எதிர்காலத்தில் எத்தகையதொரு பிரச்சனையை கொண்டுவரப் போகின்றதென்பதை அப்போது எவரும் அறிந்திருக்க நியாயம் இல்லைத்தான்!

## 04

மேட்டின் வீட்டிற்கு வந்து கலாட்டா செய்தது ஜூலிக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டது...

அதனால் கடந்த மூன்று தினங்களாக அவள் வங்கிக்கு செல்லவில்லை.

ஒரு தொழில் இல்லாத...வருவாய் அற்ற கணவனுக்கு எப்படி அவமானங்கள் சூழ்கின்றன என்பதை அவள் அனுபவம் மூலம் தெரிந்து கொண்டு கண்ணீர் வடித்தாள்...

தனது வீட்டு நிலைமைகளையும் தான் தொழில் பார்க்கும் வங்கியின் உயர் நிலையையும் ஒப்பிட்டு நோக்கினாள்...இரண்டு வெவ்வேறு பட்ட தளங்களில் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நெருக்கடியை எண்ணி எண்ணி கலங்கினாள்.

நாளைய தினம் வங்கி செல்வதற்கு ஆயத்தமாகிய நிலையிலேயே அவள் இருந்தாள்...ஆனால் எதிர்பாராத விதமாக முகாமையாளரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

“ ஏதாவது பிரச்சனையா ? ஏன் வங்கிக்கு வரவில்லை?” என்று அக்கறையோடு வினாவினார்.

சிறுகதை தொகுப்பு எந்த நிலையில் உள்ளது என அவர் வினாவிய போது...

தொகுப்பின் தலைப்பு...உள்ளடக்கம்...சமர்ப்பணம்...முகவுரை, அணிந்துரை ‘பேஜ் செற்றிங்’ ஆகியன எஞ்சியிருப்பதாக ஜூலி தெரிவித்தாள்...அவற்றை வங்கியில் வைத்து செய்வது சிரமமாகையால் முகாமையாளரை தனது இல்லத்திற்கு வந்து தனது கணினியில் பதிவதற்கு ஒத்தாசை செய்தால் ஒரே நாளில் முடித்து விடலாம் என கூறி அவரை வரவேற்றாள்...

முகாமையாளரை வீட்டில் வைத்து உபசரிக்க...அவருடன் மனம் விட்டுப் பேச அவள் விருப்பம் கொண்டிருந்தாள்...வங்கியில் எத்தனை பேருக்கென்று பயந்து பயந்து கதைப்பது...ஒரே சிறுகதைத் தொகுப்பு 'ரைப்' செய்தலை காரணமாக கூறமுடியுமா?

ஜோர்ஜில் இல்லாத வசீகரம் அவரது கண்களில் அறிவாக பிரகாசித்தது. உயர்ந்த சிந்தனை...தெளிந்த நடத்தை..அன்பு காட்டும் பண்பு, மனித நேயம் இன்னும்...இன்னும்...

வழமையான வங்கி நேரத்திற்கு ராஜநாதர் ஜுலி வீட்டைக் கண்டு பிடித்து வந்துவிட்டார்...ஜுலி இறுக்கமான அரைப் பாவாடை அணிந்து 'ரீசேட்டில்' அழகாக இருந்தாள்...சிற்றண்டி தேனீர் வழங்கி உபசரித்தாள்...

"ஏன் ஜுலி ...நீர் எதற்காக இப்படி கஷ்டமான சீவியம் ஒன்றை நடத்த வேணும். வசதியான வீடு...நிறைய தளபாடங்கள் இன்னும் மின் உபகரணங்கள்...இவையில்லாமல் ஒரு வாழ்க்கையா? உமக்கு என்ன பிரச்சனை... என்னவெண்டாலும் ஒழிக்காமல் சொல்லும்..."

ராஜநாதர் உரிமையுடனும் உதவி செய்யும் ஆர்வத்துடனும் கேட்டார்...

"அதெல்லாம் பிறகு கதைப்பம் சேர்..." என்று சொன்னாலும் ஜுலியின் சிந்தனை இவ்வளவு வசதியுடன் தனக்கு வாழ்க்கை எட்டுமா என்பதாகவே இருந்தது...எல்லோரும் எதற்கு விரும்புகிறார்கள்...? தங்களுக்கு தங்களுக்கு எவையெவை கிடைக்கவில்லையோ அவற்றை பெற எதையும் செய்ய ஆயத்தமாகின்றார்கள்...

ஜுலி கணினியை 'ஒன்" செய்தாள்...ராஜநாதர் அவளுக்கு மிக அருகே இருந்து 'மொனிட்டரை' அவதானித்து பதிய வேண்டிய விடயங்கள் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார்.

வங்கியில் போலன்றி அவர் அவளை மிக அண்மையில் அமர்ந்திருந்து அவதானித்தார்...பாதத்திலிருந்து பளிச்சிடும் அவளது கன்னங்கள் வரை அவரது பார்வை மேய்ந்தது...

" 'சேர்' தொகுப்பின் பெயர்?"

"வசந்தகால நினைவுகள்' எண்டு போடும்"

ஜூலி நாஜநாதரை நிமிர்ந்து பார்த்து சிரித்தாள்.

"ஏன் சேர் அந்த பெயரை தெரிவு செய்தனீங்கள்?" ஜூலி வினாவினாள்...

ராஜநாதர் பதில் கூறினார்...ஜூலி 'கீ போட்டிலிருந்து' கைகளை அகற்றி 'கொம்பியூற்றர் செயாரை' தனது முழங்கால்கள் அவரது முழங்கால்களுக்கு நேரே வரும்படி திருப்பினாள்...

"ஜூலி... நீர் இப்ப வடிவாக இருக்கிறீர்...உண்மையைச் சொல்லப் போனால் உம்மைப் பார்க்க எனக்கே ஆசையாக இருக்கு...உம்மோடை கதைக்கிறதிலை...உம்மோடை பழகிறதிலை நான் அளவில்லாத சந்தோசத்தை காணுகிறன். இது உம்முடைய வசந்தகாலம்! இது வாழ்க்கையிலை ஒருக்காத் தான் வந்து போகும்... அந்த காலத்தை 'மிஸ்' பண்ணிவிட்டால் அது மீண்டும் வராது. நான் என்னுடைய வசந்த காலத்தை அநியாயமாக தொலைத்து விட்டு நிற்கிறன். இண்டைக்கு நான் விரும்பினாலும் வசந்த காலம் வராது...ஆனால் ஒரு உண்மையை நீர் உணரவேணும்...எவனுடைய வாழ்க்கையிலும் வசந்தகாலம் திரும்ப வராது...ஆனால் வசந்த கால நினைவுகள் இருக்குதே... அவை ஒவ்வொரு கணமும் ஏன் சாகும் வரைக்குமே எவனையுமே துரத்திக் கொண்டுதான் இருக்கும். இந்த சிறுகதை தொகுப்பு முழுவதுமே என்னுடைய வசந்த கால நினைவுகள் என்பது உமக்கு நல்லாய் தெரியுமே!"

ராஜநாதர் மிக மிக மென்மையான உணர்வுகள் படைத்தவர். அதனால்தான் அவர் கதாசிரியராக இருக்கிறார். அவரது உணர்ச்சி பூர்வமான சொற்பிரயோகங்கள் ஜூலியின் நெஞ்சை வருடிச் சென்றன...

கணினியின் முன்னால் அமர்ந்தபடி ராஜநாதர் தனது இதயத்தை அவளுக்கு திறந்து காட்டினார்...அவளும் ஏதோ ஒரு உரிமை எடுத்துக் கொண்டு அண்மையில் அவளுக்கு நடந்தேறிய அவமானம் பற்றி கண்ணீர் உகுத்தபடி கூறினாள்...

ராஜநாதரின் கைப் பையில் இருந்து ஒரு கட்டுப் பணம் ஜூலி கைமாறியது...

ராஜநாதர் அன்றைய தினம் ஜூலியின் வீட்டில் நன்கு ஓய்வெடுத்துக் கொண்டு வீடு திரும்பிய போது தனது சிறுகதைத் தொகுப்பிற்கு 'மீண்டும் வசந்தம்' என்று பெயர் வைக்கலாமா என சிந்தித்தபடி சென்றார்!

****************************

நிலாவினி தொழில் நுட்ப கல்லூரிக்கு செல்லும் நேரங்களைத் தவிர எஞ்சியுள்ள நேரங்களில் பெரும் பகுதியை பொது நூலகத்தில் செலவிடுவாள். நூல் இரவல் வழங்கும் பகுதியில் உள்ள புத்தகங்கள் பெரும்பாலானவற்றின் முகவுரைகளை மட்டும் படிப்பது அவளுக்கு ஒரு பொழுது போக்கு. நூலை முற்றாகப் படிக்காவிட்டாலும் முகவுரையை வாசிப்பதால் மனத்தில் அந்த நூல் என்ன காரணத்திற்காக எழுதப்பட்டது... அது முன் வைக்கக் கூடிய விடயதானங்கள் என்ன என்றவாறான சிந்தனை அவளுள் முகிழ்த்தெழும்... பின்னர் அமைதியாக இருக்கும் நேரங்களில் அந்த சிந்தனையை விருத்தி செய்வாள். அது அச்சுப் பதிவு பெறாத ஒரு நூலாக அவளது மனத்தில் உருப் பெற்றதும் மீண்டும் நூலகம் சென்று அதே புத்தகத்தை தேடி எடுத்து பெற்று வந்து வாசிப்பாள்... பின் இரு நூல்களையும் ஒப்பு நோக்குவாள். நூலாசிரியரிடமிருந்து தான் எவ்வளவு தூரம் பின்னிற்கின்றேன் என்று தன்மேல் தன் திறமை மேல் கழிவிரக்கம் கொள்வாள். அதுவே அவளை மலையத்தனை உயரத்திற்கு ஏற்றி விடும்!

அன்று வகுப்புக்கள் இல்லாததால் காலையிலேயே நிலாவினி தனது 'ஸ்கூட்டியில்' பொது நூலக வளாகத்திற்கு சென்று விட்டாள். அச்சமயம் கந்தவேள் தனது துவிச்சக்கர வண்டியை தூரத்தில் நிறுத்துவது தெரிந்து நிலாவினி அவனை அவதானித்தபடி தாமதித்தாள்...

நிலாவினியின் சிறு பராயத்தை நினைவூட்டுபவனாக கந்தவேளை அவள் கருதினாள். அவளது இல்லம் தேடி அவன் தாயுடன் வந்த சமயம் அவளும் அதே சமயம் அவனும் பெற்றோரை பேசவிட்டு ஒதுங்கி நின்றனர். பின்னர் அவர்கள் விடை பெற்று போனவுடன் நிலாவினி அந்த நினைப்பிலிருந்து நீங்கியிருந்தாள்.

இன்றோ இருவரும் தனிமையில் சந்தித்த நிலையில் தமது கடந்த கால நினைவுகளை பகிர்ந்து கொள்வதில் நாட்டம் காட்டினர்.

" நிலாக்குட்டி பத்து வருஷத்திற்கு மேலாய் நான் உம்மை மறக்காமல் இருக்கிறன். அண்டைக்கு உம்முடைய வீட்டுக்கு வந்த நேரம் எனது நெஞ்சிலை நீங்காமல் இருந்த சில நினைவுகளை உங்கடை தாயரிட்டை சொன்ன போது நீர் நாணிச் சிரித்த விதம் என்னை நீர் மறக்காமல் இருந்திருக்கின்றீர் எண்டதை எனக்கு சொல்லாமல் சொல்லிச்சுது..." கந்தவேள் கூறினான்.

"சிறு பராயத்தில்...போர்ப் பீதியின் மத்தியில் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்த அந்த கால கட்டத்தை ஆராலைதான் மறக்க முடியும்...வெடிச்சத்தம் கேட்டால்... செல்லடி விழுந்தால்... 'ஹெலி'யோ வேறை குண்டு போடும் விமானங்களோ வந்தால் நீங்கள் எனது கையைப் பற்றி இழுத்தபடி 'பங்கர்' தேடி ஓடுறது இண்டைக்கும் என்ரை கண்களிலை நீரை நிறைக்கும் நினைவுகளாக பதிஞ்சு கிடக்குது..."

அப்படி கூறும் போதே நிலாவினியின் கண்களிலிருந்து நீர் சொரிந்தமை கந்தவேளின் நெஞ்சில் ஆழமான பதிவொன்றை ஏற்படுத்தியது...

"ஏன் கந்தவேள் இப்ப எண்டாலும் நீங்களும் அம்மாவும் சந்தோஷமாய்... நிம்மதியாய் வாழக் கூடியதாக இருக்குதா? உங்கடை வருமானம் உங்கள் இரண்டு பேருடைய தேவைக்கும் போதுமானதாக இருக்குதா...?" நிலாவினி உள்ளார்ந்த அனுதாபத்துடன் வினாவினாள்...

"இப்படி ஆரெண்டாலும் என்னை சுகம் விசாரிச்ச காலமே எனக்கு ஞாபகம் இல்லை... 'அகதிகளைப் போய் சுகம் விசாரிக்க அவையள் தங்கடை கஷ்ட நஷ்ட மெல்லாத்தையும் சொல்ல...எங்களுக்கேன் உந்த தொந்தரவு" எண்டெல்லே சனம் நினைக்குது..." கந்தவேள் தாங்கள் அனுபவித்த துன்பங்களையெல்லாம் நினைவு கூர்ந்து கண்கலங்கினான்.

"உங்கடை அப்பாவைப் பற்றியும் தங்கச்சிக்கு நேர்ந்தவை பற்றியும் நினைக்க எனக்கு வேதனை பிச்சுக் கொண்டு வருகுது. தங்கச்சி இப்ப என்ன செய்கிறா?" நிலாவினி கேட்டாள்.

"அவாவை வன்னியிலையே விட்டிட்டு வந்திட்டம்...ஆஸ்பத்திரியிலை 'மருத்துவிச்சியாக வேலை செய்யிறதிலை கிடைக்கிற வருமானத்தை வைச்சு பிள்ளையின்ரை செலவுகளை பார்க்க கூடியதாக இருக்கு...மற்றது...மற்றது..."

கந்தவேள் தயங்கினான்...

"சொல்லுங்கோ கந்தவேள்...எங்கள் இரு குடும்பங்களுக்குமிடையில் என்ன இரகசியம்?"

கந்தவேள் கண்களைத் துடைத்துக் கொண்டான்...

"வன்னியிலை பெடியளின்ரை நிர்வாகத்திலை சாதிப் பிரச்சனை வலுவிழந்து போச்சுது...பிள்ளையை மலைக்கு கொண்டு வந்தால் கீழ் சாதிக்காரனுக்கு பிறந்தது அது இது எண்டு கதைச்சு என்னுடைய அக்காவையே சனம் கொண்டு போட்டு விடும்..."

நிலாவினிக்கு அது உண்மையென்றே பட்டது...

"இண்டைக்கு வன்னியிலை பெடியள் சாதிப் பிரச்சனையை வலுவிழக்கப் பண்ணிப் போட்டாங்கள்தான்...இனி நேரமாச்சு கந்தவேள்...நான் நூலகத்திற்கு போகப் போறன்..."

நிலாவினி அவனிடமிருந்து விடை பெற முயன்றாள்...

"ஒரு நிமிடம் எனக்காக தாமதிக்க முடியுமா நிலாக் குட்டி?"

கந்தவேள் தயக்கத்துடன் வினாவினான்

"சொல்லுங்கோ கந்தவேள்... உங்களுக்கு என்னாலான எந்த உதவியையும் நான் செய்ய தயங்கமாட்டன்...."

"எனக்கு...எனக்கு...உங்களைப் பார்க்க வேணும் எண்டால் எங்கை சந்திக்கலாம்?"

நிலாவினி ஒரு கணம் அவனை விசித்திரமாக பார்த்தாள். "என்ன கந்தவேள் உங்கடை கேள்வி அசாதாரணமாய் இருக்கு... என்னை மட்டுமல்லாமல் எவரை என்டாலும் சந்திக்கிறதெண்டால் அவை அவையின்ரை வீட்டை போனால் சந்திக்கலாம் தானே?"

நிலாவினியின் வெள்ளை மனதிற்கு முன்னால் கந்தவேள் கூனிக் குறுகி நின்றான்!

## 05

ஜூலி சில தினங்கள் வங்கிக்கு வராததால் வேலையில் தடங்கல் எதுவும் ஏற்படாவிட்டாலும் வங்கியின் கலகலப்புக்கு மிகுந்த பாதிப்பு உண்டானது.

காலையில் யார் யாரை எவ்வெப்போது முதற்றடவையாக சந்திக்கிறாளோ அந்தக் கணமே அவர்களுக்கு காலை வந்தனம் கூறி தன்னுடனான அன்றைய அலுவலக தொடர்பாடலை சுமுகமாக்கிக் கொள்வது ஜூலிக்கு கைவந்த கலை.

சில கிராமப்புற பாடசாலைகளில் கல்வி பயின்றுவிட்டு நாகரீகமற்ற முறையில் அலுவலகங்களில் ஒதுங்கியிருந்து தமதும் ஏனையோரதும் கடமை நேரத்தை பாழடிக்கும் பெண்கள் ஜூலியைப் பார்த்து திருந்த வேண்டும்!

மேட்டின் கடனை ராஜநாதர் கட்டாக தூக்கிக் கொடுத்த பணத்தை பெற்று அடைத்துவிட்டதால் அவளது மனம் நன்கு ஆறுதலடைந்திருந்தது.

இறுக்கமான நாகரீக 'கவுணில்' ஜூலி அன்று அழகு பிரகாசிக்க வங்கிக்கு வந்திருந்தாள்...

ராஜநாதர் தனது இல்லம் வந்திருந்தமையை யாராவது வங்கி ஊழியர் அறிந்திருப்பாரா என்று அஞ்சினாள். தானாக அவரது அறைக்கு செல்லாமல் அழைக்கும் போது போவதாக முடிவெடுத்து விலகி நடந்தாள்...

ஈற்றில் இரண்டுமே நடைபெறாமல் அலுவலக கடமைகளின் நிமித்தம் அவள் உள்ளே சென்ற சமயம் ராஜநாதர் அவளை அங்கேயே அமர்த்திக் கொண்டார்.

நாவலுக்கான பெயரை 'மீண்டும் வசந்தம்' என மாற்றிக் கொள்ளலாமா என ராஜநாதர் வினாவிய போது ஜூலி நாணித் தலை குனிந்தாள்.

" 'சேரின்ரை' உணர்வுகள் எனக்கு விளங்காமலில்லை... நீங்கள் ஒரு கதையிலை எழுதியிருக்கிறியள்... 'எல்லோருக்கும் பல்லிளிக்கிற பெண்கள் மேல்தான் ஆடவர்க்கு கவர்ச்சி இருக்கும்' எண்டு..."

ஜூலி அத்துடன் நிறுத்தினாள்.

"ஏன் ஜூலி சொல்ல வந்ததைச் சொல்லும்...ஒரு எழுத்தாளன் தான் எழுதுகின்ற ஒவ்வொரு கருத்துக்கும் தானே பொறுப்பாளி யாகின்றான். அந்த வசனத்தை பற்றி உம்முடைய கருத்தை தெரிஞ்சு கொண்டால்தான் எனது எழுத்து ஒரு வாசகனுடைய மனதிலை என்ன தாக்கத்தை அல்லது என்ன உணர்வை ஏற்படுத்துகின்றது எண்டது எனக்கு விளங்கும்"

ஜூலியின் கண்கள் பனித்தன...

"அது சேர்...அது சேர்..."

"சொல்லும் ஜூலி... சொல்லும்..."

"அது சேர்... அந்த பல்லிளிக்கிற பெண் எண்டு நீங்கள் குறிப்பிட்டது நானோ எண்டு எனக்கு பயமாயிருக்கு..."

ராஜநாதர் தனது 'ரீவோல்விங் செயரை' பின்நோக்கி நகர்த்தினார்... தனது முழங்கால்களுக்கு இடையில் கைகளை செருகியபடி தலையை தாழ்த்தி ஒரு கணம் சிந்தித்தார். பிறகு கூறினார்...

"ஜூலி எண்ணுகின்ற மாதிரி இல்லாமல் அந்த வசனத்திற்கு நேர்த்தியான ஒரு பொருள் இருக்கு. அதாவது.... 'அனைவருடனும் சிரித்து பழகும் பெண்களை ஆடவர் எவரும் விரும்புவர்' எண்டது. ஆனால் கதைப் போக்கின் அவசியம் கருதி அந்த வசனத்திற்கு வித்தியாசமான பொருள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கே அல்லாமல் வேறில்லை..."

ஜூலிக்கு அவர் கூறிய கருத்து வேறுபடுத்திப் பார்க்கக் கூடியதாக தெரியவில்லை...ஆனால் ஒரு எழுத்தாளன் தான் எடுத்துக் கொண்ட கருவை நியாயப்படுத்துவதையே நோக்கமாக கொண்டிருப்பான். அந்த வகையில் அவர் தன்னுடைய வாழ்க்கையில் சாதிக்க ஆயத்தமாகி விட்ட சில காரியங்களுக்கு நியாயம் கற்பிக்காமல் விடப் போவதில்லை என்பதையும் அவள் மானசீகமாக உணர்ந்தாள்.

ஆனால்...அவரது அந்த நிலைப்பாடு அவளது வாழ்க்கையை எப்படி எப்படி மாற்றியமைக்கப் போகின்றதென்பது பற்றி சிந்திக்க அவளுக்கு கால அவகாசமிருக்கவில்லை...திட்டமிட்டு பொறுத்திருந்து சாதிக்குமளவு அவளுக்கு பின்புலம் இருக்கவில்லை. இப்போதே...இங்கேயே கிடைக்கும் ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்துவதே தனது சுபீட்சமான எதிர்கால வாழ்க்கைக்கு உசிதமானதென்றும் அதற்காக குறைபாடுகளையுடைய ஒரு சமுதாயத்தால் நிறுவப்பட்ட எந்தக் கட்டுப்பாடுகளையும் தூக்கியெறிந்து விட்டு வாழ்வதில் தப்பில்லை என்றும் அவள் திடமாக நம்பினாள்...

"ஜூலி..."

ராஜநாதர் அவளை சுய நினைவுக்கு திருப்பினார்...

ஜூலி தனது தோளில் சரிந்திருந்த கேசத்தை பின்தள்ளி விட்டு அவரை துளைத்தெடுப்பது போல பார்த்தாள். பின்னர் கூறினாள்...

"சேர்...உங்களுடைய நாவலுக்கு 'மீண்டும் வசந்தம்' என்ற பெயர்தான் நல்ல பொருத்தமாய் இருக்கும்...!"

ராஜநாதருக்கு உள்ளம் குளிர்ந்தது!.

**************************

ராஜநாதர் நாவல்களிலும் சினிமாக்களிலும் வருகின்ற கதாநாயகர்கள் போன்று ஒரு கொள்கையில் நிலைத்து நிற்கும் மாமனிதரல்ல!

பலவீனங்களுக்கூடாக பலம் பெற்றவர்.

பட்டதாரியாக...ஒரு வங்கி அதிகாரியாக...ஒரு எழுத்தாளராக தனது சமூக அந்தஸ்தை அவர் மேம்படுத்தியிருந்தார்.

இருபத்தியிரண்டு வருடங்களாக விவாக வாழ்க்கையில் அவர் சோதனைகள் எதனையும் சந்திக்கவில்லை...

கற்பு நெறி வாழ்ந்த அவரது மனைவி அவரை தலை நிமிர்ந்து நடக்க வைத்திருந்தாள்...

படிப்பும் தொழில் முயற்சியும் என்றே தனது நேரத்தை செலவிட்டு வந்த அவரது மகனை போற்றாதார் இல்லை...

கலாச்சார புயலாக உருவெடுத்து வளர்ந்து வந்த அவரது மகள் குமர்ப் பருவத்தை எய்தியும் இன்னமும் குழந்தைப் பிள்ளையாகவே இருந்தாள்...

செல்வத்தால் குறைவின்றியும் ஆரோக்கியமான உடல் வளத்தால் இளைஞனாகவும் ராஜநாதரின் வாழ்க்கை நன்கு செழிப்புற்றிருந்தது...

அவருடைய நினைவுகளுக்கெல்லாம் அப்பால் அவரது மனக்குறையாக இருந்த ஒரே ஒரு விடயம் தனது வாழ்க்கையானது குடும்பம் என்ற சிறிய வட்டத்திற்குள் முடங்கிவிட்டது என கருதியதேயாகும்...!

உலகில் மது என்றும் மங்கை என்றும் வாழ்வில் அனுபவிக்க வேண்டிய பல சமாச்சாரங்கள் பற்றி அவருக்கு கேள்வி ஞானமே இருந்தது.

சில நேரங்களில் சில மனிதர்கள் வித்தியாசமான முறையில் சிந்திப்பவர்களாகவும் நடப்பவர்களாகவும் இருக்கின்றமைக்கு அவர் நல்லதொரு உதாரணமாக இருந்தார்.

'இந்த வாழ்க்கையில் நாம் ஏன் கட்டுப்பாடுகளை போட்டுக் கொண்டு எமது இன்பம் துய்க்கும் வல்லமையை சந்தர்ப்பத்தை மட்டுப்படுத்த வேண்டும்... நாம் இறந்துவிட்டால் யார் எம்மைப் பற்றி எமது கட்டுப்பாடான வாழ்க்கை பற்றி புகழப் போகின்றார்கள்...இறந்த பின்னர்...இப்போ கணவன் மனைவி என்கின்ற பந்தத்தில் இணைந்திருக்கும் எனக்கும் சீதாவுக்கும் என்ன தொடர்பு இருக்கப் போகின்றது...யாருக்கு எவர் பதில் சொல்ல வேண்டி நேரப் போகின்றது...'

இப்படியாக அவரது சிந்தனை செல்கையில் ஜூலியுடனான தனது புதிய நட்பினை நியாயப்படுத்தும் நோக்கிலானதா அது எனவும் அவரது மனம் ஐயுற்று கலங்கும்... ஜூலியுடனான தனது நட்பு சீதாவுக்கோ மற்றவருக்கோ தெரியாதவாறு மிக மிக அவதானத்துடன் அவர் தனது நடவடிக்கைகளை

கண்காணித்துக் கொண்டார். ராஜநாதர் போன்ற வயதில் மூத்த...மற்றும் அனுபவத்தில் முதிர்ந்த எவரால்தான் திட்டமிட்டு ஒரு காதல் லீலையை பாதுகாக்க முடியாது?

எனவே அவரது வாழ்க்கை என்ற திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட 'ஆளணி வெற்றிடமாக' இருந்த 'சின்னவள்' என்ற பதவிக்கு நியமனம் ஒன்றை வழங்க அவர் ஆர்வம் காட்டினார் போலும்...!

சமையல் கட்டு வேலைகளை பூர்த்தி செய்த சீதா வரவேற்பு அறைக்கு வந்தாள்...சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி சிந்தனையில் இலயித்திருந்த கணவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள்...

"முந்தியெண்டால் நீங்கள் ஏதாவது படிச்சு கொண்டிருப்பீங்கள்... இல்லாட்டி சிறுகதையெண்டோ நாவல் கட்டுரையெண்டோ என்னவெண்டாலும் எழுதிக் கொண்டிருப்பீங்கள்...இப்ப எண்டால் அப்படியில்லை... எதையோ பறிகொடுத்தவர் மாதிரியோ எதற்காகவோ ஏங்குகிற மாதிரியோ இடிஞ்சு போயிருக்கிறீங்கள்..."

சீதா கூறவும் ராஜநாதருக்கு திக்கென்றது...ஏதோ ஒரு வகையில் தான் ஜூலி பற்றி சிந்திக்க தொடங்கிய பின்னர் தனது வாசிப்புத் திறனும் எழுத்தாற்றலும் தடைப்பட்டு விட்டமையை அவர் அந்தக் கணம் உணரச் செய்தார்....அந்த குற்ற உணர்வினை மறைக்கும் முயற்சியாக ...

"எனக்கென்ன யோசனை சீதா...பிள்ளைகள் இரண்டும் ஓரளவு தலையெடுத்துவிட்டுதுகள்...அதுகளை நல்ல இடங்களில் சேர்த்துவிட்டால் எங்கடை பாரம் குறைஞ்சு போடும் எண்டு யோசிக்கிறன்"

என கூறி ராஜநாதர் தன் மேலான சீதாவின் கவனத்தை திசைதிருப்பிவிட்டார்....

"இண்டைக்கு நீங்கள் வேலைக்கு போனபின்னர் ராசமும் மகனும் வந்திருந்தவை...மகன் நல்லாய் வளர்ந்து முழு இளந்தாரி. நீர்பாசன அலுவலகத்திலை 'கிளார்க்' வேலை கிடைச்சு வந்திருக்குதுகள். நல்லாய் கஷ்டப்பட்டு போட்டுதுகள்...மகள் கீழ் சாதி பெடியனை கட்டிப் போட்டுதெண்டு

தகப்பனுக்கு சரியான கோபமாம்... காசு கொடுத்தெண்டாலும் தன்னுடைய மகளின்ரை வாழ்க்கையை வீணாக்கின அவனை சுடுவிப்பன் எண்டு சொல்லித் திரிந்தவராம். பிறகு பார்த்தால் பாதுகாப்பு படையே தவறுதலாக அவனை சுட்டுப் போட்டுதாம்...அதற்கு பிறகு அவரும் காணமல் போயிற்றாராம்..."

சீதா காலையில் நடந்த சம்பவத்தை கணவனுக்கு ஒப்பிவிக்கும் வழமையான கடமையை நிறைவு செய்தாள்...

ராஜநாதர் சிறிது நேரம் அமைதி காத்தார்... பின்னர்... "சீதா...நீ ஒரு குழந்தைப் பிள்ளை..உப்பிடியே உன்ரை காலமும் கழியப் போகுது...மற்றவை சொல்லுறதை அப்படியே நம்பும் பழக்கத்தை நீ எப்பதான் கைவிடப் போறியோ தெரியாது. ராசத்தின் புருசன் முழுக் குடிகாரன்...அவனுக்கு 'குடும்ப கௌரவம் எண்டால் சாதியம் தவறாது நிற்பது' எண்டு தான் தெரியும். மகள் கீழ் சாதிப் பொடியனோடை ஓடிப் போயிற்றாள் எண்டு கேள்விப்பட்ட உடனை இனி எப்படி ஊரிலை தலை காட்டுவன் எண்ட கவலைதான் அவனுக்கு வந்திருக்கும்... ஐயாயிரமோ பத்தாயிரமோ குடுத்து 'உவன் இயக்கம்...சுடுங்கோ' எண்டு சொன்னால் சுடுகிறதுக்கு எத்தனையோ சிங்கள சிப்பாய்கள் எங்கடை நிலத்திலை குடியேறீட்டாங்கள் பார்...!"

சீதா மூக்கின் மேல் விரலை வைக்காத குறையாக கணவன் கூறுவதை கேட்டுக் கொண்டு நின்றாள்... பின்னர்...

" அதற்கும் ராசத்தின்ரை புருசன் காணமால் போனதுக்கும் என்ன சம்பந்தம்?" என வினாவினாள்...

ராஜநாதர் உரத்து சிரித்தார்...

" உனக்கு சில விசயங்களை சொன்னால் நீ புரிஞ்சு கொள்ளவோ நம்பவோ மாட்டாய்...எண்டாலும் சொல்லுறன்... 'ஏ நைன்' பாதை பூட்டப்பட்டு சங்குப் பிட்டி, கொம்படி, கிளாலி எண்டு யாழ்ப்பாணத்திற்கு கள்ளப் பாதைகள் இரவிரவாக தொடக்கப்பட்டதெல்லோ... அதிலை பல சமாச்சாரங்கள் சட்டவிரோதமாக நடைபெற்றன...அதே போல கேட்பாரற்ற வகையில் ஆண் பெண் உறவுகளும் நன்கு வலுப் பெற்றது... இளைஞர்களும் காதலிச்சினம்... கலியாணம் முடிச்ச ஆண் பெண்களும் காதலிச்சினம்... இன்னும் சொல்லப்

போனால் அவையள் தங்கள் தங்களுக்கு முன்னைய விவாக பந்தம் காரணமாக இருந்திருக்கக் கூடிய தடைகளை வெட்டுவதற்காக அகதி அந்தஸ்தோடு இந்தியாவரை போயிருக்கினை. அவையளை இஞ்சை தேடினால் கண்டு பிடிக்க முடியுமே..?"

சீதாவுக்கு இப்போதான் பல புதிர்களுக்கு விடை கிடைத்தது.

ராஜநாதர் தன்மேல் மனைவிக்கு ஏற்பட்ட சந்தேகத்தை நன்றாக திசை திருப்பி விட்ட சந்தோசத்தில் குளியலறை வரை சென்று மேல் கழுவி வந்தார்...

சீதா இரவு ஆகாரத்தை மேசைக்கு எடுத்த பின்னர் ராஜநாதரையும் நிலாவினியையும் அழைத்து உணவு பரிமாறினாள்.

நிலாவினி.. "அம்மா...என்னோடை வந்து படுத்துவிடவேணும்..." என்று நிபந்தனை விதித்து விட்டு தனது கட்டிலில் போய் படுத்துவிட்டாள்...

ராஜநாதர் முற்றத்தில் ஓய்வாக நடந்து கொண்டிருந்தார்... ஜூலியின் நினைவால் அவர் எப்போதும் தனிமையையே நாடினார்...சீதா மெல்ல மெல்ல அடியெடுத்து வந்து அவர் அருகே தயங்கித் தயங்கி நின்றாள்...

ராஜநாதர் வியப்புடன் அவளது மாற்றத்தை அவதானித்தார்...

"ஏனணை ...நீங்கள் இப்ப இரவிலை என்னை தேடுறதே இல்லை"

சீதாவின் விம்மல் ஒலிகள் அவருக்கு சாட்டை அடிகளாக விழுந்தன!

## 06

மனோ அக்காவின் ஆலோசனைகளை அந்நேரம் தர்ஷி ஏற்க மறுத்திருந்தாலும் தான் கவனயீனமாக இருந்து சுரேஷ் தனக்கு கிடைக்காமல் போய்விடுவானோ என்ற கவலை அவளை கொஞ்சம் கொஞ்சமாக அரிக்கத் தொடங்கியது...

தர்ஷி மூத்த சகோதரிகள் போல சீதா அன்ரி வீட்டுக்கு போய் பழகியவளல்ல...மேலும் சுரேஷுடன் கதைத்தும் அறியாள்...சுரேஷின் பெற்றோருடனான அன்னியோன்யம் தான் அவள் அவன் மேல் கொண்ட காதலுக்கு அடித்தளமாக இருந்தது...

அதனால் சுரேஷை எப்படியாவது சந்தித்து தனது காதலை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு அவளுக்கு முற்றாக இல்லாமல் இருந்தது.

அதே சமயம் ஒரு ஆடவனின் பெற்றோரிடம் தான் அவர்களது மகனை காதலிப்பதாக எந்த ஒரு பெண்ணாலாவது கூறிவிட முடியுமா..?

சுரேஷின் தங்கை நிலாவினியோ கடைசியாக வீட்டுக்கு வந்த சமயம் சகோதரிகளின் அபிலாஷையை முற்றாக நிராகரித்ததுமல்லாமல் "அண்ணா உத்தியோகம் பார்த்து உழைச்சுத் தரும்; நான் சமைச்சுப் போடுவன்..." எண்டு விளக்கமற்றதனமாக கூறிவிட்டுச் சென்றிருந்தாள்...

இப்போ என்ன செய்வதென்று சிந்தித்துக் கொண்டிருந்த தர்ஷி திடீரென முடிவெடுத்து தொலைபேசியை எடுத்து 'டயல்' செய்தாள்.

நல்ல வேளையாக நிலாவினியே தொலைபேசியை கையில் எடுத்துப் பேசத் தொடங்கினாள்...

"நான் தர்ஷி கதைக்கிறன் நிலாவினி...என்ன செய்து கொண்டிருக்கிறீர்...?"

நிலாவினிக்கு மலர் அன்ரி வீட்டு பிள்ளைகள் மூவரிலும் மிகுந்த அன்பு உண்டு. அவர்களுடன் நிலாவினியை வைத்து பார்க்கும் எவரும் நால்வரையும் சகோதரிகள் என்றே கருதுவர். நிலாவினியும் அடிக்கடி அங்கே சென்று உரிமை கொண்டாடும் விதத்தில் அவர்களுடன் சண்டை பிடித்து பின் சமாதானமாகி விடுவாள்.

ஆனால் கடைசியாக சென்ற சமயம் மனோ அக்கா அவளது அண்ணாவை தர்ஷிக்கு கேட்டபடியால் உண்டான கோபம் காரணமாக அவள் சில நாட்கள் அதிகமாக சென்று விட்ட நிலையிலும் அங்கு போக தயக்கம் காட்டினாள்...இப்போ தர்ஷியிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்ததும் அவள் அனைத்து கோபங்களையும் மறந்தவளாக 'தர்ஷி அக்கா........ தர்ஷி அக்கா' என்று அழைத்து ஆர்வத்துடன் அனைவரதும் சுகசேமங்களை விசாரித்தாள்.

நிலாவினியின் கோபம் நீடிப்பதில்லை என்பதை தர்ஷியும் அறிந்தவளாகையால்...

"ஏய் நிலாக் குட்டி...நீ இப்ப இங்க வாறியா...?"

என்று கேட்டு வைத்தாள்.

"அம்மா நான் தர்ஷி அக்கா வீட்டை போறன்" என்று கூறியபடியே நிலாவினி தனது ஸ்கூட்டியை 'ஸ்ராட்' செய்தாள்.

தர்ஷி துரிதமாக செயற்பட்டாள்...தொடர்ந்து வருகின்ற ஞாயிறு தினம் தொழில் நுட்பக் கல்லூரியில் நடை பெற இருக்கின்ற இராப் போசன வைபவம் ஒன்றிற்காக அழைப்பிதழ் ஒன்றை சுரேஷின் பெயருக்கு எழுதி வெள்ளை தபால் கவர் ஒன்றில் வைத்து ஒட்டி தயார் செய்து கொண்டாள்.

'பயலே நீ அங்கு வா...கவனித்துக் கொள்கிறேன்' என்று மனதிற்குள் கறுவிக் கொண்டாள்.

நிலாவினி வந்ததும் வராததுமாய் வழமை போலவே அடுப்பங்கரைவரை வீட்டை ஒரு கலக்கு கலக்கி வந்தாள். மலர் அன்ரி முதல் மனோ அக்கா, ராஜி அக்கா அனைவரையும் சுகம் விசாரித்தாள்...அவளிடம் ஒரு பழக்கம் இருந்தது.

அவள் வீட்டு புதினம் எதுவாக இருந்தாலும் அது எவ்வளவு இரகசியமாக இருந்தாலும் அவை யாவற்றையும் மனோ அக்காவிடம் ஒப்புவித்து விடுவது.

மனோவிற்கு இரகசியத்தை பேணும் தந்திர புத்தி கிடையாது. நிலாவினி அவளிடம் கூறிய அத்தனையையும் சிரித்து சிரித்து சீதா அன்ரியிடம் கூறாவிட்டால் அவளுக்கு பத்தியப்படாது. பின் சீதா அன்ரியும் அவளுடன் சேர்ந்து சிரிப்பாள்.

நிலாவினி மலர் அன்ரி வீட்டுக்குப் போவதாக வெளிக்கிட்டால் அவளது தாய் சொல்லி அனுப்பும் கருமம் ரம்பை இலைகள் வெட்டி வா என்பது. ரம்பை இலைகள் வெட்ட மேசைக் கத்தியுடன் போகும் நிலாவினிக்கு விலாட்டு மாங்காய் கண்ணில் படக் கூடாது...நிறைய பழங்களை 'சொப்பிங்' பாக்கில்' நிரப்பிக் கொள்வாள்.

இத்தனை கருமத்தையும் அன்று பூர்த்தி செய்த பின்பே அவள் தர்ஷியை தேடிப் போனாள்...

“தர்ஷி அக்கா... என்ன விசயம்...எனக்கு 'ட்ரீட்' ஏதாவது தரப் போறியளா?” வினாவினாள்

“விசேஷமெண்டு வந்தால் நிலாக்குட்டி உனக்குத் தானே நான் முதல் 'ட்ரீட்' வைப்பன்...”

“அப்ப...கெதியாய் அழைப்பை எதிர்பார்க்கலாம்...”

“ஐ வில் ட்ரை மை பெஸ்ற் நிலாக்குட்டி”

“விஷ் யு ஓல் த சக்ஸஸ் அக்கா...”

“அதெல்லாம் இருக்கட்டும் நிலாக்குட்டி உனக்கு என்னிலை நம்பிக்கை இருக்குத்தானே...? நான் இப்ப சொல்லப் போற விஷயமொண்டை நீ ஏன் எண்டு கேக்காமல் செய்ய வேணும். செய்வியா?

“'ஷுவர்...ஷுவர்'...என்னவெண்டு சொல்லுங்கோ அக்கா... எதுவாயிருந்தாலும் நான் தர்ஷி அக்காவுக்கு செய்வன்...”

நிலாவினி வாக்குக் கொடுத்தாள்...

தர்ஷி நிலாவினியின் வலக்கையை பற்றிப் பிடித்து அந்த வெள்ளை 'கவரை' உள்ளங்கையில் வைத்து விரல்களால் மூடிவிட்டாள்...

"இதை உன்ரை கொண்ணேட்டை ஒருக்கால் குடு..." தர்ஷி கெஞ்சினாள்.

"இதென்ன பெரிய விசயமக்கா...அண்ணை இண்டைக்கு பின்னேரமே வீட்டுக்கு வந்து விடுவார்...அவரின்ரை மேசையிலையே வைச்சுவிடுகிறனே..."

"அதைச் செய்..."என்று கூறி நிலாவினிக்கு ஒரு முத்தம் கொடுத்து அனுப்பி வைத்தாள் தர்ஷி...

நிலாவினி ஸ்கூட்டியில் போகும் போது...

'என்னுடைய ஆசை அண்ணாவிற்கு காதல் கடிதமா எழுதுகின்றாய் கழுதை'... என்று கறுவிக் கொண்டு போனாள்...இடது கரத்தில் பிடித்திருந்த கடிதம் எதிர் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. ...

பஸ் நிலையம் கழிந்து பொலிஸ் நிலையம் தாண்டி பாலத்தில் ஏறி ஸ்கூட்டி வேகமாய் போய்க் கொண்டிருக்கையில் கடிதத்தின் பிடியை நிலாவினி மெல்ல தளர்த்தினாள். கடிதம் காற்றில் மிதந்து சென்றது.

வீட்டுக்கு அவள் வந்து சேர்ந்தபோது சுரேஷ் எதிர்பாராத விதமாக வந்து விட்டிருந்தான்...

அதுவுமல்லாமல் தர்ஷி தொலைபேசியில் நிலாவினியின் அம்மாவுடன் உரையாடி ரம்பை கொடுத்தனுப்பிய தகவலை கூறியதுடன் நிலாவினியிடம் தான் கொடுத்த கடிதத்தை சுரேஷுக்கு பெற்றுக் கொடுக்கும்படி வேண்டியிருந்தாள்...

நிலாவினியிடம் தாய் சுரேசுக்கு கொடுக்க வேண்டிய கடிதம் பற்றி விசாரித்த போது அவன் குளியலறையில் இருந்தான்...

நிலாவினிக்கு நடுக்கமே பிடித்துவிட்டது...வகையாக மாட்டிக் கொண்டு விட்டோமே என்று பதறினாள்...

தனது அறைக்கு ஓடிச் சென்று வெள்ளைக் 'கவர்' ஒன்றை தேடி எடுத்தாள். வெற்றுத் தாளில் தர்ஷியின் கையெழுத்தில் இரண்டு வசனங்களை எழுதினாள். 'கவரை' ஒட்டி குளியலறையில் இருந்து வந்த சுரேஷிடம் பக்குவமாக கொடுத்துவிட்டு மாறிவிட்டாள்.

சுரேஷ் கடிதத்தை பிரித்துப் பார்த்தான்...

'அன்பு சுரேஷ்...நான் உன்னைக் காதலிக்கின்றேன்...நீயும் என்னை விரும்புகிறாயல்லவா...? உனதன்பு தர்ஷி' என்று எழுதப்பட்டிருந்தது.

***************************

ராஜநாதரின் மனதை இளம் தென்றல் ஒன்று வருடிக் கொண்டிருப்பதில் அவர் எல்லையற்ற சுகம் கண்டார். வாழ்க்கைப் போராட்டத்தில் அவருக்குண்டான சிறு சிறு தழும்புகளைக் கூட மறக்கடிக்க கூடிய வல்லமை அந்த வருடலுக்கிருந்தது... அந்த வருடலில் திழைப்பதை அவர் ஆத்மார்த்தமாக விரும்பினார்.

ஜூலியை அவளது வீடு சென்று சந்தித்ததன் பின்னர் அந்த அழகி மீதான அவரது மன அவஸ்தையிலிருந்து அவரால் விடுபட வேண்டுமாயின் ஜூலி அவருக்கு அண்மையில்...மிக அண்மையில் இருந்தால்தான் ஆகும் என்ற நிலைக்கு அவர் வந்துவிட்டிருந்தார்.

தொடர்ந்து வந்த ஞாயிறு தினம் ஜூலி ராஜநாதரை தனது இல்லத்திற்கு அழைத்திருந்தாள்.

ராஜநாதர் அங்கு சென்ற சமயம் ஜோர்ஜின் மகன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். ஜோர்ஜ் தேய்ந்து போன ஒரு மண் வெட்டியை அருகில் வைத்தபடி காய்ந்த தடியொன்றை அதற்கு பிடியாக பொருந்தும்படி சீவிக் கொண்டிருந்தான். ராஜநாதர் வந்ததும் எழுந்து நின்று சாரத்தை பதியவிட்டு மரத் தூசுகளை தட்டி விட்டபடியே ராஜநாதரை வரவேற்றான்.

ஜூலி ஓடி வந்து அவரை எதிர்கொண்டு வரவேற்று அழைத்துச் சென்றாள்.

அன்றைய அக் காலைப் பொழுது அதிக வெய்யில் அற்று உடலுக்கு இதமளிப்பதாக இருந்தது.

ஜூலி அவரை அழைத்துச் சென்று அறையில் சாதாரண ஒரு கதிரையில் அமர்த்தினாள். அது ஜூலியால் வழங்கப்பட்ட ஆசனமாகையால் அவர் அதனை தனக்கு வழங்கப்பட்ட சிம்மாசனமாகவே கருதி அகமகிழ்ந்தார். அருகிலிருந்த கட்டிலில் ஜூலி அமர்ந்து கொண்டாள்.

ஜூலி வினாவினாள்...

"ஏன் சேர்...உங்கடை பிள்ளைகளின் விவாக விடயங்கள் எந்த அளவில் இருக்கு? அவர்களை நீங்கள் கட்டுப்படுத்துகிற விதத்தை வைச்சுக் கொண்டு யோசிக்கேக்கை கெதியிலை இருவரையும் விவாக பந்தத்துக்குள்ளை விடுகிறது நல்லதெண்டு நான் யோசிக்கிறன்."

ராஜநாதர் பதில் கூறவேயில்லை. முற்றத்தில் இருந்து கொண்டு மண்வெட்டிப் பிடியை தயார் செய்து கொண்டிருந்த அவளது கணவனை திரும்பிப் பார்த்தார்.

ஜூலி விளங்கிக் கொண்டாள்...கணவனை பெயர் சொல்லி அழைத்தாள்... ஐந்நூறு ரூபா பணத்தை அவன் கையில் கொடுத்து வீட்டுக்கு தேவையான அவசிய பொருட்கள் சிலவற்றை வாங்கி வருமாறு பணித்தாள்.

அதன் பின் மீண்டும் ராஜநாதர் அருகே அமர்ந்து கொண்டாள்.

"ஜூலி...எனது பிள்ளைகளின் விவாக விசயத்திலை நான்தான் அதிக அவசரம் காட்டுகிறன். உணர்ச்சிகள் வேறு...உணர்வுகள் வேறு...உணர்சிகள் பல தவறுகளுக்கு அடித்தளமாக அமைந்துவிடும். அதனை நெறிப்படுத்தி விவாக பந்தத்தின் மூலம் அன்பு...பாசம்...காதல்...என்ற உணர்வுகளுக்குள் அவர்களை இட்டுச் செல்ல வேண்டிய பொறுப்பை நான் ஒவ்வொரு விநாடியும் விளங்கிக் கொண்டுதான் இருக்கிறன்..."

"சேரைப் பற்றி யோசிக்கேக்கை நான் சேரின்ரை குடும்பத்துக்கு துரோகம் செய்யிறேனோ எண்டு பயமாயிருக்கு..." ஜூலி நிலத்தைப் பார்த்தாள்.

"ஜூலி...உம்முடைய குடும்ப வாழ்க்கை உமக்கு பல மட்டத்திலையும் குறைபாடாய் இருக்கிறதாலை அங்கை ஒரு வெறுமை வெற்றிடம் ஏற்படுகின்றது. நான் இல்லாவிட்டாலும் அந்த வெற்றிடத்திறகு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டுத்தான் தீரும். அதே போல எனக்கு இருக்கிற வசதியும் வாய்ப்பும் என்னை சுகபோகத்தை நாடி துரத்துகிறதாலை நீர் இல்லாவிட்டாலும் நான் இன்னொருத்தியை நாடிச் செல்வதை தடுக்க முடியாமல்தான் இருக்கும்"

ஜூலிக்கு கண்கள் கலங்கிவிட்டன...

"இன்னொருத்தியை நாடிச் செல்ல வேண்டி இருக்கும் எண்டு சேர் சொல்லேக்கை என்ரை இதயம் பட பட எண்டு அடிக்குது. இனம் புரியாத ஒரு வேதனை எனது மனதை பிழியிற மாதிரி இருக்குது...என்னாலை 'சேரை' விட்டு கொடுக்கிறதைப் பற்றியோ 'சேரை' இன்னுமொரு பெண்ணோடு வைச்சுப் பார்க்கிறதைப் பற்றியோ சிந்திக்கவே முடியேல்லை..."

"ஏன் ஜூலி எனக்கும் உமக்கும் இடையிலை இருக்கின்ற வயது வித்தியாசம் உமக்கு என்மேல் அன்பு செலுத்துவதற்கு தடையாக இல்லையா...?" ராஜநாதர் ஜூலியின் விழிகளை ஊடுருவினார்.....

"சேர்...நீங்கள் என்னுடைய கஷ்டத்திலை பங்குபற்ற முன் வந்த அந்த நேரமே எனக்கு ஒரு மனத் தைரியம் வந்தது... இந்த உலகத்திலை ஒரு பெண்ணாக...ஏழையாக போராடி வாழ வேண்டிய எனது பாரிய பொறுப்பை நிர்வகிக்க கடவுள் ஒரு தூதுவனை அனுப்பியதாகவே நான் ஆறுதலடைந் தேன். 'சேருக்கு' வயது ஒரே ஒரு குறையாக இருக்கலாம்...நான் குறைகளே நிறைந்தவள். 'சேருடைய' சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்ற நான் எந்த விட்டுக் கொடுப்பையும் எந்த நேரமும் செய்ய தயாராகவே இருக்கிறன்..."

"ஜூலி...என்னுடையதும் உம்முடையதுமான அன்புக்கு நான் ஒரு எல்லை வைச்சிருக்கிறன்..."

ஜூலி விழுந்து விழுந்து சிரித்தாள்...தனது வங்கி அதிகாரி என்பதையும் மறந்து தான் அமர்ந்திருந்த கட்டிலில் நிமிர்ந்து சரிந்தாள்...

அவளது பெருந்தொடை அவர் அருகே கவர்ச்சி காட்டியது...

கட்டிலில் மல்லாந்து படுத்திருந்த நிலையிலிருந்து குப்புற சரிந்து முகத்தை சாய்த்து அவரைப் பார்த்து கண் சிமிட்டி சிரித்தாள்...

"ஏன் 'சேர்' அன்புக்கும் எல்லையுண்டோ...?"

ராஜநாதரின் பார்வை கேசங்களால் மூடப்பட்ட அவளது கழுத்துப் பகுதியிலிருந்து முதுகுக்கும் மேலால் ... மேலால்...குதிக்கால் வரைக்கும் படர்ந்தது...அவரது மனக் குறையே ஜூலிக்கும் தனக்குமிடையேயான வயது வித்தியாசம் அவள் தன் மேல் ஆசை வைப்பதற்கு தடையாக இருந்துவிடுமோ என்பதாகவே இருந்தது...

"ஜூலி...இண்டைக்கு நான் உம் மேல் அன்பும் ஆசையும் வைக்கிறன் எண்டால் அதுக்கு உறுதுணையாக இருக்கிறது என்னுடைய ஆரோக்கியமான உடல் நிலைதான். என்னுடைய ஆரோக்கியத்திற்கு பாதகம் உண்டாகி விட்டதாக நான் எண்டைக்கெண்டாலென்ன மனதார உணர்ந்தால்..."

ராஜநாதர் விழிகளிலிருந்து அருவியாக கண்ணீர் வடிந்தது.

ஜூலி கட்டிலில் மறுபடி உருண்டு எழுந்து அவரது முகத்திற்கு அண்மையில் வந்து...

"சொல்லுங்கோ சேர்...ஆரோக்கியத்திற்கு பாதிப்பு வந்தால்...?" என்று வினாவினாள்.

ராஜநாதருக்கு தயக்கமாக இருந்தது. தானே தனதும் ஜூலியினதும் களவொழுக்கத்திற்கு காலம் நிர்ணயிப்பதாக முடிந்து விடுமோ என்ற கவலை இப்போ அவரைப் பீடித்தது. ஆனால் அவர் கதையை மாற்றி விடாதபடி ஜூலி அவசரப்படுதினாள்......

"சொல்லுங்கோ 'சேர்' ... சொல்லுங்கோ..."

அவரது பேச்சில் விம்மல் தெரிந்தது...வார்த்தைகள் தடுமாறின.. "என்னுடைய ஆரோக்கியத்திற்கு பாதிப்பு உண்டாகி விட்டதாக நான் எண்டைக் கொண்டாலென்ன மனதார உணர்ந்தால்...நான் உம்மேல் வைத்திருக்கிற அன்பையும் ஆசையையும் இடைநிறுத்திக் கொள்ளுவன்"

ஜூலி ஒரு கணம் அவரது பெருந்தன்மையை எண்ணி வியப்படைந்தாள். பின்னர் எழுந்து சென்று குளிர் சாதனப் பெட்டியிலிருந்து இரு குளிர்பானங்களை எடுத்து வந்து அவருக்கு பரிமாறி தானும் அருந்தி விட்டு பாத்திரங்களை கட்டிலுக்கு கீழ் கால்கள் படாதபடி தள்ளி வைத்தாள்.

பின் துணிவுடன் அவரை நெருங்கி கட்டிலில் அமர்ந்தாள்...

"சேர்...ஆரோக்கியம் இல்லாமல் போனால் நீங்கள் மட்டுமல்ல நான் கூட...எனக்கு ஆரோக்கியம் இல்லாவிட்டால் உங்கள் மீது ஆசைப்படவோ அன்பு காட்டவோ முடியாது....களவொழுக்கத்தில் உள்ள எல்லோருக்கும்தான் இது பொருந்தும். இதிலை வயது வேற்றுமை என்ன இருக்கு...?"

ராஜநாதர் அவளது வாதத்தைக் கேட்டு அப்படியே குளிர்ந்து போனார்...! அவரை மேலும் மகிழ்விக்கவே அவள் விரும்பினாள்...

"ஏன் சேர்...உங்கடை சின்னச் சின்ன ஆசைகள் என்னவெண்டு ஒரு நாள் நான் கேட்டதுக்கு பிறகு சொல்லுறன் எண்டு சொன்னீங்களே...இப்ப அதைச் சொல்லுங்கோவன்..."

ராஜநாதர் திரும்பவும் முற்றத்தைப் பார்த்தார்...சிறுவன் மண் விளையாட்டில் மூழ்கியிருந்தான்...

" சேர்...அவன் மண் விளையாடப் போனால் அவனை அடித்து இழுத்து எடுத்தால்தான் வீட்டுக்குள்ளை வருவான்... அதோடை மண் விளையாடினால் கிணற்றில் குளிக்காமல் வீட்டுக்குள் வரக் கூடாதெண்டு கண்டிச்சு வைச்சிருக் கிறன்..."

ஜூலி ராஜநாதருக்கு தைரியமூட்டினாள்...மீண்டும் கேட்டாள்... "உங்கடை சின்னச் சின்ன ஆசைகள் என்னவெண்டு சொல்லுங்கோவன்...?"

ராஜநாதர் ஜூலியை உச்சி முதல் உள்ளங்கால் வரை பாரத்தார்...பின் கூறினார்...

"ஒரு பெண் கட்டிலில் படுத்திருக்க அவளது இடுப்பு ஓரமாக அமர்த்திருந்து அவளது முகத்தை பார்த்து இரசித்தபடி கதைகள் பேசுவது போல நான் கற்பனை பண்ணுவதுண்டு..."

ஜூலி கட்டிலில் சாய்ந்தபடி அவர் முன்பாக கைகளை நீட்டி கட்டில் விளிம்புக்கு அழைத்தாள்...

ராஜநாதர் தயங்கினார்...

"உனது கணவன் இப்போ அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொண்டு இங்கு வருவான் அல்லவா...?"

ஜூலி சிரித்தாள்...

"ஜோர்ஜ் இப்போ நான் கொடுத்த பணத்துடன் மதுபானசாலையில் இருப்பான்... அவனுக்கு பணத்தைக் கொடுத்து வேலை வாங்க முடியாது...அவனை வரவேண்டாம் என்று தானே பணத்தை கொடுத்தேன்...!"

ஜூலி அப்படிக் கூறவும்...

ராஜநாதரின் உடல் சில்லென்று குளிர்ந்தது!

## 07

சுரேஷ் கடிதத்தை படித்ததும் அதிர்ந்தே விட்டான். தர்ஷி பற்றி அவனுடைய மனதில் ஏற்பட்டிருந்த அபிப்பிராயங்கள் எல்லாம் அவனது தாய் வழியாக ஏற்படுத்தப்பட்டவையாகவே இருந்தன. அவனாக அவதானித்ததில் அவள் கல்வி கற்ற நிலையங்களில் நல்ல பெயர் பெற்றிருந்தாள். அநாவசியமாக வெளித்தேவைகள் என்று கூறி அலைந்து திரியும் பெண்ணல்ல அவள். தொழில் புரிவதற்கு அல்லாது ஒரு இல்லத்தரசியாக அவளை வைத்திருந்தால் கூட குடும்பபாங்குடன் கணவன் பிள்ளைகள் என்று திருப்தியுடன் வாழக் கூடிய இயற்கை சுபாவத்தை அவளிடம் காணக்கூடியதாக... அவதானிக்கக் கூடியதாக இருந்தது...

சுரேஷ் வீட்டில் உள்ள அனைவர் மனத்திலும் அவள் ஊடுருவி இருந்தாள்...அவர்கள் ஊடாக தர்ஷி தன் மேல் ஆதிக்கம் செலுத்துவதாக கூட சுரேஷ் சில சமயங்களில் உணர்ந்தான்...

அப்படியான நிலையில் ஒரு சாதாரண அடிமட்ட பெண்போல...'சுரேஷ் நான் உன்னைக் காதலிக்கிறேன்...நீயும் என்னை விரும்புவாயல்லவா,?' என கேட்டு கடிதம் எழுதியிருந்ததானது சுரேஷின் மனத்தில் கொதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அது மட்டுமன்றி அந்த காதல் கடிதத்தை தான் குழந்தை என்று போற்றுகின்ற தனது தங்கை மூலமாக அனுப்பியிருந்தது அவனுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருந்தது...

தர்ஷியை எங்கு சந்தித்து எப்படிக் கதைப்பது என்று மூளையை போட்டுக் குழப்பியபடி இருந்த சுரேஷுக்கு அவனது தொழில்நுட்ப கல்லூரி நண்பர்கள் சிலர் நேரில் வந்து ஞாயிறு தினம் நடைபெற இருக்கின்ற இரவு விருந்துபசாரத்திற்கு பழைய மாணவன் என்ற ரீதியில் அழைப்பு விடுத்துச் சென்றது மகிழ்ச்சியை அளித்தது. தர்ஷியும் பழைய மாணவியாகையால் அவளது வருகையை அங்கு எதிர்பார்க்கலாம் என்பதை அவன் தெரிந்து வைத்திருந்தான்...

தொழில்நுட்பக் கல்லூரிக்கென சிறப்பான மண்டபம் ஏதும் இருக்கவில்லை. இளம் தென்னைகள் சூழ இருந்ததால் கல்லூரி வளாகம் எப்போதுமே இயற்கை

அழகுடன் மிளிர்ந்து கொண்டிருந்தது. சுரேஷ் அங்கு வந்த போது வளாகம் அலங்கார விளக்குகளின் ஒளியில் மிதந்து கொண்டிருந்தது. சிறிய அளவிலான பல மேசைகள் கதிரைகள் சூழ இடைவெளிகள் விட்டு போடப்பட்டிருந்தன. ஏறத்தாள ஆண், பெண் இருபாலாராக நூற்றியைம்பது மாணவ மாணவிகள் விரிவுரையாளர்கள் உட்பட அந்த இராப் போசன விருந்தில் கலந்து கொள்ள வந்திருந்தனர்.

மாணவிகளாக சாதாரண ஆடைகளில் வகுப்புக்களுக்கு வந்து போகும் பெண்கள் விலையுயர்ந்த...ஆடம்பரம்மிக்க சேலை அணிந்து தங்க ஆபரணங்கள் சகிதம் வந்திருந்தமை சுரேஷ"க்கு ஒரு வகையில் மன எழுச்சியை ஏற்படுத்தியிருந்தது. இவர்கள் எல்லோரும் அவரவர்களுக்கு விவாகம் என்று வந்தால் இப்படித்தானே தம்மை அலங்காரம் செய்து கொண்டு அழகு தேவதைகளாக காட்சி அளிப்பார்கள்... 'உங்களில் எவருக்கும் நாங்கள் பொருத்தமானவர்கள்தான்... எங்களை தெரிவு செய்து கொண்டு பெண்ணாசை என்ற போதையை அனுபவியுங்கள்' என்று சவால் விடுவது போல அவர்கள் தேவதைகளாக அங்கு மிதந்து கொண்டிருந்தார்கள்...

சுரேஷின் கண்கள் அந்த தேவதைகளுக்கு மத்தியில் தர்ஷியை தேடிக் கொண்டிருந்தன...

கேலியும் கிண்டலும் நிறைந்த பேச்சுச் சத்தம்... 'பெர்பியூம்' வாசைன... நாவூறும் உணவு வகைகள். கண்ணுக்கு விருந்தளிக்கும் சோடனைகள்... 'சீ.டி'யிலான ஒலிவெள்ளம்...

சுரேஷின் பார்வை திடீரென ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது... சப்த கன்னிகைகளில் ஒருத்தியோ இவள் என எண்ணி ஒரு விநாடி திடுக்குற்ற நிலையில் நின்ற அவனை அக் காரிகை நெருங்கினாள்...

' ஓ...தர்ஷி...!' என சுரேஷின் வாய் முணுமுணுத்தது...ஆனால் அவன் செயலிழந்தான்.

" இப்படி அமர்வோமா?" சுரேஷை அனுமதி கேட்டான்.

'சாறி பிளீற்சை' சரி செய்து அவள் கதிரையில் அமர்ந்த விதத்தில் 'மொடலிங்' செய்யும் பெண்ணின் இலாவகம் தெரிந்தது. நாணம் அவளை தலைகுனிய வைத்தது...

அங்கு அவள் ஆண் என்று நினைத்த ஒருவன் முன்...எதிர் காலத்தில் துணைவன் என முடிவெடுத்த அவன் முன் சரணாகதி அடைந்தவள் போல் ஆனாள்.

தர்ஷியின் அழகும் அலங்காரமும் சுரேஷை அதிரவைத்தது. அந்த மேசையில் அவர்கள் தனித்து விடப்பட்டார்கள்.

தர்ஷியை விரும்பி முயற்சித்து ஏமாற்றமுற்றவர்கள் பலருக்கு அது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.... 'சுரேஷ் கல்வி கற்கும் காலத்தில் தர்ஷியின் பின்னால் அலைந்து திரிந்தவனும் அல்ல...இப்போ என்ன நேர்ந்தது?' என எண்ணி குழம்பினார்கள்.

" ஹலோ தர்ஷி..."

" ஹலோ சுரேஷ்..."

என அழைத்து நலன் விசாரித்து சென்றார்கள் சிலர்...

தர்ஷி தம்மிருவருக்கும் இடையேயான அமைதியை எப்படியாவது முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன்

"உங்களுக்கு தொழில் கிடைத்ததாக அறிந்தேன். எனக்கு மிகவும் சந்தோசம்..." என்று இழுத்தாள்...

சில விநாடி அமைதி நிலவியது...தர்ஷி தனக்கு காதல் கடிதம் எழுதியதாக நம்பி சுரேஷ் ஆத்திரமுற்றிருந்தான்...எனவே " தர்ஷி...எனக்கு முன்னர் உங்களை நன்கு பிடித்திருந்தது..." என்று கூறி தனது கதையைத் தொடக்கினான். தர்ஷி அதிர்ந்து விட்டாள்.

"இப்போ என்னவாம்...?"

தர்ஷியின் கண்களில் இருந்து கண்ணீர் பொலு பொலு என்று பெருக்கெடுத்தது. "ஏய் தர்ஷி...அப்படி அழாதே...இப்போ. என்ன நேர்ந்தது? கண்களை துடைத்துக் கொள். மற்றவர்கள் என்னை தப்பாக நினைக்கப் போகின்றார்கள்"

தர்ஷியின் கண்ணீர் பெருக்கெடுத்த விதத்தில் சுரேஷின் நெஞ்சு படபடத்தது.

"முதலில் கண்களைத் துடைத்துக் கொள். என் முன்னால் எந்த பெண்ணும் அழுது நான் காணவில்லை. உனக்காக நான் என்ன செய்ய வேணும்?"

தர்ஷி அமைதியானவள். ஆனால் அவள் அப்போது நடந்த விதம் எதிர்பாராததாக இருந்தது...

"என்னை முன்னர் பிடித்திருந்தது என்று ஏன் கூறினீர்கள். இப்போ ஏன் பிடிக்கவில்லை.? எனக்கு பதில் தெரியவேணும்..."

தர்ஷியின் கண்களில் பொலு பொலு என மீண்டும் ...

"ஐயோ தர்ஷி உன்னை இப்போ அல்ல எப்பவுமே எனக்கு பிடிக்கும்... உன்னில் என்ன பிழை சொல்ல முடியும்...உனக்காக என்ன செய்ய வேண்டும்? அதை சொல் செய்கின்றேன்."

"நான் என்ன செய்ய வேண்டும் என்றாலும் செய்வீர்களா?"

"நிச்சயமாக...?"

"சத்தியம் பண்ணுவீர்களா?"

"உன்மேல் சத்தியம்..."

"என்மேல் சத்தியம் வேண்டாம் ..."

"அப்போ...?"

"நிலாக்குட்டி மேல் சத்தியம்..."

"சரி நிலாக்குட்டி மேல் சத்தியம்"

"சரி இருவரும் சேர்ந்து சாப்பிடுவம். போகும் போது கூறுகிறேன்" தர்ஷி

சுரேஷுடன் சேர்ந்து சாப்பிடுவதை தர்ஷி தனக்கு கிடைத்த பாக்கியமாக நினைத்து அகமகிழ்ந்தாள்...அவனை மேசையில் வைத்து உபசரித்தாள்.

"நான் நிலாக்குட்டி மூலம் அனுப்பி வைத்த அழைப்பிதழை ஏற்று இவ் வைபவத்திற்கு வந்தமைக்கு நன்றி..." தர்ஷி கூறினாள்.

"அழைப்பிதழா...? என்ன சொல்கிறாய்...?"

"நிலாக் குட்டி உங்களுக்கு நான் கொடுத்த அழைப்பிதழை தரவில்லையா...?"

"இல்லை உனது கடிதத்தையே தந்தாள்..."

"கடிதமா..?"

"படிக்கட்டுமா...?"

"படியுங்கள்..."

"அன்பு சுரேஷ்... நான் உன்னை காதலிக்கிறேன்...நீயும் என்னை விரும்புவாயல்லவா...இப்படிக்கு தர்ஷி..."

தர்ஷி விழுந்து விழுந்து சிரித்தாள்.

"நான் அப்படி ஒன்றும் கடிதம் கொடுக்கவில்லை. நிலாக் குட்டி உங்களை ஏமாற்றியுள்ளாள்.. நான் அப்படி காதல் கடிதம் எழுதும் பெண் என்று நினைக் காதையுங்கோ..."

"சரி நீ காதலிக்கவில்லை... இப்போ என்ன செய்ய வேணும் எண்டு சொல்..." சுரேஷ் அழாத குறை.

" நீங்கள் சத்தியம் செய்திருக்கின்றீர்கள்...நான் சொல்வதை செய்ய தவறாதீர்கள்...மீண்டும் என்னை அழ..."

"இல்லை...இல்லை...நீ சொல்வது போலவே செய்கிறேன். எது வேண்டுமானாலும் சொல்லிவிடு..." சுரேஷ் கை கட்டி நிற்காத குறை. சுற்றுமுற்றும் பார்த்தபடியே பேசினான்.

தர்ஷி எழுந்து நின்றாள்...'ஹைஹீல்ஸில்'' அவளது உயரம் சுரேஷின் உயரத்திற்கு கிட்டவாக இருந்தது. அவள் புறப்படுவதற்கு ஆயத்தமாகியபடியே சுரேஷை பார்த்து உறுதியாக கூறினாள்...

"காதலிப்பது போல ஒரு அபத்தம் இந்த உலகத்தில் கிடையாது. அது பலருக்கு புரியவில்லை. ஆனால் நீங்கள் அதை புரிந்து கொள்ளாமல் இருந்து விடாதையுங்கோ....... உங்களுடைய அம்மா அப்பா சொல்கிற பெண்ணையே விவாகம் செய்து கொள்ளுங்கோ..."

தர்ஷி திரும்பிய வேகத்தில் அவளது இரட்டை பின்னல் சுரேஷின் முகத்தை சீவிச் சென்றது.

"அடிப்பாவி இப்போதே இந்தப் போடு போடுகிறாயா?"

என சுரேஷின் மனம் எண்ணி சிரித்தது...

***************************

ராஜநாதரின் ' மீண்டும் வசந்தம்' சிறுகதைத் தொகுப்பு ஜூலியால் முற்றாக கணினி மயப்படுத்தப்பட்டு அச்சகத்திற்கு 'டிஸ்கெற்' பாரம் கொடுக்கப் பட்டிருந்தது.....

நகரின் பல பகுதிகளில், 'பரிசுபெற்ற எழுத்தாளர்.... ராஜநாதரின் மீண்டும் வசந்தம் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு' என்று பெரிய எழுத்தில் 'பனர்கள்' தொங்க விடப்பட்டிருந்தன.

ராஜநாதர் மாலைவேளைகளில் நகரைச் சுற்றிலும் சென்று அந்த 'பனர்' களை பார்த்து புளகாங்கிதம் அடைந்தார்.....

ஒரு வங்கி அதிகாரி என்ற அந்தஸ்தைக் காட்டிலும்..... ஒரு எழுத்தாளன் என்ற பிரபல்யம் அவரை மனநிறைவு கொள்ளச் செய்திருந்தது.

மேலும் அந்தத் தொகுப்பில் உள்ளடங்கியிருந்த சிறுகதைகள் பிரபல்யமான பத்திரிகைளிலும் சஞ்சிகைகளிலும் ஏற்கனவே பிரசுரமாகி அச்சு அங்கீகாரம் பெற்றிருந்தன. பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் முதலாம் இடத்தை தட்டிச் சென்ற 'கருக்கொள்ளும் மேகங்கள்' சிறுகதையும் அத் தொகுப்பில் உள்ளடக்கப்படடிருந்தது.

ஒரு கனதியான நூலை வெளியீடு செய்யும் திருப்தி அவருக்கு ஏற்பட்டிருந்தது. வெளியீடு செய்யும் தினம் நெருங்குகையில் நகர் பூராகவும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. எழுத்தாளர்கள்.... விமர்சகர்கள்.... நிருபர்கள்.... கல்விமான்கள்.... தொழிலதிபர்கள் என்று முக்கியஸ்தர்களுக்கு விசேட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மண்டப வசதி ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குவதற்காக வெளியூரிலிருந்து பத்மகாந்தன் என்ற பிரபல்யம் மிக்க எழுத்தாளர் வர இருந்தார்.

நூலாய்வினை மேற்கொள்ள ஒரு தலைசிறந்த திறனாய்வாளரும் கலாச்சார பணிப்பாளருமான வசந்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாள்.

நூல் வெளியீட்டுத் தினம் ராஜநாதர் தனது மனைவி பிள்ளை களுடன் பெருமிதமாக மண்டப வாசலுக்கு 'வான்' ஒன்றில் வந்திறங்கினார்.

கும்பம் வைத்து வரவேற்பதற்கான ஒழுங்கிலிருந்து மேடை வரை சகல ஏற்பாடுகளும் கச்சிதமாக நிறைவேற்றப்பட்டிருந்தன. வழமைபோலன்றி அதிகளவிலானோர் அன்று மண்டபத்தை நிறைத்திருந்தனர். எழுத்தாளன் என்பது மட்டுமன்றி ஒரு வங்கி முகாமையாளர் என்ற வகையில் அவர் பலராலும் அறியப்பட்டிருந்தார்.

மங்கள விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து நகரின் பிரபல பெண்கள் கல்லூரி மாணவிகள் தமிழ் தாய் வணக்கம், தமிழ்தாய் வாழ்த்து பாடினார்கள்.

'வீடியோ' ஒளிப்பதிவு செய்து கொண்டிருக்க ராஜநாதர் மேடையில் எழுத்தாளர்களுக்கு மத்தியில் நாயகமாக அமர்ந்திருந்தமை சீதாவின் நெஞ்சை நிறைவு செய்தது. அவளது விழிகளிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது.

தலைமை உரையில் பத்மகாந்தன் ராஜநாதரின் எழுத்துக்கள் எவ்விதம் புகழ் பெற்றிருக்கின்றன என்பதை விளக்கினார்..... பல்கலைக்கழக மட்டத்தில் அவரது கதைகள் ஆய்வு செய்யப்படுவதாக அறிவித்தார்.

அவரது உரையைத் தொடர்ந்து நூல் வெளியீடு நடைபெற்றது. நூலாய்விற்காக வருகை தந்திருந்த பிரபல திறனாய்வாளர் வசந்தி ஒலிவாங்கியை நெருங்கி வந்தாள்.

அவள் சபைக்கு வந்தனம் கூறியபோதே அவளது கணீர் என்ற குரலில் சபை இலயித்து அமைதியாகி விட்டது.

"நான் ஆயிரம் சிறுகதைத் தொகுப்புக்களை வாசித்திருக்கின்றேன்..... வெறும் புகழ்ச்சிக்காக சொல்லவில்லை.... இந்த நூலை வாசிக்க கையிலெடுத்த என்னால் அதனை முற்றாக வாசித்து முடிக்காமல் கீழே வைக்க முடியாமல் போனது......! ராஜநாதரின் மொழிவீச்சு.... விவேகம்..... சிந்தித்ததை சுவாரஸ்யம் மிக வெளிவிடும் திறன் இவை பிரமிக்க வைப்பவையாக உள்ளன..... சின்னத் திரையில் தொலைக் காட்சி நாடகங்களை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கும் சமுதாயம் ஒன்று உருவாகி விட்டது. வாசிப்பு பழக்கம் அருகி விட்டது. இலக்கிய செல் நெறி ஒன்று பற்றிய சிந்தனையையே கருத்துக் கெடுக்காத கோமாளி நாடகங்களை வெறும் கவர்ச்சிக்காக மட்டும் பார்த்து பழகிவிட்டது நமது இளைய தலைமுறை.

இந்த நிலை நீங்க வேண்டும்... நல்ல நூல்களை வாசிப்பதன் மூலமே சிந்தனைத் திறனை வளர்க்க முடியும்.

அதே போல நல்ல எழுத்தாளர்கள் தொலைக் காட்சி நாடகங்களை முறியடிக்கும் வகையில் சுவாரசியமானதும் கனதியானதும் சமுதாயத்திற்கு பயனளிக்கக் கூடியதுமான ஆக்கங்களைப் படைக்க வேண்டும்.

இப்படியான எழுத்துக்கள் தான் இறவா வரம் பெற்றவையாக நீடிக்க முடியும்.

சிறுமி ஒருத்தி இளைஞனால் ஏமாற்றப்பட்டு தனது உயர் கல்வியையும் இழந்து கைக்குழந்தையை தாயிடம் ஒப்படைத்து பணிப்பெண்ணாக பயணிக்கும் கதை அருமையாக நெஞ்சைத் தொடும் வண்ணம் சொல்லப்பட்டிருக்கின்றது.

பெண்களே பெண்களுக்கு செய்யும் துரோகத்தால் உடைந்து போகும் குடும்பம்....

சாதியப் பாகுபாட்டால் தனது காதல் நிறைவேறாமல் போகும் கட்டத்தில் கிளர்ந்தெழும் இளம் பெண்ணின் கதை....

இப்படியே இந்த நூலில் வெளியாகியுள்ள அனைத்து கதைகளுமே நன்கு வடிவமைக்கப்பட்டு புதிய புதிய உத்திகளுடன் வாசகர்களை கவர்வனவாக இருக்கின்றன......

இருந்தும் ஒரு குறையை சுட்டிக்காட்ட வேண்டிய கடமைப்பாடும் எனக்குண்டு.... சில கதைகளின் முடிவு நடுவுநிலை நின்று எடுக்கப்பட்டதா என்ற சந்தேகம் எனக்கு எழுகின்றது.... உதாரணமாக எந்த ஒரு கட்டத்திலும் நெருக்கடியிலும் எமது தமிழ் பெண்ணொருத்தி தனது காதல் நிறைவேறாமல் போய்விடுமோ என்ற நிலையில் கூட தனது காதலனின் கையைப் பிடித்து அவனை அறைக்குள் இழுத்தெடுத்து கதவை பூட்டிக் கொள்வதன் மூலம் தனது காதலை நிறைவேற்றிக் கொள்வாளா என்பது சிந்திக்கப்படவேண்டியது....

எதிர்காலத்தில் ஒரு கதையின் முடிவை எழுதி முடிப்பதற்கு முன்னர் ஆசிரியர் நடுவு நிலை நின்று சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்......

இப்படியான சிறிய சில குறைபாடுகளைத் தவிர்த்து பார்க்குமிடத்து ராஜநாதரின் 'மீண்டும் வசந்தம்' சிறுகதைத் தொகுப்பு இலக்கிய உலகில் மறையாத நிரந்தர இடத்தை பிடித்து விட்டது என்றே கூற வேண்டும்..... நன்றி வணக்கம்..."

ராஜநாதரின் இதயம் குளிர்ந்தே விட்டது. அந் நகரின் அனைத்து பிரமுகர்களின் முன்பாகவும் அவரது புகழ் கொடிகட்டிப் பறந்தது.......!

ராஜநாதர் தனது ஏற்புரையில் தனது சில கதைகள் தோன்றிய விதம்பற்றி சுவாரஸ்யமாக விளக்கினார். அநேகமாக அவர் மனத்தில் கீறலை ஏற்படுத்திய உண்மைச் சம்பவங்களே அத் தொகுப்பின் சிறுகதைகளாக உருவெடுத்திருந்தன.....

நூலின் மிக அதிகம் பிரதிகள் மேடையிலும் சபையிலும் விலைபோயின....

ராஜநாதரின் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே புகழ் என்ற சிகரத்தில் மெய்சிலிர்த்து நின்றனர்.....!

## — 08 —

நிலாவினிக்கு சில தினங்களாக கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை...எப்படியானதொரு முட்டாள்தனத்தை செய்து விட்டேன்...தர்ஷி அக்கா என்ன கடிதத்தை வைத்திருந்தாளோ...அண்ணா அதைப் படித்து நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக என்னால் எழுதப்பட்ட கடிதத்தைப் பார்த்து என்ன குளறுபடிகளை உண்டு பண்ணினானோ..என்றெல்லாம் எண்ணி கலங்கினாள்.

சுரேஷின் அறைக்கு சென்று பார்த்த போது மேசையில் அக் கடிதம் அநாதரவாகக் கிடந்தது. முதற் காரியமாக அதைக் கிழித்து மறைவிடத்தில் வீசி விட்டாள்.

தொடக்கத்தில் என்ன நடக்குமோ ஏது சம்பவிக்குமோ என பயந்து கொண்டிருந்த நிலாவினிக்கு சுரேஷில் எந்தவித மாற்றமும் இல்லாதிருந்தது மன ஆறுதலைத் தந்தது.

'எவள் எனக்கு காதல் கடிதம் எழுதினாலென்ன...நான் யாரையும் காதலிக்க தயாராக இல்லை' என்று தீர்மானித்து பேசாமல் விட்டிருப்பானோ என எண்ணி சமாதானமானாள்...

தொழில்நுட்பக் கல்லூரியில் இராப் போசன விருந்து நடைபெற்று முடிந்த கையுடன் சுரேஷ் வீடு வந்து நிலாவினியை தேடிய போது அவள் தூங்கிவிட்டிருந்தாள்.

மறுநாள் காலை அவள் பல்விளக்காமல் சமையலறையில் தாயிடம் தேநீர் 'கப்' ஒன்றினை எதிர்பார்த்து தூங்கி வழிந்து கொண்டிருந்தாள்.

திடீரென சுரேஷ் அவள் முன் தோன்றி தாய்க்கு முன்னாகவே அவளது காதை திருகி... "ஏய் கழுதை இங்கே வா..." என்று கூறி தர தரவென தனது அறைக்கு அழைத்துச் சென்றான்.

சீதா சத்தமிட்டாள்.. "விடடா தம்பி அவளை..."

நிலாவினி தாய்க்கும் தனது தவறு தெரிய வந்துவிடுமே என்ற பயத்தில் அதிகம் அடம்பிடிக்காமல் சுரேஷின் அறைக்கு சென்று விட்டாள்...

" ஏய் இப்போ சொல்லு...நீ தந்த கடிதம் ஆர் எழுதினது?"

நிலாவினிக்கு பொய் பேசி பழக்கமில்லை...ஆரம்பத்திலிருந்து நடந்தவை அனைத்தையும் கூறி விட்டாள்...

சுரேஷ் சிரித்துவிட்டான்...தனது தங்கைக்கு இவ்வளவு திறன் எப்போ எப்படி ஏற்பட்டது என எண்ணி வியந்தான்.

ஒரு சிறுமியின் வளர்ச்சிப்படியை சூழ உள்ளவர்கள் எப்போதுமே தப்பாகத்தான் கணக்குப் போட்டு வைத்து ஒருநாள் இல்லை ஒரு நாள் ஏமாந்துவிடுகிறார்கள்! அவர்களுக்கு சிறுமியாக தெரிந்து கொண்டிருக்கும் போதே அவள் தனக்குள் வளர்ந்துவிடுவதுடன் ஆசைகளையும் வளர்த்துக் கொள்கின்றாள்.

நிலாவினி அந்த அளவுக்கு வளர்ந்து விட்டாளா என்பதை யார் தீர்மானிக்கக் கூடும்?

சுரேஷ் இப்போ வினாவினான்...

"ஏன் நிலா உனக்கு தர்ஷியைப் பிடிக்காதா ?"

நிலாவினிக்கு தமையனின் முகத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அவனை தாயார் கெடுத்து வைத்திருக்கிறாள் என்று அவள் நினைத்தாள்...

"தர்ஷி அக்கா நல்லவள் தான்...நானாகிலும் ஸ்கூட்டியில் அவசரகாரியங்களுக்காக வெளியே போவேன். அவள் அப்படியும் போகமாட்டாள். எதற்காக கேட்கிறாய்?"

"சும்மாதான் கேட்கிறேன்...நீபோ" என்று தங்கையை விரட்டி விட்டான் சுரேஷ்.

***************************

ஒரு மகளில் தாய்க்கு இருக்கின்ற அன்பும் அக்கறையும் இந்த உலகத்தில் வேறு எந்த ஜீவனுக்குமே இருக்காது என்பதற்கு மறு பேச்சு கிடையாது.

கணவனானவன் பற்பல சோலிகள் பற்றிய சிந்தனையுடன் வந்து மனைவியுடன் கதை தொடங்குகின்ற எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலும் கூட மனைவியானவள் அவற்றை நிராகரித்து... "எங்கடை மகளுக்கு பாருங்கோ..." என்று கூறி தனது ஆழ் மனச் சிந்தனையை வெளிப்படுத்துவதை சாதாரணமாக காணலாம்.

சீதா...மகனின் அறைக்கு தேனீர் கொண்டு வந்தாள்.

"தம்பி...நிலாக்குட்டி பாவம்...அவளோடை சண்டை பிடிக்காதே..." மகனை கெஞ்சாத குறையாக வேண்டினாள்.

சுரேஷ் தாயை நிமிர்ந்து பார்த்தான். அவளின் முகத்தில் ஆழ்ந்த கவலை குடி கொண்டிருந்தது. தாய்க்கு ஆறுதல் கூறுவது போலவும் ஆலோசனை கூறுவது போலவும் கூறினான்.

"நான் சண்டை பிடிக்கேல்லையம்மா... அவளுக்கு நீங்கள் செல்லம் குடுக்கிறது கூடிப்போச்சு...அதைக் கொஞ்சம் நீங்கள் தவிர்த்தால் நல்லது."

" தம்பி... அவளுக்கு இப்ப செல்லம் கொடுக்கிற வயதில்லை. அப்பா தான் பொறுப்பில்லாமல் திரியிறார். நாங்கள் எல்லோருமே சேர்ந்து அவளுக்கு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க வேணும். நல்ல உத்தியோகத்திலை மாப்பிளை எடுக்கிறதெண்டால் இருக்கிற வீடு வளவு நகை நட்டோடை காசும் சீதனம் வேணும். இனி இனாம் எண்டு கேட்டால் அது மற்றொரு தொல்லை".

தாய் கூறவும்...

"அம்மா தங்கச்சிக்காக நான் என்ன தியாகத்தை எண்டாலென்ன செய்யத் தயார்" சுரேஷ் பதிலளித்தான்.

"உன்னை ஈடுவைச்சு தங்கச்சிக்கு ஒரு காரியம் செய்ய வேணும் எண்ட நிலை எங்களுக்கு இல்லை எண்டு நான் நம்புறன். அப்பா கொஞ்சம்

பொறுப்பாக சிந்தித்தால் நிலாக் குட்டியின்ரை காரியத்தை நிறைவேற்ற ஏலாதெண்டு இல்லை''

சீதா அப்படிக் கூறிவிட்டு சில நிமிடநேரம் அமைதியாக இருந்தாள். பின்னர் எதையோ நினைத்தவளாக...

" தம்பி...எங்களோடை வன்னியிலை அகதிகளாக இருந்த ராசம் அக்காவும் மகனும் எங்கடை வீட்டை வந்திருந்தவை. ராசத்தின்ரை புருசன் காணாமல் போய்விட்டாராம். மகள் கீழ் சாதி பெடியொண்டோடை ஓடி ஒரு பிள்ளை. பாதுகாப்பு படை சுட்டதிலை பெடியன் செத்துப் போக ஆஸ்பத்திரியிலை அவள் 'மருத்துவிச்சியாக' வேலை செய்கிறாளாம். மகன்காரனுக்கு நீர்ப்பாசன திணைக்களத்திலை கிளார்க் வேலை கிடைச்சு வந்திருக்குதுகள். நீயும் ஒருக்கால் போய்ப் பார்த்து ஆறுதல் சொல்லு...

சுரேஷின் முகம் திடீரென கறுத்தது...

"அம்மா...உந்தச் சொந்தங்களெல்லாம் வன்னிக்குத்தான் சரி. அது ஒரு சீரான குடும்பம் இல்லை. தகப்பன் ஒழுங்காக குடும்பம் நடத்தினவரில்லை. மகள் செய்த வேலை பரம்பரைக்கும் பழி அழியாது. கந்தவேள் திறமான ஒருத்தனாய் இருப்பானெண்டு நினைக்கிறியளோ... ராசம் அன்ரி பாவம்...அவாவை எந்த வழியாலும் பிழை சொல்ல ஏலாதுதான்.''

அவன் கூறியனவற்றை அவதானமாக செவி மடுத்தாள் சீதா...பின்னர்...

"கந்தவேளை ஒரு நாள் நிலாக்குட்டி வாசிகசாலை வளவிலை சந்தித்து கதைச்சவளாம். தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களெல்லாத்தையும் சொல்லி கண்கலங்கி அழுதவனாம்... நிலாக்குட்டிக்கும் கவலையாய்ப் போச்சு...என்ன உதவி வேணுமெண்டாலும் கேளுங்கோ செய்யிறம் எண்டு பிள்ளை ஆறுதல் சொன்னவளாம்...'' என்று கூறி விபரித்தாள்

சுரேஷ் சிறிது நேரம் அமைதி காத்தான். கண்கள் சிவப்பேறின...

"அம்மா...எங்கையோ நாங்கள் ஒரு காலம் கிட்ட இருந்தம் எண்டிறத்துக்காக எங்களுக்கு பொருத்தமில்லாத ஒரு குடும்பத்தோடை சிநேகிதத்தை

புதிப்பிக்க வேணுமெண்டில்லை. நிலாக்குட்டியை நாங்கள் வளர்த்து வைச்சிருக்கிற முறைக்கு அவளுக்கு ஆர்மேலெண்டாலென்ன அனுதாபம் வாறதுக்கு இடம் கொடுத்தால் அது விபரீதத்திலைதான் முடியும்...நீங்கள் ஒரு தாய். எனக்கு விளங்கிறதுக்கு மேலாலை உங்களுக்கு விளங்க வேணும்..."

சுரேஷ் கூறுவதைக் கேட்டு சீதா ஒன்றும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை...

"தம்பி ...நீ ஏனடாமோனை பயப்படுகிறாய்...ஒழுக்கம் எண்டுறது நாங்கள் சொல்லிக் கொடுக்கிறதாலை மட்டும் வாறதெண்டில்லை. அது பரம்பரையாக இரத்தத்திலை ஊறி வாறது... நாங்கள் எவ்வளவு கவனயீனமாக இருந்தாலும் நிலாவினி பிழை விடுவாள் எண்டு பயப்படத் தேவையில்லை தம்பி..."

தாய்க்கு நிலாக்குட்டி மேல் இருக்கிற நம்பிக்கை அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது...

தங்கச்சி தங்கச்சி என்று அவள் மேல் உயிரை வைச்சிருக்கிறதாலை அவளை எந்த ஒரு ஆணோடையும் பழக விடாமல் அளவுக்கதிகமாக தடுக்கின்றோமோ என்ற கவலையும் அவனுக்கிருந்தது...

வாயிற் கதவில் யாருடையதோ குரல் கேட்டது...

"வீட்டுக்காரர்..."

"ஓம்...ஓம்...ஆரது...?"

சீதா முற்றத்தில் இறங்கி நடந்தபடியே வினாவினாள். தூரத்தேயிருந்து பதில் வந்தது...

"அது நான் ராசம்..."

****************************

செல்வ செழிப்பில் உண்டாகின்ற பந்த பாசங்களைக் காட்டிலும் ஏழ்மையிலும் கஷ்டத்திலும் உண்டாகின்ற பிணைப்பு இருக்கின்றதே...அதனை எந்த ஒரு பாசப்பிணைப்புடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அதுவும் ஒரு குடும்ப தலைவிக்கும் மற்றொரு குடும்ப தலைவிக்குமிடையில் அச்சமயம் ஏற்படுகின்ற புரிந்துணர்வு அன்னியோன்யம் அனுசரித்து நடத்தல் போன்ற பண்புகள் எக் காலத்திலுமே மறக்கப்பட முடியாததாக இரத்தத்தில் கலந்து விடுகின்றது.

மறுபுறம் பல வருடங்கள் சென்று விட்ட நிலையிலும் ராசம் சீதாவை மறக்காமல் தேடி வந்திருக்கின்றாள் என்றால் ராசத்தின் வாழ்க்கையில் ஏற்பட்ட துயர் நிறைந்த தழும்புகளுக்குரிய ஒரே வடிகால் சீதா மட்டும் என்பதே!

சீதா ராசத்தை மண்டபத்திற்கு அழைத்துச் செல்ல முற்பட்ட போது ராசம் மறுத்துவிட்டாள்.

"வன்னியிலை வீடு தளபாடங்கள் எண்ட வசதியோடையா நாங்கள் வாழ்ந்தனாங்கள்...? முற்றத்து மணலிலை வேலை வெட்டி எண்டு எதுவும் இல்லாமல் நேரம் போவதே தெரியாமல் மணித்தியாலக் கணக்கிலை அமர்ந்திருந்து கதை பேசுகிறதும்...'பொம்பர்' 'ஹெலி' எண்டு வந்தால் உயிர்ப் பயத்திலை மரங்களுக்கு கீழே ஓடிப்போய் நிற்கிறதும் எண்டைக் கெண்டாலென்ன மறக்க கூடிய காரியமா அக்கா...இந்த திண்ணைக் கட்டிலை இருப்பம்" என்று கூறி வராந்தா படியோரம் அமர்ந்து கொண்டாள் ராசம்...

அந் நேரம் நிலாவினி அங்கு வரவும் ராசம்... "ஏய் நிலாக்குட்டி...இஞ்சை ஓடிவா மேனை..." என அழைத்து தன் முன்னால் அமர்த்திக் கொண்டாள்...

"ராசம்...நீ பிள்ளையோடை கதைச்சுக் கொண்டிரு...நான் சமையல் வேலையை பார்க்கிறன்..." என்று கூறி சீதா சென்றுவிட்டாள்.

சீதா போகவும் தன் முன்னால் அமர்ந்திருந்த நிலாவினியின் கன்னங்களை தடவி தனது தலையில் விரல்களை மடக்கி ஊன்றி நெட்டி முறித்துக் கொண்ட ராசம்...

"பிள்ளைக்கு அன்ரியை ஞாபகம் இருக்கோ?" என வினாவினாள்.

" அம்மா இல்லாத நேரங்களிலை நான் அன்ரியோடை நிற்கிறது...அன்ரி எனக்கு சாப்பாடு தீத்திறது...தலையிலை பேன் பார்க்கிறது...என்னை நித்திரையாக்கி விடுகிறது எல்லாமே எனக்கு இண்டைக்கு நடந்தது போலை ஞாபகம் இருக்குது..."

நிலாவினி ராசத்தை ஒவ்வொரு செய்கையிலும் நினைவு கூர்ந்து குறிப்பிட்டது அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியை கொடுத்தது. கலங்கிய கண்களைத் துடைத்து விட்டபடியே...

"பிள்ளை...இப்ப என்ன படிச்சுக் கொண்டிருக்கிறாய்?" என வினாவினாள்.

"நான் உயர் தேசிய 'கணக்கியல்' டிப்ளோமா செய்து கொண்டிருக்கிறன்..."

நிலாவினி சொல்லக் கேட்டதும் ராசம்...

"கந்தவேள் கணினிப் பயிற்சிகள் பல செய்து முடிச்சிருக்கிறான். அவன் படிச்ச நிறுவனத்திலை புதிசா வந்து சேர்ந்தவைக்கு பயிற்றுவிப்பாளராகவும் பணி புரிந்திருக்கிறான். வன்னியிலை இப்ப அதெல்லாம் பெரிய முன்னேற்றம் பார்..." என்று மகனை புகழ்ந்தேத்தி பேசிய ராசம் நிலாவினியை மடியில் கிடத்தி அவளது கேசத்தை நீவி விட்டாள்.

பின்னர்...

"பிள்ளைக்கு இப்ப ஒரு பேனும் கிடையாது என்ன?" என்று கூறி தனது ஆச்சரியத்தை வெளிப்படுத்தினாள்.

நிலாவினிக்கு சிரிப்புத்தான் வந்தது...

"அது அன்ரி உங்கடை காலத்திலைதான் உந்த பேன் பிரச்சனை...இப்ப நாங்கள் சுத்தமாக இருக்கிறம். அதற்காக பல வகையான 'ஷம்பூ' வருகிது..."

நிலாவினிக்கு குழந்தை மனம். ராசம் அவளை மடியில் கிடத்தி கேசத்தை வருடிவிட்டதும் அவள் சொக்கிப் போனாள்...

"எனக்கு அன்ரியிலை விருப்பம்"...என்று கூறி தனது மனக்கிடக்கையை திறந்து காட்டினாள்.

சீதா பத்து மணி போல் தேனீர் தயாரித்து எடுத்து வந்தாள்...நிலாவினி ராசத்தின் மடியிலிருந்து தலையை எடுத்தாள்.

"ராசம்...பிள்ளையோடை நீ கதைச்சுக் கொண்டிரு... மத்தியானம் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேணும்..."

சீதா அப்படி அன்புக் கட்டளையொன்றை இட்டுவிட்டு மீண்டும் போய் விட்டாள்.

ராசம் தேநீரை அருந்தி முடித்ததும் நிலாவினி குவளையை தன்னருகே வைத்துக் கொண்டாள்.பின்னர்...

"நிலாக்குட்டி...உனக்கு எங்கடை வீட்டிலை என்னைப் பிடிக்கும்...வேறை ஆரைப் பிடிக்கும்...?"

நிலாவினி பதில் கூறினாள்...
"ரேணுகா அக்காவைப் பிடிக்கும்..."

"அதுசரி பிள்ளை...கந்தவேள் நல்லவன்... இப்ப நல்ல உத்தியோகமும் கிடைச்சிருக்கு... உன்னைப் பற்றி நல்ல அபிப்பிராயமும் அன்பும் வைச்சிருக்கிறான்..."

"எனக்கு கந்தவேள் அண்ணாவையும் பிடிக்கும்..."

நிலாவினி அவளது மகனை அண்ணா என குறிப்பிட்டது ராசத்துக்கு அதிர்சியையும் கவலையையும் கொடுத்தது.

நிலாவினியின் பதிலால் சிறிது பின் வாங்கியவள்... மீண்டும் தன்னை சுதாகரித்துக் கொண்டு...

"நிலாக் குட்டி இப்ப சின்னப் பிள்ளை இல்லை. பிள்ளைக்கு ஒரு நன்மை செய்ய நான் கருதுகிறது 'அன்ரி' எண்ட முறையிலை தப்பும் இல்லை..."

"அன்ரி என்ன சொல்லுறியள் எண்டு எனக்கு விளங்கேல்லை...?"

"பிள்ளை நீ ஆரையும் மனதிலை விரும்புகிறாயா...?"

"உப்படியெல்லாம் கேட்டால் எனக்கு அன்ரியிலை விருப்பம் இல்லாமல் போகும்..."

"பிள்ளை...பிள்ளை...நான் கேட்கிறது உனக்கு விளங்கேல்லையே...சரி இருக்கட்டும்...நீ படிச்சு முடிச்சதும் என்ன செய்யப் பேறாய்...?"

"படிச்சு முடிஞ்சு உத்தியோகம் பார்க்கப் போறன்..."

"உத்தியோகம் பார்த்து...?"

"உழைக்கப் போறன்..."

"உழைச்சு?"

"அப்பா அம்மா அண்ணா எல்லோருக்கும் குடுக்கப் போறன்.."

ராசம் சுத்தி வளைச்சு தன்னுடைய மகனுக்கு அவளது விருப்பத்தை கேட்டு எடுத்து விட வேண்டும் என்று எடுக்கின்ற முயற்சியில் நிலாவினி கழுவுகிற மீன் நழுவி போகிற மாதிரி கைக்குள் அகப்படாமல் போய்க் கொண்டிருந்தாள்...

எனவே ராசம்...
'இந்த நிலாக் குட்டி சரியான பேய்...இதை நேரடியாய் கேட்டால் தான் இதின்ரை மொக்கு மண்டைக்கு விளங்கும்' என தீர்மானித்து...

"பிள்ளை...என்ரை மகன் கந்தவேள் உன்னை உயிருக்குயிராய் நேசிக்கிறான்...நீ அவனைச் செய்வாயெல்லே..."? என வினாவினாள்.

அந்த விநாடி அங்கு வருகை தந்த சீதா...
"நிலாக் குட்டி...நீ உள்ளை போ..." என்று பணித்தாள்.

## 09

ராஜநாதரின் வங்கி நிர்வாகத்தில் தளம்பல் ஏற்பட்டிருந்தது... வாடிக்கையாளர்கள் தத்தம் வியாபார முயற்சிகள் குறித்து அவருடன் கலந்துரையாட போதிய அவகாசம் இருக்கவில்லை. ஒரு வங்கியின் பிரதான நடவடிக்கையான தொழிற்றுறையை ஊக்குவிக்கும் செயற்பாடு அறவே வீழ்ச்சியடைந்தது. மிகவும் அபூர்வமாக அவரால் மேலதிக பற்றுக்கான அனுமதி வழங்கப்பட்டது. கைத் தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்றவற்றிற்கான கடன் வழங்கல்கள் உறுதியான ஆவணங்கள் இல்லாமையை காரணங்காட்டி மறுக்கப்பட்டது. வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. நகரில் பல புதிய வங்கிகள் தோற்றம் பெற்றன. அவை காலை எட்டு முப்பது முதல் மாலை மூன்று மணிவரைக்கும் செயற்பட்டதுடன் வாடிக்கையாளர்களைக் கவரும் பல்வேறு திட்டங்களையும் அறிமுகப்படுத்தின. இருபத்திநான்கு மணி நேரமும் தன்னியக்க இலத்திரனியல் அட்டை மூலம் பணம் மீளப் பெறல் பணம் வைப்புச் செய்தல் ஆகிய வசதிகள் செய்யப்பட்டன. ராஜநாதருடன் நேரடியாக முரண்பட்டுக் கொண்டும் முரண்படாமலும் பலர் தமது வங்கி செயற்பாடுகளை வேறு வங்கிகளுக்கு மாற்றிக் கொண்டனர்.

ஜூலி முன்னர் போலன்றி தினமும் ஒரு ஆடை உடுத்தி வந்தாள். மிகுந்த தோற்றப் பொலிவு பெற்றவளாக மனநிறைவுடன் காணப்பட்டாள். முகாமையாளர் மூலம் ஏதும் சாதிக்க வேண்டுமாயின் ஜூலியை பிடித்து காரியமாற்றலாம் என்ற விதத்தில் பேச்சு அடிபட்டது.

ஜூலி முகாமையாளரின் அறையில் இருக்கும் போது வங்கி ஊழியர்களும் உத்தியோகத்தர்களும் அவரை சந்திக்க சென்றால் சினந்து விழுவார். தனது அறை வாசலுக்கு தனி பியோன் ஒருவனை நியமித்து அவனது அனுமதியின்றி எவரும் அவரை சந்திக்க முடியாதபடி தடை போடப்பட்டது.

அன்று ஜூலி அரைப் பாவடை அணிந்து 'ரீசேட்' அணிந்திருந்தாள். ராஜநாதரை நெருங்கிப் பழகும் விதத்தில் அவளில் பெரும் மாறுதல் இருந்தது.

ராஜநாதர் கோவையொன்றை தன் முன்னால் விரித்து வைத்தபடி ஜூலியை அருகில் அமர்த்தி கடிதம் ஒன்றை 'டிக்ரேற்' செய்து கொண்டிருந்தார். 'பீயோன்' அருகே வந்து... "ஐயாவை அவசரமாக பார்க்க வேணுமாம்... ஒரு தொழிலதிபர்... பெயர் விக்னேஸ்வரன்..." என்று கூறி கட்டளையை எதிர்பார்த்திருந்தான்.

"அனுப்பி வை"

விக்கினேஸ்வரன் வந்தார். தன்னை அறிமுகம் செய்தார்.

"நான் புதிதாக நகை தொழிலொன்றை ஆரம்பித்து நடாத்தி வருகின்றேன். தலைநகரிலிருந்து தங்க ஆபரணங்கள் மற்றும் வெள்ளி கால் கொலுசு ஆகியவற்றை கடன் தவணை அடிப்படையில் பெற்று வந்து சிறு நகை வியாபாரிகளுக்கு போட்டு பின்னர் சிறிய கால அவகாசத்தில் அவர்களிடமிருந்து பணத்தை மீளப் பெற்று தலை நகரில் உள்ள நகைக் கடை உரிமையாளருக்கு அனுப்பி வருகின்றேன். மேலதிகமாக கொஞ்சம் பணவசதி இருந்தால் இந்த தொழிலை நன்கு அபிவிருத்தி செய்யலாம். நீங்கள் உதவி செய்வீர்கள் என்ற நம்பிக்கையில் வந்திருக்கிறேன்."

"உங்களுக்கென பதிவு செய்யப்பட்ட கடை இருக்கின்றதா...?"

"சில மாதங்களில் அதற்கான ஏற்பாட்டை செய்து விடலாம்..."

"அப்பொழுது பார்க்கலாம்"...ராஜநாதர் கண்டிப்பாக கூறிவிட்டார்...

விக்னேஸ்வரனின் முகம் கறுத்துவிட்டது,...நடுத்தர வயது கொண்ட அவர் ஜூலியை திரும்பிப் பார்த்தார்... ஜூலி கண்களால் வெளியே செல்லும்படி சைகை செய்தாள்...

அவர் போய்விட்டார்...

ஜூலி பின்புற பாதையால் வெளியேறி முன் வாசல் வரை வந்து விக்னேஸ்வரனை வழிமறித்தாள்...

"உங்களுடைய தேவை எனக்கு புரிகின்றது... ஆனால் பணம் வழங்குவதில் இப்போதெல்லாம் பல தடைகள் இருக்கின்றன"

ஜூலி விபரித்தாள்.

"இந்த தொழிலில் நல்ல இலாபம் இருக்கின்றது... கடனை மீளச் செலுத்துவதில் கஷ்டமில்லை" விக்கினேஸ்வரன்.

"நல்ல இலாபம் இருக்கின்றதென்றா சொல்கிறீர்கள்?" ஜூலி.

"அதை நான் எனது அனுபவத்தில் சொல்கின்றேன்..."

விக்னேஸ்வரன் உறுதியாக கூறவும் ஜூலி சிரித்தாள்... "அதில்லை...நல்ல இலாபம் என்று தானே சொல்கிறீர்கள்..." ஜூலி அழுத்திக் கேட்டாள்.

விக்னேஸ்வரனுக்கு இப்போ புரிந்தது...

"நீங்கள் உதவி செய்தால்..." என்று இழுத்தார்.

அவளது "விசிற்றிங் காட்" ஒன்று அவரது கைக்கு மாறியது.

"உள்ளே வாங்க..." ஜூலி

ஜூலி மீண்டும் பின்புறத்தால் முகாமையாளரின் அறைக்கு சென்று விட்டாள். செல்லும் போதே 'பீயோனுக்கு" சைகை மூலம் உணர்த்திச் சென்றாள்...

விக்னேஸ்வரன் உள்ளே வரவும் இப்போ ராஜநாதர் இன்முகம் காட்டி ஆசனம் கொடுத்து உபசரித்தார்...

"நீங்கள் ஜூலிக்கு வேண்டியவர் என்று தெரிகின்றது. அவளே சிபார்சு செய்வதால் நீங்கள் வேண்டிய தொகையை தருகிறேன்..." என்று கூறி ராஜநாதர் அவரால் நிரப்பப்பட வேண்டிய ஆவணங்களை வழங்கினார்...

நீண்ட நேரமாகவே முகாமையாளரை சந்திப்பதற்காக வந்து காவல் இருந்த பெண்மணி முகாமையாளரினதும் ஜூலியினதும் நெருக்கத்தை அவதானித்து பெருமூச்சு விட்டபடி இருந்தாள்... உரிய முறை வந்ததும் 'பீயோன்' அவளை உள்ளே அனுப்பினான். அவள்

உள்ளே வந்ததும் ஜூலி நடுநடுங்கி எழுந்து நின்றாள். முகாமையாளர் அவளை அறிந்திருக்கவில்லையாதலால்...

''உங்கள் பெயர்...?'' என வினாவினார்...

அவரது அனுமதியின்றியே ஆசனமொன்றினை இழுத்து அமர்ந்த அப் பெண்மணி...

''ஐ ஆம் மேட்டின்'' என்று பதில் கூறினாள்.!

****************************

மேட்டின் அரச தொழில் புரிபவளல்ல...ஆனால் அவள் ஏறி இறங்கி அலுவல் பார்க்காத அலுவலகம் என்று எதுவும் இருக்காது...தனது தாய் மொழியுடன் ஆங்கிலம் தமிழ் சிங்களம் என பிரதான மொழிகள் மூன்றிலும் தேர்ச்சி பெற்றிருந்தாள். சீட்டு பிடிப்பது வட்டிக்கு பணம் கொடுப்பது ஆகியனவே அவளது பிரதான தொழில்கள்...சித்து வட்டிக்கு பணம் கொடுப்பது என்பார்களே...அதை இந்த நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தவளே மேட்டின்தான்...! காலையில் மற்றவர்கள் அலுவலகத்திற்கு செல்லும் நேரம் வட்டி அறவீடு...சீட்டுக் காசு சேர்த்தல் ஆகிய காரணங்களுக்காக புறப்பட்டாளேயானால் மாலையில் மற்றவர்கள் அலுவலகம் விட்டு திரும்பும் நேரமே அவள் வீடு செல்வாள்.

வங்கி முகாமையாளரின் அறையில் 'ஐ ஆம் மேட்டின்' என்று அறிமுகம் செய்து கொண்டு அவரது அனுமதியின்றியே ஆசனத்தை இழுத்துப் போட்டு அமர்ந்து கொண்ட அவளை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார் ராஜநாதர்.

ஜூலி அவளைக் கண்டதும் மெதுவே நழுவி விட்டாளாயினும் மற்றொரு 'கியூப்பிக்கலிலிருந்து' நடப்பதை அவதானித்துக் கொண்டிருந்தாள்...

மேட்டினுக்கு பணத் தட்டுப்பாடு என்று வருவதே கிடையாது! அவளே நடமாடும் வங்கி...

எப்போதோ சில சந்தர்ப்பங்களில் முன்னைய முகாமையாளரிடம் அவள் உதவி கேட்டு வந்திருக்கிறாள். மேட்டின் பற்றி தெரிந்து கொண்டு அவரும்

உதவி செய்திருக்கிறார். ஆனால் இப்போது நிலைமை வேறு...

தான் அமரும்படி கேட்பதற்கு அவசியமே இல்லாமல் தன் முன் அமர்ந்திருந்து தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் அந்த உடல் பருத்த உருவத்தை பார்த்து ராஜநாதரே சற்று அதிர்ந்து விட்டார். முகாமையாளர் என்ற ரீதியில் தன்னை சுதாகரித்துக் கொண்டு...

"உங்களுக்கு என்னால் செய்யக் கூடிய உதவி என்ன?" என்று வினாவினார்.

"எனக்கு அவசரமாக பணத் தேவையொன்று ஏற்பட்டுள்ளது. எனது நடைமுறைக் கணக்கின் பேரில் இருபத்தையாயிரம் ரூபா தற்காலிக மேலதிக பற்று வசதி செய்து தருவீர்களாயின் ஒரு மாதத்தில் நான் அதை அடைத்து விடுவேன்..."

ராஜநாதர் சிறிது தயங்கினார்...பின்னர்...

"உங்களுடைய கணக்கிலக்கத்தை தாருங்கள்..." என்று கேட்டார்.

மேட்டின் தன்னுடன் கொண்டு வந்திருந்த காசோலையை அவரிடம் நீட்டினாள். அதிலிருந்து கணக்கிலக்கத்தை தெரிந்து கொண்டு கணினியில் அவளது நிதி புரள்வினை அவதானித்தார். மூன்று மாதங்கள் எவ்வித நிதி செயற்பாடுகளும் நடைபெறவில்லை.

புதிய வங்கி விதி முறைகளின் பிரகாரம் அவளுக்கு மேலதிக பற்று வசதி அளிக்க முடியாது. எனவே ராஜநாதர்...

"மன்னிக்கவும்...உங்கள் மூன்று மாத நிதி புரள்வினை அவதானிக்கையில் மேலதிக பற்று வசதி அளிக்க முடியாதுள்ளது. தவிர தனியார் கணக்குகளுக்கு அன்றி வியாபாரக் கணக்குகளுக்கே நாங்கள் மேலதிக பற்று வசதி அளிக்கின்றோம்."

மேட்டின் கண்கள் சிவந்தன...

"நானும் எப்போதும் மேலதிக பற்று வசதி கேட்டு வருபவளல்ல. எனக்கு எதிர்பாராத தேவை ஒன்று ஏற்பட்டுள்ளது. அதுவும் சிறிய தொகை. வெறும்

இருபத்தையாயிரம் ரூபா... நாளைக்கு பணம் கிடைத்தாலே உடனே 'செற்றில்' பண்ணி விடுவேன்..."

ராஜநாதருக்கு அதற்கு மேல் என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை...அவர் மேட்டினை அறியார்... அவள் மேல் கோபதாபம் ஏதும் அவருக்கில்லை. வங்கியின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகவே அவரது தீர்மானம் எடுக்கப்பட்டது...ஜூலி மறைவிலிருந்து எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தாள்.

'ஒரு தற்காலிக மேலதிக பற்று... இருபத்தையாயிரம் என்பது பெரிய தொகையல்ல. மேட்டினை வங்கியில் அறியாதவர் எவருமே இல்லை. பிணையாக ஒருவரை வைப்பது போலவே பாசாங்கு காட்டி 'ரிஸ்க்' எடுத்துக் கொடுக்கலாம். மேட்டின் வாய் சாதாரணமானதல்ல. சகல அலுவலகங்களுக்கும் ஏறி இறங்கி சகல அதிகாரிகளுக்கும் முறைப்படாமல் ஓயமாட்டாள்...' ஜூலி எண்ணினாள்.

ஆனால் ராஜநாதர் தற்காலிக மேலதிக பற்று ஒன்றினை சட்டதிட்டங்களுக்கு அமைவாக மறுப்பதால் பெரிய பாதகம் ஏதும் வரும் என்பதை கணிக்க முடியாதவராக இருந்தார். எனவே மீண்டும் மேட்டின் வேண்டுகோளை மறுத்தார்...

" நீங்கள் கூறுவது போல இருபத்தையாயிரம் ரூபா என்பது பெரிய பணம் இல்லைத்தான். ஆனால் வங்கியின் சட்டதிட்டங்கள் மீறப்படமுடியாதவை"

மேட்டின் அடங்கிப் போகும் பெண்ணல்ல...

" சட்டதிட்டங்கள் இப்போது வந்தவையல்ல...முன்னைய முகாமையாளர் எனக்கு தற்காலிக மேலதிக பற்றாக ஒரு இலட்சம் ரூபா வரை கொடுத்திருக்கிறார்"

மேட்டினை யாரென அறியாமலே ராஜநாதர் அவள் மேல் கோபம் கொண்டார்...

" முன்னைய முகாமையாளர் எப்படி கருமமாற்றினார் என்று தெரிந்து கொண்டு நான் அப்படி கருமமாற்ற முடியாது..."

மேட்டின் ஆசனத்தை உதறித் தள்ளிவிட்டு எழுந்தாள். அவளது பருத்த கைகளும் சதை தொங்கும் முகமும் இப்போதுதான் ராஜநாதரை கலக்கியது. கோபக் கனல் தெறிக்க முகாமையாளரின் முகத்திற்கு எதிராக தனது வலது கையை நீட்டி...

"உம்மால் முன்னைய 'மனேஜர்' போல கருமமாற்ற முடியாது... ஆனால் ஜூலி கூறுவது போல கருமமாற்ற முடியுமா?" என்று அதட்டினாள்.

ராஜநாதருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டுவிட்டது. ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் மேட்டினை அந்த அறையை விட்டு அழைத்து செல்ல பெரும் பிரயத்தனம் எடுக்க வேண்டி இருந்தது. அதிக தொகையினரான வாடிக்கையாளர் பார்த்திருக்க அவள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அவரை கேவலப்படுத்தி பேசினாள்.

மறைவிலிருந்த ஜூலி ராஜநாதரின் பதட்டத்தைப் பார்த்து அவருக்கு துணையாக அங்கே வந்தாள். அவளைக் கண்டதும் மேலும் ஆத்திரமுற்ற மேட்டின் பாதுகாப்பு உத்தியோகத்தரை உதறித் தள்ளியபடி அறை வாசல்வரை வந்து...

"ஏய் ஜூலி...இந்த அற்பனை வைத்துக் கொள்வதற்காக நல்ல மனம் படைத்த உனது கணவனுக்கு துரோகம் செய்யாதே" என மிருகம் போல கத்தினாள்.

## 10

சீதா சில வருடங்களுக்கு முன்னர் தனது தாயார் கடுமையான சுகவீனத்தில் வீழ்ந்திருந்த செய்தி கிட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள அவளது சொந்தக் கிராமமான வியாபாரிமூலைக்கு சென்றிருந்தாள்...

பல்குழல் எறிகணை வீச்சுக் காரணமாக தரைமட்டமாகிவிட்ட சாவகச்சேரி நகரிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக வந்திருந்த ராஜம்மாளும் அவளது கணவர் சுந்தரேசனும் சீதாவுக்கு சொந்தமான வீடொன்றில் தங்கியிருந்தனர்.

தாயாரின் சுகவீனம் சீதாவை 'ஆஸ்பத்திரியும்' வீடும் என அலைக்கழித்தது. உரிய சாப்பாடும் இன்றி அவள் தவித்தாள். அந்த நிலையில் கை கொடுத்தவள்தான் ராஜம்மாள்! நிமிர்ந்த கவர்ச்சியான தோற்றம்...இனிமையான பேச்சு...

எந்த ஒரு காரியத்தை செய்வதற்கும் ராஜம்மாள் சீதாவுக்கு உதவியாக இருந்தாள்...

ராஜம்மாளின் கணவர் நீண்ட காலமாக பொறியியலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். ஒரே மகன். பல்கலைக்கழகத்தில் பொறியியற்றுறை மாணவன்.

தாயாரின் வருத்த நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததேயல்லாமல் சுகப்படும் அறிகுறி ஏதும் தெரியவில்லை. பல்வேறுபட்ட உதவிகளை சீதா ராஜம்மாளிடம் இருந்து பெறவேண்டியிருந்தது. அதனால் இருவருக்குமிடையிலான நட்பும் அதிகரித்தது. அந்த நிலையில் ராஜம்மாள் சீதாவிடம் ஒரு செய்தியைக் கூறினாள்...

" நீங்கள் இங்கு வாறதுக்கு முதல் உங்களுடைய மகளின்ரை படம் ஒண்டை அனுப்பினீர்கள் தானே...? அதை உங்கடை அம்மா எனக்கு காட்டினவா. உங்கடை அம்மா அப்ப சொன்னவா... வடிவான குணமான பிள்ளை...நீ உன்ரை மகனுக்கு கேள் எண்டு. என்னுடைய மகனும் வடிவான பையன்...நீங்கள் என்ன சொல்லுறியள் சீதா...?"

ராஜம்மாளின் மகன் ஒரே வாரிசு! பல்குழல் ஏவுகணைக்கு இலக்கானமையால் சாவகச்சேரியில் உள்ள ஏறத்தாள அனைத்து வீடுகளுமே சேதமடைந்தனவாயினும் அவர்களது வீடு சேதமுறவில்லை. தவிர ஏராளமான நிலபுலன்கள் அவர்களுக்கிருந்தது. சீதா குடும்பத்திற்கு எந்த வகையிலும் குறைந்ததல்ல அவர்கள் குடும்பம்!

சீதாவின் தாயார் சில நாட்களில் உயிரிழந்தாள்...இரு மாத காலம் அங்கு தங்கியிருந்த சீதா தனது குடும்ப பொறுப்புக்களின் அழுத்தம் காரணமாக திருக்கோணமலைக்கு திரும்பினாள்.

ராஜம்மாளும் மகனின் படிப்பு காரணமாக கணவனுடன் கொழும்பு சென்று குடியேறினாள்.

அதன் பின்னரும் சீதாவுக்கும் ராஜம்மாளுக்குமிடையிலான நட்பு தொடர்ந்தது...

இப்போதோ திடீரென அவளிடமிருந்து சீதாவுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. " நான் நேரில் வருகின்றேன்...எனக்கு உங்கள் மகள் விடயமாக இரண்டில் ஒரு முடிவு தேவை" என ஆணித்தரமாக கூறியிருந்தாள்.

சீதாவுக்கும் ராஜம்மாளை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் சிறிது நாட்களாக அதிகரித்திருந்தது. எனவே மகிழ்ச்சியுடன் வரவேற்றாள்.

கணவன் மனைவி இருவருமே வந்திருந்தார்கள்...

சீதா, ராஜநாதருக்கு அவர்களை அறிமுகம் செய்து வைத்தாள்.

ராஜநாதர் கேட்டார்...

" கொழும்பிலை நிலைமைகள் எப்படி இருக்குப் பாருங்கோ...?"

சுந்தரேசன் நிமிர்ந்து அமர்ந்தார். சில வினாடிகள் சிந்தித்தார்...
" தலைநகர் எப்போதும் போலை பதட்டமாய்த்தான் இருக்குது. 'ஏணைன்' பாதை திறந்து இரண்டு வருடத்திற்கு கிட்டவுமாகுது...சமாதான முயற்சிகள்

ஸ்திரமாக இல்லை. தேர்தலுக்கு பிறகு உறுதியான எந்த நிலைப்பாடும் ஏற்படேல்லை. நாட்டின்ரை நன்மையை கருத்துக்கெடுக்காமல் கட்சியின்ரை எதிர்காலத்தைப் பற்றித்தான் அரசியல் வாதிகள் அக்கறையுள்ளவையாய் இருக்கினை. பயங்கரவாத நடவடிக்கையிலை ஈடுபட்டு வந்த கட்சி ஒன்று தனது நடவடிக்கைகளை ஜனநாயக பாதைக்கு மாற்றினாலும் தனது இடதுசாரிக் கொள்கைக்கு மாறாய் பேரினவாதம் பேசிக் கொண்டிருக்குது. அக் கட்சி அங்கத்தவர்களாய் தம்மை இனம் காட்ட பயந்து கொண்டிருந்த பேரினவாதிகள் அனைவரும் தங்கடை கட்சி அரசாங்கத்தோடை இணைஞ்சதோடை தைரியம் பெற்று வெளிப்படையாகவே தாங்கள் சார்ந்த கட்சிக்காக வேலை செய்ய தொடங்கியிருக்கினை. அது பேரினவாதிகளுக்கு கிடைச்ச வெற்றி எண்டுதான் சொல்ல வேணும்!"

சுந்தரேசன் கூறியனவற்றை ராஜநாதர் கவலையுடன் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார். பின்னர்...

"நாடு பிளவுபடுவதை தடுக்க ஏலாத நிலைதான் காணப்படுகுது...ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள். ஆனால் மக்களாலை தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாட்டை யுத்தப் பாதைக்கு கொண்டு செல்லுறது எந்த வகையிலை நியாயம் எண்டு தெரியேல்லை" என பரிந்து பேசினார்.

சீதா அவசரப்படுத்தினாள்...

"நீங்கள் குளியுங்கோ அண்ணை சாப்பிடலாம். மகள் நூல் நிலையத்திற்கு போயிற்றா. இப்ப வந்து விடுவா..."

ராஜம்மாள் முன்னர் நிலாவினியை புகைப்படத்தில் பார்த்திருந்தாள். இப்போ நேரில் பார்க்கும் ஆர்வத்தில் இருந்தாள்.

சுந்தரேசன் குளித்து ஆடை மாற்றி வந்தார்...

தெருவில் நிலாவினியுடைய ஸ்கூட்டி சத்தத்தை வேறுபடுத்தி உணர்ந்த சீதா... "நிலாக் குட்டி வந்திட்டாள்" என்று குரல் எழுப்பினாள்.

ராஜம்மாள் ஆவலுடன் நிமிர்ந்து பார்த்தாள்...

ஒரு அழகு சிலை அவளை நோக்கி நேரில் நடந்து வருவதைக் கண்டு முன் சென்று கட்டியணைத்து முத்தம் கொடுத்தாள்...நிலாவினி தனது மகனுக்கேற்ற துணை என்பதை அவளை நேரில் கண்டு திருப்தி மேலீட்டினால் அக மகிழ்ந்தாள்.

நிலாவினி துடினமாக சுழன்று சுழன்று விருந்தினரை உபசரித்த விதம் தம்பதிகளுக்கு அவள் மேல் மிகுந்த பாசத்தை உண்டு பண்ணி விட்டது. நிலாவினியும் " அம்மா உங்களைப் பற்றியெல்லாம் அடிக்கடி சொல்லி சொல்லி கதைப்பா. நீங்கள் அம்மாவுக்கு செய்த உதவிகளை எங்களுக்குச் செய்த உதவிகளாகத்தான் நாங்கள் கருதுகிறம். உங்களைப் பற்றி அம்மா கதைக்காத நாட்களே கிடையாது" என்று உபசார வார்த்தைகள் கூறி அவர்களின் அன்பை மேலும் மேலும் தன்பால் திருப்பிக் கொண்டாள்.

மதிய உணவுக்குப் பின் சீதாவும் ராஜம்மாளும் தனித்து விடப்பட்டனர்.

"சீதா...உன்ரை மகளை 'போட்டோ'விலை பார்த்த உடனையே அவா உங்கடை சொல்லுப் பேச்சு கேட்கிற பிள்ளைதான் எண்ட நம்பிக்கை எனக்கு வந்து விட்டது. அதை இப்ப நேரிலையும் பார்த்து தெரிஞ்சு கொண்டிட்டன்."

"நிலாக்குட்டி எண்டால் தகப்பன் கீறுகிற கோட்டை எண்டைக்கும் தாண்டியது கிடையாது. ஆனால் கலியாணம் எண்டு வரேக்கை இந்த நாளையிலை பிள்ளைகளின்ரை விருப்பத்தை நாங்கள் என்னவெண்டு சொல்ல முடியாதெல்லோ..."

சீதா பதிலிறுத்தாள்.

"அதை நான் இல்லையெண்டு சொல்லேல்லை. ஒரு உடுப்பு கைக்கடிகாரம் எண்டு பெற்றோர் தங்களுக்கு விருப்பமான பொருட்களை பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுக்கப் போனாலே உது எங்களுக்கு பொருத்தமானதில்லை எண்டு அடிச்சாப் போலை சொல்லி விடுதுகள்...தங்களுக்கு வரப்போகிற துணை பற்றி முடிவெடுக்கிற விசயத்திலை கண்டும் காணாமலும் இருந்துவிடுங்களே?"

ராஜம்மாளும் சீதாவின்ரை கருத்தை ஆதரித்துக் கதைக்கவும் சீதா விழுந்து விழுந்து சிரித்தாள். பின்னர்...

"தங்களுக்கு என்ன தேவை எப்படித் தேவை என்பதையெல்லாம் பிள்ளைகளெல்லே இப்ப முடிவெடுக்குதுகள். பக்கத்து வீட்டு பெடிச்சி ஒண்டு பத்துவயதுதான் இருக்கும். போய் தாயைக் கேட்டிருக்குது... 'அம்மா...எல்லா அக்காமாருக்கும் தாய் தகப்பன் சாமத்திய வீடு செய்கினை நீங்கள் எனக்கேன் செய்யேல்லை?' எண்டு"

சீதா சொல்லவும் ராஜம்மாள் சிரித்தபடி...

"அப்ப தாய் என்ன சொன்னவாவாம்?" என வினாவினாள்.

" 'உனக்கு தலைமயிர் வளர்ந்தது காணாது. வளர்ந்த உடனை வைப்பம்' எண்டு...பிள்ளை ஓம் எண்டு போய் தகப்பனைக் கேட்டுதாம். 'அப்பா எனக்கு 'கேசா' எண்ணை வாங்கித் தாங்கோ' எண்டு"

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்...

அந்த மகிழ்ச்சியான சூழ்நிலையிலேயே சீதா நிலாவினியை அழைத்து ராஜம்மாள் குடும்பம் பற்றியும் அவளது மகன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறை மாணவனாக கற்பது பற்றியும் குணாம்சங்கள் பற்றியும் விளக்கினாள்.

ராஜம்மாள் தன்னுடன் கொண்டு வந்திருந்த புகைப்பட அல்பத்தை நிலாவினியிடம் நீட்டியபடியே...

"உனக்கு பிடித்திருந்தால் நாங்கள் உன்னை எங்கடை மருமகளாக எடுக்க விரும்புகிறம்..." என்று தானே அவளிடம் நேரில் கூறினாள்.

நிலாவினி அல்பத்தை கை நீட்டி வாங்காமலே பதில் கூறினாள்...
"அப்பா அம்மா அண்ணா ஓம் எண்டால் நானும் ஓம் தான் அன்ரி..."

ராஜம்மாள் ஒரே பாய்ச்சலாக எழுந்து நிலாவினியை ஆரத்தழுவிக் கொண்டாள்.!

****************************

ராஜநாதர் வங்கியில் வாடிக்கையாளர் ஒருத்தியுடன் வாக்குவாதப்பட்டது அலுவலர் மட்டத்திலும் பின்னர் நகரின் ஏனைய வங்கிகள் மட்டத்திலும் பேசப்பட்டு நகர் பூராகவும் உள்ள அலுவலகங்கள் தனியார் நிறுவனங்கள் வீடு வாசல் என சகல இடங்களிலும் அலசி ஆராயப்பட்டது.

முகாமையாளர் என்ற ரீதியில் அவர் நடந்துகொண்ட விதம் சரியென தொடங்கி... மேட்டினுக்கும் அவருக்குமிடையில் பணக் கொடுக்கல் வாங்கல் உட்பட பலவகை தொடர்புகள் இருந்தன என்பது வரை வதந்திகள் உலாவத் தொடங்கின.

மேட்டின் பணக் கொடுக்கல் வாங்கல்களில் நேர்மையை கடைப்பிடிப்ப வள் என்றும் அவளுக்கு மேலதிக பற்று ஒன்றினை வழங்கியிருக்கலாம் என்றும் ஜூலி முதல் ஏனைய வங்கி அலுவலர்கள் அனைவரும் முகாமையாளரிடம் கருத்து தெரிவித்திருந்தனர். அதனால் அவர் மிகவும் மனச் சோர்வடைந்தார்.

மேட்டின் விவகாரம் நாளாவட்டத்தில் எவராலும் பேசப்படவில்லை...பலரும் மறந்துவிட்டிருந்தனர்.

ஆனால் மேட்டின் மனதில் அச்சம்பவம் எப்போதும் கனன்று கொண்டிருந்தது... தன்னிடம் கையேந்தி வாழும் அற்ப பெண்ணான ஜூலியின் முன்னால் தன்னை அந்த முகாமையாளர் அவமதித்து விட்டார் என்றே அவள் கருதினாள்.

ஜோர்ஜுக்கும் அவளுக்குமிடையில் ஜூலி முன்பாக ஏற்பட்ட தகராறின் பின்னர் ஜூலி மறுநாள் வந்து தன்னிடம் மன்னிப்புக் கோருவாள் என்றே அவள் நம்பியிருந்தாள். ஆனால் ஜூலி சில தினங்களில் ஐம்பதாயிரம் ரூபா பணத்தை தூக்கி எறிந்து விட்டுப் போனமை அவளுக்கு திகைப்பை கொடுத்திருந்தது. அதற்கான காரணம் என்ன என்பதை யோசிக்க யோசிக்க முகாமையாளர் மேல் அவளுக்கு மேலும் மேலும் ஆத்திரம் அதிகரித்தே வந்தது.

ஜோர்ஜ் மட்டும் மேட்டின் வீடு தாண்டி செல்லும் சந்தர்ப்பங்களில் கோபதாபங்கள் ஏதுமின்றி அவளுடன் பேசி வந்தான்.

வங்கி சம்பவத்தின் பின்னர் அன்று பொழுதுபடும் நேரம் ஜோர்ஜை அவள் தன் வீட்டு வாசலில் முதற்றடவையாக சந்தித்தாள்...

"ஏய் ஜோர்ஜ்...உள்ளே வந்துவிட்டுப் போ. உனக்காக நான் பல நாட்கள் காத்திருக்கிறேன்...உன்னுடன் பேச வேண்டும்"

முன்னர் மேட்டினின் முதுகில் ஆத்திரத்துடன் குத்தியமை அவனது மனத்தில் ஆழ்ந்த கழிவிரக்கத்தை ஏற்படுத்தியிருந்தது...

இப்போது அவள் அன்பாக அழைத்தபோது அவனால் மறுக்க முடியவில்லை...

மேட்டின் அவனை அழைத்துச் சென்று நடு மண்டபத்தில் அமரச் செய்தாள்.

அந்த வீடு மிகவும் உயரமானதாகவும் சுவர்கள் கருங்கற்களால் கட்டப் பட்டு மிக உறுதியான கோப்பியங்களை கொண்டும் அமைந்திருந்தது.

அந்த மண்டபத்தில் தொங்கும் விலையுயர்ந்த அலங்கார விளக்குகள்... சுவர் பொருத்திகள் என பல மின்குமிழ்கள் இருந்தாலும் ஒளி மட்டும் நிலாவிலிருந்து பரவுவது போலவோ அன்றேல் மெழுகுவர்த்தியின் சுடர் போலவோ தண்மையாகவும் பல வர்ணங்களை உமிழ்வனவாகவும் இருந்தது.

முற்றத்தில் பிரகாசித்து எரியும் மின் குமிழ்களின் ஒளி வெள்ளத்தில் நின்று பார்ப்பவர்களுக்கு மண்டபத்தில் நடப்பவை எவையும் தோற்றா!

மேட்டின் அவனுடன் அன்பு வார்த்தைகள் பேசினாள்...

பல வகைப்பட்ட மதுபான போத்தல்களை அவன் முன்னால் அடுக்கி அவை எந்த நாட்டில் தயாரிக்கப்படுகின்றன என்றும் அவை தயாரிக்கப்படும் விதம் பற்றியும் விளக்கினாள். மாட்டிறைச்சியால் தயார் செய்யப்பட்ட பல வித உணவு வகைகள்...திராட்சை அப்பிள் போன்ற பழ வகைகள் 'ரீப்போவில்' நிறைக்கப்பட்டன.

அந்த வீட்டையும் வளவையும் பாமரிப்பதற்கு குறைந்தது ஆறு வேலையாட்கள் அங்கு பணிபுரிந்திருக்க வேண்டும். ஆனால் அச்சமயம் அங்கு எவரையும் காணவில்லை...!

மேட்டின் இரண்டு உயரமான கண்ணாடி குவளைகளில் உயர்ரக மது பானம் ஒன்றை நிரப்பினாள்.

ஜோர்ஜ் அதையொத்த ஒரு பானத்தை எப்போதாவது கிறிஸ்மஸ் பண்டிகைகளின் போது மட்டும் கண்டிருப்பான்.

கைகளை தூக்கி கண்ணாடி குவளைகளை உராயவிட்டு 'சியர்ஸ்' கூறி இருவரும் அந்த மதுவை உறுஞ்சிய போது அந்த மன ஒற்றுமை எவ்வளவு நேரம் நீடிக்குமோ என்ற ஐயம் ஜோர்ஜின் மனதில் உறுத்தியது...

ஆனால் மேட்டினோ நிதானமாகவே இருந்தாள்...

தனது வீட்டு விருந்தாளியை இன்முகம் காட்டி உபசரிக்க வேண்டிய பொறுப்பை எவரிடமிருந்தோ ஏற்றுக் கொண்டவள் போல அவதானத்துடன் நடந்து கொண்டாள்...

"ஏய் ஜோர்ஜ் என்னை நீ நம்புவாயல்லவா...?"
என்று அன்புடன் வினாவினாள்...ஜோர்ஜ் பதில் கூறினான்...

"நான் நம்புவதற்கு எவரும் இல்லை... அதனால் உன்னை நம்புகின்றேன்...!"

மேட்டின் மண்டபம் அதிர உரத்துச் சிரித்தாள்...பின்னர் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு...

"ஏன்...உன் அன்பு மனைவி ஜூலியை நீ நம்பவில்லையா?" என்று வினாவினாள்...

ஜூலியின் பெயரைக் கேட்டதும் ஜோர்ஜ் உரிமையுடன் தனது குவளையை மீண்டும் நிரப்பிக் கொண்டு சிறிய அளவு மதுவை உறுஞ்சி சுவைத்தான். அது புரையேறியதால் போதையும் தலைக்கேறியது. பின்னர்...

"ஜூலி...ஜூலி...அவள் என்னுடையவளல்ல 'மனேஜரிடம்' அவள் என்னைக் காட்டிலும் அதிகளவு அன்பு பாராட்டுகிறாள். 'மனேஜர்' வந்தால்

அவள் பணம் தந்து என்னை வெளியே அனுப்புகிறாள். நான் திரும்பி வந்து அவர்கள் நெருக்கமாக இருப்பதை காண விருப்பமின்றி தெருவெல்லாம் சுற்றிவிட்டு காலதாமதமாகி வீட்டுக்கு வருகின்றேன்...''

மேட்டின் எழுந்து வந்து அவனுக்கு 'பைற்ஸ்' எடுத்து கொடுத்தாள். பின்னர்...

''ஜுலி நல்லவள்...உன்னுடன் அன்பாக நடப்பதில்லையா?''

''உண்மைதான்...'மனேஜர்' பணம் கொடுக்கிறார்...அதை வைத்து ஜுலி எங்களுக்கான வீட்டை திருத்திக் கொள்கிறாள். அவசியமான தளபாடங்களை வாங்கிப் போடுகிறாள். அதனால் அவரை கொஞ்சம் திருப்திப்படுத்துகிறாள். நான் அறியாமல் இல்லை. நான் தொழில் புரிபவனல்ல. அதனால் பொறுத்துக் கொள்கிறேன். இருந்தாலுமென்ன... மனேஜருக்கு வயதாகிவிட்டது. அவரால் ஜுலியை திருப்திபடுத்த முடியாது. அவள் கட்டிலில் என்னை தேடி வராமல் இருக்கமாட்டாள்...!'' சிரித்தான்.

''ஜோர்ஜ் இன்னும் சிறிதளவு ஊற்றிக்கொள்...இதை அருந்து...நன்றாக சாப்பிடு...''

மேட்டினின் உபசரிப்பில் அவனுக்கு வெறி தலைக்கேறியது. சோபாவி லிருந்து சரியப் போனான். மேட்டின் சரிய விடாமல் தனது பருத்த உடலுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள். பின்னர்... ''உனக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிக்கு ஜுலி பணம் கட்டியிருக்கிறாள். எனக்கு செல்வாக்கு உண்டு. உனக்கு வேலை கிடைக்கச் செய்கிறேன். அப்போது அந்த 'மனேஜரை' ஒநாயை அடிப்பது போல நீ அடிப்பாய்...அப்படித்தான் நடக்கும்...அப்படித்தான் நடக்கும்...'' என்று மேட்டின் கறுவிக் கொண்டாள்...!

## 11

நிலாவினிக்கு தான் தர்ஷிக்கு செய்த தவறு மனத்தில் உறுத்திக் கொண்டு இருந்தது...

அண்ணாவிடம் ஏச்சும் வாங்கி தண்டனையும் பெற்று முடிந்தது. அது பரவாயில்லை...தர்ஷியிடம் எந்த முகத்தை வைத்து தவறை ஒத்துக் கொள்வது? எப்படி மன்னிப்புக் கேட்பது? என்றெல்லாம் நினைக்கையில் அவளுக்கு திகிலாகவும் வெட்கமாகவும் இருந்தது.

அன்று கல்லூரி நாள்... நிலாவினி முகாமைத்துவ வகுப்பு முடிந்து வராந்தாவுக்கு வந்த போது அங்கு தர்ஷி நிற்பதை கண்டு அதிர்ந்து போனாள்...தனது நண்பிகளைக் கைவிட்டு ஒரே ஓட்டமாக சென்று...

"அக்கா...அக்கா...என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ..."

என்று மன்றாடிக் கேட்டு கையை பிடித்துக் கொண்டாள்...

மாணவிகள் நூற்றுக்கணக்கான எண்ணிக்கையில் வராந்தாவை விட்டு வெளியேறி தென்னம் நிழல்களை நாடினார்கள். பதிவேடுகளை ஒருவருக்கொருவர் காட்டியபடியும்... சந்தேகங்களை பரிமாறிக் கொண்டும் குழுக்கள் குழுக்களாக பிரிந்து நின்றனர்.

"ஏய்...ஏய்...நிலாக்குட்டி...இது கல்லூரி...கையை விடு....இஞ்சை ஒண்டும் பேச வேண்டாம்..." என்று தர்ஷி செல்லமாக அதட்டினாள்...

பின்னர் வளாகத்தின் ஒரு எல்லையில் வாகனங்கள் நிறுத்துமிடத்தை நோக்கி தர்ஷி நடந்தாள்...நிலாவினி உடன் சென்றாள்...அவளுக்கு பயம் காரணமாக இதயம் வேகமாக அடித்தது...உடல் வியர்த்தது...

தர்ஷி கேட்டாள்...

"ஒரு பெண் ஒரு ஆணை விரும்பக் கூடாது எண்டு நினைக்கிறாயா நிலாக் குட்டி?"

"தர்ஷி அக்கா...தர்ஷி அக்கா...என்னை விட்டு விடுங்கோ...எனக்கு அதைப் பற்றியெல்லாம் ஒண்டுமே தெரியாது..."

நிலாவினி அழாத குறையாக கெஞ்சினாள்.

"இல்லை...இல்லை...சில விஷயங்களிலை நீ உறுதியாக இருக்கிறாய். ஆனால் ஒண்டும் தெரியாத மாதிரி நடிக்கிறாய்...இப்ப எனக்கு தெரியவேணும் நீ என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"

"தர்ஷி அக்கா நல்லவள் எண்டு நினைக்கிறன்"

"அப்ப ஏன் என்ரை பெயரைப் போட்டு பொய் காதல் கடிதம் எழுதினனி?"

"நான் விட்ட பிழையை மறைக்க..."

"என்ன பிழை விட்டனி?"

"நீங்கள் அண்ணாட்டை குடுக்க தந்த கடிதத்தை எறிஞ்சது..."

"ஏன் எறிஞ்சனி ?"

"நான் நினைச்சன் நீங்கள் என்ரை அண்ணாவுக்கு காதல் கடிதம் எழுதியிருக்கிறீங்கள் எண்டு..."

"அப்ப நான் காதல் கடிதம் எழுதக் கூடாது எண்டு நீ நினைக்கிறாயா?"

"எழுதலாம்...ஆனால் என்ரை அண்ணாவுக்கு எழுதக் கூடாது..."

"ஏன்?"

"என்ரை அண்ணாவின்ரை அன்பை என்னாலை எவருக்கும் விட்டுக் கொடுக்க ஏலாது...?"

தர்ஷிக்கு கண்கள் குளமாகிவிட்டன...

"நிலாக் குட்டி...உன்ரை அண்ணாவிலை நீ எவ்வளவு அன்பு வைச்சிருக்கிறியோ... உன்ரை அண்ணை உன்னிலை எவ்வளவு அன்பு வைச்சிருக்கிறாரோ அதே அளவு அன்பு நானும் உன்னிலையும் உன்னுடைய அண்ணாவிலையும் வைச்சிருக்கிறன். உன்னாலை எப்படி உன்ரை அண்ணாவின்ரை அன்பை இழக்க முடியாதோ அதே போலை என்னாலையும் உன்ரை அண்ணாவின்ரை அன்பை இழக்க முடியாது...இதை நீ ஏன் புரிஞ்சு கொள்ளுறாயில்லை...?"

நிலாவினிக்கு தர்ஷி அப்படி கண்கலங்கி கதைத்தது கவலையாகப் போய்விட்டது...

"தர்ஷி அக்கா... என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ..."

"நீ உன்ரை பிழையை உணர்ந்திட்டா சரி நிலாக்குட்டி. எனக்கு உன்னிலை என்ன கோபம்...? அதை இப்ப விடுவம்...உங்கடை வீட்டிலை அப்பா அம்மா என்னைப் பற்றி என்ன கதைக்கிறவை?"

"அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நீங்கள் எண்டால் உயிர்...ஆனால் இரண்டு பேரும் உங்களை அன்பாய் இருக்கிறதை ஒருத்தருக்கு ஒருத்தர் காட்டிக் கொள்ள மாட்டினம்..."

"பிறகு ...பிறகு" தர்ஷி ஆவலுடன் வினாவினாள்.

"அண்ணாவை மாப்பிளை கேட்டு ஒரு பணக்காரக் குடும்பத்திலையிருந்து வந்தவை...அந்த இடத்தை தட்டிக் கழித்தது தான் எண்டு பேரெடுக்க அப்பா விரும்பாதது போல அம்மாவும் விரும்பேல்லை..."

"அப்ப என்ன செய்தவை...?"

"சரி சரி பாப்பம் எண்டு பெண்ணின்ரை சாதகத்தை அப்பா வாங்கிப் போட்டார்...அம்மாவும் ஏட்டிக்குப் போட்டியாய் சீதன விபரம் பற்றி கேட்டு தெரிஞ்சு கொண்டா. பொம்பிளை பகுதி சாதகப் பொருத்தத்தை பாருங்கோ எண்டு சொல்லிப் போட்டு போயிற்றினம்..."

"பிறகு...?" தர்ஷி

"பிறகு உங்களைப் பற்றி கதை வந்தது... அம்மா, 'நீங்கள் ஏன் சாதகத்தை வாங்கினீங்கள்?' எண்டு கேட்டு அப்பாவை சண்டைக்கு இழுத்தா... அப்பாவும் விடேல்லை... 'நீ ஏன் சீதன விபரம் கேட்டனீ?' எண்டு அம்மாவோடை சண்டைக்கு போனார்..."

"இரண்டு பேரும் என்ன முடிவெடுத்தவை? " தர்ஷி

"இரண்டு பேரும் பிறகு தங்களுக்குள்ளை சமாதானமாகி முதல்லை சாதகத்தைப் பாப்பம். அனேகமாய் பொருத்தம் வராது...குறிப்பு பொருந்தேல்லை எண்டு திருப்பி கொடுத்துவிடுவம் எண்டு முடிவெடுத்தினை"

"பொருத்தம் பார்த்ததோ...?"

"பார்த்ததுதான் ...இரண்டு சாதகத்தின்ரை பொருத்தமும் உத்தமம்!"

"பிறகு என்ன செய்தவை?:

சீதனத்தை கூட்டிக் கேட்பம் விட்டு விட்டு ஓடிவிடுவினை எண்டு முடிவெடுத்தினை..."

"அதுக்கென்ன நடந்தது?"

"அப்பா அம்மா கேட்ட சீதனத்திற்கு மேலாலை தாறம் எங்களுக்கு மாப்பிளையை தந்தால் சரி எண்டு பொம்பிளை பகுதி சொல்லிப் போட்டினம்"

"இப்ப என்ன செய்யப் போகினமாம்...?" தர்ஷி

"அடுத்த கட்டம் பற்றி யோசிச்சுக் கொண்டிருக்கினை..."

தர்ஷி சிறிது நேரம் சிந்தித்தாள்...பின்னர்...
"அவையள் யோசிச்சுக் கொண்டு இருக்கட்டும். பொம்பிளை பகுதியாற்றை விலாசத்தை சொல்லு..." என கேட்டாள்.

"இலக்கம் தொண்ணூற்றியெட்டு. அன்பு வீதி..."

"என்னைக் கண்டதெண்டோ இந்த விசயங்களை எனக்கு கூறினதெண்டோ வீட்டிலை சொல்லிப் போடாதை... 'மாப்பிளை வேண்டாம் வேண்டாம்' எண்டு கூறி பொம்பிளை பகுதி ஓடுகிற மாதிரி செய்து விடுகிறன்..."

நிலாவினி விழுந்து விழுந்து சிரித்தாள். தர்ஷியும் இணைந்து கொண்டாள்...

"நிலாக் குட்டி இனிமேல் எனக்கு விளையாட்டுக் காட்டமாட்டாய் எல்லே...?"

"சத்தியமாக!"

"அப்ப போவம் என்ன...?"

தர்ஷி சைக்கிளில் சிறிது தூரம் வரை போவதை அவதானித்துக் கொண்டிருந்த நிலாவினி "தர்ஷி அக்கா நில்லுங்கோ ...நில்லுங்கோ..." என்று கூறி துரத்தியபடி ஓடிவந்தாள்...

தர்ஷி இரு கால்களையும் நிலத்தில் ஊன்றியபடியே தரித்து நின்று "என்ன நிலாக் குட்டி?" என்று வினாவினாள்...

நிலாவினிக்கு மூச்சிரைத்தது... சொற்கள் தடுமாற வினாவினாள்.

"தர்ஷி அக்கா நான் இனிமேல் உங்களை அண்ணி எண்டு கூப்பிடட்டோ?"

தர்ஷி சைக்கிளை நிலத்தில் தொப்பென அடிபட்டு விழவிட்டு நிலாவினியை அணைத்துக் கொண்டாள்...

***************************

ராஜநாதர் 'மீண்டும் வசந்தம்' நூல் வெளியீட்டால் ஏற்பட்ட பிரபல்யம் காரணமாக பலராலும் அறிந்து கொள்ளப்படும் நிலை உண்டானது...

நூலை கணினி மயப்படுத்தலில் ஜுலி செய்த உதவியை அவர் நன்றியுடன் நோக்கினாள். அதை விட மேலாக தனது மனைவியைக் காட்டிலும் வயதில் குறைந்த ஜுலியிடமிருந்து புதிதாக கிட்டிய அன்பு அவரது மனத்தில் இளமைக் கிளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. எனவே ஜுலியை அவர் பணத்தாலும் பரிசுப் பொருட்களாலும் குளிப்பாட்டினார்.

அனேகமாக ஞாயிறு தின விடுமுறை தினங்களை அவர் ஜுலி வீட்டிலேயே செலவிட்டார்...

அதுவும் ஒரு ஞாயிறு தினம்... ஜுலி 'மீண்டும் வசந்தம்' நூலால் அவருக்கு உண்டான புகழை பாராட்டுமுகமாக அன்று அவருக்கு விசேட மதிய போசன விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தாள்.

ராஜநாதருக்கு மதுப் பழக்கம் கிடையாது. ஆனால் ஜுலி அன்று அவருக்காக அவரைக் கேட்காமலே மதுவை மதிய போசன மேசைக்கு எடுத்திருந்தாள்...

ராஜநாதருக்கும் ஜுலிக்கும் நெருக்கம் படிப்படியாக அதிகரித்து வந்து விட்டதால் மனைவியிருக்க மற்றொரு மாதினை மனம் கொள்ளும் தவறிலிருந்து ஒருபடி மேலே போய் குடி குடியைக் கெடுக்கும் என்ற தப்பான வழிக்கு அவர் அன்று முதற்றடவையாக அடி எடுத்து வைத்தார்...அந்த தப்பை அவர் உணராத படி ஜுலி அவருக்கு 'பாட்னராக' இணைந்து கொண்டதுடன் மதுவின் மூலம் ஏற்படக் கூடிய கிறக்கத்திற்கு வடிகாலாக துணை நின்றாள்.

இப்போதெல்லாம் ராஜநாதர் தான் ஜுலியை அடைய விரும்பும் நேரங்களில் தானே ஜோர்ஜுக்கு பணம் கொடுத்து வெளியே அனுப்பிவிடுவார். அன்றும் அவ்விதமே ஜோர்ஜை அழைத்தார்...

"ஜோர்ஜ் ஆர் யூ கீப்பிங் பைன்?" என வினாவினார்.

ஜோர்ஜ் ஆங்கில பாடசாலை ஒன்றில் ஆங்கில மொழி மூலம் கற்றவன் என்பதை அவர் தெரிந்து வைத்திருந்தார்...

அவனும் " ஐ ஆம் கீப்பிங் பைன்...ஹவ் டு யூ டு சேர்?" எனக் கேட்டு அவரை குசலம் விசாரித்தான்.

ஜுலிக்கு பணக் கஷ்டமோ...பொருட் கஷ்டமோ இல்லாததால் ஜோர்ஜ் குடிப்பதற்கு அவளோ அல்லது ராஜநாதரோ பணத்தை தாராளமாக இறைத்து அவன் தமக்கு குறுக்கே வராதபடி பார்த்துக் கொண்டார்கள்...

ராஜநாதர் தனது 'பர்ஸிலிருந்து' ஒரு கத்தை பணத்தை எடுத்து அவனிடம் நீட்டினார். அவன் இரு கைகளாலும் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தான்.

'தாய் செத்தால் அப்பன் சிற்றப்பன்' என்ற பழமொழிக்கு இணங்க ஜோர்ஜின் மகன் வழக்கம் போல முற்றத்து மணலில் விளையாடிக் கொண்டிருந்தான்.

ராஜநாதருக்கு குறைந்த அளவில் மதுவை ஊட்டிய ஜூலி தான் அதிக அளவில் எடுத்துக் கொண்டதால்...

ராஜநாதர் கெஞ்சிக் கேட்டு அடைய வேண்டிய சில விடயங்களை ஜூலி தானே முன்வந்து கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"ஜூலி...வெளிநாட்டிலெல்லாம் மனைவி பிள்ளைகள் என்ற பந்தங்கள் ஒருவன் தனது ஆசாபாசங்களை நிறைவேற்றிக் கொள்ள தடையாக இருக்கமாட்டாது..."

"சேர்...என்னைப் பொறுத்தவரை உள்நாடு வெளிநாடு என்ற கட்டுப்பா டெல்லாவற்றிற்கும் உள்ளாக நான் தயாராக இல்லை. ஜோர்ஜ் என்னை கட்டுப்படுத்துவதை நான் அனுமதிப்பதில்லை. அதே போல் அவனுக்கும் சுதந்திரமுண்டு..."

"ஏன் ஜூலி..உன்னால் ஜோர்ஜை உதறிவிட்டு என்னுடன் வாழ முடியுமா?"

ஜூலி அவரை ஒருகணம் நிமிர்ந்து பார்த்தாள்...குவளையை எடுத்து ஒரு மிறடு மதுவை உள்ளனுப்பினாள். பின்னர் தனக்கு தடையாக இருந்த கதிரைகளைக் கடந்து வந்து ராஜநாதருடைய முதுகுக்குப் பின் புறமாக வந்து அவரை அணைத்தபடி சிரித்தாள்...

"என் செல்வமே உனக்கு இது போதும்...இப்போது நீ என்னுடன்... தனிமையில் உன் இஷ்டப்படி எல்லாவற்றையும் நிறைவேற்றியபடிதானே இருக்கிறாய்... என்னால் ஜோர்ஜை தூக்கி எறிந்து விட்டு உன்னுடன் இணைந்து தூரச் சென்று விட முடியும்...ஆனால் உன்னால் முடியாது...உன்னால் கௌரவமான உனது மனைவி பிள்ளைகளை விட்டு பிரிந்து செல்ல முடியாது. பிரிந்து சென்றாலும் அதிக காலம் நிலைக்க மாட்டாய். நான் சக்கையாகி போகும் வரைக்கும் என்னை அனுபவிப்பாய். அதன் பின்பு உன் மனைவி பிள்ளைகளை நினைத்து அழத்தொடங்குவாய்... பின்னர் என்னை அனாதரவாக விட்டுச் சென்று

விடுவாய்... எனக்கு அப்போது ஜோர்ஜ் என்ற துணை கூட இல்லாமல் போய்விடும்... அவன் வேறு ஒருத்தியுடன் போய்விட்டிருப்பான்...!"

ஜூலி சொல்வதை கவனமாக செவிமடுத்த ராஜநாதர் அவள் எப்படி தனது மனைவியைக் காட்டிலும் விவேகமானவளாக இருக்கிறாள் என்று எண்ணி வியந்தார்... அழகான பெண்ணையல்ல; விவேகமான ஒருத்தியையே ஒருவன் அதிகம் நேசிக்கிறான் என மனதில் எண்ணிக்கொண்டார்.

மனைவி அவரை... 'நீங்கள் இப்போதெல்லாம் என்னை இரவில் தேடுவதில்லை..' என்று குற்றம் சுமத்தியது அச்சமயம் அவருக்கு நினைவில் வந்தது.

பொறுப்புள்ள கணவனாக அந்த குற்றச் சாட்டுக்கு பரிகாரம் காணக் கூடிய நிலையில் அவர் இருக்கவில்லை...

புகழ்...மது...மாது என்ற மூவகை போதையில் அவர் முற்றாக மூழ்கி விட்டிருந்தார்...

அவரை படுக்கையிலிட்டு சப்பாத்துக்களை கழற்றி ஆடைகளை தளர்த்தி விட்டாள் ஜூலி...அதுவரையே அவளால் தாக்கு பிடிக்க முடிந்தது. அதன் பின்னர் அவளும் அக் கட்டிலிலேயே வீழ்ந்துவிட்டாள்.

பணத்தை பெற்றுக் கொண்ட ஜோர்ஜ் அன்று வெளியே போகவில்லை. மேட்டின் கூறிய வசனங்கள் அவனை அவனது மனத்தை உறுத்திக் கொண்டிருந்தன... 'உனக்கு வேலை கிடைக்கச் செய்கின்றேன்...அப்போது நீ அந்த மனேஜரை ஓநாயை அடிப்பது போல அடிப்பாய்...அப்படித்தான் அது நடக்கும்...அப்படித்தான் நடக்கும்...'

ஜோர்ஜ் சாப்பாட்டு மேசைக்கு வந்தான். எஞ்சிய மதுவை போதும் போதும் என்றாகும்படி அருந்தினான்...அளவுடன் உணவருந்தினான்...

மகனை குளித்துவிட்டு வந்து சாப்பிடும்படி கட்டளையிட்டான். பின்னர் தாழ்வாரத்தில் நின்று கட்டிலைப் பார்த்தான்...

அவன் அன்பு செலுத்தும் ஜூலி மனேஜரின் காலடியில் வீழ்ந்து கிடந்தாள்!.

## 12

வங்கியால் இரு நாட்கள் சுற்றுப் பயணம் ஒன்று ஏற்பாடு செய்திருந் தார்கள்..சனிக்கிழமை காலை புறப்பட்டு ஞாயிறு மாலை திரும்பி விடுவது என்றும் அலுவலர்கள் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரை அழைத்து வரலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இளம் அலுவலர்கள் தமது இல்லாளை அழைத்து வந்திருந்தார்கள்...நடுத்தர வயதை எய்தியவர்கள் தமது பிள்ளைகளில் ஒருவருக்கு அச்சந்தர்ப்பத்தை வழங்கியிருந்தார்கள்.

ராஜநாதருக்கு அந்த சுற்றுலா மிக அருமையாக பயன்பட்டது. எவ்வளவுதான் ஜூலி வீட்டில் அவருக்கு இடம் கிடைத்தாலும் அவரது மனம் இன்னும்... இன்னும் என்று ஏங்கிக் கொண்டிருந்தது...ஒரு இளம் மனைவியுடன் பலர் காண வெளியே சுற்றித்திரிய ஒருவன் விரும்புவது போல தனதும் ஜூலியினதும் நட்பை பரகசியப்படுத்த அவர் விரும்பினார் போலும்...!

அன்று காலை எட்டு மணிக்கெல்லாம் ஆடம்பர 'பஸ்' ஒன்று வங்கி வளாகத்தை விட்டு புறப்பட்டது...

ராஜநாதருக்கு சாரதியின் ஆசனத்திற்கு பின்னால் விசேடமாக இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஜூலி அவருக்கு அவசியமான சிற்றுண்டி வகைகள், பானங்களை தானே தனது கையால் செய்து எடுத்து வந்திருந்தாள்.

அவ்வப்போது அவருக்கு தேவையானவற்றை வெற்றிடமாக அவர் அருகில் இருந்த ஆசனத்தில் வந்தமர்ந்து எடுத்துக் கொடுத்தாள்.

பஸ் வண்டியில் உற்சாகம் கரைபுரண்டோடியது. பெண்களும் சிறுவர்களும் ஆடிப்பாடி அட்டகாசம் புரிந்தனர். இந்த வாழ்வின் பயனை அந்தக் கணமே அனுபவித்து விட முடிவெடுத்தவர் போல மகிழ்ச்சியின் எல்லையை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தனர். எவரும் எவரையும் பொருட்படுத்தவில்லை.

ஆசனத்தில் கையூன்றி தன் அருகே சரிந்து நின்று கதைகள் பேசி கொண்டிருந்த ஜூலியின் கைகளைப் பற்றி இழுத்த ராஜநாதர் ...

"என்னருகே இரு...எங்கேயும் போகாதே..." என்று ஒருமையில் கட்டளையிட்டார்...

ஜூலியும்...பலரும் அவதானிக்க கூடும் என்ற பயம் ஏதும் அற்றவளாக அவர் அருகே அமர்ந்து கொண்டாள்...

"ஜூலி...நான் உன்னை ஒருமையில் அழைத்தது உனக்கு கோபமா?" என்று செல்லமாக வினாவினார் ராஜநாதர்.

ஜூலியும் அவரது மன வேகத்தை அறிந்து கொண்டு...

"நான் உங்களை 'அடே பிடே' என்று அழைக்கட்டுமா?" என அவரது கன்னத்தோடு கன்னம் உரசியபடி வினாவினாள்.

ராஜநாதரின் உடல்பூராகவும் சில்லென ஒரு குளிர் ஊடுருவியது. பாதி வயது தனக்கு திடீரென குறைந்து விட்டது போல உணர்ந்தார்.

"ஏய் ஜூலி. நீ அப்படியே அழை..." என்று அவர் கூறவும்...

" என்னைக் காட்டிலும் வயதுக்கு மூத்த உங்களை என்னால் அப்படி அழைக்க முடியாது" என கூறி மறுத்துவிட்டாள்...

ராஜநாதர் பலவிதமாக கெஞ்சிக் கேட்டும் அவள் அவரை அப்படி அழைக்க மறுத்து தொடர்ந்தும் 'சேர்' என்றே அழைத்தாள்.

அன்று பல சரித்திர பிரசித்தி பெற்ற இடங்களை பார்க்க கூடியதாக இருந்தது. மதிய உணவினை பலரும் 'பார்சல்' செய்து எடுத்து வந்திருந்ததால் பூங்காவின் புற்றரையில் அனைவரும் அமர்ந்து சாப்பிட்டது புதிய அனுபவமாக இருந்தது...

ஜூலி ராஜநாதரை நெருங்கி நெருங்கி உபசரிப்பதும் செல்லம் கொஞ்சுவதும் சில இளம் அலுவலர்களுக்கு பொறாமையை உண்டு பண்ணியது...

அன்றைய தினம் இரவு மலை நாட்டில் வசதியான ஒரு ஹோட்டலில் தங்க வசதி செய்யப்பட்டது... ராஜநாதரின் பிரத்தியேக அறையை விட்டு ஜூலி

எங்கும் நகராதபடி ராஜநாதர் தடுத்துவிட்டார். கடுமையான குளிராக இருந்தபடியால் ஜூலி நடுநடுங்கினாள்...குழந்தை போல அவள் சோபாவில். கால்களை தூக்கி இடுக்கி வைத்து முட்டிகளை இரு கைகளாலும் சேர்த்து அணைத்தபடி ராஜநாதரை பார்த்து எதற்காகவோ இறைஞ்சினாள்...

ராஜநாதர் அவள் உள் மனத்தை புரிந்து கொண்டு அழைப்பு மணியை அழுத்தி சேவகனை வரழைத்து மதுப் போத்தல் ஒன்றுக்கும் அவசியமான 'பைற்ஸ்' வகைக்கும் ஓடர் செய்தார்...

தன் மனைவியைக் காட்டிலும் அதிகளவு வயது குறைந்த ஜூலியுடன் அவரது அன்றைய இரவு கழிந்தது. அதே போல ஜோர்ஜைக் காட்டிலும் தன்மேல் அதிகளவு ஆசை வைத்திருக்கும் ராஜநாதருடன் ஜூலியின் அன்றைய இரவு கழிந்தது...!

புலன்கள் என்கின்ற சாளரங்களினூடாக ஆன்மா அனுபவிக்க வேண்டிய உணர்வுகளுக்கு யார்தான் எல்லை அமைத்திட முடியும்?!

மறுநாள் அதிகாலையிலேயே யாரும் எழும்புவதற்கு முன்னர் ஜூலி பதறி அடித்துக் கொண்டு எழுந்தாள்...காலைக் கடன்களை விரைந்து செய்து முடித்து விட்டு தனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சென்று படுத்துக் கொண்டாள்.. ஞாயிறு காலையில் மலைப் பிரதேசங்ளை சுற்றி பார்த்தபடியே இல்லம் நோக்கிய பயணம் ஆரம்பமாகியது...

இடையில் சில சில இடங்களை இறங்கி பார்க்க வேண்டியிருந்தது... ஜூலி ராஜநாதர் அருகே அமராமல் தனக்கான ஆசனத்தில் அமர்ந்து காட்சிகளை இரசித்துக் கொண்டிருந்தாள். அவளது முகத்தைக் கடும் காற்று வருடிக் கொண்டிருந்தது...

ராஜநாதருடனான நட்பு ஏற்பட்ட விதம்... அது மலர்ந்த விதம்... ஆசைகள்... கற்பனைகள்... கனவுகள் சிறகடித்து பறந்த விதம்... இவை பற்றியெல்லாம் ஜூலி எண்ணிப் பார்த்தாள்... இந்த நட்பை நான் எப்படி பாதுகாப்பேன்... இந்த நட்புக்கு பாதிப்பு ஏற்பட்டால் எனது நிலை என்னவாகும் என்றெல்லாம் எண்ணி எண்ணி மருண்டாள்.

ஒரு பெண்ணை ஆணொருவன் தனது சபலத்திற்காக பயன்படுத்திவிட்டு போய்விடுகின்றான்...ஆனால் அவளது வாழ்வில் அது எத்தனை தாக்கங்களை உண்டு பண்ணி விடுகின்றது...!

மதிய போசனத்திற்காக வண்டி நிறுத்தப்படும் வரையில் ராஜநாதரும் ஜூலியை தேடவில்லை... பஸ்ஸில் இருந்தோர் அனைவருமே களைத்து சோர்ந்திருந்தனர்.

வீடு அண்மிக்க அண்மிக்க சிறுவர்களும் பெண்களும் உசார் அடைந்தனர். பாடினர்... ஆடினர்... சுற்றுலாவின் வெற்றிக்கு சிகரம் அமைத்தனர்...

இடையிடையே தமது இல்லங்களில் இறங்கியோர் தவிர ஏனையோருடன் வண்டி வங்கியை அடைந்தது...

ஜூலி ராஜநாதரிடமும் ஏனையோரிடமும் விடை பெற்றுக் கொண்டு 'ஓட்டோ' ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி வீடு சென்றாள்...

மறுதினம் லீவு கோரவேண்டாம் என ராஜநாதர் அனைவரிடமும் வேண்டிக் கொண்டார்.

அதனை ஏற்றுக் கொண்டு அனைவருமே மறுநாள் வங்கிக்கு வருகை தந்திருந்தனர்...

ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் முகாமையாளருடைய அறைக்குள் வந்து அவரை நெருங்கி புதிய பாதுகாப்பு உத்யோகத்தர் ஒருவர் நியமனம் பெற்று வந்திருப்பதாக அறிவித்தார்.

"அழைத்து வா..." என ராஜநாதர் உத்தரவிட்டார்.

புதிய பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமனக் கடிதத்துடன் உள்ளே வந்தார்...முகாமையாளர் நிமிர்ந்து பார்த்தார்...அங்கே ஜோர்ஜ் நின்றிருந்தான்.!

## 13

ஜோர்ஜ் பாதுகாப்பு உத்தியோகத்தராக வங்கியில் கடமை ஏற்ற பின்னர் அவன் தனது குடிப் பழக்கத்தை நிறுத்திக் கொண்டான். அவன் ஆங்கில பாடசாலை ஒன்றில் கல்வி கற்றவனாகையால் வங்கிக்கு வரும் வெளிநாட்டவர் மற்றும் உத்தியோகத்தர்களுடன் ஆங்கிலத்திலேயே உரையாடினான். அதனால் ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மத்தியில் அவனது மதிப்பு உயர்ந்தது.

குடிப்பழக்கத்தை விட்டு விட்டதனால் அவனது சம்பளப் பணத்தை அப்படியே ஜூலியிடம் கொடுக்க முடிந்தது.

ஜோர்ஜ் அடிக்கடி வங்கியுள் புகுந்து நடமாட வேண்டிய தேவை இருந்ததால் ஜூலிக்கும் ராஜநாதருக்கும் சுதந்திரம் கெட்டுவிட்டது.

ஜூலிக்கு முகாமையாளரின் 'கீப்' என்று இருந்த பெயர் மாறி ஜோர்ஜின் மனைவி என்று எல்லோரும் குறிப்பிட்டு கதைக்க தொடங்கியிருந்தனர். அது ஜூலிக்கு ஆறுதலை அளித்தது...

மற்றொருத்தியின் கணவனின் நட்பை விட தனது கணவனின் எதிர்ப்பு சிறந்தது என்று அப்போ ஜூலி எண்ணினாள்...

ஆனால் ராஜநாதருக்கு அப்படியல்ல...அவரது அசட்டை காரணமாகவே நோயாளியாக மாறிக் கொண்டிருக்கும் தனது மனைவியுடன் ஒப்பு நோக்கும் போது மிக இளம் வயதினளான ஜூலியை இழக்க அவரது மனம் ஒப்பவில்லை...

எனவே அவர் ஜூலியுடன் கதைக்க அவளை தனிமையில் சந்திக்க புதிதாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஜூலிக்கும் ஜோர்ஜ் சார்பில் சில தடைகள் ஏற்பட்டன.

ஞாயிறு தினங்களில் இல்லம் வருவதை முற்றாக தவிர்க்கும்படி ஜூலி ராஜநாதரிடம் கூறியிருந்தாள்... ஜோர்ஜ் அத் தினங்களில் தனது மகனையும் மனைவியையும் தேவாலயத்திற்கு அழைத்து செல்ல தொடங்கியிருந்தான்...

அவன் சிறிது சிறிதாக ஒரு பெண்ணை கொண்டு நடாத்தக் கூடிய கணவனாக மாறிக் கொண்டிருந்தான். ராஜநாதருக்கு அது கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. ஏனென்றால் அவரது நிலைமை மறுவளமாக இருந்தது.

மேட்டின் மறுபுறம் ஜோர்ஜுக்கு சில தகவல்களை வழங்கக்கூடும் என்ற பயம் ஜூலிக்கு இருந்தது.

பல காலம் சென்று விட்ட நிலையிலும் மலை நாட்டின் 'ஹோட்டல்' ஒன்றில் ராஜநாதருடன் செலவிட்ட இரவு பொழுதைப் போல ஒருநாள் மீண்டும் ஜூலிக்கு வரவில்லை.

இந் நிலையில் பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கான தன்னியக்க இலத்திரனியல் அட்டை வங்கியால் அறிமுகம் செய்யப்பட்டது. அதன் நிமித்தம் இரவு நேரக் காவலுக்கு ஜோர்ஜ் பொருத்தமானவன் என மேலிடத்திற்கு சிபார்சு செய்த ராஜநாதருக்கு அதற்கான அனுமதி கிடைத்தது பெரும் வெற்றியாக போய்விட்டது. ஜூலிக்கும் ராஜநாதரின் நட்பை ... அவரால் அவளுக்கு கிடைத்து வந்த செல்வாக்கை திடீரென இழக்க முடியாமல் இருந்தது.

மேலும் காதல் என்பது கவனிக்காவிட்டால் வாடிவிடக்கூடிய மென்மையான பயிர்... அதற்கு தினமும் உரமிட்டு நீரூற்றி வளர்த்து வரவேண்டியிருந்தது...

ராஜநாதருக்கும் ஜூலிக்குமிடையேயான காதல் விவகாரம் ஜோர்ஜ் பாதுகாப்பு உத்தியோகத்தராக வந்தபின் கோடைகாலத்து பயிராக ஆகிவிட்டது.

ராஜநாதர் இன்னமும் தன்னை மனத்தில் நினைத்துக் கொண்டிருக்கிறாரா என்று ஜூலிக்கும்... ஜூலி இன்னமும் தன்னை மனத்தில் இருத்தி வைத்திருக்கிறாளா என்று ராஜநாதருக்கும் சந்தேகம் ஏற்படும் அளவுக்கு அவர்களது பிரிவு இருந்தது...

ஜோர்ஜின் இரவுக் கடமையைப் பயன்படுத்தி தினமும் சிலமணி நேரத்தை ஜூலியுடன் செலவிட ராஜநாதர் திட்டமிட்டார்.

ஜூலியும் அதற்கான சரியான நேரத்தை தெரிவு செய்தாள்...

மீண்டும் ராஜநாதர் ஜூலியை அவள் வீட்டில் தினமும் இரவு நேரத்தில் சந்திக்க தொடங்கினார்...

ராஜநாதர் ஜூலி வீட்டுக்கு மம்மல் பொழுதில் வருவதை மேட்டின் தனது வீட்டு வாசலில் நின்று அவதானித்தாள்.

அன்று மாலை ராஜநாதர் வருவதற்கு சற்று முன்னதாக மேட்டின் ஜூலி வீட்டில் வந்து அமர்ந்து கொண்டாள்.

ராஜநாதர் உரிய நேரம் ஒரு திருடனைப் போல பிரதான வாயிற் கதவினை திறந்து உள்ளே வரவும் ஜூலி ஓடிச் சென்று மேட்டின் வந்திருப்பதை இரகசியமாக கூறி "வாருங்கோ சேர்" என்று சாதாரணமாக வரவேற்பது போல பாசாங்கு செய்தாள்.

மேட்டினை முகம் கொடுத்துப் பார்க்க ராஜநாதருக்கு திடுக்காட்டமாக இருந்தது. ராஜநாதருக்கு எந்தவித மரியாதையும் கொடுக்காமலும் அவருடன் பேசாமலும் இருந்தாள் மேட்டின். ராஜநாதருக்கு அது அகௌரவமாக பட்டிருக்க வேண்டும். தானே முன்வந்து அவளுடன் பேச்சை ஆரம்பித்தார்.

"என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்களை முன்னர் அறிந்திருக்காததால் அன்று உங்களுக்கு என்னால் உதவ முடியாமல் போய் விட்டது. பின்னர் ஜூலி உங்களைப் பற்றி கூறிய போது கவலையடைந்தேன்."

மேட்டின் கொடுப்புக்குள் சிரித்துவிட்டு பேசாமல் இருந்தாள். ஜூலி இருவருக்கும் தேனீர் வழங்கி உபசரித்தாள்... அன்று ராஜநாதர் விடைபெற்றுச் செல்லும் வரை மேட்டின் அசையவில்லை.!

மறுநாள் ராஜநாதர் சிறிது காலதாமதமாகி வந்தார். வேண்டுமென்றால் மேட்டின் நேரத்துடன் வந்து போய்விடட்டும் என்று எண்ணினார் போலும்...

ஜூலிக்கு முதல் நாள் அவர் வருகை தந்தும் தன்னுடன் சரியாக பேசி பழகி செல்ல முடியாமல் போனது பெரும் கவலையாக இருந்தது...குறையாக இருந்தது...

எனவே அன்று சில சிற்றுண்டி வகைகளை அவருக்காக செய்தெடுத்து வைத்திருந்தாள்... இருவரும் சுவாரசியமாக பேசிக் கொண்டிருந்த சமயம் வேலி ஓரமாக ஒரு உருவம் மெதுவாக நகர்ந்தது... அது தனது வலது கையில் சிறிய கல் ஒன்றினைப் பொத்தி பிடித்திருந்தது.

"ஜூலி...உன்னை சந்திக்க முடியாமல் தடை வந்தபோது நான் உன்னையும் அழைத்துக் கொண்டு வேறு தேசம் செல்ல முடிவெடுத்தேன்..." ராஜநாதர்

"ஜோர்ஜ் இப்போ தொழில் புரிகின்றான். அதனால் அவன் வாழவேண்டும் என நினைக்கின்றான். உங்களதும் எனதும் தொடர்பை அவன் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டான். என்னால் அவனுடன் பேசி தீர்த்துக் கொள்ள முடியும்..."

ஜூலி அப்படிக் கூறி முடிப்பதற்கு முன்னால் மின்சார விளக்குகள் அனைத்தும் அணைந்தன. அந்த உருவம் இருட்டில் பாய்ந்து வந்து ராஜநாதரின் முகத்தை தனது வலது கையில் பொத்தி வைத்திருந்த அந்த சக்கி முக்கி கல்லினால் சின்னாபின்னமாக்கிவிட்டு இருளோடு இருளாக மறைந்தது...

மீண்டும் 'பியூஸ்' கட்டையை தேடி எடுத்து மின் விளக்குகளை எரியவிட்டு பார்த்த போது ராஜநாதரின் முகத்திலிருந்தும் தலையிலிருந்தும் இரத்தம் பீரிட்டபடி இருந்தது.

எங்கிருந்தோ அந்தசமயம் வருகை தந்திருந்த மேட்டின் 'ஆட்டோ... ஆட்டோ'...என்று குரல் கொடுத்தாள்.

****************************

ராஜநாதருக்கு நேர்ந்த அசம்பாவிதம் ஜூலி மூலமாக வங்கி அலுவலர்களுக்கும் அவர்கள் மூலம் ராஜநாதர் குடும்பத்திற்கும் உடனேயே தெரிவிக்கப்பட்டது.

மேலதிக பற்று வழங்க மறுத்ததால் ஏற்பட்ட பழைய பகைமை காரணமாகவே ஒரு பெண் ராஜநாதருக்கு ஆள் வைத்து அடித்திருப்பதாக ஜூலி கூறினாள்.

ராஜநாதருடைய குடும்பம் வைத்தியசாலைக்கு வந்தபோது அவரை சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு எடுத்திருந்தார்கள்.

சீதா அடிக்கடி மயக்கமுற்றபடி இருந்தாள்...நிலாவினி தாயை மடியில் வைத்து "அப்பாவுக்கு ஒன்றுமில்லையம்மா...அப்பாவுக்கு ஒன்றுமில்லை..." என அவளை சமாதானப்படுத்தினாளாயினும் தானும் முற்றாக கலங்கிப் போயிருந்தாள்.

சுரேஷ் வைத்தியசாலைக்கான 'பொலிஸ்' பிரிவுடனும் வருகை தந்திருந்த வங்கி அலுவலர்களுடனும் பேசி சரியான தகவலை எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்...

சில இளம் அலுவலர்கள் ஏற்கனவே இருந்த பொறாமை காரணமாக... "ஜூலியிடம் விசாரித்தால் தெரிந்து கொள்ளலாம்" என கூறி விலகி விட்டார்கள்.

சுரேஷ் ஜூலியை தேடி சந்தித்தான்... அவளது நிலைமை அவனது தாயின் நிலைமையைக் காட்டிலும் மோசமாக இருந்தது...

"அன்ரி... அப்பாவுக்கு என்ன நடந்தது...?" என சுரேஷ் ஜூலியிடம் வினாவினான்.

ஜூலி ஊகித்துக் கொண்ட அளவில் மேட்டின் முதல் நாள் தனது இல்லத்திற்கு வருகை தந்து ராஜநாதருக்கு மதிப்புக் கொடுக்காமல் அடம்பிடித்த விதமும் மறுநாள் ராஜநாதருக்கு அடி விழுந்து முடிந்த கையுடன் மேட்டின் அங்கு காணப்பட்டதும் அவளே பழி வாங்கும் நடவடிக்கையாக அப்படி செய்திருப்பாள் என்பதை ஊர்ஜிதம் செய்வதாக இருந்தது.

ராஜநாதருக்கு அப்படி நேர்ந்து விட்டதால் கலக்கமுற்றிருந்த ஜூலி... மேட்டினை சுரேஷுக்கு அறிமுகம் செய்வதால் தனக்கு ஏற்படக் கூடிய பாதகம் பற்றி சிந்திக்காமலே மேட்டினை பழிகாரியாக்கி சுரேஷுக்கு கதைகளை கூறி விட்டாள்.

சுரேஷ் உடனேயே தனது மோட்டார் சைக்கிளில் மேட்டின் வீட்டை அடைந்தான். அப்போது சாமத்தை நெருங்கும் நேரமாகி விட்டாலும் அவளது தெருவில் நடந்தேறிய விபரீதம் காரணமாக மேட்டின் கட்டிலுக்கு போகாமல் விழித்திருந்தாள்...

சுரேஷ் அவனை நெருங்கி விசாரிக்க சென்றது அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது...

அந்நேரம் 'பொலிஸ்' வாகனம் ஒன்று ஜூலி வீட்டு வாசலில் 'ஹோர்ன்' அடிக்கும் சத்தம் மேட்டின் வீடு வரை கேட்டது.

அதனை அவதானிக்க எழுந்து செல்ல முற்பட்ட சுரேஷை மேட்டின் தடுத்து... "ஜூலி வீட்டில் எவரும் இல்லை...இப்படி அமர்..."என்று கூறி சோபாவில் அமரவைத்தாள்.

பின்னர் ... "பொலிசார் சரியான தகவல் கிடைக்காமல் ஜூலி வீட்டிற்கு வந்திருப்பார்களா? சற்று யோசி.." என்று கூறி சுரேஷை தூண்டினாள்.

சுரேஷ் சற்று நேரம் தலையைக் குனிந்தபடி சிந்தித்தான். பின் நிமிர்ந்து மேட்டினை அளவிடுவது போல உற்றுப் பார்த்தான். மேட்டினின் முகம் மற்றவர்களை வசீகரிக்கும் தன்மை கொண்டதல்ல. அவள் அன்பாக பழகுகின்றவர்களுக்கு கூட பயப்பிராந்தியை ஏற்படுத்துவது...

"இல்லை...இல்லை...மேலதிக பற்று வழங்காத கோபத்திலை நீங்கள்தான் அப்பாவை ஆள் வைச்சு அடிச்சிருப்பியள். உண்மையைச் சொல்லுங்கோ..." என முகத்துக்கு முகம் நேராக வினாவினான்.

மேட்டின் தூங்கப் போவதற்கு சற்று முன்பாக மது அருந்தும் பழக்கத்தை கொண்டவள். அந்நேரம் சற்று மது அருந்தியிருந்தாள். எனவே அவளால் கோபத்தை அடக்க முடியவில்லை...ஆத்திரமுற்றுக் கத்தினாள்...

"ஜூலி நடத்தை கெட்டவள்...உன் அப்பனை தனது வலையில் வீழ்த்தி பெரும் பணம் சம்பாதித்து விட்டாள்...அவளது கணவனுக்கு அவள் துரோகம் செய்தாள்... ஜோர்ஜ் நல்லவன் ...பல நாட்கள் பொறுத்துப் பார்த்தான். இருவரும் திருந்துவதாக இல்லை. அவன் கோபம் கொண்டு எவரையாவது ஏவியிருக்கலாம்..."

அதைக் கேட்டு சுரேஷ் அதிர்ந்து விட்டான்.

சுரேஷ் உடனே வங்கிக்கு சென்றான். அங்கு ஜோர்ஜ் கதிரை ஒன்றில் அமர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான்.

ஒரு கொலை முயற்சியை செய்தவன் அப்படி அமைதியாக இருக்க முடியுமா என எண்ணினான் சுரேஷ். அவனது கடமை நேரத்தில் அவன் எப்படி வீடு செல்ல முடியும் என்பதற்கு பதில் இல்லாமல் இருந்தது.

எனினும் சுரேஷ் அவனை தட்டியெழுப்பினான். அவன் திடுக்குற்று எழுந்து நின்று விழித்தான்.

"நல்லாய் பயந்து போனன். நான் நினைச்சன் 'மனேஜர்' தான் 'செக்' பண்ண வந்திட்டார் என்று" என கூறி விட்டு சிரித்தான்.

சுரேஷ் அவனை அதட்டினான்...

"ஏய் யாருக்கு நாடகமாடுகிறாய்...அப்பாவை அடிச்சு காயப்படுத்தி போட்டு இப்ப நடிக்கிறியோ?"

ஜோர்ஜ் குனிந்த வாக்கில் அவனது காலில் விழுந்தான்.

"ஐயோ தம்பி...எனக்கு முந்தியெல்லாம் பணமும் இப்போ சம்பளமும் தாற ஐயாவை நான் அடிப்பேனா?" என்று கேட்டு ஓலமிட்டு அழத் தொடங்கினான்.

சுரேஷ் மீண்டும் வைத்தியசாலை திரும்பினான்...தாயை மடியில் வைத்து நிலாவினி தாங்கியிருந்தாள். வைத்தியசாலையை விட்டு எல்லோருமே போய்விட்டிருந்த்னர்.

'அட்டென்ரன்'.. "ஒருவரும் இங்கே நிற்கேலாது. எல்லோரும் வெளியே போங்கோ..." என்று போட்ட சத்தத்தில் நிலாவினி தூக்கம் கெட்டு எழுந்து முழித்தாள்.

## — 14 —

மறுநாள் பத்திரிகையில் ராஜநாதர் தாக்குதலுக்குள்ளான விடயம் முற்பக்க செய்தியாக வெளியாகியிருந்தது. 'வங்கி முகாமையாளரை கொலை செய்ய முயற்சி... அலுவலக பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்டதால் கணவன் சீற்றம்...' அந்த தலைப்பின் கீழ் ராஜநாதர் ஜூலி உறவு பற்றியும் ஜோர்ஜ் சீற்றமடைந்ததற்கான காரணங்கள் பற்றியும் அநாகரீகமான முறையில் சித்தரித்து செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அச் செய்தியைப் படித்து வங்கி நிர்வாகமே அதிர்ந்து விட்டது. உடனடியாக நிர்வாக சபையைக் கூட்டி ஆராய்ந்தது. விசேட விசாரணைக் குழுவொன்று சம்பந்தப்பட்ட வங்கி கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அக் குழு சகல அலுவலர்களையும் ஊழியர்களையும் அழைத்து விசாரித்ததுடன் அவர்களது வாக்கு மூலங்களையும் பதிவு செய்தது.

தலைநகர் சென்று அக் குழு சமர்ப்பித்த விதந்துரை உடனடியாக அமுல்படுத்தப்பட்டது. வங்கிக்கு புதிய முகாமையாளர் அனுப்பி வைக்கப்பட்டார். ராஜநாதர் தலைமையகத்திற்கு இடமாற்றப்பட்டார். தகுதிகாண் நிலையிலிருந்த ஜோர்ஜ் பதவி நீக்கப்பட்டான். ஜூலி அயல் கிராமத்தில் அமைந்திருந்த அவ் வங்கியின் பிறிதொரு கிளைக்கு இடமாற்றப்பட்டாள்.

நிர்வாகத்தின் இத் திடீர் நடவடிக்கையால் வங்கி அலுவலர்கள் அனைவருமே அதிர்ந்துவிட்டார்கள். ஒரு நிதி நிறுவனம் சார்ந்த நிர்வாகம் வாடிக்கையாளர்களுக்கு எந்தவித அசௌகரியமும் ஏற்படக் கூடாதென்பதில் எவ்வளவு உறுதியாக இருக்கின்றது என்பது வங்கியின் ஒவ்வொரு அலுவலர்களாலும் முதற்றடவையாக உணரப்பட்டது.

ராஜநாதர் மேல் அனுதாபம் உள்ளோர் அவரது இல்லம் சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர்.

சீதாவின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. பத்திரிகைச் செய்தியை அப்படியே உண்மையென ஏற்றுக் கொண்ட முதலாவது நபர் அவளாகவே இருந்தாள்.

கற்புள்ள பெண் ஒருத்தியால் நெறிதவறும் தனது கணவனை அடையாளம் காணமுடியாமற் போவதற்கு நியாயம் எதுவுமே இருக்க முடியாது...!

தான் இதுவரை கட்டியெழுப்பிய குடும்ப மானம் ஒரே நாளில் இழக்கப் பட்டதாக எண்ணி வருந்தி அவள் நோயாளியாகிக் கொண்டிருந்தாள்.

நிலாவினி தனது நாளாந்த கடமைகளை நிறுத்திக் கொண்டு தனது நண்பிகளை சந்திப்பதை தவிர்த்துக் கொண்டிருந்தாள்.

சுரேஷ் மட்டுமே வைத்தியசாலை சென்று தந்தையின் ஒவ்வொரு தேவையையும் நிறைவேற்றிக் கொண்டிருந்தான்.

ராஜநாதரின் தலையையும் முகத்தையும் மூடிக்கட்டியிருந்தார்கள். பல இடங்களில் காயங்களுக்கு தையல் போடவேண்டி இருந்தது.

அவரால் இன்னும் பல நாட்களுக்கு பேச முடியாத நிலையே இருந்தது.

சுரேஷ் அவருக்கு ஆறுதலாக இருந்தான். சுரேஷின் நண்பர்கள் அவன் பொருட்டு வைத்தியசாலையில் ராஜநாதருக்கு துணையாக நின்றார்கள்.

ராஜநாதருக்கு அதிர்ச்சி நீங்கவில்லை. என்ன நடந்ததென அவர் மனம் பலவாறு எண்ணி வருந்தியது. ஜோர்ஜுடன் அவர் பேசி பழகியிருந்ததால் அவனது சுபாவத்தை அவர் அறிந்திருந்தார். தனக்கும் ஜூலிக்கும் இடையேயான நட்பினை அவன் இப்போதுதான் அறிந்தான் என எண்ணிவிட முடியாது. பல சந்தர்ப்பங்களில் அவன் ஜூலியை அவர் கையில் ஒப்படைத்து விட்டு விலகியிருக்கிறான். தனது பணத் தட்டுப்பாட்டை அவர் மூலம் நீங்கியிருக்கிறான். அவனுக்கு தொழில் கிடைத்தமையால் அவனது நிலைமை உயர்ந்திருந்தாலும் அவரை தொழில் தருநராக மதிக்க வேண்டிய கடமைப்பாடு அவனுக்கு இருந்தது. அவருக்கும் ஜூலிக்குமான தொடர்பை நிறுத்த வேண்டுமென அவன் புதிதாக தீர்மானம் எடுத்திருந்தாலும் அவருடன் நேரில் பேசியே தீர்த்திருக்கலாம். அவளது நட்பு குறித்து அவன் ஜூலியுடனே கூட கராராக நடந்ததாக அவள் எப்போதும் கூறவில்லை. ஜூலியுடனான சாதாரண ஒரு சந்திப்பின் போது அவன் ஆத்திரமுற்று பாய்ந்து வந்து கொலை முயற்சியில் ஈடுபடுவதென்பது கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாத ஒரு விடயமாகவே அவருக்கு பட்டது.

அன்று ஜூலி அவரை பார்ப்பதற்காக வைத்தியசாலைக்கு வந்திருந்தாள். 'சேலைன்' ஏற்றப்பட்ட நிலையில் அவரைப் பார்த்ததும் அவள் குரல் வைத்து அழுதாள். அன்பு என்பது உறவு முறைக்குள்தான் முடங்கிக் கிடக்க வேண்டுமா? மனிதம் எங்கிருந்தாலும் அங்கு அன்பு தவிர்க்க முடியாதபடி இருக்குமே!

ஜுலியை தேற்றும் நிலையில் அவர் இல்லை. விழிகள் மட்டும் அவளைப் பார்த்து கலங்கின.

வங்கி நிர்வாகத்தின் அதிரடி நடவடிக்கைகள் பற்றி சுரேஷ் தந்தைக்கு மறைத்துவிட்டான். ஆனால் நிர்வாகத்தின் நடவடிக்கையால் ஜுலியும் பாதிக்கப்பட்டிருந்தாளாகையால் அவள் எதையும் மறைக்காமல் அவரிடம் கூறிவிட்டாள். ராஜநாதரின் விழிகளிலிருந்து நீர் கரையோரம் கசிந்தது.

பத்திரிகை செய்தியை படித்துவிட்டு தர்ஷி துடிதுடித்துவிட்டாள். உடனேயே வைத்தியசாலைக்கு வந்தாள். அப்போது சுரேஷ் தந்தைக்கு அவசியமாக இருந்த 'ஓ குறூப்' இரத்தத்திற்காக அலைந்து திரிந்தான். வைத்தியசாலைகளில் இரத்தம் பெற்றுக் கொடுக்கும் தரகர்கள் இருந்தார்கள். அவர்களும் கைவிரித்து விட்டார்கள். தர்ஷி ராஜநாதரைப் பார்த்து அதிர்ந்தே போய்விட்டாள்.

சுரேஷ் தூரத்தில் வருவதைக் கண்ட தர்ஷி ஓடிச் சென்று அவனை அண்மித்தாள்...

"தர்ஷி...நீ அப்பாவை பார்த்து விட்டு போய்விடு. அப்பாவுக்கு தேவையான 'ஓ குறூப்' இரத்தம் தட்டுப்பாடாக உள்ளது. நண்பர்கள் எல்லோரிடமும் வாய் வைக்கவும் முடியாதுள்ளது. தனியார் வைத்தியசாலையில் முயற்சி செய்வதற்காக இப்போ நான் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றேன்."

"சுரேஷ்...என்னுடைய இரத்தம் 'ஓ குறூப்பாகவே' இருக்க வேண்டும். அண்மையில் வெளியான ஆய்வொன்றில் ஜாதகத்தில் செவ்வாய்க் குற்றம் உள்ளவர்களுக்கு இரத்தம் 'ஓ குறூப்பாக' இருக்குமென கண்டுபிடித்துள்ளார்கள். எனக்கு உதயத்திலை செவ்வாய். எதற்கும் 'ரெஸ்ற்' பண்ணி பாப்பம்".

தர்ஷி பிடிவாதம் பிடித்தால் என்ன செய்வாள் என்பது சுரேஷுக்குத் தெரியும். எதற்கும் நாகரிகத்திற்காக மறுத்துப் பார்த்தான். அதனைக் கேட்க

அவள் அங்கிருக்கவில்லை. இரத்த வங்கியை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருந்தாள்.

அதிசயிக்கும்படி அவளது இரத்தம் 'ஓ குறூப்பாகவே' இருந்தது. தான் மதிப்பு வைத்திருக்கும் அங்கிளுக்கு அப்படி ஒரு உதவியை செய்ய முடிந்தது அவளுக்கு பெரும் ஆத்ம திருப்தியை அளித்தது. சுரேஷின் படுக்கையறைக்கு உரிமை கோரிக் கொண்டிருந்த அவள் இப்போ அவனுக்காக வைத்தியசாலைக் கட்டிலில் விரல்களை மடித்து நிமிர்த்திய படி இரத்த தானம் செய்துகொண்டிருந்தது சுரேஷின் கண்களை கலங்கச் செய்துவிட்டது.

***************************

நிலாவினி வீட்டில் 'ஷெல்' விழுந்தால் எப்படி இருக்குமோ அப்படி ஒரு நிலை. ராஜநாதர் காயமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு விட்டார். சீதா நடந்த சம்பவத்தால் அதிர்ச்சியடைந்து செயலிழந்து போனாள். சுரேஷ் தந்தையைக் காப்பாற்றுவதற்காக என்னென்ன செய்ய முடியுமோ அவற்றை செய்வதற்காக அலைந்து திரிந்து கொண்டிருந்தான். நிலாக் குட்டியின் விளையாட்டுத்தனங்களெல்லாம் ஓய்ந்துவிட்டன. வீட்டில் சமையல் சாப்பாடே நின்று விட்டது. நிலாவினி அடிக்கடி தேனீர் தயாரித்து தாய்க்கு கொடுத்துக் கொண்டிருந்தாள். தானும் அதையே பருகினாள். பத்திரிகைச் செய்தியை மகன் வாயிலாக அறிந்த ராசம் துக்கம் விசாரிக்க ஓடோடி வந்தாள். வீட்டு நிலைமையை பார்த்ததும் அவள் அதிர்ந்தே விட்டாள்.

வன்னி மண்ணில் யுத்த மேகங்களுக்கு மத்தியில் சிறார்களான சுரேஷ், நிலாவினி ஆகியோருடன் துணிகரமாக வாழ்ந்த சீதாவா இது?

ராசம் சீதாவின் கன்னங்களை தட்டி கதை கேட்டாள். சீதாவிடமிருந்து எந்த வாய் முறைப்பாடும் வரவில்லை.

" நிலாக்குட்டி வா இஞ்சை" என்று அதட்டிய ராசம் சமையலறைக்குச் சென்று அங்கு எஞ்சியிருக்கக் கூடிய பொருட்களை அவதானித்தாள். பின்னர் நாளாந்தம் தேவைப்படக் கூடிய மரக்கறி உட்பட மாவகைகள் சீனி கோப்பி என்று ஒரு பட்டியல் தயாரித்தாள். குளிர்சாதனப் பெட்டியில் குளிர்பான வகைகள், 'ஜாம்' மற்றும் 'மாஜரின்' வகைகள் தவிர எதுவுமேயில்லை.

மண்டபத்தில் இருந்த தொலைபேசியில் கந்தவேளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு அலுவலகத்திற்கு குறுகிய நேர விடுதலையை போட்டுவிட்டு தான் பட்டியலிட்டு வாசிக்கும் பொருட்களை உடன் வாங்கி வருமாறு பணித்தாள்.

அரை மணி நேரத்தில் கந்தவேள் தனது துவிச்சக்கர வண்டியில் பெரியதொரு உரைப்பை நிறைந்த பொருட்களை கட்டிக் கொண்டு வியர்க்க விறுவிறுக்க வந்து விட்டான்... அவனே சுமையை நெஞ்சுடன் அணைத்து பிடித்தபடி சமையலறைவரை எடுத்து வந்தான்.

"கந்தவேள்...உனக்கு மத்தியானச் சாப்பாடு மேசையிலை எடுத்து வைச்சிருக்கிறன்...போய்ச் சாப்பிடு... தேவையெண்டால் கந்தோருக்கு 'போன்' பண்ணுவன்" என்று கூறி அனுப்பி வைத்தாள்.

ராசம் சமையல் கலையில் மிகவும் அனுபவம் வாய்ந்தவள். வீட்டில் உள்ளவர்களின் தேகாரோக்கியத்தை தனது சமையல் திறனாலேயே மேம்படுத்துபவள்.

இப்போ துரிதமாக செயற்பட்டாள்..." நிலாக்குட்டி...இவ்வளவு மரக்கறியையும் வெட்டி எடு... தேங்காயை உடைத்து துருவு" என்று கட்டளை களைப் பிறப்பித்தபடியே 'காஸ்' அடுப்பை பற்ற வைத்தாள். மல்லி, சின்னச்சீரகம், மிளகு, மிளகாய், பூடு ஆகியவற்றை 'பிளண்டரில்' இட்டு அரைத்து பொட்டலம் கட்டி பாத்திரத்தில் கொதிநீரில் இட்டாள். நிலாவினி வெட்டிய மரக்கறி வகைகளில் தெரிவு செய்தவற்றை அள்ளிப் போட்டாள். அளவான உப்பை சேர்த்து பாத்திரத்தை மூடிவிட்டாள்.

"நிலாக் குட்டி 'றைஸ் குக்கரில்' அரிசியை கழுவி போடு" என்று கூறியபடியே மரக்கறி வகைகளை வெவ்வேறு பாத்திரங்களில் தனித்தனியே கூட்டினாள்.

மரக்கறி 'சூப்' நன்றாக கொதித்து அவிந்ததும் பாத்திரத்தை இறக்கி வைத்து அரைப் பாதி தேசிக்காயை பிழிந்துவிட்டாள்.

பின் இரண்டு வெள்ளி தம்ளர்களை நிரப்பி...

"நிலாக் குட்டி...நீ இதை குடி மோனை..." என்று கூறி அவளிடம் கொடுத்து மறு தம்ளரை சீதாவிடம் தானே எடுத்துச் சென்று அவளை வற்புறுத்தி

பருக வைத்தாள். அதைச் சுடச்சுட பருகியதும் அடைத்துக்கிடந்த செவிப்பறை திறந்து கொண்டதாக உணர்ந்தாள் சீதா...

ராசம் நிலாவினியிடம் அவள் 'சூப்' பருகிய தம்ளரை வாங்கி கழுவி வைத்துவிட்டு 'சூப்' நிரப்பிய போத்தலொன்றையும் சிறிய கரண்டி ஒன்றையும் கொடுத்தாள்.

"நிலாக்குட்டி...நீ இப்ப உன்னுடைய ஸ்கூட்டியில் ஆஸ்பத்திரிக்கு போ... அங்கை அப்பாவுக்கு ஏதும் கொடுக்க வேண்டாம் எண்டு 'டொக்ரர்' சொல்லியிருப்பார். ஆனால் நீ அதுக்கெல்லாம் செவி கொடுக்கப்படாது. இந்த 'சூப்பை' சிறிதளவு எண்டாலென்ன அப்பாவுக்கு பருக்கிப் போட்டு வா..." என்று கூறி அனுப்பி வைத்தாள்...

நிலாவினிக்கு தனக்கு எங்கிருந்து உசார் வந்தது என்று புரியாமல் இருந்தது. அது 'சூப்' குடித்ததால் வந்ததா அல்லது ராசம் அன்ரி பொழியும் பாசத்தால் வந்ததா என அவள் மனம் தடுமாறியது.

ஸ்கூட்டியை 'ஸ்ராட்' செய்தாள்...வழமையான வேகத்தை காட்டிலும் விரைந்து சென்றாள். வைத்தியசாலையில் சுரேஷ் நின்றான். நிலாவினியை கண்டதும் 'அம்மா என்ன செய்யிறா?' என்றே அவன் வினாவினான்.

நிலாவினி ராசம் அன்ரி வந்தது முதல் நடந்த சம்பவங்களை கூறினாள்...

"அண்ணா...வீட்டுக்கு வா சாப்பிட..." என நிலாவினி அழைத்தாள். சுரேஷ் எதுவும் பேசவில்லை...

ராஜநாதர் கண்விழித்துப் பார்த்தார்...நிலாவினியைக் கண்டதும் அவர் கண் கலங்கினார்.

நிலாவினி 'சூப்பை' 'கப்பில்' ஊற்றி கரண்டியால் சிறுக சிறுக பருக்கினாள். அவரது களை தீர்ந்து உடம்பு வியர்த்தது...

நிலாவினியை பார்த்து அவர் ஏதோ கேட்க முயன்றார்...ஆனால் அவரால் முடியவில்லை...

" அம்மா சுகமாயிருக்கிறா அப்பா..." என்றாள் நிலாவினி.

## 15

ராஜநாதர் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து நீதிமன்றில் 'பொலிஸ்' வழக்கொன்று பதிவானது...ஜோர்ஜ் கைது செய்யப்பட்டான்...

ராஜநாதரிடமிருந்து 'பொலிஸாரினால்' வாக்குமூலம் எடுக்க முடியவில்லை... ஆனால் ஜூலியிடமிருந்து வாக்குமூலம் எடுத்திருந்தனர்...

ஜூலி தனக்கும் ராஜநாதருக்கும் இடையிலான தொடர்பை முற்றுமுழுதாக மறுத்திருந்தாள்...தொழில் ரீதியாக தான் அவருக்கு அதிகூடிய ஒத்துழைப்பை வழங்கியதாகவும் அவரது வயதுக்கு தான் மதிப்புக் கொடுத்து நடந்ததாகவும் கூறினாள். தனது கணவனுக்குக் கூட அவர் மேல் அன்பும் மதிப்பும் இருந்ததாகவும் அவர் எப்போதாவது வீட்டுக்கு வந்தால் அது தனது குடும்பத்தின் மீது கொண்ட பாசம் காரணமாகவேயன்றி வேறில்லை என்றும் தனது கணவனை கைது செய்திருக்க வேண்டிய அவசியமே இல்லை என்றும் அடித்துக் கூறினாள்...

விசாரணைகள் மூலம் கிடைத்த வாக்கு மூலங்களின் அடிப்படையில் ஜூலியின் வாக்கு மூலத்தை வைத்து ஜோர்ஜை கைது செய்திருக்க முடியாது...

ஆனாலும் ஜோர்ஜ் 'பொலிசாரால்' கைது செய்யப்பட்டான்!

ஜோர்ஜ் கைதுக்கு அடிப்படையாக இருந்தது மற்றும் வேலை பறிபோனமைக்கு காரணமாக இருந்தது அனைத்தும் வங்கி உத்தியோகத்தர்கள்... மற்றும் ஊழியர்கள் ஒருமுகமாக வழங்கிய சாட்சியம்தான்!

மறுநாள் பத்திரிகையில்... 'வங்கி முகாமையாளர் தாக்குதல் தொடர்பாக ஜூலியின் கணவன் ஜோர்ஜ் கைது' என்ற தலைப்பில் அனைத்து விபரங்களும் வெளியாகியிருந்தன...

சுரேஷின் நண்பர்கள் நால்வர் பத்திரிகை செய்தியை படித்து முடித்து விட்டு வைத்தியசாலைக்கு சென்று ராஜநாதரை பார்த்தனர்...

" ஜோர்ஜ் மீது உங்களுக்கு சந்தேகமா?" என்று அவரிடம் வினாவினர்...

அவர்... "இல்லை"... என்று மறுத்து தலையாட்டினார்.

சுரேஷின் நண்பர்கள் நால்வரும் நேரே ஜூலி வீட்டுக்கு போனார்கள்... ஜூலி அவர்களை வரவேற்று உபசரித்தாள்... அவளது அழகின்மேல் உண்மையில் அவர்களே மயங்கிவிட்டார்கள்...

"ஏனக்கா...உங்கள் கணவனை ஏன் கைது செய்தார்கள்?" என்று ஒருவன் வினாவினான்...

ஜூலி ஜோர்ஜ் பற்றிய சகல விளக்கங்களையும் அவர்களிடம் எடுத்து கூறினாள்...

"ஜோர்ஜ் வேலையில்லாமல் சரியான கஷ்டப்பட்டான். அவனுக்காக ராஜநாதர்தான் ஐம்பதாயிரம் ரூபா பணம் கட்டி பாதுகாப்பு உத்தியோகத்தர் வேலையைப் பெற்றுக் கொடுத்தார். அவர் ஜோர்ஜ் மீது மிகவும் அன்பு வைத்திருந்தார். அவனது செலவுக்கு தொடக்கத்தில் பணம் கொடுத்த அவர் அவன் பணத்தை மது அருந்தி செலவழிப்பதை கண்டு அவனை திருத்தி நல்வழிக்கு கொணர்ந்தார். ஜோர்ஜுக்கு ராஜநாதர் மீது எந்த குரோதமும் இல்லை" என்று கூறி கண்ணீர் வடித்து அழுதாள்...

சினேகிதர்கள் நால்வருக்கும் ஒரு பெண் தம் முன்னால் கண்ணீர் வடித்து அழுவது பெரும் கவலையாக போய்விட்டது.

"அக்கா...மேட்டின் என்பவள் யார்?" என ஒருவன் வினாவினான்.

ஜூலி உள்ளே சென்று நான்கு கண்ணாடி குவளைகளில் பழரசம் கொணர்ந்து பரிமாறினாள்...

பின்னர்... "மேட்டினுக்கும் ராஜநாதருக்கும் மேலதிக பற்று சம்பந்தமாக ஒரு பிரச்சனை நடந்தது. அந்த கோபத்தை சாதிப்பதற்காக அவளே எனக்கும் முகாமையாளருக்கும் இடையே தொடர்பு இருந்ததாக வங்கி பூராகவும் கூறியதோடை எனது கணவருக்கும் கோபம் ஏற்படும்படி கதைகள் கூறினாள்.

அதனை ஜோர்ஜ் ஏற்றுக் கொள்ளவில்லை. ஜோர்ஜுக்கு குடிக்கக் கொடுத்து முகாமையாளரை அடிக்கும்படி கூறினாள். அதற்கு ஜோர்ஜ் மசியவில்லை. அதனாலேயே அவள் தனது கோபத்தை சாதிக்க பணத்தை கொடுத்து ஆள் வைத்து அடித்தாள்" என்று விளக்கினாள்...

"அக்கா...உங்களுடைய கவலை எங்களுக்கு தெரிகின்றது...சுரேஷ் ஜோர்ஜ் மீது ஆத்திரமுற்று இருப்பதால் உண்மை என்ன என்று அறிவதற்காகத்தான் நாங்கள் உங்களிடம் வந்தனாங்கள்...மேட்டினைப் போல ஆட்களட்டை காசு இருக்கலாம். ஆனால் எங்களட்டை மனிதாபிமானம் இருக்கு" என்று ஒருவன் கூறினான்.

"அக்கா...ஜோர்ஜை இனி எப்ப விசாரணைக்கு கொண்டு வருவினமாம்..."

"பத்தாம் திகதி நீதிமன்றத்திற்கு கொண்டு வருவினமாம். அதற்குள்ளை முகாமையாளரை ஆஸ்பத்திரியாலை துண்டு வெட்டினால் பிணை எடுக்கிறதுக்கு பிரச்சனை இல்லையாம்... இல்லாட்டி திரும்பவும் 'ரிமாண்டுக்கு' போக வேண்டி வரும் எண்டு 'புரக்டர்' சொன்னவர்"

ஜூலி அழுதழுது கூறினாள்.

"ஆராவது 'புரக்டரை' பேசி வைச்சிருக்கிறியளே?"

"இல்லை தம்பியவை...முகாமையாளரை ஆஸ்பத்திரியாலை துண்டு வெட்டுறதைப் பார்த்து 'புரக்டரை' ஒழுங்கு செய்யலாம் எண்டு இருக்கிறன்...."

"அக்கா..... நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ...நாங்கள் இப்ப நேரே ஆஸ்பத்திரிக்கு போறம்...எப்படியும் துண்டு வெட்டுவிக்க முயற்சி செய்யிறம்... அப்படி எங்களாலை ஏலாட்டி வந்து சொல்லுறம்..."

"தம்பியவை...நீங்கள் தெய்வம் மாதிரி வந்திருக்கிறியள். எனக்கு ஒருத்தற்றை உதவியும் இல்லை... உங்களைத் தான் நம்பி இருக்கிறன்" என்று கை கூப்பி தொழுது அனுப்பி வைத்தாள்...

நால்வரும் நேரே வைத்தியசாலைக்கு போனார்கள். சுரேஷ் அங்கு நின்றான்...நண்பன் ஒருவன் வினாவினான்...

" மச்சான் அப்பாவை எப்பவாம் துண்டு வெட்டுறாங்கள்?"

"ஏன் மச்சான் கேட்கிறாய்...?" சுரேஷ் வினாவினான்.

"இல்லை மச்சான் பத்தாம் திகதி கோட்டுக்கு 'கேஸ்' வருது...அதுதான் கேட்டனான்"

"அந்த நம்பிக்கை அறவே இல்லை மச்சான்...கல்லு சதையை கிழிச்சுப் போட்டுது... தையல் இட்ட இடங்களிலை சிதல் பிடிச்சிட்டுது... அப்பாவின்ரை முகம் பழையபடி வருமோ எண்டதே சந்தேகமாய் கிடக்கு..." சுரேஷின் கண்களிலிருந்து நீர் வடிந்தது...

"கவலைப்படாதை மச்சான்... ஆள் தப்பினதே பெரியகாரியம் எண்டு நினைக்கக் கிடக்கு... சரியான திட்டமொண்டுதான் வேலை செய்திருக்கு...முகம் என்ன பெரிய முகம்... 'பிளாஸ்ரிக் சேஜரி' செய்தால் எல்லாம் சரியாய் போய் வடு தெரியாது..."

மற்றவன் கூறினான்...

"அப்ப மச்சான்... நாங்கள் வாறம்...அதிகம் கவலைப்படாதை...ஏதும் வேணுமெண்டால் சொல்லி அனுப்பு..."

"கேட்டதே பெரிய உதவி மச்சான்" சுரேஷ் விடை கொடுத்தான்.

நால்வரும் திரும்பவும் ஜூலியிடம் வந்தனர்...

"அக்கா...துண்டு வெட்டுவிக்கிறது கஷ்டமாயிருக்கு... நீங்கள் கவலைப்படாதையுங்கோ... நாங்கள் முயற்சி செய்யிறம்..."

"பத்தாம் திகதி நான் நீதி மன்றத்துக்கு வந்தால் பத்திரிகை நிருபர்கள் என்னை பிச்சு எடுத்துப் போடுவாங்கள்..."

ஜூலி முகத்தை மூடியபடி விம்மி விம்மி அழுதாள்... ஏற்கனவே பத்திரிகைகள் தமது சுய லாபத்திற்காக அவளை முற்றாக விற்று விட்டிருந்தார்கள்...

"அக்கா...நீங்கள் ஒரு இடமும் வரவேண்டாம்...நாங்களே 'புரக்டரை' ஒழுங்கு பண்ணி உங்கடை அவரை பிணை எடுக்கிற அலுவலை பாப்பம்..."

நால்வரும் ஒரு முகமாக கூறினார்கள்...

பத்தாம் திகதி ஜோர்ஜை நீதி மன்றத்திற்கு கொணர்ந்த போது பிரசித்தமான "புறக்டர்" ஒருவர் அவன் சார்பில் வாதிட்டார். அவரின் திறமை காரணமாக ஜோர்ஜுக்கு பத்தாயிரம் ரூபா காசுப் பிணையும் ஆள் பிணையும் வைத்து விடுவிக்க நீதிவான் அனுமதி வழங்கினார்.

நண்பர்கள் நால்வரும் உடனே பணத்தினை செலுத்தி ஆள் பிணையும் வழங்கி ஜோர்ஜை விடுவித்தார்கள்...

ஜோர்ஜ் விடுவிக்கப்பட்ட விபரத்தை உடனே ஜுலிக்கு தொலைபேசி வாயிலாக அறிய தந்தார்கள்...

ஜோர்ஜுக்கு சிற்றுண்டி வாங்கி கொடுத்த நண்பர்கள் பிரிந்து சென்றார்கள்.

ஜோர்ஜ் தனது வீட்டுக்கான குறுக்கு வழியில் நடந்து சென்று கொண்டிருந்தான்... ஜுலியையும் தனது குழந்தையையும் சந்திக்க வேண்டும் என்ற ஆவலில் அவன் வேகமாக நடந்தான்.

சனசந்தடியற்ற ஓரிடத்தின் திருப்பத்தில் அவன் மீது ஒரே நேரத்தில் பல பொல்லடிகள் வீழ்ந்தன... அவன் வாடி துடிதுடித்து சுருண்டு விழுந்தான்...

பொலிஸார் தலத்திற்கு வந்து விசாரித்த போது நான்கு இளைஞர்கள் அவனை பொல்லால் அடித்து தாக்கிவிட்டு ஓடி மறைந்து விட்டதாக பொதுமக்கள் சாட்சியம் கூறினார்கள்!

## 16

நான்கு இளைஞர்கள் ஜோர்ஜை அடித்துப் போட்டுவிட்டு சென்ற விடயம் நகர் பூராகவும் பேசப்பட்டது...

பொதுமக்களின் உதவியுடன் 'பொலிஸார்' அவனை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டனர்...

ஜூலியின் வீட்டுக்கு சென்ற 'பொலிஸாருக்கு' நான்கு இளைஞர்கள் பற்றிய செய்தி கிடைத்தது. ஆனால் அவர்களது பெயர் விபரம் ஏதும் கிடைக்கவில்லை.

நீதிமன்றில் ஜோர்ஜை விடுவிக்க 'பிணைக்கு நின்றவர்' பற்றி தகவல் எடுக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டது...

பிணைக்கு கையொப்பமிட்டவர் தனக்கு சில இளைஞர்கள் தாம் வெளிநாடு போவதால் ஆட்பிணைக்கு நிற்க முடியாமல் இருப்பதாகவும் ஆனால் 'ரிமாண்டில்' இருப்பவர் தமது நெருங்கிய நண்பர் எனவும் கூறி தனக்கு பணம் கொடுத்து பிணை வைத்ததாகவும் தகவல் வழங்கினார்...

யாராவது நேரில் வந்து இவர்கள் தான் அந்த இளைஞர்கள் என்று அடையாளம் காட்டினாலன்றி அவர்கள் பற்றிய எந்த தகவலும் எங்கும் கிடைக்கவில்லை...!

இரவு எட்டு மணியளவில் ராஜநாதர் வீட்டுக்கு முன்பாக 'பொலிஸ்' வாகனம் ஒன்று வந்து நின்றது...

கந்தவேள் வந்து வாயிற்கதவை திறக்கவும் 'பொலிசார்' அவனை தள்ளி விட்டு வீட்டை சுற்றி வளைத்துவிட்டனர்...

சீதா, ராசம், நிலாவினி மூவரும் விறாந்தைக்கு வந்து விட்டார்கள்...

'பொலிஸ்' அதிகாரி அவர்களுக்கு நடந்த சம்பவம் பற்றி விளக்கி சுரேஷ் பற்றி விசாரிக்கவும் சீதாவும் நிலாவினியும் ஓவென்று கதறி அழத் தொடங்கி விட்டனர்...

சில 'பொலிஸார்' கந்தவேளை தடுத்து வைத்து விசாரித்தனர்... கந்தவேள் அவர்களிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள கூடியதாக இருந்ததே அந்தக் குடும்பத்துக்கும் தனக்கும் எந்த வித உறவு முறையும் இல்லை என்று நிரூபிக்கக் கூடியதாக இருந்ததனாலேயே ஆகும்.!

தந்தை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சுரேஷ் ஒழுங்காக வீட்டுக்கு வருவதில்லை. தந்தைக்கு துணையாக நிற்பது... அவருக்கு தேவையான வற்றை உடனுக்குடன் பெற்றுக் கொடுப்பது, அவருக்கு ஆறுதல் கூறுவது அவையே அவனது கருமங்களாக இருந்தன. வீட்டுக்கு வருவதை அறவே தவிர்த்திருந்தான்... ராசம் சமையல் செய்து கொடுக்க அதை பார்சலாக கட்டி எடுத்து வந்து சுரேஷுக்கும் 'சூப்' போன்ற நீராகாரத்தை ராஜநாதருக்கும் கொடுத்து வந்தாள் நிலாவினி. தனது தங்கையின் நிலை பற்றி அதிகம் கவலை கொண்டிருந்தான் அவன்...

தாயைப் பற்றி நிலாவினியிடம் அடிக்கடி விசாரித்து அவளது சுகத்தை தெரிந்து கொண்டானாயினும் தந்தையின் ஒரு சிறு தவறுக்காக இருபத்தியைந்து வருடங்களுக்கு மேல் பொறுப்புள்ள கணவனாகவும் பாசமிகு தந்தையாகவும் அவர் அவளுடன் வாழ்ந்த வாழ்க்கையை மறந்துவிட்டு வைராக்கியம் சாதிப்பது அவனுக்கு வேதனையை அளித்தது.

சுரேஷ் வீட்டில் இல்லை என்பதை தெரிந்து கொண்டு 'பொலிசார்' வெளியேறினர். மறுநாள் காலை பத்திரிகையில் ஜோர்ஜ் தாக்கப்பட்ட விடயம் செய்தியாக வெளிவந்தது.

ஜோர்ஜுக்கு நடந்த விபரீதம் குறித்தும் தன்னை வீட்டில் 'பொலிசார்' வந்து தேடியது பற்றியும் சுரேஷுக்கு உடனுக்குடன் தகவல்கள் கிடைத்தன. ஆனால் சுரேஷ் வைத்தியசாலையை விட்டு எங்கும் அசையவில்லை.

அவர்களது கவனம் இப்போ சுரேஷை சந்திப்பவர்கள் யார் யார் என்பதை கண்டறிவதிலேயே இருந்தது... எனவே வைத்தியசாலையில் 'சிவில்' உடையில் சில 'பொலிஸார்' நடமாடினார்கள்...

சாதாரணமாக வைத்தியசாலையில் வைத்து ஒரு நோயாளியை பார்ப்பதற்கு தொடக்கத்தில் கூடுதலான நண்பர்கள் வருகை தருவார்கள்... நாட்கள் செல்ல செல்ல அந்த வருகையில் வீழ்ச்சி ஏற்படும்... 'பொலிசார்' வைத்தியசாலையை சுற்றி வளைத்த பின்னர் நிலாவினி, தர்ஷி ஆகியவர்கள் தவிர ஓரிரு வங்கி அலுவலர்கள் மட்டும் வந்து சென்றனர்...

தனது நண்பர்களில் குறிப்பிட்ட சிலர் வைத்தியசாலைக்கு வருவதை நிறுத்தியிருந்தமை சுரேஷுக்கு உறுத்தலாக இருந்தது...

அன்று மாலை சுரேஷ் வைத்தியசாலையை விட்டு வெளியேறி வீடு சென்றான்... தாயை சில தினங்கள் சந்திக்காதது அவனுக்கு மிகுந்த கவலையாக இருந்தது. வீட்டில் ராசம் நிலாவினி இருவரும் தாய்க்கு அனுசரணையாக இருந்தமையை அவதானித்து ஆறுதலடைந்தான்...

சுரேஷ் தாய் அருகே வந்து அமர்ந்ததும் ராசம் எழுந்து சென்றாள்...

"அம்மா நடக்காத எதற்கென்றாலும் யாராவது யோசித்து தம்மை நோயாளியாக்கி கொள்வார்களா? ஆண்கள் என்றால் அவர்கள் வெளியே செல்லத்தான் வேண்டும். மற்றவர்களுடன் இணைந்து கருமமாற்றத்தான் வேண்டும்... அதில் பல சிக்கல்கள் இருக்காமல் விடாது. போட்டியும் பொறாமையும் நிறைந்த இந்த உலகில் இதுதான் நடக்கும் என்றில்லை. எதுவும் நடக்கும்... அப்பாவுடன் நீண்ட காலமாக நீங்கள் வாழ்ந்து விட்டீர்கள்... உங்களுக்காக அவர் செய்த நல்லவை எல்லாத்தையும் அவர் செய்ததாக கருதப்படும் சிறு தப்பு ஒன்றின் நிமித்தம் மறந்துவிட முடியுமா?"

இப்படியெல்லாம் பேசி தாயின் இறுகிய மனத்தை திசை திருப்ப முயன்றான் சுரேஷ்...

பின்னர் நிலாவினியை தனியே அழைத்து சென்று அவளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறினான்...

"நிலாக்குட்டி நீ இனியும் சின்னப் பெண்ணாக இருக்கக் கூடாது...உனக்கு நீயே வழி சமைத்து காரியமாற்ற பழகிக் கொள்ள வேண்டும்...அம்மாவுக்கு தென்பாக இரு... உலகத்தில் என்னவெல்லாம் நடக்கின்றதென்பதை அம்மா

அறியாதபடி அவளை வீட்டுக்குள் பூட்டி வைத்ததன் பலனை... ஏன் தண்டனையை அப்பா இப்போதுதான் அனுபவிக்கின்றார்... உலகத்தை புரிந்து கொள்... பட்ட காலிலே படும் என்பார்கள். எமக்கு சோதனை ஒன்று வந்து விட்டது... இந்த சோதனையில் இருந்து மீள முடியாதவர்களாக நாமும் அம்மா போல இருப்போமாயின் நாம் இன்னும் பல சோதனைகளை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்கே தள்ளப்படுவோம்..."

நிலாவினியின் நெஞ்சு திக் திக் என்று அடித்தது... கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது... குடுகுடுப்பைகாரன் ஒருத்தன் சாமத்தில் வந்து கெட்ட ஜோசியம் கூறியது போல இருந்தது சுரேஷின் யோசனைகள்! நிலாக்குட்டி... நிலாக்குட்டி என்று என்னை வாய் ஓயாமல் அழைத்த அப்பா எங்கே...? என்னை மடியில் வைத்து செல்லம் கொஞ்சிய அம்மாவுக்கு என்ன நேர்ந்தது...? என் காதைப் பிடித்து திருகி சண்டைக்கு இழுக்கும் அண்ணா எப்படி பொறுப்புள்ளவன் ஆனான்? என்றெல்லாம் நிலாவினி எண்ணி எண்ணி ஏங்கி மனம் வெதும்பினாள்......

ராசம் சிற்றண்டியும் தேநீரும் கொணர்ந்து சுரேஷுக்கு பரிமாறினாள்...

"அன்ரி...இந்த நேரத்திலை உங்கள் உதவி எங்களுக்கு கிடைக்கா விட்டால் எமக்கு விமோசனமே இல்லாமல் போகும்..." என்று கூறி சுரேஷ் நன்றி பாராட்டினான்...

வைத்தியசாலையில் இருந்து புறப்படும் போது சுரேஷ் தனது நண்பர்களை சந்திக்கவே நினைத்திருந்தான்... ஆனால் தனது கவனயீனம் தனது நண்பர்களுக்கு பாதகமாய் அமைந்துவிடக் கூடும் என இப்போது எண்ணியதால் நேரே வைத்தியசாலைக்கு சென்றான். 'சிவில்' உடையில் அவனை பின் தொடர்ந்த இரு 'பொலிசார்' வைத்தியசாலையின் 'பொலிஸ்' பிரிவுக்கு சென்றனர்.

சிறிது நேரத்தில் பச்சை நிற 'பொலிஸ்' வாகனம் ஒன்று வைத்திய சாலையின் முன்பாக வேகமாக வந்து நின்றது...

****************************

மறுநாள் பத்திரிகைகளில் 'ஜோர்ஜ் தாக்குதலுக்குள்ளானதையிட்டு' முகாமையாளரின் மகன் கைது' என்று தலைப்புச் செய்தி வெளியாகியிருந்தது.

பத்திரியையைப் பார்த்த தர்ஷி அதிர்ந்தே விட்டாள்... எதனையும் எதிர்கொள்ளக் கூடிய ஆற்றல் படைத்த அவளால் அச்செய்தியை தாங்க முடியவில்லை என்றால் சுரேஷ் மேல் அவள் வைத்திருந்த காதலை என்னென்பதயூ

' ஓ...என் தெய்வமே என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்...ஒரு நல்ல நிலையில் உள்ள குடும்பத்திற்கு சோதனைகள் கொடுப்பதற்கு ஒரு அளவில்லையா?"

என்று வாய்விட்டு கூறி விம்மி விம்மி அழுதாள்...

வீட்டில் தாயும் மூத்த சகோதரிகளும் அவளது அழுகை ஓயும் மட்டும் பொறுத்திருந்தார்கள்...

பின்னர் மனோ அக்காவே முதலில் பேசத் தொடங்கினாள்...

"தர்ஷி வாழ்க்கை என்றால் பிரச்சனைகள் வராமல் இருக்குமா? ராஜநாதர் குடும்பம் எப்படி வாழ்ந்தார்கள்... இண்டைக்கு இந்த நிலைக்கு கடவுள் தள்ளியிருக்கிறார்... உனக்கு என்ன நடந்தது? எதுவுமே நடக்கவில்லை... சுரேஷை பிணையில் எடுக்க முயற்சிப்போம்... அவனுக்காக வழக்காடுவோம்... சுரேஷில் எங்களுக்கு மட்டும் அன்பில்லையா?"

மனோ அக்காவின் கருத்தையொட்டியே ராஜியும் சுரேஷை ஆதரித்து பேசினாள்...

ஆனால் மலர் தாய் ஸ்தானத்தில் இருந்து கொண்டு தடுமாறினாள்...

"அம்மா நீ வாயை மூடு" என்று மூத்தவர்கள் இருவரும் தாயை அடக்கிவிட்டார்கள்...

"அம்மா ...நான் ஒருக்கால் சுரேஷ் அன்ரியை அவாவின்ரை வீட்டை போய்ப் பார்க்க வேணும்" தர்ஷி கெஞ்சினாள்...

தாய் ஏதோ கூற முற்படவும்... அவளை தடுத்த மனோ... "அம்மா நான் தர்ஷியோடை போட்டுவாறன்" என்று கூறி தர்ஷியை தனது சைக்கிளிலேயே ஏற்றி நிலாகுட்டி வீட்டுக்கு அழைத்துப் போனாள்.

தர்ஷியை படலையடியிலேயே பாரத்துவிட்ட நிலாவினி... " அண்ணி..." என்று குரல் வைத்தபடியே தர்ஷியை ஓடிவந்து கட்டிப் பிடித்து அழுதாள்...

தர்ஷி தன்னை அவ் வீட்டு மருமகளாக ராஜநாதரும் சீதாவும் ஏற்றுக் கொண்ட பின்னரே தான் அவ் வீட்டுக்கு வரவேண்டும் என எண்ணியிருந்தாள்...

சுரேஷுடன் அவள் மணமகள் கோலத்தில் அவர்கள் வீட்டு வாசலில் வைக்கப்பட்ட கும்பத்தின் முன் நிற்பதும்... மணமக்களை ஆராத்தி எடுத்ததும் மெல்ல அடியெடுத்து வாயிற்படியில் வலது காலை மிதித்து செல்வதும் முன்னாட்களில் அவளது கற்பனையில் மலர்ந்த காட்சிகள்...

இன்றோ... சுரேஷ் சிறையில் வைக்கப்பட்டிருக்க... அவளது மாமனார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கண்ணீரும் கம்பலையுமாக அவ் வீட்டு முற்றத்தில் பரிதவித்து நின்றாள் தர்ஷி...

விதிக்கும் வீதிக்கும்தான் எப்படி ஒரு பொருத்தத்தை காணமுடிகின்றது!

ராஜநாதரை வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் சீதாவை பலர் வந்து அனுதாபம் விசாரித்து விட்டனர்...அவர்கள் காட்டிய பரிவால் சீதாவின் நிலைமை மேலும் மோசமானதேயொழிய வேறில்லை...மனதில் ஒரு வெறுமை அவளுள் குடி கொண்டிருந்தது. வாய் திறந்து எவருடனும் ஒரு வார்த்தைதானும் பேச மறுத்தாள்... ராஜநாதர் தான் இருக்கக் கூடியதாக இன்னுமொரு பெண்மேல் மனம் கொண்டுவிட்டார் என்பதை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை...அவள் ஒரு வீரியம் மிக்க பெண்ணாக இருந்திருந்தால் அந்த நிலையில் அல்லாமல் வேறு முடிவுக்கு தள்ளப்பட்டிருக்கலாம். ஆனால் அவள் சாது... எனவேதான் அவள் தனக்குத் தானே முடிவு கட்டிக் கொண்டிருந்தாள்...

தர்ஷி அழுதபடி தன்னை நோக்கி ஓடி வந்ததை கண்டதும் சீதாவின் புலன்கள் எல்லாம் புல்லரித்து உசாரடைந்தன. உடனேயே எழுந்து தர்ஷியை அணைத்தபடி அழத் தொடங்கினாள்...

அது வரையில் கரையாத அவள் மனம் இப்போ உருகி ஓடியது... தர்ஷியின் மார்பில் தன்னை ஒரு குழந்தையாக மாற்றி முகம் பதித்து மனம் திறந்து அழுதாள்...

"அன்ரி... நீங்கள் அழாதையுங்கோ... நாங்கள் இருக்கிறம்...சுரேஷின்ரை விசயத்தை எங்களோடை விடுங்கோ" என்று மனோ கூறியதும் தர்ஷியின் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் பனித்தது... தன் சார்பில் தனது சகோதரி பேசும் அளவிற்கு சுரேஷ் மேல் அவர்களுக்கு இருந்த பாசத்தை முதல் தடவையாக தர்ஷி நேரில் கண்டாள்...

சுரேஷின் பிரச்சனைகளை தாங்கள் பாரமெடுப்பதாக மனோ கூறியதைக் கேட்டதும் சீதாவுக்கு பெரும் ஆறுதலாகப் போய் விட்டது.

" இப்பத்தான் பிள்ளை எங்களுடைய காதிலை ஒரு நல்ல வார்த்தை ஏறியிருக்கு... எங்களுக்கு வருகிற சோதனைகளை என்னாலை நம்பவும் முடியேல்லை... அதுகளை எப்படி எதிர்கொள்ளுகிறதெண்டும் தெரியேல்லை..." என்று கூறி விம்மினாள்...

விறாந்தையிலே எல்லோரும் அமர்ந்து கொண்டார்கள். ராசம் தேநீர் தயாரித்து பரிமாறினாள்...

நிலாவினி தர்ஷியை வீட்டின் உள் மண்டபத்திற்கு அழைத்துச் சென்றாள்...

" அண்ணி...அண்ணா நேற்று இஞ்சை வந்தவர்... நடக்கப்போற எல்லாத்தையும் அறிஞ்சவர் போலையும் நடக்கப் போறவை எல்லாம் எங்களுக்கு சோதனைகளாய்தான் அமையும் எண்ட மாதிரியும் கவலையோடை கதைச்சவர்..."

" ஏன் நிலாக்குட்டி ஜோர்ஜை அடிச்சது ஆரெண்டு அண்ணை உன்னட்டை ஏதும் சொன்னவரே?"

" அதைப்பற்றி அண்ணை எதுவுமே சொல்லேல்லை. அண்ணையைப் பற்றி உங்களுக்கு தெரியும் தானே. எதிரிக்கு கூட ஒரு துன்பம் நேரக் கூடாதெண்டு நினைக்கிறவர்..."

" அப்ப ஜோர்ஜுக்கு அடிச்சது ஆராய் இருக்கும் எண்டு நீ நினைக்கிறாய்?" தர்ஷி வினாவினாள்.

" எனக்கெண்டால் அண்ணி... அண்ணேன்ரை 'பிரண்ட்ஸ்' தான் அடிச்சிருப்பாங்கள் எண்டு தோன்றுது..."

"மடைச்சி மடைச்சி... அப்படி ஒருத்தரிட்டையும் சொல்லிப் போடாதை... உண்மையிலை ஜோர்ஜை பிணை எடுத்தது கொண்ணேன்ரை 'பிரண்ட்ஸ்'... ஜோர்ஜ் பிணையிலை விடுவிக்கப்பட்டு வரேக்கை அவனை அடிச்சது மேட்டின்ரை ஆட்கள்... இப்ப புரிஞ்சுதா...?" தர்ஷி

"ஓம் அண்ணி... நீங்கள் சொன்னால் சரி..."

"வா வெளியிலை போவம் ..."

சீதாவுடனும் ராசத்துடனும் மனோ கதைத்துக் கொண்டிருந்தாள்...

அனைவரும் விடைபெற வாயிற் கதவை அண்மித்த போது மனோ சீதாவையும் நிலாவினியையும் ஓரமாக அழைத்துச் சென்று இரகசியமாக கூறினாள்...

"தர்ஷி சின்னப்பிள்ளை. அவளுக்கு நன்மை தீமை எது எண்டது விளங்காது... அம்மாவும் மூத்த சகோதரங்கள் நானும் ராஜியும் தான் முடிவெடுக்க வேணும்... தர்ஷியை இனிமேல் சுரேஷுக்கு மணப் பெண்ணாக மனதிலை வச்சிருக்காதையுங்கோ..."

சீதாவும் நிலாவினியும் இடிவிழுந்தது போலானார்கள்...

## 17

நிலாக்குட்டி ஒரு சமயம் தர்ஷி தனது அண்ணாவுக்கு மணப் பெண்ணாக வருவதனை விரும்பாது இருந்தாள்... அப்போ ராஜநாதர் குடும்பம் புகழின் உச்சியில் இருந்தது. இன்று அவளது அப்பா முகம் பார்த்து பேச முடியாதபடி படுகாயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்...அண்ணா சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்...

இன்றோ அண்ணி...அண்ணி என்று மனமுவந்து உரிமை கொண்டாட முற்பட்ட வேளையில் தர்ஷியும் ஓடோடி வந்தாள். தனக்கும் அம்மாவுக்கும் தர்ஷி உறுதுணையாக வந்து சேர்ந்துவிட்டாள்...மனத் தைரியசாலியான அவள் எமது குடும்பத்தின் அவலநிலையிலிருந்து எம்மை மீட்டு விடுவாள் என்று நம்பிக்கை கொண்ட நிலையில் மனோ கூறிவிட்ட வசனங்கள் நிலாவினியின் இதயத்தையே பிளந்து கொண்டு சென்றது...

'தர்ஷி சின்னப் பிள்ளை...அவளுக்கு நன்மை தீமை எது என்பது தெரியாது. அம்மாவும் மூத்தவளான நானும் ராஜியும் தான் இனி அவளது எதிர்காலம் பற்றி முடிவெடுக்க வேண்டும். தர்ஷியை இனிமேல் சுரேஷுக்கு மருமகள் ஸ்தானத்தில் வைச்சுப் பார்க்கிறதை விட்டு விடுங்கோ...!'

எவ்வளவு கொடூரமான வார்த்தைகள்...!

நிலாக் குட்டிக்கு தான் செல்லமாக வளர்க்கப்பட்டதன் தாக்கம் இப்போதுதான் தெரிந்தது...

சீதா எந்த நிலையில் இருந்தாளோ அதைக் காட்டிலும் மோசமான நிலைக்கே போய்விட்டாள்...

ராஜம்மாளிடமிருந்து தொலைபேசி அழைப்பு எதுவும் சீதாவுக்கு வரவில்லை. அது பற்றி சிந்திக்கும் நிலையிலும் சீதா இல்லை.

ஆனால் நிலாவினிக்கு ராஜம்மாள் நினைப்பு வந்தது. வீடு தற்போது இருக்கும் நிலை பற்றி ராஜம்மாள் அறிந்திருக்கலாம். தானாக தொலைபேசி எடுத்து

அநாவசியமாக மேலும் மேலும் தம்மை தாழ்த்திக் கொள்ள வேண்டுமா எனவும் அவள் நினைத்தாள்...அதே சமயம் அவர்கள் அறிந்துதான் எதை சாதித்து விடுவார்கள். ஒரு வேளை மனோ கூறியது போலவே எனது மகனை நிலாவினிக்கு மாப்பிளையாக பார்ப்பதை நிறுத்திக்கொள்ளுங்கோ என்று அம்மாவிடம் கூறிவிடவும் கூடும். அதனால் அம்மா மேலும் நோயாளியாவதே எஞ்சும் என நினைத்து நிலாவினி பேசாமல் இருந்து விட்டாள்.

ராசம்தான் இப்போ அவர்களுக்கான ஒரே துணை...சுரேஷ் சிறைக்குச் சென்ற பிறகு ராசம் கந்தவேளை தங்கள் மூவருக்கும் துணையாக தம்முடன் வந்து இரவில் தங்கும்படி கேட்டுக் கொண்டாள்.

கந்தவேள் வீட்டுக்கு தேவையான சகல பொருட்களையும் தானே கஷ்டப்பட்டு தனது சைக்கிளில் கட்டி வந்து சேர்த்தான்...நிலாக்குட்டி எவ்வளவு சொல்லியும் அவன் அவளது ஸ்கூட்டியை எத்தேவைக்கும் எடுக்கவில்லை...

ஆனால் நிலாவினியின் ஸ்கூட்டியை கழுவித்துடைத்து பக்குவம் பண்ணி வைத்தான்...

வளவில் நின்ற பல வாழைகள் குலை தள்ளியிருந்தன. நடுப்பழம் நிறமடித்த குலைகளை வெட்டி கழுவி வராந்தாவில் சரித்து வைத்தான். குலைகள் வெட்டிய வாழைகளும் வாழைச்சரைகளும் வளவை நிறைத்திருந்தன. அவற்றையெல்லாம் எடுத்துச் சென்று வெளியில் போட்டான். தேங்கிய குப்பைகளை கூட்டி தீயிட்டான்.

நிலாவினியை மற்றவர்களிடம் கடமைப்படும்படி ராஜநாதரோ சுரேஷோ ஒரு நாளும் வைக்கவில்லை. இப்போ கந்தவேள் தமது குடும்பத்திற்காக கஷ்டப்படும் நேரங்களிலெல்லாம் அவனை அவள் தடுத்தாள்...

"கந்தவேள் அண்ணை இதெல்லாம் அப்பாவோ அண்ணாவோ கூட செய்கிற வேலை இல்லை. ஒரு கூலியாளை போட்டால் செய்து போட்டு போவான்...நீங்கள் கஷ்டப்படுகிறதைப் பார்க்க எனக்கு மனம் பொறுக்குதில்லை."

"நிலாக்குட்டி கூலியாள் பிடிக்கிறதெண்டால் ஒருநாள் கூலி கொடுக்க வேணும். அது வரையிலை இந்த குப்பைகளை வளவிலை தேங்க விட்டால் அது சுகாதாரத்திற்கு கேடு..." என்று கூறி தானே கஷ்டப்பட்டு அனைத்து வேலைகளையும் செய்தான்...

அவன் அப்படி வேலை செய்வது வீட்டில் ஒரு சுறுசுறுப்பு தன்மையை கொண்டு வந்தது...

வெற்று உடம்புடன் கந்தவேளை முன்னர் எப்போதும் நிலாவினி பார்த்ததில்லை. நீளக் காற்சட்டை சேட்டுடன் அவனை பார்க்கும் போதெல்லாம் நிலாவினி அவனை ஒரு சிறு பயல் எனவே எண்ணியிருந்தாள்.

இப்போ தங்கள் வளவிலேயே வெற்று உடம்புடன் வியர்வை முத்து முத்தாக அவனது தோளிலும் நெற்றியிலும் சிந்த அடர்ந்த ரோமங்கள் நிறைந்த மார்புடன் அவனை காணும் போதெல்லாம் நிலாவினிக்கு இதயம் வேகமாக துடித்தது...

"அண்ணை நல்லாய் களைச்சுப் போட்டியள்... தேத்தண்ணி குடியுங்கோ..." என்று பல சந்தர்ப்பங்களில் நிலாவினி அவனை உபசரித்தாள்...

ராசமே அவனுக்கு சாப்பாடு போட்டு கொடுத்தாள்... பதினொரு மணிக்கு முன்பாக நிலாவினி சாப்பாட்டுப் 'பார்சலை' கட்டி எடுத்துச் சென்று சிறையில் உள்ள தனது அண்ணாவுக்கு கொடுப்பதற்காக ஓடோடி செல்வாள்...

அப்போதெல்லாம் சுரேஷ் தந்தையைப் பற்றி விசாரிப்பான். தாயின் நிலை பற்றி கவலைப்படுவான். நிலாவினிக்கு புத்திமதிகள் கூறுவான். கந்தவேள் வீட்டில் தங்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டதானது சுரேஷுக்கு கவலையை அளித்தது...

ஆனால் அதனை சுட்டிக் காட்டி அவன் நிலாவினிக்கு எதுவும் கூறவில்லை. வெள்ளை மனம் கொண்ட தனது தங்கை மனத்தில் அது தாக்கத்தை உண்டு பண்ணிவிடும் என அவன் எண்ணினான். நிலாவினி சிறு பிள்ளையேயாயினும் அவளது மனத் தைரியத்திலும் திறமையிலும் அவனுக்கு அபரிமிதமான நம்பிக்கை இருந்தது...

தலை நகரில் "சிலிடா" நிறுவனத்தால் நடாத்தப்பட இருந்த கணினி பயிற்சி நெறி ஒன்றிற்காக கந்தவேள் இரண்டு கிழமைகள் கடமை லீவில் செல்ல வேண்டி இருந்தது.

அன்று முழுவதும் கந்தவேள் ஓடி ஓடி வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி சேகரித்து வைத்தான்...வெட்டி வைத்த வாழைக் குலைகளை கடைகளுக்கு கொண்டு சென்று கொடுத்து அவைக்கான பணத்தை நிலா குட்டியிடம் ஒப்படைத்தான்...

தான் விடுமுறையில் நிற்கும் காலத்தில் நிலாவினி எப்படி எப்படி செயல்பட வேண்டும் என்பதனை தெளிவாக எடுத்துக் கூறினான்...

அன்று பகல் தானே சுரேஷுக்கு பார்சலை எடுத்துச் சென்றான்... ராஜநாதரையும் சென்று பார்த்தான்...

கந்தவேளின் துணையையும் இழந்து நிற்கும் தனது தாய் சகோதரத்திற்காக சுரேஷ் இப்போ வருந்தினான்.

ராசம் கந்தவேளின் அனைத்து உடைகளையும் அன்று காலையிலேயே கழுவி போட்டிருந்தாள்... மாலையானதும் அவற்றை ஸ்திரிக்கை செய்து பிரயாணப் பையில் மடித்து வைத்தாள்...இரவு புகை வண்டியில் அவன் பிரயாணம் செய்ய இருந்தான். தங்கள் அனைவருக்குமான சமையலை முன் கூட்டியே செய்து... கந்தவேளுக்கு ஒரு பார்சலைக் கட்டி ராசத்திடம் கொடுத்தாள் தர்ஷி...

சீதாவுக்கு பயணம் கூறிவிட்டு கந்தவேள் தனது பிரயாணப் பையுடன் வாயிற் கதவை நோக்கி நடந்தான்... ராசம் அவனது பையை தானே வாங்கிக் கொண்டு அவனுடன் இணைந்து போய்க் கொண்டிருந்தாள்... அவனுக்கு புத்திமதிகள் பல கூறினாள்...

நிலாவினி தயங்கித் தயங்கி அவர்கள் பின்னால் சென்றாள். வாயிலை அண்மித்ததும் ராசம் பையை மகன் கையில் கொடுத்து விட்டு அவனை உச்சி மோர்ந்தாள்... முந்தானைத் தலைப்பால் கண்களை துடைத்து கொண்டாள்...

முற்றத்தில் தயக்கத்துடன் நின்ற நிலாவினியை கந்தவேள் திரும்பிப் பார்த்தபடி கூறினான்...

"நிலாக்குட்டி நான் போட்டு வாறன்..."

நிலாவினியின் விழிகள் கண்ணீரால் நிறைந்துவிட்டது...!

****************************

சுரேஷ் சிறை சென்றதுடன் ராஜநாதரின் நிலைமை வைத்தியசாலையில் மிகவும் கவலைக்கிடமாக மாறியிருந்தது...

ஜோர்ஜ் தாக்கப்பட்ட காரணத்தால் ஜூலி கதிகலங்கிப் போய்விட்டாள். தனக்கும் ஆபத்து ஏற்படலாம் என்ற பயம் அவளைப் பிடித்துக் கொண்டதால் அவள் வைத்தியசாலைப் பக்கமே செல்லவில்லை.

தான் ஜூலியுடன் அன்பாக இருந்த காரணத்திற்காக தனக்கு நேர்ந்துவிட்ட கதியை எண்ணுகையில் அவரது உள்ளம் பதறியது...

ஜூலியை பார்க்காமல் அவளது குரலைக் கேட்காமல் இருப்பதென்பது அவரால் இயலாத காரியமாக இருந்தது...

ஜூலியையும் தன்னையும் திட்டமிட்டு எவரோ பிரித்துவிட்டதான வஞ்சகத் தன்மை மேல் அவருக்கு கோபம் ஏற்பட ஏற்பட ஜூலியின் நினைவும் வேதனையும் அதிகரித்து வந்தது. ஜூலியை மற்றொரு பிறவியிலன்றி இப் பிறவியிலேயே அடைய வேண்டும் என்ற தாகம் அவருள் அதிகரித்து வந்தது...

சில கட்டில்கள் தொலைவில் ஜோர்ஜ் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தான். ஜூலி அவனைப் பார்க்க வரும் வேளையிலாவது தன்னை சந்திக்க மாட்டாளா என்று அவரது மனம் நப்பாசைப்பட்டது...

காயங்கள் சிறிது ஆறிவருவதால் இழை போடப்பட்ட இடங்களில் சுள்ளென்ற வலி உண்டானது. அன்று "சேர்ஜன்" முன்னிலையில் கட்டுக்கள் அவிழ்த்துப் பார்க்கப்பட்டன. முக காயங்கள் ஆறிவிட்டிருந்தன... ஆனால் துரதிர்ஷ்டவசமாக முகத்தில் போடப்பட்டிருந்த இழைகள் அவரது முகவெட்டை (Feature) முற்றாக மாற்றிவிட்டிருந்தன. தலையில் ஒரு புண் சீழ் பிடித்திருந்தது. இரத்தத்தில் 'குளுக்கோசின்' அளவு பரீட்சிக்கப்பட்ட போது பொறி 11.5 என காட்டியது...

ராஜநாதர் இடிந்து போய்விட்டார்...

அவர் தனது தேகசுகத்தை முன்னேற்றிக் கொண்டு தலைநகர் சென்று வங்கி சம்பந்தப்பட்ட விசாரணைகளுக்கு முகம் கொடுக்க எண்ணியிருந்தார். இப்போ நீரிழிவு நோய்க்கு வைத்தியம் செய்ய வேண்டிய நெருக்கடி ஒரு புறம்... நீரிழிவு நோய் இருப்பதனால் தலையில் சீழ் பிடித்திருக்கும் காயத்தை மாற்றுவதில் உள்ள காலதாமதம்... சரியான பராமரிப்பின்மை...

அத்தனை கவலைகளுக்கும் மேலாக நிலாவினி அவரை பார்க்கவரும் நேரங்களில் வீட்டில் உள்ள கஷ்ட நிலை பற்றி சிறிது சிறிதாக சொல்லத் தொடங்கியிருந்தாள்.

கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கான சாப்பாட்டை தயாரித்து எடுத்துவரும் பொறுப்பு நிலாவினிக்கு ஏற்பட்டது... ஆனால் நீரிழிவு நோய் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலை ஆகாரத்தையே அவர் சாப்பிட வேண்டும் என வைத்தியபீடம் தெரிவித்து விட்டது.

எனினும் நிலாவினி பகல் நேரத்தில் அவருடன் இருந்து அவருக்கு ஒத்தாசை புரிய தொடங்கியிருந்தாள்...

அன்று நிலாவினி மதிய உணவை அவருக்கு ஊட்டிக் கொண்டிருக்கும் போது அவர்கள் முன் ஜோர்ஜ் வந்து நின்றான்... நிலாவினிக்கு அவனை யார் என்று தெரியாது... எனவே தந்தையை நிமிர்ந்து பார்த்தாள்...

ராஜநாதர் அவனைப் பார்த்து ஒரு கணம் ஆச்சரியப்பட்டாலும் அவனுடன் பேசினார்...

" **ஜோர்ஜ் ...நீ எப்படி இருக்கிறாய்...?"**

" ஐயா... நான் இறந்திருக்கலாம்... ஏன் தப்பியிருக்கிறேன் என்பதற்காகத் தான் நான் இப்போ அழுதுகொண்டிருக்கின்றேன்..."

" ஏன், ஜுலி உன்னை பார்க்க வரவில்லையா?"

"அவள் என்னை பார்க்க முடியாதபடி இந்த உலகம் செய்து விட்டது... ஆனால் அவள் என்னில் கரிசனையாக இருக்கிறாள்... உங்கள் காயங்கள் இன்னமும் ஆறவில்லை... ஆனால் எனது காயங்கள் ஆறிவிட்டன. அதற்கு காரணம் ஜூலி எனக்கு அனுப்பி வைத்த 'பிறண்டி' போத்தல்கள் தான்... நான் எனது கவலைகளை மறந்தேன். உடல் வேதனைகள் எனக்கு தெரியவில்லை. காயங்களும் வேகமாக மாறிவிட்டன. நாளைக்கு எனக்கு துண்டு வெட்ட உள்ளார்கள்"

ஜூலி என்று அவன் குறிப்பிட்டு அவளை பாராட்டி கதைத்ததும் ராஜநாதரின் கண்கள் கலங்கின. எந்த தகுதியுமற்ற அவளது கணவன் மேல் அவள் எவ்வளவு அக்கறை எடுத்திருக்கிறாள்... அனைத்து தகுதிகளையுமுடைய என்னை சீதா எப்படி உதாசீனம் செய்து விட்டாள். ஜூலியின் துடி துடிப்பு... வேகம்... தன்னம்பிக்கை இவற்றில் நூறிலொன்றாயினும் சீதாவிடம் தேறுமா?

ராஜநாதர் பெருமூச்சு விட்டார்... பின்...

"நீ என்னை அடிக்கவில்லை... அதே போல் எனது மகன் உன்னை பழிவாங்கவில்லை... ஜோர்ஜ் நீ ஏற்றுக் கொள்கின்றாயா?"

ஜோர்ஜ் உரத்து குரல் எழுப்பி சிரித்தான்... நிலாவினி தந்தையுடன் ஒட்டிக் கொண்டாள்...

"ஐயா... எனக்கு இந்த உலகத்திலை என்ன நடக்கிறதென்பது தெரியாமல் எல்லாமே நேரிடுகின்றன... நான் ஒருத்தியை காதலித்தேன்... அவள் எனக்கு மகன் ஒருவனை பெற்றுக் கொடுத்துவிட்டு தொலைந்துவிட்டாள்... ஜூலியை மணந்து கொண்டேன். அவள் என்னில் மட்டும் திருப்தி கொண்டு கட்டுப்படாதவளாக கைமாறி சென்றாள்... தொழிலுக்காக அலைந்தேன். தொழிலை பெற்றுக் கொண்டேன்.அந்த தொழில் கூட கை நழுவி போய்விட்டது... நான் என்ன நினைத்து என்ன நடை பெறுகின்றது?" கேட்டுவிட்டு ஜோர்ஜ் விக்கி விக்கி அழுதான்...

பின் அவரது கேள்வி ஒன்றுக்காக காத்திருக்க வேண்டிய தேவை ஒன்று இருப்பதனை அறியாதவனாக வேகவேகமாக தனது கட்டிலை நோக்கி போனான்... போன அதே வேகத்தில் ராஜநாதரை தாக்கி விடுவதற்காக ஆவேசம் கொண்டு வருபவன் போல மீண்டும் அவரை நோக்கி வந்தான்...

"ஐயா... உங்களுக்காக நான் எனது மனைவியை விட்டுக் கொடுத்திருக்கிறேன்... உங்களுக்காக எனது தொழில் பறிபோயிருக்கிறது... உங்களுக்காக எனது உயிரை எடுக்க முயற்சித்திருக்கிறார்கள்... இனியும் எனது பாதையில் குறிக்கிட வேண்டாம்... அப்படி குறிக்கிட்டால் நான் கொலைகாரனாகவும் தயங்கமாட்டேன்..."

அப்படி எச்சரித்த அதே வேகத்தில் தனது கட்டிலை நோக்கி திரும்பிச் சென்று விட்டான்.

ராஜநாதர் நடுநடுங்கி விட்டார்... நிலாக்குட்டி "அப்பா... அப்பா... வாங்கப்பா இஞ்சை இருக்க வேண்டாம்" என அழத் தொடங்கினாள்...

தனது செல்ல மகள்... விம்மி விம்மி அழுவதை பார்க்க ராஜநாதரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... அதே இடத்தில் சீதா நின்றிருந்தால் அவர் மீதான அன்பு காரணமாக மயக்கமுற்று விழுந்திருப்பாள்... தனது குடும்பம் தன் மேல் வைத்திருக்கும் பாசத்தை அக்கணம் அவர் ஒரு மின்னல் அடித்தது போல உணர்ந்தார்...!

## 18

ராஜநாதர் நிலாவினியை சமாதானம் பண்ணி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்...

நடந்த சம்பவம் பற்றி அவளுக்கு தாயிடம் எதுவும் கூறத் தோன்றவில்லை. ஆனால் தந்தையிடம் அவனை அழைத்துச் செல்ல பகீரதப் பிரயத்தனம் செய்தாள்...

சீதாவோ யாரிடமிருந்தும் எது உண்மை எது பொய் என்று விசாரித்தவள் அல்ல. அவள் பத்திரிகைச் செய்திகளை மட்டுமே படித்திருந்தாள். அந்த பத்திரிகைச் செய்திகள் அனைத்துமே உண்மையாக இருக்கமாட்டா என்பது அவளுக்கு தெரியாதல்ல. ஆனால் அப்படி பத்திரிகைச் செய்தி வரும்படி நடந்து கொண்டதற்கு முழுப் பொறுப்பும் தனது கணவனே என ஆணித்தரமாக அவள் நம்பினாள்...!

வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்து பெண்களுமே நளாயினிகளாக இருப்பார்கள் என எதிர்பார்க்க முடியுமா...?!

அதிலும் சீதா கடந்து போன இருபத்தைந்து வருடங்களாக கட்டுக் கோப்பான ஒரு குடும்பத்திற்கு தலைவியாக இருந்து வாழ்ந்தவள்... ராஜநாதர் அவரது இளமைக் காலத்திலே கூட ஒரு பெண்ணை தலைநிமிர்ந்து பார்த்தார் என வரலாறு கிடையாது...

தனது தொழிலில் கஷ்டப்பட்டு முன்னேறி முகாமையாளராக பதவியுயர்வு பெற்று வந்து விட்ட இந்த ஒரிரு வருடங்களில் அவருக்கு நேர்ந்தது என்ன?

சீதா தனது வைராக்கியத்திலிருந்து ஒருபடி கூட கீழே இறங்கி வரவில்லை...

நிலாவினி மறுநாள் தானே தனித்து சிறைச்சாலைக்கும் வைத்திய சாலைக்கும் சென்றாள்.

வைத்தியசாலையில் ஜோர்ஜ் துண்டு வெட்டப்பட்டு வெளியேறியிருந்தான். அது அவளுக்கு பெரும் ஆறுதலாக போய்விட்டது...

நிலாவினியை கண்டதும் ராஜநாதர் கேட்ட முதல் கேள்வி... "அம்மா வரவில்லையா?" என்பதே!

சீதா ராஜநாதர் அடிபட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முதல் நாள் அவரைப் பார்க்க வந்தவள் வந்தவள்தான்... மறுநாள் பத்திரிகையில் செய்தியை பார்த்ததன் பின்னர் இன்றுவரை அவள் அவரை பார்க்க வரவில்லை.

அதே போன்றே ராஜநாதரும் இன்று வரை சீதா ஏன் வரவில்லை என்பதை ஆராயவில்லை...

ஆனால் நேற்றைய தினம் ஜோர்ஜின் மிரட்டல் காரணமாகவோ என்னமோ ராஜநாதர் ஜலி பக்கம் மட்டும் இருந்த தனது சிந்தனையை முதற்றடவையாக சற்று திசை திருப்பியிருந்தார் என்றே கூறமுடியும்.

நிலாவினி தாயின் பரிதாப நிலை பற்றி அவருக்கு சிறிது சிறிதாக விளக்கினாள்... தர்ஷி சார்பில் மனோ தெரிவித்திருந்த கருத்துக்களையும் மறைக்காமல் கூறினாள்... ராஜநாதரின் மனம் முற்றாக சோர்ந்து விட்டது!

நிலாவினி வீட்டிற்கு வந்த போது ராசம் அவளிடம் ஒரு வெள்ளை தபால் கவரை கொடுத்தாள்... நிலாவினிக்கு வெளித் தொடர்பு என்று இருப்பது அவளது உயர் தொழில்நுட்பக் கல்லூரியுடன் மட்டுமே. எனவே அங்கிருந்து ஏதாவது அழைப்பிதழ் வந்திருக்கலாம் என்று நினைத்தபடியே கவரை திறந்தாள்...

அழகான இரு ரோஜா மலர்கள் இதயத்தை பின்னணியாக கொண்டு கவர்ச்சி காட்டின...!

ஓ... இன்று நிலாக்குட்டியின் பிறந்த நாள்...! கந்தவேள் அதனை நினைவில் வைத்து அவளுக்கு வாழ்த்து அனுப்பியிருந்தான்.

நிலாவினி நிமிர்ந்து பார்த்தாள்... ராசம் போய்விட்டிருந்தாள். அவ் வாழ்த்து மடலை அவள் தனது தலையணையின் கீழ் வைத்து பாதுகாத்தாள்... அடிக்கடி கட்டிலில் சென்று படுத்தாள்... கட்டிலில் முகம் குப்புற படுத்தபடி அந்த வாழ்த்து மடலை எடுத்து திரும்பத் திரும்ப பார்த்தாள்...

****************************

மறுநாள் நீதிமன்றில் ஜோர்ஜ் தாக்கப்பட்ட விவகாரம் விளக்கத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது...

ஜோர்ஜ் பிணையில் விடுவிக்கப்பட்ட சமயம் அவனுக்காக வாதாடிய சட்டத்தரணியையே ஜூலி பெரும் பணம் கொடுத்து அமர்த்தியிருந்தாள்...

சுரேஷுக்காக சிறந்த சட்டத்தரணி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தும் சுரேஷுக்கு பிணை மறுக்கப்பட்டது...!

ராஜநாதர் தாக்கப்பட்ட விவகாரம் உணர்ச்சிவசப்பட்ட தன்னிலை மறந்த தனி ஒருவனால் மேற்கொள்ளப்பட்டதென கருத இடமிருந்தது. அதே சமயம் ஜோர்ஜை திட்டமிட்டு நால்வர் எவ்வித நேரடி பகையுமின்றி தாக்கியிருந்தனர்... அந்த வாதத்தை நீதவான் ஏற்றிருந்தார்...!

சுரேஷ் தனக்கு பிணை மறுக்கப்படும் என எவ்விதத்திலும் எதிர்பார்க்க வில்லை... தான் வீடு சென்று தாயையும் தங்கையையும் பார்ப்பேன் என்ற நம்பிக்கையில் வந்தவனுக்கு திரும்பவும் சிறை செல்ல வேண்டி வந்தது பெரும் தாக்கத்தை கொடுத்தது...எவ்வித குற்றமும் செய்யாத நிலையில் கைது செய்யப்பட்டமை... பின்னர் நீதிக்கு புறம்பாக பிணை மறுக்கப்பட்டமை ஆகியன சுரேஷின் மனதில் அதிகளவு கோபத்தை ஏற்படுத்தியிருந்தது...

ஏனைய சிறைக் கைதிகளுடன் வாக்கு வாதங்களை வளர்த்துக் கொண்டான்... அவனுடனான பகைமை வளர வளர நிலாவினி அவனைச் சென்று பார்க்கும் சந்தர்ப்பங்கள் காவலதிகாரிகளால் தடை செய்யப்பட்டன.

சுரேஷை அடிக்கடி சந்தித்து பேசுவதால் நிலாவினிக்கு கிட்டிய அன்பும் ஆதரவும் வழிகாட்டலும் அவளுக்கு அறவே கிடைக்காமலே போய்விட்டன...

'சிலிடா' நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கணினி பயிற்சியை முடித்துவிட்டுகந்தவேள் வீடு திரும்பினான். நிலாவினி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்... அந்த இரு கிழமைகளிலும் நடந்து முடிந்துவிட்ட சம்பவங்களை கந்தவேளுக்கு எடுத்துக் கூறினாள்...

ராஜநாதர் நீரிழிவு நோய்க்கு உட்பட்டதால் அவரை சுகமாக்கி வீட்டிற்கு அழைத்துவருவதில் உள்ள காலதாமதம்... சுரேஷ் சிறை அதிகாரிகளுடன் முரண்பட்டு நிற்பதால் அவனை வெளியே கொண்டு வருவதில் எதிர் நோக்கப்படும் சிக்கல்கள்...

அடுத்து என்ன செய்வது என்று சிந்திப்பதற்கு கந்தவேளைத் தவிர அந்த வீட்டில் நிலாவினிக்கு யார்தான் துணை இருக்கிறார்கள்...?!

கந்தவேள் தலைநகரிலிருந்து திரும்பிய பின்னர் கம்பி வலையினால் ஓரளவு பெரிய குருவிக் கூட்டை தனது முயற்சியில் அமைத்தான். அதில் இயற்கை வனப்பை உண்டு பண்ணி பலவித "லவ்பேட்ஸ்" பறவைகளை கொண்டுவந்து வளர்க்கத் தொடங்கியிருந்தான்...

நிலாக்குட்டி அவற்றிற்கு உணவு ஊட்டிய படியே பலமணிநேரத்தை செலவு செய்தாள்...

அவை எந்நேரமும் ஒன்றினை மற்றொன்று துரத்துவதும் ஒன்றின் முதுகில் மற்றொன்று ஏறுவதும் பிறிதொன்று அவற்றை விரட்டுவதுமாக அக் கூடே பெரும் அட்டகாசமாக இருந்தது.

கந்தவேள் அலுவலக நேரம் தவிர்ந்த நேரங்களில் வீணே பொழுதை செலவிடுபவன் அல்ல. நிலா குட்டியின் வளவில் உள்ள வேலைகள் அனைத்தையும் தானே பொறுப்பெடுத்து விட்டவன் போல கஷ்டப்பட்டான். அதனால் வாழைகள் பசளையிலும் நீரிலும் தேங்கி சடாய்த்து வளர்ந்தன...

பொழுதுபடும் வரைக்கும் வேலை செய்த பின்னர் கிணற்றில் நீர் அள்ளி குளித்து உடை மாற்றி வந்து முற்றத்து மாமரத்தின் கீழ் உள்ள மரக் குத்தி ஒன்றில் அமர்ந்து கொள்வான் அவன்.

அன்று நிலாவினி தனது ஸ்கூட்டியில் நூலகம் சென்று திரும்பிய போது முற்றத்து மாமரத்தின் பெரிய கிளையொன்றில் கந்தவேள் அவளுக்காக ஊஞ்சல் ஒன்று கட்டியிருந்தான்.

ஸ்கூட்டியின் வெளிச்சத்தில் அதனைக் கண்ட நிலாவினி ஓடிவந்து அதில் ஏறிக் கொண்டாள். முதலில் மெதுவாகவும் பின்னர் வேகமாகவும் ஆடினாள்...

கீழே மரக்குற்றியில் அமர்ந்திருந்த கந்தவேளுக்கு நிலாவினியின் மகிழ்ச்சி இதத்தைக் கொடுத்தது.

ஊஞ்சலின் வேகத்திற்கு அவளது அரைப் பாவாடையால் தாக்கு பிடிக்க முடியாதாகையால் ஊஞ்சல் மேலெழும் சமயங்களில் அவளது பெருந்தொடை கந்தவேளை கிறங்க வைத்தது.

படிப்படியாக ஊஞ்சலின் வேகத்தை குறைத்த நிலாவினி மரக்குற்றியில் அமர்ந்திருந்த கந்தவேளுக்கு நன்றி கூறினாள்... பின்னர்...

"உங்கடை கணினிப் பயிற்சி எல்லாம் எப்படி இருந்தது?" என வினாவினாள்.

"கணினி பயிற்சிக்கு பல திணைக்களங்களிலிருந்தும் அலுவலர்கள் வந்திருந்தவை. "பேறோல்" சம்பந்தப்பட்ட ஒரு பயிற்சி நெறியே அது... பதினான்கு நாட்கள் ஒரு குடும்பம் மாதிரி ஆண்களும் பெண்களும் தங்கியிருந்ததாலை சில காதல் விவகாரங்களும் அங்கை நடக்கத்தான் செய்தது..."

கந்தவேள் பெருமூச்சு விட்டபடி கூறினான். நிலாவினி வினாவினாள்... " காதல் விவகாரம் எண்டால் எனக்கு விளங்கேல்லை... என்ன சொல்லுறியள்...?"

"காதல் விவகாரத்தை என்னவென்று சொல்ல ஏலாது நிலாவினி... விளங்கிக் கொள்ள முடியாதபடி இருக்கிறதுதான் அதின்ரை தனித்தன்மை"

"காதல் ஏன் உருவாகுது...?" நிலாவினி அப்பாவித்தனமாக வினாவினாள்.

"அது ஒரு கவர்ச்சி... ஒரு பெண்ணின்ரை அழகை ரசிப்பவனுக்கு காதல் உண்டாகும். அவள் தன்னுடன் நெருங்கி பழகி வந்தால்... தனக்கு உதவிகள் செய்தால்... தியாகங்கள் செய்தாலெல்லாம் காதல் உண்டாகும். அதே போல் ஒரு பெண்ணுக்கும் மறுவளமாக ஒரு ஆண்மேல் காதல் உண்டாகும்."

"கந்தவேள் அண்ணை சொல்லுறதொண்டும் எனக்கு விளங்கேல்லை..." என்று அனுங்கியபடியே நிலாவினி அந்த இடத்தை விட்டு நீங்கிச் சென்றாள்.

காதல் விவகாரம் என்கின்ற புரிந்து கொள்ள முடியாத ஒரு தன்மையில் தானும் தத்தளிக்கத் தொடங்கியுள்ளேனா என எண்ணி நிலாவினி மறுகினாள்.

இரவில் சீதாவின் அருகாக நிலாவினி சென்று படுத்தாலும் முன்னர் போல மகளை அவள் அணைத்துக் கொள்ளாது சூன்யத்தில் மூழ்கி இருந்தாள். அதனால் நிலாவினி பல நாட்களாக தனது அறையில் தூங்கத் தொடங்கி யிருந்தாள்.

கந்தவேள் வராந்தாவில் படுத்து வந்தான்.

சில காலமாக நிலாவினியின் துயரங்களுக்கெல்லாம் கந்தவேள் வடிகாலாக இருந்ததனால் நிலாவினி வராந்தாவில் படிக்கட்டு ஓரமாக அமர்ந்திருந்து கந்தவேளுடன் கதைகள் பேசிக் கொண்டிருப்பாள். கந்தவேள் தூங்கியதும் அவள் தனது கட்டிலில் சென்று படுத்து விடுவாள்.

நிலாவினி சாமம் சாமமாக கந்தவேளுடன் அமர்ந்திருந்து கதைப்பதை அறிந்து தடுக்கும் நிலையில் சீதா இல்லை. ராசத்திற்கு மகனினதும் நிலாவினியினதும் விவகாரத்தில் குறிக்கிட வேண்டிய அவசியம் கிடையாது! எனவே ராசம் சீதாவின் அறையில் அவளின் கட்டிலின் அருகாக தூங்கி வந்தாள்...

அன்றைய தினம் பத்து மணி வரைக்கும் நிலாவினி கந்தவேளுடன் வராந்தாவில் கதைகள் பேசிக் கொண்டிருந்தாள். திடீரென எங்கிருந்தோ குளிர்காற்று ஒன்று வீசியது. காற்று சிறிது சிறிதாக அதிகரித்தது. அதே வேகத்தில் மழை சோவெனப் பெய்து வராந்தாவை நனைத்தது.

நிலாவினி கந்தவேளை துயிலெழுப்பி தனது அறைக்கு இழுத்துச் சென்றாள்... ஊழிக் காலமோ இது என்று எண்ணும்படி காற்றும் மழையும் மூசி மூசி இறைத்தன. காற்றில் அடிபட்டபடி இருந்த கதவொன்றை நிலாவினி தாழ்பாள் போட்டு மூடினாள்... மறுகதவு திறந்திருந்தது...

கந்தவேளை தனது கட்டிலில் படுக்க வைத்து போர்வை ஒன்றையும் கொடுத்த நிலாவினி...

"வெளியிலை புயல் காற்று வீசுது... நீங்கள் இஞ்சை படுங்கோ" என்று கூறிவிட்டு பூட்டாத நிலையிலிருந்த மறுகதவையும் வெளியே நின்று சாத்திவிடமுயன்றாள்...

"ஏய் நிலாக்குட்டி..." என கந்தவேள் அடிக் குரலால் அழைத்தது அவளுக்கு கேட்காமல் இருந்திருக்க நியாயமில்லைத் தான்.

ஆனால் அவள் தாயின் அறைக்கு சென்று கட்டிலில் ஏறி தாயை அணைத்தபடி படுத்துக்கொண்டாள்.

## — 19 —

காதல் என்பது கவர்ச்சியில் ஏற்படுவது என்ற பொருள்பட கந்தவேள் நிலாவினிக்கு கூறியபோது அவள் அதனை ஏற்றுக் கொள்ளாதவளாக விலகிச் சென்றது கந்தவேளை சிந்திக்கத் தூண்டியது.

நிலாவினியின் மனத்தில் கந்தவேளுக்கு இடமொன்று ஏற்பட்டு வந்ததா என்பதை அனுமானிக்கக் கூடிய வகையில் எந்த ஆதாரமும் வெளிப்படையாக இருக்கவில்லை... கந்தவேள் அவளது குடும்பத்திற்காக செய்து வரும் உதவிகள் அவன் மேல் நிலாவினிக்கு ஒரு அனுதாபத்தை ஏற்படுத்தியது ஏதோ உண்மைதான்.

முன்னைய தினம் இரவு வராந்தாவில் மழையில் நனைந்தபடி படுத்திருந்த கந்தவேளுக்கு நிலாவினி தனது அறையை கொடுத்தது அவன் மீதான அனுதாப மேலீட்டினால் அன்றி வேறில்லை. அதற்கு அப்பால் சென்று தன்னை அழித்துக் கொள்ளும் அளவில் அவள் இருக்கவில்லை.

ஆனால் கந்தவேளின் நிலைமை அப்படி இருக்கவில்லை. சிறுவயதிலிருந்து ஓடிப்பிடித்து ஒன்றாக விளையாடிய நிலாக்குட்டி மேல் அவனுக்கு அளவு மீறிய அக்கறையும் அன்பும் இருந்தது. எனது பிள்ளையின்ரை உடலிலை இனிமேல் உனது கை படக்கூடாது என்று நிலாவினியின் தாய் எச்சரித்த சமயம் நிலாவினி பருவமடைந்திருந்தாளாயினும் கந்தவேள் சிறுவனாகவே இருந்தான். எனவே நிலாவினியுடன் தான் சேர்ந்து விளையாடுவதை அவளது தாய் விரும்பவில்லை என்று எண்ணியே அச் சமயம் அவன் வருந்தினான். ஆனால் அவனது பருவ வளர்ச்சியில் அந்த வசனத்திற்கான பொருளை அவன் விளங்கிக் கொண்டபோது நிலாவினி என்னவளாக வேண்டும், அவளை தொடும் உரிமை எனக்கு உண்டாக வேண்டும் என தீர்மானித்து அவன் தனது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தான். கல்வி மூலம் தான் உயர்நிலை ஒன்றிற்கு வந்து நிலாவினியை பெண் கேட்டு செல்ல வேண்டும் என்ற வைராக்கியத்துடன் அவன் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

இருப்பினும் யுத்தம் தொடர்ந்தமை காரணமாக வன்னியிலிருந்தே கல்வி பயில நேரிட்டமை... தந்தை குடும்பத்தை நீங்கி சென்றமை... சகோதரியின்

பொருத்தமற்ற விவாகம் ஆகியன அவனது கற்பனையை ஒரு கட்டத்தில் சிதறச் செய்திருந்தன...

பட்டமரம் ஒன்று மழையில் துளிர்விடுவது போல அவனுக்கு கிடைத்த சிறு நியமனம் அவனை நிலாவினி வாழ்ந்து கொண்டிருக்கும் திருகோணமலைக்கு வரவழைத்தது...

இப்போதோ ராஜநாதர் குடும்பத்தின் வீழ்ச்சி அவனுக்கு அவர்கள் வீட்டில் இடம் ஒதுக்கி விட்டது!

தொடர்ந்து பெய்த மழையில் வளவில் கந்தவேளால் பசளை தாழ்க்கப்பட்ட பூமரங்கள் உட்பட பயன்தரு மரங்களெல்லாம் சடாய்த்து வளர்ந்து விட்டிருந்தன...

முதல் நாள் இரவு சீதாவை படுக்கையில் வைத்தே விஷ ஜந்து ஒன்று தீண்டி விட்டது... மாலை வரை விஷம் இறங்காததுடன் கடுப்பும் அதிகரித்துக் கொண்டே வந்தது. கந்தவேளை நிலாவினிக்கு காவலுக்கு அமர்த்திவிட்டு ராசம் சீதாவை சற்றுத் தொலைவிலிருந்த விஷகடி வைத்தியரிடம் அழைத்துச் சென்றிருந்தாள்.

நிலாவினி சிறிது காலமாக தொலைக்காட்சி பார்ப்பது, வானொலி கேட்பது போன்றவற்றை நிறுத்தியிருந்தாள். ஊஞ்சலில் அமர்ந்தபடி அசைவது அவளுக்கு அவளது மனத்திற்கு பிடித்தமாக இருந்தது...

அப்போது கந்தவேள் அமைத்துக் கொடுத்திருந்த கூட்டுக்கு முன்பாக அமர்ந்திருந்தபடி நிலாவினி 'லவ்பேர்ட்சின்' அட்டகாசங்களை தனியே பாரத்துக் கொண்டிருந்தாள். அதுவே அவளது பிரதான பொழுது போக்காகவும் இருந்ததென்று சொல்ல வேண்டும்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த கந்தவேள் அவள் அருகே அமர்ந்தபடி அந்த பறவைகள் என்ன செய்கின்றன என்பதை தானும் அவளுடன் சேர்ந்து அவதானிக்கத் தொடங்கினான்...

அவை ஒன்றை ஒன்று துரத்தின...கிளைக்கு கிளை தாவின. ஒன்றுடன் ஒன்று அலகால் மோதிக் கொண்டன...ஒருபறவை பதிந்து கொடுத்தது. மற்றொன்று

அதன்மேல் ஏறி மறுபக்கம் இறங்கியது. கீழே இருந்த பறவை சிறகுகளை விரித்து அசைத்து ஏதோ சைகை காட்டியது. அதை புரிந்து கொண்ட மற்றொரு பறவை முன்னைய பறவைக்கு சவாலாக அங்கு வந்து சேர்ந்தது. ஒன்றை ஒன்று துரத்தின. சிறகுகளை அசைத்த பறவை காவலிருந்தது... துரத்திய பறவை ஒன்று முந்திக் கொண்டது...

அந்த காட்சிகளை ஒரு கணவன் மனைவியால் மட்டும் தான் சேர்ந்து பார்த்து இரசிக்க முடியும் போங்கள்!

நிலாவினி கூச்சத்துடன் எழுந்து... "நான் குளிக்கப்போகின்றேன்"... என்று கூறிவிட்டுப் போய்விட்டாள்.

தனது அறைக்குச் சென்ற நிலாவினி குறுக்குக் கட்டாக ஒரு வுங்கியை மார்பில் கட்டிக் கொண்டாள். அலம்ப வேண்டிய உடுப்புக்களுடன் மாற்று உடுப்புக்களையும் எடுத்தவள் நேரே குளியலறைக்குச் சென்றாள்.

குளித்தபடியே துவைக்கவேண்டிய ஆடைகளுக்கு சவர்க்காரம் தேய்த்து பின்னர் நீரில் நன்றாக அலம்பி எடுத்துக் கொண்டாள்.

வீட்டின் பின் கதவால் வெளியேறினால் துணிகள் விரிக்கும் கொடி... வுங்கியை மாற்றுவதற்கு முன்பாக ஈரத்துணிகளை விரித்துவிட்டால் மாற்றுடையில் ஈரம்பட மாட்டாது. எனவே இடது கையில் துவைத்த ஆடைகளுடன் வெளியே வந்தவள் ரோஜா செடிகளுக்கு மேலால் கட்டப்பட்ட கயிற்றுக் கொடியை பற்றி முதல் ஆடையை போடுவதற்காக கல்லொன்றில் காலை வைத்த போது கல் இடறுண்டதால் பற்றையாக வளர்ந்திருந்த உயரமான ரோஜா செடிகளில் இருந்த முட்களில் அவள் மேனி சாய்ந்தது... விரிப்பதற்காக இருந்த ஆடைகள் கைநழுவி முட்செடி மேல் வீழ்ந்தன.

ஈர மேனியில் ஒட்டிக் கொண்டிருந்த வுங்கி நன்றாக முட்களில் மாட்டிக் கொண்டு விட்டது. நிலாவினி மெதுவாக முட்களிலிருந்து த்ன்னை மீட்டுக் கொள்ள முயற்சி செய்தாள்... அவள் கைகளை அப்படி இப்படி அசைக்கும் ஒவ்வொரு சமயமும் வுங்கி மேலும் மேலும் முட்களில் மாட்டிக் கொண்டது.

நிலாவினி பயந்து விட்டாள்........ஒரு நிலையில் அவள் அனுங்கியிருக்க வேண்டும். கந்தவேள் ஓடி வந்தான். ஈர உடையில் நிலாவினியை என்றும்

பார்த்தவனல்ல அவன். அந்தி மாலையில் மஞ்சள் நிற ஒளியில் அவளது மேனி பட்டாக மின்னியது...

ஒரு கணத்தில் அவளுக்கு என்ன நேர்ந்ததென்பதை புரிந்து கொண்ட அவன் அவளை அந்த முட்களிலிருந்து மீட்க அவளுடன் சேர்ந்து முயற்சி செய்தான். கவர்ச்சியான வளைவு நெளிவுகளைக் கொண்ட ஒரு பெண் அசைய முடியாதபடி நிற்க அவளுக்கு ஒரு ஆடவனின் உதவி தேவையாக இருக்கின்ற அந்த சந்தர்ப்பத்தை என்னவென்பது!

அவளுக்கு நோவு ஒரு புறம்... கூச்சம் மறுபுறம்... முதற்றடவையாக ஒரு பெண் ஆணின் ஸ்பரிசத்திற்கு உள்ளாகிறாளே..... அது ஒரு இன்பம் அல்ல. அது ஒரு வேதனை. நிலாவினி கெஞ்சினாள்.

"கந்தவேள்... நான் இந்த லுங்கியை கழற்ற வேணும்... நீங்கள் என்னுடைய அறையிலை மற்றொரு லுங்கியை எடுத்து வாங்கோ..."

கந்தவேள் ஓடினான். ஓடிச் சென்றவன் அவளது அறையில் மாற்று லுங்கியை எடுத்துக் கொண்டு திரும்பவும் ஓடிவந்தான்...அவன் அங்கு வந்து பார்த்த போது...

ரோஜா காட்டில் நிலாவினியின் லுங்கி பரவிக் கிடந்தது... அங்கு அவள் இல்லை...!

கந்தவேளின் அரவம் கேட்டதும் நிலாவினி...

"கந்தவேள் நான் இஞ்சை களஞ்சிய அறைக்குள்ளை ஓடி வந்திட்டன்... நீங்கள் லுங்கியை இந்த நீக்கலுக்குள்ளாலை தாங்கோ" என்று கூறி கதவில் சிறிது இடைவெளி ஏற்படுத்திக் கொடுத்தாள்... கந்தவேள் அந்த இடைவெளியூடாக லுங்கியை நீட்டினான். நீட்டிய வேகத்தில் நிலாவினியின் கைகளை பற்றிக் கொண்டான்.

அந்த இரு கைகளின் ஸ்பரிசம் எவ்வளவு நேரத்தை செலவிட்டன என்பதை கணக்குப் பார்க்க இருவருமே விரும்பவில்லை. அவ்விதமாக அந்த ஸ்பரிசம் அவர்களது ஆழ் மனதை ஊடுருவிச் சென்றிருந்தது. அதிலும் நிலாவினியின் நிலைமை பரிதாபமாக இருந்தது...

கந்தவேள் மேலான அனுதாபம் என கணக்கிட்டிருந்த அவளது தீர்மானத்திற்கு அடிகள் விழுந்து கொண்டிருந்தன...

ரோஜா செடிகளின் முட்கள் அவளது மேனியில் கீறல்களை ஏற்படுத்தி யிருந்தன... கந்தவேளின் ஸ்பரிசம் அவளது மனத்தில் காதல் என்ற உணர்வை பதிக்க முயன்று கொண்டிருந்தது...

கந்தவேள் கதவினை உட்புறமாக தள்ளினான்...

நிலாவினி போன்ற நெறி முறையில் வந்த ஒரு பெண் எந்த சமயத்தில் தான் மோசம் போகாமல் இருக்கும்படி தன்னைத் தானே காப்பாற்ற வேண்டியவளாக இருக்க நேரிடுமோ அந்த சந்தர்ப்பத்தை நிலாவினி இப்போ எதிர் கொண்டாள்...

'என்னை நீங்கள் குட்டி, குட்டி, நிலாக் குட்டி எண்டுதானே கூப்பிடுகிறனீங்கள்... நான் இன்னும் சின்னப்பிள்ளைதான்' என்று தாயிடம் அடித்துக் கூறிய நிலாவினிக்கு அது பரீட்சை நேரமாக இருந்தது.!

'ஒழுக்கம் என்டுறது நாங்கள் சொல்லிக் கொடுத்து வாறதில்லை தம்பி... அது பரம்பரை பரம்பரையாக இரத்தத்திலை ஊறி கலந்து வாற விசயம்... எங்கடை பிள்ளையை தப்பு செய் எண்டு சொன்னாலும் அவள் தப்பு செய்யமாட்டாள்' என்று மகனிடம் அடித்துக் கூறிய தாயின் வார்த்தைக்கு அது சோதனைக் காலமாக இருந்தது.

மெய்யுணர்வுகள் வேறு... உணர்ச்சிகள் வேறல்லவா?!

கதவின் மேலான நிலாவினியின் பிடி மெல்ல தளர்ந்தது!

****************************

மறுநாட்காலை நிலாவினி தூக்கத்திலிருந்து திடுக்குற்று எழுந்து நின்று விழித்தாள்... முதல்நாள் நடந்தவையெல்லாம் அவளுக்கு அதிர்ச்சியளிப்பனவாக இருந்தன. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் சரியென தெரிந்தது இப்போ முற்றிலும் தப்பாக அவளுக்கு தெரிந்தது. நேரே சென்று நன்றாக தோய்த்து உடை மாற்றிய பின்னரே அவள் தாயிடம் தேநீருக்காக வந்தாள்...

வழக்கத்திற்கு மாறான முறையில் நிலாவினியின் நடவடிக்கைகள் இருப்பதனை சீதா காலையிலிருந்தே அவதானித்து வந்தாள்...

இப்போ நேருக்கு நேராக அவள் வந்து தரிசனம் கொடுத்ததும் சீதா திகைத்தே விட்டாள்!

நிலாவினியின் உதட்டிலும் முகத்தின் வேறு சில பாகங்களிலும் இருந்த சிறு சிறு காயங்கள் அவளது சந்தேகத்தை மேலும் உறுதி செய்தன... அவளுடைய உடம்பு நடுங்கியது. அதனை காட்டிக் கொள்ளாமலே மகளிடம் கூறினாள்...

"நான் இண்டைக்கு சுரேஷைப் பார்க்க வேணும்..."

நிலாவினிக்கு ஆச்சரியமாக இருந்தது... தாய்க்கு முகம் கொடுத்து கதைக்கவே பயந்தாள்...

"சரி அம்மா... பதினொரு மணிக்குத்தான் பார்வையாளர் நேரம்... அதற்குள் சமைத்து எடுத்துவிட்டால் அண்ணாவுக்கு பார்சலையும் எடுத்துச் செல்லலாம்..."

சீதா அதனை ஏற்றுக் கொண்டதுடன் ராசத்தின் உதவியை எதிர்பாராமலே சமையல் வேலையில் மூழ்கினாள். ராசம் திகைத்து நின்றாள்...

பதினொரு மணிக்கெல்லாம் நிலாவினி தாயை ஸ்கூட்டியில் சுரேஷிடம் அழைத்துச் சென்றாள்.

சிறைக் காவலர்கள் சீதா மட்டும் உள்ளே செல்வதற்கு அனுமதி வழங்கினர்...

சுரேஷைக் கண்டதும் சீதா விம்மி விம்மி அழுதாள்... வீட்டில் தான் காலையில் கண்ட காட்சி பற்றி கூறினாள்...

சுரேஷ் இந்த நிலைமைக்கு தங்கள் குடும்பம் வரும் என எந்தக் காலத்திலும் எண்ணியிருந்தவனல்ல. அவனுக்கு கவலை பொறுக்க முடியவில்லை...

தாய்க்கு ஆறுதலும் அறிவுரைகளும் சொல்லி அனுப்பி வைத்தான்...

வீடு வந்த சீதா முற்றத்தில் வரும் போதே...

"ராசம்... ராசம்..." என குரல் வைத்து அழைத்தபடி வந்தாள்.

"ஏன் அக்கா... என்ன நடந்தது...?"

"ஒன்றுமில்லை ராசம்... இனி நான் எழும்பிவிட்டன்... நிலாவினியும் துணையாய் இருக்கிறாள்... நான் ஒரு குமரை வைச்சிருக்கிறன்... உனக்கும் இளந்தாரி இருக்கிறான்... ஊர் பேச இடம் கொடுக்கக் கூடாது கண்டியோ... அதுதான் சுரேஷ் சொல்லுறான் உங்களை உங்கடை வீட்டுக்கு அனுப்பிப் போட்டு எங்களை தனிய இருக்கட்டாம்"

ராசத்திற்கு அதிர்ச்சியாகவும் அவமானமாகவும் போய்விட்டது...

கந்தவேள் ஏற்கனவே அலுவலகம் போய்விட்டான். நிலாவினியின் தொலைபேசியிலேயே மகனை அவர்களது வீட்டுக்கு வரும்படி தகவல் கொடுத்து விட்டு ராசம் வெளியேறினாள்.

நிலாவினி ஓடிவந்து மதிய சாப்பாட்டிற்காக இரண்டு பார்சல்களை கட்டி ராசத்தின் கைகளில் கொடுத்து விட்டாள்.

சீதாவின் நடவடிக்கைகளை பார்க்க பார்க்க நிலாவினிக்கு ஆச்சரியமாக இருந்தது.

அப்பா தாக்கப்பட்ட சமயம் முதல் அம்மா இப்படி தற்றுணிவுடன் செயல்பட்டிருந்தால் எங்களுக்கு இவ்வளவு கஷ்டங்களும் நேர்ந்திருக்காதெல்லோ என்று அவளது பிஞ்சு மனம் ஏங்கி தவித்தது...

மறுநாளே அதிசயிக்கும்படி ராஜம்மாள் தனது கணவனுடன் நிலாவினி வீட்டிற்கு வந்திருந்தாள்...

அதில் ஆச்சரியப்படத்தக்கதாக இருந்த விடயம் அவர்கள் பத்திரிகை வாயிலாகவோ வேறு எவர் மூலமாகவோ நிலாவினி வீட்டில் நடந்தேறிய துன்பங்கள் எதனையும் அறிந்திராததே.

ராஜம்மாளும் கணவரும் அன்றிரவு சீதா வீட்டில் தங்கியிருந்து மறுநாள் சுரேஷை போய்ப் பார்த்தனர். சுரேஷின் வேண்டுகோள்களையெல்லாம் நிறைவேற்ற அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள்...

ராஜநாதரை சென்று பார்த்த போது அவர் அவர்களுடன் மனம் விட்டுப் பேசினார்...

ராஜம்மாள் வாழ்வின் வளைவு சுழிவுகளை அனுபவ வாயிலாக அனுபவித்து தெளிந்தவள்... அவள் எதையும் பெரிதுபடுத்தி பார்க்காதது ராஜநாதருக்கு பெரும் ஆறுதலாக போய்விட்டது.

அன்று மாலைப் புகையிரத வண்டியில் ராஜம்மாளும் கணவனும் பயணம் செய்த போது நிலாவினி அவர்களுடன் இணைந்திருந்தாள்...!

## — 20 —

நிலாவினி ராஜம்மாளுடன் சென்ற பின்னர் சீதா மீண்டும் போய் தனது அறையில் படுத்துக் கொண்டாள்...

எப்போதாவது பசி என்று உணரும்போது சிறிதளவு தேயிலை சாயத்தை தயாரித்து அருந்தினாள்.

நிலாவினி பற்றி சிந்திக்கும் போது இரு விழிகளாலும் கண்ணீர் வழிந்தது... இவள் அப்பனுக்கு தப்பாமல் பிறந்திருக்கிறாள் என்று எண்ணி அவளது மனம் கறுவியது...

ராசத்திற்கு நடந்தவை எதுவும் தெரியாது... பாசம் காரணமாக சீதா மேல் எந்த கோபத்தையும் வைத்திருக்காமல் அவளை தினம் ஒரு தடவை வந்து பார்த்து சென்றாள். நிலாவினி தலைநகருக்கு போய்விட்டது அவளுக்கு கவலையை கொடுத்தது. சீதாவின் துணைக்கு தான் வந்து படுத்து போவதாக ராசம் கூறிய இடத்தும் அவள் மறுத்துவிட்டாள்.

சீதாவில் உள்ள பெரும் பலம் அவளது கற்பு நெறி பிறழாத நடத்தை... அவளது பெரும் பலவீனம் எதையும் வெளிப்படையாக கதையாமல் மனத்தில் வைத்து குமைவது!

சிறையில் சுரேஷின் பகைமை நாளாந்தம் அதிகரித்து வந்தது...

அவனது பொறுமை அவனுக்கு நன்மை சேர்க்காமல் பல வழிகளில் தீமையையே கொணர்ந்தது.

அவன் மேலான கிண்டல்கள் அதிகரித்து வந்தது. சுரேஷ் மேல் அதிக கோபம் கொண்ட ஒருவன் ஒரு நாள் "அப்பனைப் போலல்லாமல் இவன் வேறு எப்படி இருப்பான்!" என்று கூறி முழக்கித் தள்ளி விட்டான்.

தந்தையை இழுத்தது சுரேஷுக்கு அதிகளவு கோபத்தை உண்டு பண்ணியது. தனது பொறுமையை ஒரு பக்கம் தள்ளி வைத்து விட்டு அவனுக்கும்

அவனை சார்ந்த குழுவுக்கும் போடு போடு என்று போட்டுத் தள்ளி விட்டான்.

அந்த சந்தர்ப்பத்தின் பின் சுரேஷுக்கு எதிராக ஒரு குழு உருவாகிச் செயல்பட தொடங்கியது. அதன்ால் அவன் பல இம்சைகளுக்கு உள்ளாக நேர்ந்தது...

ஒருநாள் திடீரென்று தர்ஷி அவனை பார்க்க வந்திருந்தாள்...

சுரேஷ் கைதாகிய பின் அவளது தாய் சகோதரிகள் மத்தியில் ஏற்பட்ட மாற்றம் பற்றி அழுதழுது கூறினாள்... தான் எங்கும் வெளிக்கிட முடியாதபடி சகோதரிகள் தன்னை மாறி மாறி கண்காணிப்பதாலேயே தன்னால் அவனை வந்து பார்க்க முடியாதபடி போனதென கூறி மனம் வருந்தினாள்... தனக்கு வேறு விவாகப் பேச்சுக்கள் நடப்பதாகவும் தான் எந்த கட்டத்திலும் அவனைத் தவிர வேறு எவரையும் மணம் முடிக்கப் போவதில்லை எனவும் சத்தியம் செய்து கூறினாள்.

தர்ஷி வந்து போனபின் சுரேஷுக்கு அவளது நினைப்பு மேலோங்கியது...

எந்நேரமும் சிந்தனையில் மூழ்கி இருந்த அவனை சிலர் சீண்டினார்கள்...

அவர்கள் எது கூறியும் அவன் காது கொடுக்கவில்லை. எப்படியும் அவனை சீண்டியே தீரவேண்டும் என்று தீர்மானித்த பின் அவர்கள் சும்மா விடுவார்களா...?

" உவனது தங்கையைத் தான் நான் கலியாணம் கட்டிக் கொள்ளப் போறன்ரா..." என்று ஒருவன் குரல் வைத்து சிரித்தான்.

அப்பாவியான தங்கை நிலாவினி அவன் மனக் கண் முன் தோன்றினாள்... சுரேஷுக்கு தான் எங்கிருக்கிறேன் என்பதே தெரியாமல் இருந்தது.

எழுந்து அப்படி சொன்னவனின் தலையைப் பிடித்து சுவரில் மோதினான்... அவனுக்கு துணையாக வந்தவர்களை துவம்சம் செய்தான்...

காவலதிகாரிகள் ஓடி வந்தார்கள். அவர்களில் பலர் சுரேஷுக்கு எதிரான குழுவின் அடாவடித்தனங்களுக்கு ஆதரவு வழங்கி பணம் பெறுபவர்கள்.

அவர்களை விலக்கு பிடிக்கும் பாங்கில் சுரேஷை நன்றாக நையப் புடைத்து இழுத்துச் சென்று தனிக் கூண்டில் அடைத்து விட்டார்கள்.

நீரோ ஆகாரமோ இன்றி சில தினங்கள் அவனை அங்கு தங்க வைத்தார்கள். பின் அவனாகவே உணவருந்த மறுப்பதாகவும் முரண்டு பண்ணுவதாகவும் மேலதிகாரிகளுக்கு கூறி அவர்களை அழைத்து வந்து காட்டினார்கள்.

சுரேஷ் மயக்கமுறும் நிலைக்கு வந்து விட்டான். ஒரு நாள் இரவு சில கைதிகள் ஓடிவந்து சிறைக் காவலர்களை அழைத்துச் சென்று அவனது அறையை காட்டினார்கள்.

அங்கு சுரேஷ் தனது 'ஜீன்சினாலேயே' கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருந்தான்.

மறுதினம் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக அச் சம்பவம் பிரசுரமாகியிருந்தது...

"வங்கி முகாமையாளர் மகன் சிறையில் தூக்கிட்டு தற்கொலை...!"

இவ் விடயம் சார்பாக பிரசுரமான செய்தி சிறைக் காவலர்களை விசாரித்து தெரிந்து கொண்டதாகவே இருந்ததால் அது ஒருபக்கசார்பான செய்தியாகவே இருந்தது. உண்மையில் சுரேஷ் தற்கொலை செய்து கொள்ளக் கூடிய ஒருவனல்ல என்பதை பழகும் எவரும் ஊர்ஜிதம் செய்வர்.

சீதா பத்திரிகை படிப்பவளல்ல. எனவே அவளுக்கு இச்சம்பவம் உடனடியாக தெரியவரவில்லை. ராசமும் சீதாவின் நிலையில் உள்ளவளே... கந்தவேளுக்கு அலுவலக பத்திரிகை கையில் கிடைத்தால் அவன் நேரில் வந்து விட்டிருப்பான். அப்படியும் நடக்க வில்லை. தர்ஷிக்கு கட்டுப்பாடுகள் இருப்பதால் அவளது கவனத்திற்கு இச் செய்தி கொண்டுவரப்படாத நிலையே இருந்தது...

சிறை அதிகாரிகள் உரியவருக்கு செய்தியை கொடுப்பதில் காலம் தாழ்த்தினர்.

ஆனால் தலைநகரில் நிலாவினி பத்திரிகை மூலம் இச் செய்தியை அறிந்து உடனேயே தாயுடன் தொலைபேசியில் கதைத்ததுடன் ராஜம்மாள் மற்றும் சுந்தரேசனுடன் பயணத்தை ஆரம்பித்து விட்டிருந்தாள்.

பத்திரிகை கைக்கு கிடைப்பதற்கு முன்பாகவே சுரேஷ் பற்றிய செய்தி கந்தவேளுக்கு எட்டிவிட்டது. அவன் தாயிடம் ஓடோடி வந்தான்... அவளையும் அழைத்தபடி சீதா வீட்டுக்கு ஓடினான். அங்கு சீதா இருக்கவில்லை. செய்தி அறிந்து அவள் சிறைச் சாலைக்கு போயிருப்பாள் என ஊகித்துக் கொண்டு கந்தவேள் தாயை அங்கேயே இருக்கும்படி பணித்துவிட்டு சிறைச்சாலைக்கு ஓடினான்...

சிறைச்சாலையில் பிரேத பரிசோதனை நடைபெறாத நிலையில் தடுமாறிக் கொண்டிருந்த காவலாளிகளுக்கு அவன் சென்றது வாய்ப்பாகவே போய்விட்டது. அவன் பிரேதத்தை அடையாளம் காட்டியபின் பிரேத பரிசோதனை நடைபெற்றது...

அந்த இடைவேளை பிடித்து கந்தவேள் வைத்தியசாலைக்கு சென்று ராஜநாதரை சந்தித்தான். சிறையில் யாரோ தூக்குப் போட்டு இறந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரத்தில் அடிபட்ட கதை ராஜநாதருக்கும் எட்டியிருந்தது. ஆனால் அது தனது மகன் என்பதை அறியாதிருந்தார். கந்தவேள் சென்று சரியான தகவலை கூறியதும் அவர் மௌனமாக விம்மி விம்மி அழுதார்.

வைத்தியசாலை நிர்வாகத்திடம் அனுமதி பெற்று அவன் ராஜநாதரை சிறைச் சாலைக்கு அழைத்துச் சென்றான்.

சுரேஷின் பிரேதம் உரியவரான ராஜநாதரிடம் கையளிக்கப்பட்டது...

கந்தவேள் ராஜநாதர் இருவரும் அமரர் ஊர்தியில் வீடு வந்து சேர்ந்தபோது நிலாவினியும் ஏனையோரும் வந்துவிட்டார்கள்.

நிலாவினி வீடு வந்ததும் ராசம் மட்டுமே இருந்தாள். சுவரில் பொருத்தி வைக்கப்பட்டிருந்த தொலைபேசியின் 'ரீசீவர்' உரிய இடத்தில் வைக்கப்படாமல் விழுந்து தொங்கியபடியிருந்தது. நிலாவினியின் மனத்தில் அது ஒரு உறுத்தலை ஏற்படுத்தியிருந்தது...

அவள் ஓடி வந்து ஊர்தியில் தாயை தேடினாள். அங்கும் தாய் இல்லை என்பதை அவதானித்த அவள் ஓலமிட்டு அழுதாள்...

சீதா எங்கும் இல்லை என்பது அப்போதுதான் எல்லோருக்கும் உறைத்தது. ஏனையோர் சுரேஷின் மையத்தை இறக்க கந்தவேள் கிணற்றடிக்கு ஓடிச் சென்றான். கிணற்றுக் கட்டில் சீதா அணிந்திருந்த நகைகள் அத்தனையும் கழற்றி வைக்கப்பட்டிருந்ததை கண்டதும் கந்தவேள் 'ஐயோ நிலாக்குட்டி' என்று குரல் வைத்து அலறினான்.

கந்தவேளின் அவலக்குரலைக் கேட்டதும் அனைவரும் அவ்விடத்திற்கு வந்து விட்டார்கள்.

கந்தவேள் கிணற்றுக் கட்டில் ஏறிநின்று தனது மேற்சட்டையையும் "ஜீன்சையும்" கழற்றினான்...

எல்லோரும் தயக்கத்துடன் அவனையும் கிணற்றையும் மாறி மாறி பார்த்தபடி நின்றனர்... கந்தவேள் தான்தான் கிணற்றில் குதிப்பேன் என்று மற்றவர்களுக்கு அறிவித்து விட்டது போலவும் அவனது பேச்சுக்கு மாறாக நடக்க விரும்பாதவர்கள் போலவும் அனைவரும் மௌனம் காத்தனர்...

நிலாவினிக்கு தான் தனது பாசமிகு அண்ணாவையும் உயிருக்குயிரான அம்மாவையும் ஒரே சமயத்தில் இழக்க நேரிட்டது பேரிடியாக விழுந்தது .

இப்போ கந்தவேள் கிணற்றில் குதிக்க ஆயத்தமாவது அவளை மேலும் சஞ்சலப்படுத்தியது... இவன் எப்படி நீந்தப் போகின்றான் என ஒரு கணம் எண்ணி முடிப்பதற்குள் கந்தவேள் நீச்சலில் தனக்கு இருக்கும் திறமையை நிரூபிப்பவன் போல ஒரு கரணம் அடித்து நீரில் குதித்தான்.

நிலாவினி உட்பட அனைவருமே கிணற்றை எட்டிப் பார்த்தபடி இருந்தார்கள்...அந்த ஆழமான கிணற்றில் சுழி ஓடி சென்ற கந்தவேள் முதற் தடவையிலேயே சீதாவின் உடலை கண்டுபிடித்துவிட்டு மேலே வந்து மூச்சு விட்டு இளைப்பாறினான்.

அடுத்த தடவை நேரே நீரை கிழித்தபடி சென்று மையத்தை தலையில் பற்றிப் பிடித்து நீரின் மேல் மட்டத்திற்கு கொண்டு வந்து கிணற்று சுவரில் பதித்திருந்த படி ஒன்றுடன் சாத்தி நிறுத்தினான்...

நிலாவினியின் அழுகைச் சத்தம் கந்தவேளுக்கு தனித்து கேட்டது. வளவில் இருந்த ஏணி ஒன்று இறக்கப்பட்டு கயிற்றினது உதவியுடன் பிரேதம் மேலே எடுக்கப்பட்டது...

இரண்டுமே அவச் சாவாக இருந்ததால் ஊரே திரண்டு வந்தது... ஒவ்வொருவரும் தமக்கு நேர்ந்து விடக் கூடிய அவலமாகவே அந் நிகழ்ச்சியை கருதினர்... ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் என வளவு தெரு என்றில்லாமல் ஒரே சனத்திரளாக இருந்தது.

அவல ஓலம் அந்த பிரதேசத்தையே அதிர வைத்தது. சீதாவின் மரணவிசாரணை பிரேத பரிசோதனை ஆகியன முடிவுற மிகவும் காலதாமதம் ஆகியது.

**************************

தர்ஷிக்கு செய்தி வெளிவந்தது மதியத்திற்கு பின்னரே. சுரேஷ் அவளது மனதில் இடம்பிடித்த காலம் முதல்... அவனை தான் மணம் முடிக்க முற்று முழுதாக தீர்மானித்து அவனது பெற்றோரை தனது கைக்குள் போட்டுக் கொண்ட இந்த நாள் வரைக்குமான நிகழ்வுகள் அவள் மனத்தில் படம் போல ஓடியது.

அவளுக்கு தலை சுற்றுவது போல உணர்ந்தாள். மெதுவே மண்டப சுவர் அருகே அமர்ந்து சாய்ந்து கொண்டாள். அடி நெஞ்சில் இருந்து விம்மல் மேலெழுந்து வந்தது.

தன்னை தானே கட்டுப்படுத்த மாட்டாமல் ஓவென்று உரத்து சத்தமிட்டு அழுதாள்.

முதலில் மனோ எங்கிருந்தோ ஓடி வந்தாள். அவளை தொடர்ந்து மலரும் ராஜியும் பதறியடித்தபடி வந்து சேர்ந்தனர்.

"என்னடி... என்ன நடந்தது... ஏன் சத்தம் போட்டு அழுகிறாய்... ஊரைக் கூட்டப் போறியே..." மனோ தர்ஷியின் தோளைப் பிடித்து உலுக்கியபடி வினாவினாள்...

தர்ஷி மனம் திறந்து குரல் வைத்து அழுதாள்...

"அக்கா... என்ரை சுரேஷும் அன்ரியும் செத்துப் போட்டினை...நான் இனி ஏன் உயிர் வாழ வேணும்...?"

மூவரும் உண்மையில் திகைத்து விட்டனர்...

சுரேஷின் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானங்களாலும் சுரேஷ் சிறையிலடைபட்டதாலும் மனம் உடைந்த நிலையிலேயே மனோவும் ஏனையோரும் சுரேஷை நம்பி இருப்பதை தடை செய்தனர். ஆனாலும் தர்ஷி ஒரு நேரம் அடம்பிடித்தால் சுரேஷின் மேல் சுமத்தப்பட்ட குற்றத்திலிருந்து அவன் விடுவிக்கப்பட்டால் சுரேஷை தர்ஷிக்கு மணம் முடித்து வைப்பதற்கும் அவர்கள் உள்ளூர விருப்பம் கொண்டே இருந்தனர். அது மட்டுமன்றி சுரேஷ் குடும்பத்துடன் தர்ஷி மட்டுமன்றி குடும்ப அங்கத்தவர்கள் அனைவருமே நீண்ட காலம் ஈடுபாடு கொண்டு பழகி வந்திருந்திருந்தார்கள்...

இந் நிலையில் சுரேஷும் அவனது தாயும் ஒரே நேரத்தில் இறந்து விட்டார்கள் என்ற செய்தியை அதுவும் தர்ஷி வாயிலாக கேட்டதுமே மூவரும் அழ ஆரம்பித்து விட்டார்கள்.

யார் யாரை தேற்றுவது என்ற நிலை... அந்நேரம் உயர் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து நான்கு பெண்கள் தர்ஷியை அழைத்துக் கொண்டு சுரேஷின் மரண வீட்டுக்கு செல்வதற்காக வந்திருந்தார்கள்...

வீட்டை பூட்டி விட்டு அனைவருமே மரண வீட்டைச் சென்றடைந்த நேரம் சீதாவின் உடல் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டிருந்தது.

ராஜநாதரை அடையாளம் காண்பதற்கு அனைவரும் சிரமப்பட்டார்கள். நிலாவினி மயக்கமுற்ற நிலையிலிருந்தாள்.

ராஜநாதரை அடையாளம் கண்டு அவருக்கு ஆறுதல் கூறி நிலாவினியை தேற்றி எடுத்து அறிவு வரப் பண்ணுவதற்கு பெரும் பிரயத்தனங்கள் செய்ய வேண்டி இருந்தது.

தர்ஷி... எவர் பற்றியும் சிந்திக்காமல் ஓடிச் சென்று "சுரேஷ் என்னை விட்டு விட்டுப் போறியா...?" என்று கூறி உடல் மேல் விழுந்து அழுதாள்...

பிரேதம் எடுக்கும் வரைக்கும் அவள் அவனது கால் அடியை விட்டு விலகவில்லை...!

ஒரு பெண்ணின் மனதினை யாரால் தான் எடை போட முடியும்...! காலம் பூராகவும் சுரேஷின் நிழலில் வாழ முடிவெடுத்த அவளால் இப்போ அவனுக்கு செய்யக் கூடியது வேறு எதுவோ...?

மனோ இழகிய மனம் படைத்தவள்... தான் தங்கையின் விடயத்தில் இறுதி நேரத்தில் கொடூரமாக நடந்து கொண்டு விட்டதாக எண்ணி அவள் வருந்தினாள்...

தங்கை அருகில் போயிருந்து அவளை தடவிக் கொடுத்தாள்... தானும் கண்ணீர் விட்டு அழுதாள்... தனது தவறால்தான் எல்லாம் நேர்ந்து விட்டதோ என்று எண்ணி பயந்தாள்...

மனோவுக்கு துணை போன தாயும் ராஜியும் அதே நிலையில் இருந்தார்கள். தர்ஷிக்கு பயத்தில் வாய் பேசாது இருந்தார்கள்...

உயர் தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து வந்த நால்வரும் சுரேஷுக்கு இறுதி வணக்கம் செலுத்தி விட்டு மர நிழல் ஒன்றைப் பிடித்து நின்று கொண்டார்கள்.

பிரேத ஊர்வலம் ஆரம்பமாகியும் அவர்கள் அந்த இடத்தை விட்டு அகலவில்லை... ஊர்வலம் புறப்பட்ட சமயம் தர்ஷி பிரேதத்திற்கு பின்னால் ஓடி வந்தாள். அப்போது முதற்றடவையாக அவர்கள் வந்து தர்ஷியை ஆசுவாசப்படுத்தினார்கள்.

ராஜநாதர் பலதடவைகள் மயக்கமுற்று விழுந்தார். நிலாவினி தன்னை தேற்ற முடியாத நிலையிலும் அவரை தேற்றினாள்.

மரணச் சடங்கை சரிவர நிறைவேற்றுவதில் பல தடங்கல்கள் எதிர்நோக்கப்பட்டதால் சிவாக்கினி மூட்டப்பட்டு உடல்கள் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ராஜநாதரால் எரியூட்டப்பட்டது.

ஒருவரை மற்றவருக்கு முகம் பார்த்து அடையாளம் காண முடியாதபடியான இருட்டு... மையம் இரண்டுக்கும் மூட்டப்பட்ட தீ, சுவாலை விட்டு எரிந்ததில் சில முகங்களை அடையாளம் காணக் கூடியதாக இருந்தது...

கொழுந்து விட்டெரியும் தீச் சுடரின் ஒளிக்கு முகம் கொடாதபடி ஜோர்ஜை பிணை எடுப்பதில் தீவிரம் காட்டிய அந்த நான்கு இளைஞர்களும் இருளில் மெல்ல நழுவினர்!

****************************

அன்றிரவு மலர் அங்கேயே தங்கினாள். அடுத்தடுத்த நாட்களும் காடாத்து... செலவு என்று தங்க நேரிட்டது...

தர்ஷி வீடு போன பின் திரும்பவில்லை... மனோ அடிக்கடி வந்து தாயைப் பார்த்து தேற்றிச் சென்றாள்...

ராஜி தங்கைக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி தேற்ற முயற்சி செய்தாள்... உயர்தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் நால்வரில் இருவர் மட்டும் தர்ஷியை அடுத்தடுத்த நாட்களில் சந்தித்து பேசினார்கள்.

தர்ஷி வெளியே போவதற்கு வீட்டில் தடை இருந்தது... அந்த தடை இப்போ வலுவிழந்து விட்ட நிலையில் அவள் தனது மாணவ நண்பிகளுடன் ஒரு நாள் வெளியே சென்று நீண்ட நேரம் கழித்து வீடு வந்தாள்...

சுரேஷ் இறந்த பின் முதற்றடவையாக அவள் ராஜியுடன் கதைத்தாள். ராஜியும் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்கைக்கு புத்திமதிகள் கூறினாள்.

"தங்கச்சி... நாங்கள் குடுத்து வைச்சது அவ்வளவுதான்... விதியை எங்களால் மட்டும் தடுத்து விட ஏலுமே... தாயையும் தமையனையும் இழந்து நிற்கின்ற நிலாக்குட்டியின் நிலையை பார்..."

தர்ஷிக்கும் நிலாவினியின் நினைப்பு வந்ததும் கவலையாகப் போய்விட்டது...

'நிலாவினிக்கு நான் ஆறுதல் கூறேல்லை... அங்கிள் பாவம் அவரோடையும் கதைக்கேல்லை... சுரேஷை மட்டும் நினைச்சுக் கொண்டு எல்லாத்தையும் மறந்த என்னிலை எவ்வளவு பிழை இருக்கு' என்று சிந்தித்தபடி போய் ஒரு மூலையில் எவர் கண்ணிலும் படாதபடி அமர்ந்து கொண்டாள்.

இருள் சூழும் சமயம் திடீரென மின்சாரம் தடைப்பட்டு விட்டது. ராஜி எழுந்து தீப்பெட்டியை எடுக்க முயற்சி செய்தாள். எங்கும் காணவில்லை. சுவாமிப் படத்தட்டில் தான் தீப் பெட்டி வைக்கப்பட்டிருக்கும்... சுவர் ஓரம் தடவித் தடவி படத் தட்டில் கை வைத்ததுதான் தாமதம் திடீரென மின்சாரம் வந்ததற்கான அறிகுறி தெரிந்தது. பட அறை மின் விளக்குக்கான ஆழியை தட்டினாள். வெளிச்சம் வெள்ளம் போல பாய்ந்தது...

தர்ஷி சாதாரணமாக அணியும் நகைகள் தோடு சகிதம் அப்படத் தட்டில் பரப்பி வைக்கப்பட்டிருந்தது...

சீதா போல தர்ஷியும் கோழையல்ல என்பது ராஜிக்கு நன்கு தெரியும்...

தன்மானம் காக்கவும் தமிழ்மானம் காக்கவும் எத்தனை பேர் வீட்டை விட்டு ஊரை விட்டு போய்க் கொண்டிருக்கிறார்கள்.!

## 21

ராஜநாதரை சந்தித்து ஆறுதல் கூறுவதற்காக வங்கியில் பணிபுரியும் மிகச் சிலரே வந்து போய்க் கொண்டிருந்தனர்...

ராஜநாதர் தாக்குதல் சார்பாக ஜோர்ஜ் மேல் நடத்தப்பட்ட நீதிமன்ற வழக்கிற்கு தகுந்த சாட்சியம் இல்லாததாலும்... மரண வீட்டின் போது எவ்வித அறிவித்தலும் கொடுக்காது ராஜநாதர் சாட்சியமளிக்க செல்லாததாலும் அவன் விடுதலை செய்யப்பட்டான்

வங்கி உயர் பீடத்தால் நடாத்தப்பட்ட விசாரணையிலும் ஜோர்ஜ் தாக்குதல் நடந்த சமயம் காவல் கடமையில் ஈடுபட்டிருந்தான் என்பதுடன் வங்கியில் கடமையாற்றும் இளைஞர்கள் அவனுக்கு சாதகமாக கொடுத்த சாட்சியங்களின் அடிப்படையில் அவன் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

ராஜநாதரை துக்கம் விசாரிக்க வந்த சிலர் அவரிடம் அத் தகவல்களை கூறியிருந்தனர்... தவிர அவர் வங்கி தலைமையகத்தில் உடனே வேலையை பொறுப்பேற்பது நல்லது எனவும் அவர்கள் வற்புறுத்தி கூறியிருந்தனர்...

ராஜம்மாள் தற்காலிகமாக வீட்டுப் பொறுப்பு அத்தனையையும் பொறுப்பேற்றிருந்தாள்... ராசம் அவளது கையாளாக இருந்து எல்லா உதவிகளையும் செய்தாள். கந்தவேள் ஒழுங்காக அலுவலகம் சென்றான்... மாலையில் தனது வீட்டுக்குப் போனான். மிக சொற்ப நேரமே நிலாவினியுடன் கதைப்பதற்கு அவனுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது...

அவனால் அந்த துன்பத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை... நிலாவினி எவ்வித உணர்வுகளுமின்றி மரத்துப் போய்விட்ட நிலையில் இருந்தாள். எனவே அவளை தூண்டி எந்த ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலையில் கந்தவேள் இருந்தான்.

ராஜநாதருக்கும் ராஜம்மாளுக்கும் இடையில் நல்ல நெருக்கம் இருந்தது. அது கந்தவேளுக்கு அச்சத்தை கொடுத்திருந்தது.

அன்று மாலை கந்தவேள் ஒரு விபத்தே போல நிலாவினியை சந்திக்க நேர்ந்தது...

"நிலாவினி நடந்தது நடந்து போச்சு... நீ அம்மாவோடையும் என்னோடையும் வா... நாங்கள் உன்னை எந்த ஒரு குறையும் இல்லாமல் அரசி மாதிரி வைச்சுப் பாதுகாப்பம்"

"கந்தவேள்...... அம்மா என்னை தான் சாகிறத்துக்கு முதலே ராஜம்மாளுக்கு பொறுப்புக் கொடுத்திட்டா... அம்மா செத்துப் போனா எண்டுறதுக்காக நான் அவாவின்ரை பேச்சுக்கு மாறாய் நடக்கேலாது..."

நிலாவினி அழுகையுடன் கூறினாள். கந்தவேளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை...

"நிலாவினி நீ இனி என்னோடைதான் வாழவேணும். நான் தாலி கட்டி உன்னை கலியாணம் முடிப்பன். உன்னை ராணி மாதிரி வைச்சுப் பாப்பன். உன்ரை காலடியிலை நான் காலம் பூரா தவம் கிடப்பன். அம்மா வேறை உன் மேலை அன்பாய் இருக்கிறா. நீ என்ன சொல்லுறாய்...?"

அவனது விழிகள் வேதனையுடன் இறைஞ்சின.

"நான் கலியாணம் முடிக்க மாட்டன்... அம்மா , அண்ணா இல்லாமல் எனக்கு ஒருத்தரும் வேண்டாம்..."

நிலாவினி ஆணித்தரமாக கூறினாள்... அவளுக்கு என்ன கூறி புரிய வைப்பது என்று கந்தவேளுக்கு விளங்கவில்லை...

"நிலாவினி... நீ சின்னப்பிள்ளை மாதிரி கதைக்கிறாய்... இனித்தான் எனக்கும் உனக்கும் கலியாணம் நடக்க வேணும் எண்ட நிலையிலை நாங்கள் இல்லை!"

"நீங்கள் விசர்க் கதை கதைக்கிறியள் கந்தவேள். எங்களுக்கு தெரியாமல் எங்களுக்கு கலியாணம் நடந்ததே.? நான் அதற்கு ஓமெண்டனானே...?" என ஒரே போடாகப் போட்டாள்!

ராஜம்மாளின் குரல் உரத்து ஒலித்தது.

"ஏய் நிலாவினி இஞ்சை ஓடிவா பிள்ளை..."

கந்தவேளுக்கு அதன் பின்னர் நிலாவினியை சந்தித்துப் பேச சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

'சரி எட்டு' முடிந்ததும் தான் நிலாவினியுடன் தலைநகர் சென்று விடுவேன் என ராஜம்மாள் கூறியிருந்தாள்...

அதற்கிடையில் ராஜநாதருக்கு சரியான பராமரிப்பு இல்லாததால் இரத்தத்தில் 'குளுக்கோசின்' அளவு அதிகரித்து ஒரு நாள் மயக்கமுற்று விழுந்துவிட்டார்...

வங்கி சென்று வேலையை பாரம் எடுக்க திட்டமிட்டிருந்த ராஜநாதர் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்...

ராஜம்மாள் தான் ஏற்ற பொறுப்பிலிருந்து விலகுபவள் அல்ல. 'சரி எட்டு' முடியும் வரை காத்திருந்து கடமைகளை நிறைவேற்றிய பின் ராசத்திடம் விடை பெற்றுக் கொண்டு நிலாவினியுடன் தலைநகர் திரும்பிவிட்டாள்.

மாலையில் கந்தவேள் வந்தபோது தாய் மட்டும் வீட்டில் இருந்தாள்.

நிலாவினி போய்விட்ட தகவல் கந்தவேளுக்கு அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் கொடுத்தது...

"அம்மா... நாங்கள் இனி ஆருக்காக இஞ்சை இருக்க வேணும்... வெளிக்கிடு வீட்டை போவம்..."

கந்தவேள் அதட்டினான்...

"ஏன் தம்பி அப்படிச் சொல்லுறாய்... நாங்கள் இந்த வீட்டைப் பாராமல் இப்ப இருக்கிற நிலையிலை ஆர் பாக்கிறது...?"

ராசம் பரிதாபப்பட்டு கதைத்தாள்...

"உனக்கு நியாயம் சொல்ல நான் தயாரில்லை... நீ உன்ரை துணிகளை எடுத்துக் கொண்டு வா..."

கந்தவேள் அதட்டினான்...ராசம் பயந்து விட்டாள். தனது ஆடைகளை எடுத்து பெரிய 'சொப்பிங்பாக்கில்' செருகியவள் வீட்டைப் பூட்டி எடுத்த பின்னர் கந்தவேளை தொடர்ந்து நடந்தாள்.

கந்தவேள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது... பின்னர் அது விம்மலாகவும் அழுகையாகவும் மாறியது...

" அம்மா........ நிலாவினி எனக்கு மனைவியாகக் கிடைக்காட்டில் நான் சாகும் வரையிலை கலியாணம் முடிக்க மாட்டன்"

கந்தவேளின் தேம்பல் அதிகரித்தது...

ராசம் அதிர்ந்து போனாள்...

****************************

பல நாட்களாக ராஜநாதர் வீடு பூட்டிக் கிடப்பதை சில வேற்றின காடையர்கள் அவதானித்தனர்... நான்கைந்து பேராக சேர்ந்து நிலாவினி வீட்டு மதிலில் அமர்ந்து கதைப்பது போல வளவை நோட்டம் விட்டனர்...

நாள் பூராக வீட்டின் முன்பாக ஆள் மாறி ஆள் மாறி யாராவது அங்கு வந்து போகின்றார்களா என்பதை அவதானித்தார்கள்.

செழித்து வளர்ந்த தென்னைகளில் நிறைய இளநீர் குலைகள் தொங்கிக் கொண்டிருந்தன...

இருவர் மதிலில் இருக்க மற்றொருவன் மரத்தில் ஏறி பருவமான இளநீர்களை பிடுங்கி போட இன்னுமொருவன் அவை கீழே விழுந்து உடைந்து விடாதபடி ஏந்தி ஏந்தி நிலத்தில் வைத்தான்...

அவர்கள் இளநீர் இறக்குவதைப் பார்த்த அதே இனத்தை சேர்ந்த மேலும் சில இளைஞர்கள் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டனர்... ஒரு சில நாட்களில் அத்தனை தென்னைகள் இருந்தும் ஒரு குரும்பை கூட எஞ்சவில்லை!

இளநீர் குடிப்பதற்காக வந்து சேர்ந்த பலரில் சில கில்லாடிகள் இருந்தனர்...

அதில் ஒருவன்

"மச்சான்...கடமுத கே...?" ( வீட்டை உடைப்போமா?) என பகிடிபோல் வினாவினான்...

மற்றொருவன்...

"ஏ மத் கறணவதபாங்?" (அப்படியும் செய்வதா?) என அவனை அதட்டினான்...

மொத்தத்தில் வீட்டை உடைப்பது மிக மிக தவறு என்று ஒருசாரார் வாதாடினர்... வெகு சிலர் உடைத்தால் என்ன தப்பு என்று வாதாடினர்...

இதில் வீட்டை உடைப்பது மிக மிக தவறு என்று வாதாடிய சாராரில் ஒருவன் ஒரு மாலைப் பொழுதில் மதில் ஏறி குதித்து வீட்டை உடைத்து தான் அந்நாட்களில் அதிகம் விரும்பிய தொலைக் காட்சி பெட்டியை தூக்கி தலையில் வைத்தபடி சென்று விட்டான்...

மறுநாள் அவன் வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கப்பட்டு விட்டதென்ற கதை இளைஞர்கள் மட்டத்தில் ஆச்சரியத்துடன் பேசப்பட்டது...

அதற்குக் காரணம் அவனது தந்தை ஒழுங்காக மீன் பிடித்தல் தொழிலுக்குச் செல்லாததால் வீட்டில் மிகுந்த ஏழ்மை நிலவியது தான்.

அக்கம்பக்கம் வீடுகளிலுள்ளோரும் மீன்பிடித் தொழிலையே ஜீவனோபாயமாக கொண்டிருந்ததால் அங்கும் தொலைக் காட்சி பெட்டியொன்று இருக்கவில்லை. எனவே கூடுதலாக பெண்களும் சிறுவர்களும் நிகழ்ச்சிகளைப் பார்க்க வந்து கூடியிருந்தனர். சிறுவர்கள் ஆட்டமும் பாட்டமுமாக ஒரே குதூகலத்துடன்

இருந்தனர். அதில் ஒரு பெண்மணி ஆடிக் கொண்டிருக்கும் சிறுவனொருவனை தன்னருகில் அமர்ந்திருந்த இளம் பெண்ணொருத்திக்கு காட்டி...

"உவன்தான் எனது ஒரே மகன்... பாடசாலையில் பாலர் நிகழ்ச்சி ஒன்றிற்கு அவனை புத்த பெருமானாக நடிக்க தெரிவு செய்திருந்தார்கள். அவன் வீட்டிற்கு வந்து என்னால் புத்த பெருமானாக நடிக்க முடியாது என்று அடம் பிடிக்கிறான்..." என்று கூறி உரத்து சிரித்தாள்...

இளம் பெண்ணுக்கு அவள் என்ன கூறுகிறாள் என்பது புரியவில்லை.

"அப்படி என்றால் அவனுக்கு யாராக நடிக்க விருப்பமாம்...?" என வினாவினாள்.

இளம்பெண்ணுக்கு தெரியும் எந்த தாயும் தனது பிள்ளையை புகழவே விரும்புவாள் என்று... அவள் தனது மனத்திற்குள் இந்த பையன் என்ன பாத்திரத்தில் நடிக்க விரும்புவான் என விதண்டாவாதமான ஒரு கற்பனையை வளர்த்துப் பார்த்தாள்... மறுகணமே அந்த பையன் மீன் கூடையை தோழில் சுமந்தபடி 'மாலு...மாலு' என்று கூவியபடி வந்தான்.

அவளுக்கு வந்த சிரிப்பை மிகுந்த கஷ்டப்பட்டு அடக்கி கொண்டாள்...

தாய் கூறினாள்...

"எனது பையன் ஒரு இராணுவவீரனாக நடிக்க வேண்டும் என்றே விரும்புகிறான்...! "

இளம் பெண் தனது தாடையை தோளில் இடித்துக் கொண்டாள்...

தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் தெளிவில்லாமல் இருந்ததை அவதானித்த இளைஞன் ஒருவன் அதனை சுட்டிக் காட்டினான்.

மறுநாள் உயரமான 'அன்ரனா' ஒன்று வந்து விட்டது. பூதம் ஒன்று அந்த வீட்டு இளைஞனுக்கு உதவி செய்கின்றது என்று யாராவது நம்புபவர்கள் இருந்தால் சரி மற்ற அனைவருக்கும் சந்தேகம் வந்து விட்டது. உடனேயே

தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதை நிறுத்தி விட்டு பெண்கள் தத்தம் வீடுகளுக்குள் போய் அங்குள்ள இளைஞர்களை விழிப்பூட்டினார்கள்.

இளைஞர்கள் தத்தம் வீடுகளிலிருந்து புறப்பட்டு ஒரு பொது இடத்தில் சந்தித்து நிலைமையை ஆராய்ந்தார்கள்...

கந்தவேள் நிலாவினிக்கு வாங்கிக் கொடுத்த 'லவ்பேர்ட்ஸை' மறுநாள் எடுத்து சென்றிருந்தான்.

அதைத்தவிர ராஜநாதரால் அவரது சேவைக் காலத்தில் கஷ்டப்பட்டு சேகரித்த தளபாடங்கள்... நிலாவினிக்காக வாங்கப்பட்ட மின் உபகரணங்கள், ஸ்கூட்டி, நிலாவினி ஆசையுடன் வாங்கி சேகரித்த ஆடைகள் என நிறைய பொருட்கள் இருந்தன.

ஒரு நாள் இரவிலேயே அத்தனை பொருட்களும் ஒரு உடுதுணி கூட இல்லாமல் சூறையாடப்பட்டன!

அடுத்த சில நாட்களில் வீட்டின் நிலை கதவுகள், கூரை எதுவுமின்றி வீடு வெறிச் சோடிக் கிடந்தது...

சில தினங்களின் பின் தென்னைகள் எதிலாவது இளநீர்கள் இருக்கின்றதா என பார்க்க வந்த சில இளைஞர்கள்

"பவ்பாங்... மேமத்கறனவாத...?"
(பாவமடா இப்படியும் செய்வதா?...)

என ஒருவரை ஒருவர் வினவிக்கொண்டார்கள்!

## — 22 —

தலைநகரில் ராஜம்மாள் வீட்டில் நிலாவினிக்கு தனி அறை ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது...

அவர்களது ஒரே மகன் பிரதீப் தனியார் நிறுவனமொன்றில் பதவிநிலை உத்தியோகத்தராக பதவி வகித்துக் கொண்டிருந்தான்... தனது பதவியை தக்க வைத்துக் கொள்ளும் சமார்த்தியமும் அதில் முன்னேறும் திறனும் அவனிடமிருந்தது. சக ஊழியர்களிடம் அன்பாக பழகி உயர் அதிகாரிகளிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததால் நிறுவனத்தில் அவனுக்கு நல்ல பெயர் இருந்தது...

அவனது அலுவலக கடமைக்காக அவனுக்கு தனி வாகனம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

நிலாவினி யார்? என்ன காரணத்திற்காக அங்கு அழைத்து வரப்பட்டிருக்கிறாள். என்ற விபரங்களை தாய் மகனிடம் கூறியிருந்தாள்...

பிரதீப் நிலாவினியுடன் அன்பாக பழகினான்... அவளை மாலை நேரங்களில் தனக்காக வழங்கப்பட்டிருந்த வாகனத்தில் அழைத்துச் செல்வான்...

அன்று நிலாவினி தாயினதும் தமையனினதும் இழப்பின் பின் தலைநகர் திரும்பியிருந்தாள்...

"நிலாவினி... உங்களுக்கு இப்படி ஒரு இழப்பு ஏற்பட்டிருக்கக் கூடாது... தனியார் நிறுவனங்களிலை லீவு எடுக்கிறதாலை பதவிக்கே பிரச்சனையாய் போய்விடும். அதனாலைதான் நான் உங்களோடை வந்து மரண சடங்கிலை கலந்துகொள்ள முடியேல்லை... என்ரை அனுதாபங்களை ஏற்றுக் கொள்ளுங்கோ..."

பிரதீப் மனத்துயருற்று கதைத்தான்...

நிலாவினி கண்ணீர் பெருக்கெடுக்க அழுதாள்... தந்தையின் நிலையை எண்ணி அழுவதா?... தாய் மற்றும் தமையனின் இழப்பை எண்ணி அழுவதா...

அவளது அநாதரவான நிலையை எண்ணியே அவள் அழுதாள்... பின்னர் கண்களை துடைத்து விட்டபடி...

"பிரதீப்... நான் இனி என்னத்துக்காக வாழ வேணும் எண்டது எனக்கே தெரியேல்லை... அப்படி வாழ வேண்டி வந்தாலும் எனக்கு ஏற்பட்ட கவலைகளை எல்லாம் மறந்து நான் எப்படி சந்தோசமாக இருக்க ஏலும்... அழிஞ்சு போக வேண்டிய என்னுடைய வாழ்க்கையிலை நீங்கள் பங்கேற்கிறதை நான் விரும்பேல்லை..."

நிலாவினியுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களால் அவள் எவ்வளவு தூரம் தாக்கப்பட்டிருக்கிறாள் என்பதை பிரதீப் மானசீகமாக உணர்ந்தான்...

எப்படியும் நிலாவினியை தேற்றி வாழ வைக்க வேண்டும் என்று திடமான ஒரு தீர்மானத்தை அவன் எடுத்துக் கொண்டான்...

அதனால் அவளை மகிழ்விக்கும் பொருட்டு கடற்கரை, 'சினிமா' மற்றும் கேளிக்கைகள் நடைபெறும் இடங்கள் அனைத்திற்கும் அழைத்துச் சென்றான்...

நாள் செல்ல செல்ல நிலாவினியின் மன நிலையிலும் மாற்றம் ஏற்படவே செய்தது...

பிரதீப்புடன் தோளுக்கு தோள் நிகராக நடந்து சென்றாள். கடற்கரை மணலில் அவனை தள்ளி விட்டு சிரித்தாள்... சினிமாவில் அவன் அருகாக அமர்ந்து காதல் படங்களை கண்டு களித்தாள்...

ராஜம்மாள் எட்ட இருந்தே அனைத்தையும் அவதானித்தாள்... நிலாவினியின் மனநிலையிலும் மாற்றம் ஏற்பட்டு அவள் மகிழ்ச்சியாக வாழ விரும்பும் காலகட்டம் வரை அவளை அப்படியே விட்டு வைக்கவே அவள் விரும்பினாள்... மகனினது வாழ்க்கை ஒரு பெண்ணின் கண்ணீரில் ஆரம்பமாவதை எந்த தாய்தான் விரும்புவாள்...

நிலாவினி இப்போதெல்லாம் 'அங்கிள்'... 'அன்ரி' என்று இருவரையும் அழைத்துச் சிரித்து கதைக்க தொடங்கியிருந்தாள்....

ராஜம்மாள் கணவரிடம் கூறினாள்...

"என்னப்பா, நிலாவினி உறவுகளையெல்லாம் இழந்து அநாதரவாக எங்களட்டை தஞ்சம் புகுந்திருக்கிறாள்... தாலி கட்டைத்தான் ஒருவருஷம் முடிஞ்சு செய்தாலும் விவாக எழுத்தையெண்டாலும் இப்ப செய்து விட்டால் என்ன...?

"எனக்கெண்டால் அது உடன்பாடாய் தெரியேல்லை... நிலாவினியை நீ ஏன் பிறத்திப் பிள்ளையாப் பார்க்கிறாய். அவளை எங்கடை வீட்டுப் பிள்ளையாய் பார்... பிரதீப் அவளிலை உயிரையே வைச்சிருக்கிறான்... விவாக எழுத்தை எழுதேல்லை எண்டதுக்காக என்ன மாற்றம் வரப்போகுது...?"

ராஜம்மாளும் அவரது கருத்துடன் ஒத்துப் போனபடியால் இருவரும் அவர்களை பழகவிட்டு அமைதி காத்தார்கள்...

கந்தவேளுக்கு மீண்டும் 'சிலிடாவில்' கணினி பயிற்சி ஆரம்பமாகவிருந்ததால் அவன் தலைநகர் வந்ததுடன் நிலாவினியின் இருப்பிடம் தேடி வந்தான்...

அவன் வீட்டிற்கு வந்த சமயம் நிலாவினி பிரதீப்புடன் வெளியே சென்று விட்டிருந்தாள்...

கந்தவேள் அவளுக்காக காவல் இருந்தான்... மரண வீட்டின் போது முன்னின்று உழைத்தவன் என்ற வகையில் ராஜம்மாள் அவனை அறிந்திருந்தாள். எனவே குளிர்பானம் வழங்கி உபசரித்தாள்.

நிலாவினி வீட்டிற்குள் வரும்போது பிரதீப்பின் கைகளை பற்றியபடி ஓடி வந்தாள்...

கந்தவேள் அதிர்ந்து விட்டான். தனது அதிர்ச்சியை காட்டிக் கொள்ளாத வனாக எழுந்து நின்றான்...

நிலாவினிக்கு கந்தவேளைக் கண்டதும் இன்ப அதிர்ச்சி ஒரு புறம். மறுபுறம் வீட்டு ஞாபகம் வந்துவிட்டது. அவனை எதிர்த்தாற்போல் இருந்த ஆசனத்தில் வந்தமர்ந்தாள்... முதலாவது கேள்வியாக .......

"அப்பா எப்படி இருக்கிறார் கந்தவேள்?" என்றே வினாவினாள்...

"அப்பா இன்னமும் வைத்திய சாலையிலேயே இருக்கிறார்... அம்மாவும் சுரேஷும் பறிபோனபின்னர் அவருக்கு நீரிழிவு நோய் அதிகரித்து விட்டது. அத்துடன் உயர் இரத்த அழுத்தம் வேறு... வைத்திய சாலைச் சாப்பாடு. நன்றாக மெலிந்து அடையாளம் காணமுடியாதபடி இருக்கிறார். நான் அவரை பார்க்க போகும் சமயம் உன்னை விசாரித்து அழுகிறார்"

"உன்னுடைய அம்மா எப்படி இருக்கிறா?" நிலாவினி வினாவினாள்

"நீ போன பிறகு அவாவுக்கு வாழ்கையிலை இருந்த கொஞ்சப் பற்றும் போய்விட்டது... எப்பவும் தங்கச்சியையும் உன்னையும் பற்றித்தான் கதைத்து அழுவா..." கந்தவேள் பதிலிறுத்தான்.

நிலாவினி சிறிது நேரம் மௌனம் காத்தாள்... பின்னர் திடீரென நினைவுக்கு வந்தது போல...

"அப்ப என்னுடைய 'லவ்பேட்ஸ்?" என வினாவினாள்.

கந்தவேள் தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

"ஏன் கந்தவேள் என்னுடைய 'லவ்பேட்ஸ்கும்' என்னை விட்டுப் போய்விட்டதா...?" என கேட்டு விம்மினாள்...

பின்னர் நிலாவினி வீட்டுக்கு நேர்ந்த கதி பற்றிய எல்லா விபரங்களையும் கந்தவேள் கூறினான். 'லவ்பேட்ஸை' தான் தனது வீட்டில் பாதுகாப்பது பற்றியும் தெரிவித்தான்...

கந்தவேள் மண்டபத்தில் யாருமில்லாத ஒரு சமயத்தில் நிலாவினியிடம் வினாவினான்...

"நிலாவினி நீ என்னை மறந்து விட்டாயா?"

நிலாவினிக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. தனது குடும்பமே கால வெள்ளத்தில் அள்ளுண்டு போகும்போது தான் மட்டும் எதிர் நீச்சலா போடமுடியும் என எண்ணியவள் போலவும் முன்னர் புரிந்து கொள்ளாத எதையோ புரிந்து கொண்டவள் போலவும்...

"என்னை மன்னித்துவிடு கந்தவேள்" என்று இரந்தாள்.

கந்தவேள் வந்து திரும்பிய பின்னர் நிலாவினி மீண்டும் சோர்ந்து போனாள்...

பிரதீப்புக்கு அவளை மீண்டும் தேற்றி எடுப்பது பெரும் சிரமமாக போய்விட்டது...

நிலாவினிக்கு விருப்பமானவற்றையெல்லாம் வாங்கி வந்து கொடுத்தான்...

அவளை தனது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று சக உத்தியோகத்தர்களுக்கு அறிமுகம் செய்தான்...

அவளைச் சுற்றி ஒரு உலகம் இருக்கிறதென்பதை அவளுக்கு பல வழிகளிலும் உணர்த்தினான்...

நிலாவினி மெல்ல மெல்ல தனது கவலைகளை மறந்தாள்... பிரதீப்புடனான தனது ஈடுபாட்டை உயர்த்தி வந்தாள்... அவள் கவலைகளை மறந்து குதூகலிக்கத் தொடங்கவும் பிரதீப்புக்கும் அவள் மீதான நாட்டம் அதிகரித்தது...

அவளை தனிமையில் வைத்து கதைகள் பேச விரும்பினான்... அவளது பிரத்தியேக அறைக்குச் சென்றான்... கட்டிலில் அவள் அருகாக அமர்ந்து அவளது அழகை இரசிக்க முற்பட்டான்...

நிலாவினியை என்னதான் தனது திறமைகளால் பிரதீப் மன மாற்றம் ஏற்பட செய்திருந்தாலும் அவளுக்கு மகிழ்ச்சி ஏற்படும் சமயங்களில் அச்சமும் கூட வந்தது... அவள் ஒவ்வோர் சமயம் சந்தோஷத்தில் திளைக்கும் போதும் அதைத் தொடர்ந்து வேதனைகள் நிறைய வந்திருந்தன...

நிலாவினி சிந்தனையில் மூழ்கியிருந்தாள்...

பிரதீப் உணர்ச்சிவசப்பட்டவனாக அவளது தோள்களை உலுக்கி சுய நினைவுக்கு கொண்டு வந்தான்...

" என்ன நிலாவினி நான் உமக்கு கிட்ட இருக்க நீர் ஏன் பயப்பிடுகிறீர்... உமக்கு ஒரு துன்பம் வர நான் விடுவேனா?"

பிரதீப் தைரியமூட்டினான்.

நிலாவினிக்கு அப்போதுதான் தான் எங்கு என்ன நிலையில் இருக்கிறேன் என்பது புரிந்தது...

"பிரதீப்... எனக்கு பயமாயிருக்கு... சந்தோசம் எண்டு வரும் போதெல்லாம் இந்த இயற்கையே எனக்கு எதிராக திரும்புகிற மாதிரி எனக்கு உணர்வுகள் வருகுது... என்னுடைய உடலே அச்சத்திலை குறுகிப் போகுது... தவறு எண்டு கருதப்படுகிற அத்தனையையும் செய்து விட்டு தலைகுனிஞ்சு நிற்கிற ஒரு குற்றவாளி மாதிரியும்... உங்களுக்கு என்னை அர்ப்பணிக்கிறதுக்கு தேவையான தகுதிகளை இழந்து நிற்கிற பாவிமாதிரியும் என்னை நான் உணர்கிறன்..."

நிலாவினி விம்மி விம்மி அழுதாள்...

பிரதீப் சோர்ந்து விட்டான்... நிலாவினியை மகிழ்ச்சியாக வைத்திருக்க அவன் எடுத்து வருகின்ற அத்தனை முயற்சிகளுமே தகுந்த சமயங்களில் தவிடு பொடியாகி வருவது அவனுக்கு சோர்வை உண்டு பண்ணியிருந்தது...

" நிலாவினி... நீர் எப்பவுமே நடந்து முடிஞ்சதுகளைத்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்... உம்முடைய கண்களிலிருந்து பொலு பொலு என்று வடிகின்ற கண்ணீரைப் பார்த்து எப்பவுமே நான் கலங்கி போகிறன். அந்த கண்ணீரை துடைக்கிறதுக்காக நான் உமக்காக என்னென்ன செய்தன் எண்டதையெல்லாம் நீர் நான் சொல்லி தெரிஞ்சு கொள்ள வேண்டியதில்லை..."

பிரதீப் கூறுவதைக் கேட்ட நிலாவினி திடுக்குற்று விட்டாள்... பிரதீப் தொடர்ந்தான்...

" நானும் ஒரு இளைஞன்... எனக்கும் உணர்வுகள் இருக்கு... அதுவும் நல்ல ஒரு குடும்பத்திலை பிறந்து கட்டுப்பாடான வாழ்க்கையிலை நிலைச்சிருக்கிற

எனக்கு எனக்கான துணையை விட்டால் வேறு வடிகால் இருக்குமா...? உம்மை பார்த்து... பார்த்து உம்முடைய உச்சிமுதல் உள்ளங்கால் வரையிலான உமது அழகை இரசித்து இரசித்து நான் எனக்கே விதிச்சிருக்கிற கட்டுப்பாடுகளை எங்கை இழந்து விடுவனோ எண்டு பயமாயிருக்கு... உம்மை கட்டியணைச்சு... இந்த கட்டிலிலை போட்டு..." பிரதீப் விம்மி விம்மி அழுதான்.

நிலாவினி திடுக்குற்று விட்டாள். பிரதீப்புக்கு முன்னால் அவள் அழுத இரண்டு மூன்று சந்தர்ப்பங்களைக் கூறலாம்... ஆனால் பிரதீப் அழுது அவள் பார்த்தில்லை... அவளுக்கு கண்கள் நிறைந்து கொண்டு வந்தது...

உடையை சரி செய்தபடி கட்டிலால் இறங்கினாள்... " பிரதீப்... கொஞ்சம் இருங்கோ வாறன்"... என்று கூறிவிட்டு 'வோஷிங் ரூமுக்கு' போனாள்...

பிரதீப் அமைதி அடைந்தான்... முகத்தை துடைப்பதற்காக கைக்குட்டையை தேடினான். காணவில்லை... எதிரிலேயே கட்டிலில் நிலாவினியின் துவாய் இருந்தது... அதை எடுத்து கையில் விரித்து வைத்தபடி யோசித்தான். 'நிலாவினி யார்...? எனது வருங்கால மனைவி. அவளுடைய துவாயால் துடைத்துக் கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்...?' மறு கணமே முகத்தை துவாயால் மூடியபடி சுவாசத்தை உள்ளிளுத்தான்...

"ஓ... இது நிலாவினியின் சுகந்தம்!"

## — 23 —

ராஜநாதர் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது...

தலையில் சீழ் பிடித்த காயம் முற்றாக குணமாக நாட்கள் சென்று விட்டன...

கந்தவேள் இடையிடையே அவரைச் சென்று பார்த்து வரும் சமயங்களில் அவன் மூலம் சில தகவல்கள் அவருக்கு கிடைத்தன. வீட்டுச் சாமான்களும் வீடும் பறிபோனது அவருக்கு பெரும் கவலையை கொடுத்தது.

இறுதியாக அவன் அவரிடம் போயிருந்தபோது நிலாவினியை தான் ராஜம்மாள் வீட்டில் சந்தித்த விடயத்தை கூறியிருந்தான்... ராஜம்மாள் வீட்டில் அவள் பாதுகாப்பாகவும் சந்தோசமாகவும் இருப்பதை அறிந்து அவர் ஆறுதலடைந்தார்.

ஜூலி பற்றிய நினைப்பு அவர் மனதிலிருந்து முற்றாக நீங்கிவிட்டதென்று கூறமுடியாத நிலையிலேயே அவர் இருந்தார்...! அவளால் ஏற்பட்ட துன்ப துயரங்களுக்கெல்லாம் அப்பால் அப்படியெல்லாம் சம்பவங்கள் நிகழ்ந்திருக்காவிட்டால் அவளுடனான நட்பால் கிடைத்திருக்கக் கூடிய சுகம் ஒன்று இருந்தே இருக்கும் அல்லவா?!

அவள் இப்போ ஒழுக்கமுள்ளவளாக கணவனுடன் வாழ்ந்து கொண்டிருப்பாளா? அல்லது என்னைப் போன்ற வசதி படைத்த இன்னொருத்தனை சிநேகிதம் பிடித்திருப்பாளா? என்று எண்ணி எண்ணி அவர் மனம் கவலையுற்றது...

ஒழுக்க சீலியான தன் மனைவியுடன் வாழ்வதற்கும் பலரையும் இச்சித்து வாழும் வேசியின் நட்புக்கும் உள்ள வேற்றுமை இதுதான்...!

அவள் அவனுடன் கதைத்து விடுவாளா...? இன்னொருவனைப் பார்த்து சிரித்து விடுவாளா...? இப்படியான எண்ண அவஸ்தைகள் இருக்கிறனவே அவை போதும் மனிதனைக் கொல்வதற்கு...!

கந்தவேள் அன்றைய தினம் வைத்தியசாலைக்கு வந்திருந்தான்... ராஜநாதரை துண்டு வெட்டி வீட்டுக்கு அழைத்துச் சென்றான். ராசம் வரவேற்று ஆறுதல் கூறினாள்... அவர்களது சிறிய வீட்டில் அவர் ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அச் சமயம் அந்த ஆறுதலே அவருக்கு வேறு வழிகளால் கிடைக்காமல் இருந்தது...

வங்கி மேலிடத்தால் அவருக்கு கட்டளை இட்டவாறு அவர் தலைநகர் சென்றார்...

அவர் மேலான விசாரணை ஒன்று நடத்தப்பட்டது. ஏற்கனவே பெறப்பட்ட சாட்சியங்களின் அடிப்படையில்... வங்கியின் நற்பெயருக்கு அவரால் குந்தகம் ஏற்பட்டது... வியாபார கணக்குகள் இலாபம் தரும் வகையில் கையாளப் படவில்லை... அவருடைய ஆரோக்கியம் வங்கி செயற்பாடுகளை சுறுசுறுப்பாக கொண்டு நடத்துவதற்கு போதுமானதாக இல்லை என்பன போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

பலதடவைகள் விசாரணைக்குழு மேலிடத்துடன் கலந்து பேசியது... ஈற்றில் தனது விசாரணையை முடிவுறுத்தி விதந்துரையை வழங்கியது....

ராஜநாதர் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார்.

ஒரு சமயம் சகல அதிகாரங்களுடனும் ஒரு வங்கியின் பிரதான கிளையொன்றில் முகாமையாளராக கடமையாற்ற தெரிவு செய்யப்பட்ட ராஜநாதர் இன்று வங்கியின் எந்தக் கிளையிலும் கடமையாற்றுவதற்கு தகுதியற்றவர் என்று காணப்பட்டு வெளியேற்றப்பட்ட நிலையில் அந்த உயர் மாடிக்கட்டடத்தின் முன்பாக நின்று தன்னைத் தானே ஒரு கணம் எடை போட்டுப் பார்த்தார்...

'இனிமேல் நான் ராஜநாதர் இல்லை... நான் இப்போ ராஜநாதனாக தகுதி இறக்கப்பட்டிருக்கிறேன்... எனது கையில் மாதாந்தம் ஓய்வூதியமாக சிறிது பணம் புரளும்... அது எனது நோயை பராமரிப்பதற்கு போதுமானது... எனக்கு உணவு வாங்குவதற்கே பணம் போதாமல் இருக்கும். எனது பசியை தணிப்பதற்காக நான் கையேந்தும் நிலை ஏற்படலாம்...' என்றெல்லாம் அவர் எண்ணினார்.

பலரும் நடமாடும் அந்த பிளாட்பாரத்தில் அவர் நின்று கொண்டிருந்தார். ஆனால் அவரை அறிந்தவர்கள் எவரும் அடையாளம் காணும் உருவத்தில்

அவர் இல்லை...!

எனவே சுதந்திரமாக அவர் அழுதார்... நடந்த சம்பவங்கள் ஒவ்வொன்றையும் நினைத்து நினைத்து குமுறினார்... அப்படி செய்வதன் மூலம் அவர் மனப்பாரம் இறங்கியது...

வாழ்கை பூராகவும் எல்லாவற்றையுமே திட்டமிட்டு செய்த ஒருவர்... தெருவில் நின்றபடி அடுத்தகணம் என்ன செய்ய வேண்டும் என எண்ணித் தடுமாறும் நிலமையை என்னவென்று சொல்வது...!

அப்படி ஒரு கொடுமை... ஐயா விரோதிக்கு கூட வரவேண்டாம்!

அலுவலக நேரம் முடிந்து விட்டதால் தெருவில் நடமாட்டம் அதிகரித்து வந்தது. நிலாவினியைப் போல உடையணிந்து ஒரு பெண் ராஜநாதரை நோக்கி வந்து கொண்டிருக்கவும் அவரது மெய் சிலிர்த்தது. ஆவலுடன் அவளையே உற்றுப் பார்த்தபடி நின்றார். மிஞ்சியது ஏமாற்றமே...! அவர் நினைத்தது ஏதும் நடக்க வேண்டாமென்று இறைவன் விதியை நிர்ணயித்து நீண்ட நாட்களாகி விட்டனவே!

நிலாவினி இருக்குமிடத்தை எப்படி தேடிக் கண்டுபிடிப்பது என அவரது சிந்தனை ஓடத் தொடங்கியது...

ராஜநாதர் வழக்கில் ஜோர்ஜ் விடுதலையான பின்னர் ஜோர்ஜ் தாக்கப்பட்ட விவகாரம் 'பொலிஸ்' வழக்காக நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டிருந்தது. தகுந்த சாட்சியங்கள் கிடைக்கா விட்டாலும் அச்சந்தர்ப்பம் சூழ்நிலைகளை ஆதாரமாக கொண்டு சுரேஷ் கைது செய்யப்பட்டு பிணை கூட மறுக்கப்பட்டது...

துரதிஷ்டவசமாக சுரேஷ் சிறையில் மரணித்ததை தொடர்ந்து 'பொலிசாருக்கு' அந்த வழக்கை கொண்டு நடத்துவதில் தடைகள் ஏற்பட்டன. ஜோர்ஜ் தாக்குதல் சார்பாக எந்த தடயங்களும் கிடைக்கவில்லை...

அனேகமான குற்றச்சாட்டுக்கள் குறித்து 'பொலிசார்' நடவடிக்கை எடுப்பது அக் குற்றச் செயல்கள் பற்றி பொதுமக்கள் மத்தியிலும் பத்திரிகைகளிலும் பேசப்படும் வரையில் மட்டுமே... பத்திரிகைகள் கூட பொது மக்களின் ஆர்வம் இருக்கும்

வரைக்கும் எழுதும். பின்னர் எழுதுவதை நிறுத்திக் கொள்ளும். 'பொலிசாரும்' அத்துடன் அமைதியடைந்து விடுவர்... குற்றவாளிகள் மீண்டும் சுதந்திரமாக இயங்கத் தொடங்குவர்...

ஜோர்ஜின் வீடு மேட்டினின் வீடு அமைந்துள்ள அதே வீதியில் அமைந்திருந்தாலும் ஜூலி கேட்டுக் கொண்டதன் பிரகாரம் அவன் தனது தேவைகளுக்காக மாற்றுப் பாதையை பாவித்தான்... ஜூலியின் சொற்கேட்டு நடந்தால் தனக்கு எந்த ஆபத்தும் நேராது என அவன் நம்பிய அதே வேளை ஜோர்ஜை தான் மதித்து நடந்தால் பிற ஆடவர் தன்னை கண்ணெடுத்தும் பாரார் என்பதை ஜூலி புரிந்து கொண்டாள்.

தனது கணவன் இருக்கும்படியாக பிற ஆடவன் ஒருவனுடன் இரகசியமாக சினேகம் வைத்துக் கொள்வதில் உள்ள ஆபத்தை ஜூலி அனுபவரீதியாக உணர்ந்தாள்...

ஜோர்ஜ் தொழில் கிடைத்தது முதல் தனது சம்பளத்தை முற்றாக அவள் கையில் கொடுத்துவிடுவதால் அவனை ஜூலியால் நன்கு கவனிக்க முடிந்தது... தனக்கொப்பாக அவனை உடையணிய வைத்தாள்... அவனுக்கு நல்ல ஆகாரம் கொடுத்தாள்... அவனுடன் மகிழ்வாக சுற்றித் திரிந்தாள்...!

தனது வீட்டுக்கு ஜோர்ஜ் வராதபடி ஜூலி கட்டளையிட்டிருக்கிறாள் என்பது மேட்டினால் உணரப்பட்ட ஒரு விடயமாகவே இருந்தது...

தவிர ராஜநாதர் கடைசியாக ஜூலி வீட்டிற்கு வருகை தந்திருந்த சமயம் தான் அடாத்தாக அவர் புறப்படும்வரை காவலிருந்தது அவளுக்கு சீற்றத்தை உண்டு பண்ணியிருக்கும் என்பதையும் மேட்டின் புரிந்து வைத்திருந்தாள்... எனவே அன்று வீட்டில் நடைபெற இருந்த புதுவருட விருந்துபசாரத்திற்கு ஜூலி அழைக்கப்படவில்லை.

மேட்டின் வாழ்க்கை தனிமையிலேயே அமைந்திருந்தது... அவளுக்கு பணி புரிபவர்கள் இரவில் அங்கு தங்குவதில்லை. இரவில் அங்கு என்ன நடக்கிறதென்பதை அறிவதற்கு எவராவது ஒரு பணியாள் ஆர்வம் காட்டினால் அவன் மறுநாளே கணக்குத் தீர்க்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவான்.

பிரதான வாயிலின் இருபக்க தூண்களிலும் பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகள் தெருவில் போவோரின் கண்களை குருடாக்கி அவளது வீட்டில் என்ன நடக்கிறதென்பதை இருட்டடிப்புச் செய்தன.

அன்று மாலை அவளது வீட்டை ஒரு விருந்துபசாரத்திற்காக தயார் செய்து விட்ட பணியாட்கள் வீடு திரும்பி விட்டனர். பிரதான வாயிற் கதவு திறக்கப்பட்டிருந்தது...

முதலில் நீளமானதொரு 'கார்' மிதந்து வந்து 'போர்ட்டிக்கோவில்' நின்றது... ஜோர்ஜின் மீதான குற்றச் சாட்டை விசாரித்து அவனை பிணையில் விடுவித்த சட்டத்தரணி படகு போன்ற அந்தக் 'காரின்' சாரதி ஆசனத்தை திறந்து இறங்கினார்... மேட்டின் கைலாகு கொடுத்து அவரை அழைத்துச் சென்று மண்டபத்தில் இருத்தினாள்...

மேட்டின் அவருடன் அமர்ந்திருந்து சிறிது மது அருந்தினாள்... நிலா போன்ற வெளிச்சத்தில் குளிரூட்டியின் இதமான குளிரில் அவருக்கு அந்த அனுபவம் புதிதாக இருந்தது...

சிறிது நேரத்திலேயே மேலும் சில ஆடம்பர 'கார்கள்' வந்து சேர்ந்தன... ஒரு 'காருக்கு' ஒருவர் என்ற ரீதியில் சிரேஷ்ட 'பொலிஸ்' அத்தியட்சகர், மாவட்ட செயலாளர்... அமைச்சொன்றின் செயலாளர் ஆகியோர் வந்து இணைந்து கொண்டனர்.

மேட்டினால் அவர்கள் அனைவருக்கும் முதல் சுற்று மது பரிமாறப்பட்டது... அடுத்த சுற்று அவர்களாலேயே எடுக்கப்பட்ட போது அவர்கள் எழுந்து நின்று ஆடினர்...

அந்த விருந்தின் சிறப்பே எந்த ஒரு இசைக்குழுவும் அங்கு அழைக்கப் படாததே...! தெருவில் நின்று பார்ப்பவர்களுக்கு அங்கு ஒரு விசேடம் நடப்பதாகவே தெரிய நியாயம் இல்லாதிருந்தது...

மிகச் சிலரே கலந்து கொண்ட அந்த விருந்து வைபவம் உணவு வகையாலும் மதுவாலும் சூடு பிடிக்கும் சமயம் மேட்டின் அவர்களுடன் இணைந்து நின்று ஆடினாள்...

ஆடியபடியே அவள் ஒரு அழைப்பு மணியை அழுத்தியபோது நான்கு பக்க அறைகளிலிருந்தும் பறங்கியர் இன இளம் பெண்கள் குழுக்களாக வந்து விருந்தினர்களுக்கு ஒருவராக இணைந்து கொண்டனர்...!

விருந்து முடிந்து அனைவரும் புறப்படும்போது சாமம் ஆகிவிட்டது...

மேட்டின் அனைத்து 'கார்'களையும் வெளியே விட்டு பிரதான கதவை பூட்டும் நேரம் மறைவொன்றிலிருந்து நான்கு இளைஞர்கள் அவளை நோக்கி வந்தது தூண் மின் விளக்கின் வெளிச்சத்தில் தெளிவாக தெரிந்தது. அவர்களை அவள் உள்ளே எடுத்துக்கொண்டாள். மறைவிலிருந்து வேவு பார்த்துக் கொண்டிருந்த ஜூலி தனது கணவனின் காதில் "இவர்கள் தான் உன்னை பிணை எடுக்க வந்தவர்கள்" என்று கூறினாள். ஜோர்ஜ் தனது முகத்தை மனைவியின் கன்னத்துடன் உரசியபடி இரகசிய தொனியில் இவர்கள் தான் என்னை அடித்துக் கொல்ல முயன்றவர்கள் என்று கூறினான்...

பின்னர் ஜோர்ஜ்... "அப்பாவியான சுரேஷ் அநியாயமாக சிறையில் அடித்துக் கொல்லப்பட்டான்" என்று கூறி பரிதாபப்பட்டான்...

"சுரேஷ் அடித்துக் கொல்லப்பட்டான் என்பது உனக்கு எப்படி தெரியும்" ஜூலி அந்த இருளிலும் அக்கம் பக்கம் பார்த்து கதைத்தாள்...

"என்னுடன் சிறையிருந்தவர்கள் எனக்கும் சுரேஷில் கோபம் இருக்கும் என்று எண்ணி உண்மையைக் கூறினார்கள்..." ஜோர்ஜ் கூறினான்...

குருட்டு ஆந்தை ஒன்றின் அலறல் ஊரை எழுப்பியது......

ஜூலிக்கு பயத்தில் குரல்வளை அடைத்தது...

"என்றாலும் ஜோர்ஜ் அன்று நீ ராஜநாதரை அப்படி கல்லால் மோசமாக அடித்திருக்கக் கூடாது..."

ஜூலியின் சொற்களில் நடுக்கம் தெரிந்தது...!

## — 24 —

'வோசிங் ரூமுக்கு' சென்ற நிலாவினி கை க்கால் கழுவி வெளியே வந்தபோது பிரதீப் அவளது துவாயால் முகத்தை மூடிய நிலையில் இருந்ததை கண்டாள். அதனால் அவள் மற்றொரு துவாயை எடுத்துக் கொண்டு...

"என்ன இது பிரதீப் சின்னப்பிள்ளை மாதிரி?" என்று வினாவினாள்...

பிரதீப் நிமிர்ந்து பார்த்தான். 'சோப்பால்' கழுவப்பட்ட அவள் முகம் நன்கு பிரகாசித்துக் கொண்டிருந்தது...

"நான் குழந்தைப் பிள்ளை இல்லை நிலாவினி... ஆனால் நிலாவினி என்கிற குழந்தைப் பிள்ளை என்னை குழந்தைப் பிள்ளை ஆக்கிக் கொண்டிருக்கின்றது...'

அப்படிக் கூறிவிட்டு பிரதீப் சிரித்தான்...

நிலாவினிக்கு பிரதீப்பின் நிலை கவலையை அளித்தது...

கட்டிலில் அமர்ந்திருந்த அவன் எதிரே கதிரை ஒன்றினை இழுத்துப் போட்டு அமர்ந்தான்...

"பிரதீப்... உங்கடை உணர்ச்சிகளை நீங்கள் கூறிவிட்டியள்... நீங்கள் விரும்புகிறியள் எண்டிறத்துக்காக நான் உங்கடை விருப்பத்திற்கு இணங்கினன் எண்டால் நான் ஒரு நடத்தை கெட்டவள் எண்ட ஸ்தானத்திற்கு இறங்கிறதாய்ப் போய்விடும். அதை என்னாலை செய்ய ஏலாது... எனக்கும் உங்கள் மேலே விருப்பம் வந்து நானும் உங்களை சேர விரும்பினால் தான் உங்கடை விருப்பத்தை என்னாலை நிறைவேற்ற முடியும்..."

பிரதீப் அதிர்ந்துவிட்டான்...

"நீர் என்னை விரும்ப வேணும் எண்டுறதுக்காகத் தான் நான் ஒவ்வொன்றையும் செய்யிறன். இன்னும் இன்னும் என்னுடைய வாழ்க்கை பூரா

உமக்கு கடமைகள் செய்யவும் தயாராய் இருக்கிறன்... இப்பவும் கேட்கிறன் நான் உம்முடைய அன்பை பெறுவதற்காக என்ன செய்ய வேணும் எண்டு சொல்லும்... உடனேயே செய்யிறன்..."

நிலாவினி ஒரு சில விநாடிகள் தலையை தாழ்த்தியபடி இருந்தாள்... பின் பத்து விரல்களையும் கோர்த்து நாடியை அதில் ஊன்றியபடி சிந்தித்தாள்... அவனுக்கு என்ன கூறுவது என்று தெரியாத நிலையில் அவள் தடுமாறினாள்... கதிரையில் நிமிர்ந்து அமர்ந்தாள். அவளிடமிருந்து பெருமூச்சொன்று புறப்பட்டது... பிரதீப்பின் முகத்தை நேருக்கு நேர் பார்த்தபடி கூறினாள்...

"நீங்கள் எனக்கு உதவி செய்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலையும் 'என்னை அடையிறத்துக்காகத்தான் நீங்கள் அப்படி எல்லாம் செய்யிறியளோ' எண்டு என்ரை உள்மனம் நினைச்சு கலங்குது..."

" அப்ப என்னை என்னதான் செய்யச் சொல்லுறீர் நிலாவினி?"

"நீங்கள் என்னோடை சாதாரணமாக பழகி வாங்கோ... ஒரு நாளைக்கு உங்கள் மேலை எனக்கு அன்பு வந்து நான் செய்யிறது சரி எண்டும் தெரிஞ்சால்......" நிலாவினி இழுத்தாள்...

"சரி எண்டும் தெரிஞ்சால்...?"

பிரதீப் வினாவினான்.

நிலாவினி கண்களை துடைத்தபடி கூறினாள்...

"சரி எண்டும் தெரிஞ்சால்... அப்ப நான் உங்களை தேடி உங்கடை அறைக்கே வருவன்.."

பிரதீப் தனது கைகளிலிருந்த நிலாவினியின் துவாயை குமைத்து அவளின் முகத்தில் விட்டெறிந்துவிட்டு வேகமாக வெளியேறினான்.

நிலாவினிக்கு அது பெரிய அவமானமாகப் போய்விட்டது. அதற்காக அவள் கவலைப்படவும் இல்லை...!

நீண்ட நேரமாக நிலாவினி தனிமையிலிருந்து அழுதுகொண்டிருந்தாள்...

அவளது நடமாட்டத்தை காணாத ராஜம்மாள் அவளது அறைக்கு தேடி வந்தாள்...

"ஏனம்மா... பிள்ளைக்கு ஏதும் சுகமில்லையா? ஏன் அழுகிறாய்... எங்களுக்கு சொன்னால்தானே தெரியும்..."

நிலாவினி ராஜம்மாளின் மடியில் தலை வைத்து அழுதாள்.

பின்னர் நிமிர்ந்து ... "அன்ரி ... என்னை ஏனெண்டு மட்டும் கேளாதையுங்கோ... என்னை ஊருக்கு அனுப்பிவிடுங்கோ" என்று கூறி பிடிவாதமாக நின்றாள்.

ராஜம்மாள் எவ்வளவு கூறியும் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை... பிரதீப்பும் அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

'அங்கிளின்' துணையுடன் அவள் பிரயாணம் செய்து தனது நகரை அடைந்தாள்... 'அங்கிள்' அவளை பஸ் நிலையத்தில் விட்டுவிட்டு தனது மீள் பிரயாணத்தை தொடங்கினார்.

நிலாவினி நேரே ராசம் வீட்டிற்கு வந்தாள்... கந்தவேள் வேலைக்கு போய்விட்டிருந்தான்...

நிலாவினியை கண்டதும் ராசத்திற்கு மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது. ஓடி வந்து அணைத்து முத்தமாரி பொழிந்தாள்... அவளுக்கு ஆகாரம் கொடுத்து தேற்றினாள்... பின் மடியில் கிடத்தி வைத்து கேசத்தை தடவி விட்டபடியே பேச்சுக் கொடுத்தாள்...

"பிள்ளை... உனக்கு எப்படி திடீரென்று எங்களைப் பற்றி நினைவு வந்தது?"

நிலாவினி அழத் தொடங்கினாள்...

"அன்ரி எனக்கு மூன்று மாதமாய் 'பீரியட்' வரேல்லை. காரணம் கந்தவேள் தான்... இதை நான் வேற எவரட்டையும் கூற ஏலாது. அதுதான் உங்களிட்டை ஓடி வந்தனான்..."

ராசத்திற்கு சிரிப்பு வந்தது...

"சீ பிள்ளை... அப்பிடி இருக்காது... உனக்கு வயித்திலை ஏதோ சுகம் இல்லை. இப்ப வெளிக்கிடு... நான் 'கிளினிக்குக்கு' கூட்டிக் கொண்டு போறன்..." என்று கூறினாள்...

வைத்தியர் நிலாவினியின் வயிற்றில் சிசு இருப்பதையும் அது மூன்று மாத வளர்ச்சி பெற்றிருப்பதையும் உறுதி செய்தார்...!

கந்தவேளுக்கு ராசம் இது பற்றி கூறியபோது அவன் தனக்கும் நிலாவினியின் தற்போதைய நிலைக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என திட்டவட்டமாக கூறிவிட்டான்.

நிலாவினி தானும் நேரில் அவனுடன் வாதிட்டாள். ஒரு மாலை நேரம் களஞ்சிய அறையில் அவன் தன்னுடன் நடந்து கொண்ட முறை பற்றி எடுத்து சொன்னாள்...

ஆனால் அவன் மனத்தில் தலைநகரில் நிலாவினி பிரதீப்பின் கைகளைப் பற்றியபடி வீட்டுக்குள் ஓடி வந்தது ஆழப் பதிந்திருந்தது. எனவே அவன் தாயையும் மிரட்டினான்...

"இவள் இனி ஒரு கணம் கூட இஞ்சை இருக்கக் கூடாது..." உரத்து சத்தமிட்டான். ராசம் வாய் பொத்தி நின்றாள்...

நிலாவினி உறவினர்கள் அனைவரையும் இழந்த நிலையில் வயோதிபர்கள் நாடும் அநாதை ஆச்சிரமத்தை அந்த இளம் வயதில் தேடி போனாள்!

****************************

ராஜநாதர் தன்னையே காப்பாற்ற முடியாதவராக தலைநகர் பூராக அலைந்து திரிந்தார்... அவரை ஒரு நினைப்பு கொண்டு உலாத்தியது. அது நிலாவினியைப் பார்க்க வேண்டும் என்பதாக இருந்தது...

தலைநகரில் அவர் இருந்தது போதும் என்று விதி உணர்ந்த போது அவரை ராஜம்மாள் வீட்டின் முன்பாக பிச்சைக்காரன் கோலத்தில் கொண்டுபோய் நிறுத்தியது...

ராஜம்மாள் அதிர்ந்தே போய்விட்டாள்... அவரை உள்ளே அழைத்துச் சென்று உபசாரம் செய்து சுகம் விசாரித்தாள். அவரிடம் இல்லாத ஒன்றை அவள் விசாரித்ததால் அவர் வெறும் சிரிப்பொன்றை மட்டும் உதிர்த்தார்...

"அண்ணை நிலாவினி அஞ்சு மாதங்களுக்கு முன்னாலையே தான் ஊருக்குப் போக வேணும் எண்டு ஒரே பிடியாய் நின்று எங்களை விட்டுட்டுப் போயிற்றாள்... பிரதீப்புடன் அவளுடைய மனம் ஒண்டேல்லை எண்டு தெரிஞ்சதாலை நாங்களும் அவளை தேடேல்லை..." ராஜம்மாள் விபரித்தாள்...

ராஜநாதர் அதன் பின் அங்கு இருக்கவில்லை. மீண்டும் நிலாவினியை தேடும் தனது பணியை ஆரம்பித்தார்...

எந்த ஒரு பைத்தியக்காரனும் ஏதோ ஒரு நோக்கத்துடன்தானே தெருவில் அலைந்து திரிகின்றான். அதற்கு ஒரு குறைநேராமல் தன்னால் இயன்றளவில் தனது மகளை சந்திக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அலைந்து திரிந்தார்...!

நிலாவினிக்கு இப்போ நிறைமாதம். ஆச்சிரம பராமரிப்பில் இருந்த அவளுக்கு ஒருநாள் வயிற்று நோவு எடுத்தது...

யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் அவள் நடந்தே வைத்தியசாலை சென்றாள்...

அவளை தேடுவதற்கு ஒரு உயிர் நகர் கிராமம் என்று இல்லாமல் அலைந்து திரிந்தது... மற்றொரு உயிர் அவளது கருப் பையில் இருந்தது...!

அழகான ஆண் குழந்தை ஒன்றை அவள் ஈன்றெடுத்த போது கண்ணீருக்கான சுரப்பிக்கு மேலதிகமாக மற்றொரு சுரப்பி அவளது உடலில் சுரந்ததால் சிசுவின் பசிக்கு அது ஆகாரமானது!

குழந்தை பிறந்து மூன்றாம் நாள் அவளை அழைத்துச் செல்ல யாருமின்றியே வைத்தியசாலை நிர்வாகம் துண்டு வெட்டி வெளியேற்றி விட்டது!

வைத்தியசாலை வளவில் நின்ற ஆலமர நிழலொன்றில் குழந்தையை மடியில் வைத்திருந்தபடி குழந்தையின் கன்னங்களை தட்டி அதை சிரிக்க செய்ய முயன்று கொண்டிருந்தாள் நிலாவினி.

குழந்தையோ வீல் என்று அழுதுகொண்டே இருந்தது...

வங்கி முகாமையாளரின் ஒரே மகள்... சுரேஷ் என்ற அண்ணனின் ஒரே ஒரு ஆசைத்தங்கை... சீதா என்ற உத்தமியின் பாசமிகு மகள்... பிறந்துவிட்ட குழந்தைக்கு தந்தை பெயரைக்கூட கூற முடியாத நிலையில் அந்த ஆலமரத்தை மட்டுமே தனக்கு கிடைத்த ஒரே நிழலாக கருதி பசியில் மயங்கி சோர்ந்தாள்...

குழந்தை வீரிட்டு அலறும் சத்தம் அவளால் உணரப்படும் சமயங்களில் அவளும் கண்விழித்து குழந்தையுடன் குழந்தையாக சேர்ந்து அழுது கொண்டிருந்தாள்...!

## — 25 —

இளமையின் மிடுக்கு மனிதனை ஆசை வலைக்குள் இட்டுச் செல்கிறது... ஆசையின் நிமித்தம் அவன் முதலில் இன்பத்தையும் ஈற்றில் துன்பத்தையும் அனுபவிக்கின்றான்... எதிர் கொள்கிறான்... தான் இளமையில் முதுமையை எய்த நேரும் என்பதை தெரிந்து கொண்டும் அவன் மதுவால் அடைந்து கொள்ளக்கூடிய அற்ப சுகத்தை நாடுகின்றான். 'எயிட்ஸ்' போன்ற நூற்றுக்கணக்கான நோய்கள் பற்றி அறிந்திருந்தும் மனிதன் பாலியல் சுகம் கிட்டும் இடங்களுக்கு பறந்து செல்கின்றான்...

ராஜநாதர் தலைநகரில் ஒரு தெரு வாசியாக அலைந்து திரிந்தார்... பராமரிப்பு இல்லாமையால் அவர் உடல்நலம் குன்றிக் கொண்டு போனது. சில சமயம் சித்த சுவாதீனம் உடையவராகவும் மற்றைய நேரங்களில் சித்த சுவாதீனம் அற்றவராகவும் அவர் இரட்டை வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்...

மாதம் ஒரு முறை வங்கி சென்றார். அவரை அறிந்து கொண்டிருந்த அதிகாரிகளும் ஊழியர்களும் உபசாரங்கள் செய்து ஓய்வூதியத்தையும் பெற்றுக் கொடுத்தனர். சில ஊழியர்கள் அவரை தம் வீட்டுக்கு அழைத்து நீராடச் செய்து அவரது பணத்திலேயே அவருக்கு வேண்டிய உடைவகைகள் மற்றும் மருந்து வகைகளை பெற்றுக் கொடுத்தனர்.

மனித மனம் எப்போதும் தனது தவறுகளுக்காக மற்றவர்களையே காரணமாக கருதுகின்றது...

சீதாவின் தவறே அவர் பாலியல் காரணங்களுக்காக மற்றொரு பெண்ணை நாடுவதற்கு அவரை தூண்டியது... அவள் எப்போதும் கணவன், பிள்ளைகள் என்று வீட்டுக் கருமங்களிலேயே முற்று முழுதாக தன்னை ஈடுபடுத்தியிருந்தாள்... நன்றாக... கவர்ச்சியாக ஆடை அணிய அவளுக்கு சந்தர்ப்பங்களோ கால அவகாசங்களோ இருக்கவில்லை... நாகரீக உடைகளை அவள் அறிந்திருக்க வில்லை... அல்லது அவற்றை பெற்றுக் கொள்வது அநாவசியம் என்றோ பணவிரயத்தை உண்டு பண்ணுவதென்றோதான் அவள் கருதினாள். மறுபுறம் ஆண்களுடன் பழகாத ஆண்களை தலைநிமிர்ந்தும் பார்க்காத அவளது கற்பு

நெறி வாழ்க்கை அவருக்கு சலிப்பை உண்டு பண்ணியிருந்தது. அவள் என்றுமே அவரை நாடி வராததும் தானே அவளை நாடிச் செல்ல வேண்டியிருந்ததும் 'அவளுக்கு அநாவசியமான ஒன்றை' அவள்மேல் தான் திணிப்பதான ஒரு எண்ணக் கருவூலத்தை அவருக்கு ஏற்படுத்தியிருந்தது... அவள் ஆன்மீக வாழ்க்கைக்கே மிகவும் பொருத்தமானவள் என்றும் அவரை போல் வாழ்வின் பயனை நாடி நிற்கும் ஒரு ஆணின் வேட்கைக்கு ஈடு கொடுக்க கூடியவளல்ல என்றும் அதனாலேயே அவர் மற்றொரு பெண்மேல் ஈடுபாடு கொள்ள நேரிட்டதேயன்றி அவரது தவறொன்றுமில்லை என்றும் ராஜநாதரின் மனித மனம் எண்ணியது...!

தலைநகரில் ராஜநாதரை எவரும் அறிந்திருக்கவில்லை. அவர் சிறப்பு மிக்க ஒரு குடும்பத்தின் தலைவர் என்பதையோ அவர் ஓர் எழுத்தாளர் என்பதையோ அறியாத நிலையில் சில நிர்ப்பந்தங்கள் காரணமாக கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட ஓர் வங்கி முகாமையாளர் என்றே அவர் அறியப்பட்டார்.

அதனாலேயே அவர் ஓய்வூதியம் பெறும் வங்கிக் கிளையின் ஊழியர்கள் சிலர் அவருக்கு பல விதங்களிலும் உதவி செய்ய தொடங்கினர். அவருடன் நெருங்கி பழகும் ஒரு சிரேஷ்ட அதிகாரி அவருடன் நெருக்கமாக உறவாடி அவர் சம்பந்தப்பட்ட அனைத்து பிரச்சனைகளையும் தெரிந்து கொண்டார்.

ராஜநாதருக்கு உதவக்கூடிய நிலையில் நிலாவினி என்றொரு மகள் இருக்க அவர் தலைநகரில் அலைந்து திரிவது பொருத்தமற்றதென்பதை அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

அதன் பலனாக அந்த அதிகாரியின் உதவியுடன் ராஜநாதர் திருக்கோணமலைக்கு பேரூந்து மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்.

அன்றைய தினம் பயண அலுப்பு காரணமாக ராஜநாதர் மீண்டும் உடல் சோர்வுற்ற நிலைக்கு தள்ளப்பட்டதுடன் ராசத்தின் வீட்டை தேடி போக இயலாத நிலையில் ஒரு கோவிலின் முன் மண்டபத்தில் படுத்து தூங்கிவிட்டிருந்தார்.

அது ஒரு ஞாயிறு தினம்... மின்னல் போல விட்டு விட்டு சில எண்ண அலைகள் அவரை தாக்கிக் கொண்டிருந்தன... அவரது நினைவில் ஜுலி என்ற பெண்ணின் சாயல் வந்து மோதி மோதி சென்றது. அவரது கால்கள் அவருடைய

நோக்கங்கள் எதற்கும் கட்டுப்பட்டதாக அன்றி அவருக்கு முன்னர் பழக்கப்பட்ட ஒரு பாதையில் நகர்ந்து கொண்டிருந்தன.

அந்த பாதையில் எதேச்சையாகவோ... விதியின் பாற்பட்டோ அவர் ஒரு வீட்டின் முன்பாக வந்து விட்டிருந்தார்... புதிதாக அமைக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்ட அழகிய வீடு. முன்புறம் மதில் கட்டப்பட்டு பிரதான வாயிற் கதவு வீட்டின் முன் தோற்றத்திற்கு மேலும் எழிலூட்டியது.

ராஜநாதர் அங்கு சிறிது நேரம் தாமதித்ததனால் அந்த வீட்டுக்காரப் பெண் வழமையாக அந்நேரம் பிச்சை கேட்டு வரும் ஒரு ஏழை வயோதிபர்தான் வந்து விட்டார் என எண்ணி வேகமாக வெளிவந்து அவரது கைகளில் சில நாணயங்களை திணித்து விட்டு திரும்பி விட்டாள்.

ராஜநாதர் அதிர்ந்தே விட்டார்...

ஓ... அது ஜுலியேயல்லவா...?!

****************************

விதி தீர்மானித்து விட்டால் மனிதனின் புத்திக் கூர்மை என்ன செய்துவிடக் கூடும்...! அன்றைய தினம் ஜுலியின் கையாலேயே தான் பிச்சை வாங்கிக் கொள்ளும் நிலைமைக்கு போய்விட்டது அவருக்கு பெரும் சாட்டை அடியாக அமைந்து போனது...! அந்த அடி காரணமாக அவரில் ஒரு உத்வேகம் ஏற்பட்டது...!

'எப்படியாவது ராசத்தின் வீட்டைக் கண்டு பிடிக்க வேண்டும். அவள் மூலம் நிலாவினியை சந்தித்து அவளது வாழ்வை மேம்படுத்த வேண்டும்' என்றெல்லாம் எண்ணியபடி மாலை வெயில் அவர் மேல் படுவதையும் பொருட்படுத்தாது அந்த கோவில் மண்டபத்தில் தூங்கிவிட்டார்.

மாலையில் அவரை யாரோ துயில் எழுப்புவது போல் உணர்ந்தார். கண்களை பிசைந்தபடி ஒரு வயோதிபரே போல கைகளை ஊன்றி கஷ்டப்பட்டு எழுந்தார்... அவர் எதிரே ராசம் நின்றிருந்தாள்...

"என்ன ஐயா...? ஏன் இஞ்சை படுத்திருக்கிறியள்...? இம்மட்டு நாளும் எங்கை போயிருந்தனீங்கள்...?" என்று கண்கள் கலங்க அவர் மேல் கேள்விக் கணைகளை அடுக்கினாள் ராசம்...

அவர் அக் கேள்விகள் எதற்குமே மறுமொழி சொல்லும் திராணியற்றவராக அழத் தொடங்கிவிட்டார்... ராசம் அவர் அருகே அமர்ந்து அவரை தேற்றினாள்... அழுவதன் மூலமே ஆறுதல் பெறக் கூடிய நிலையில் இருந்த அவர்... சொற்கள் தடுமாற...

"ஏன் ராசம்... என்ரை மகள்... நிலாகுட்டி உன்னோடைதானே இருக்கிறாள்...?" என்று ஆவலுடனும் நம்பிக்கையுடனும் வினாவினார்...

ராசத்துக்கு பெரும் பதட்டமாகவும் வெட்கமாகவும் போய்விட்டது. பதில் சொல்வதற்குப் பதிலாக தானும் அழத் தொடங்கினாள். ராஜநாதர் பயந்து விட்டார்... ஏற்கனவே மனைவியையும் மகனையும் இழந்தவர்... எனவே நிலாவினிக்கும் ஏதாவது நேர்ந்து விட்டிருக்குமோ என்று பயந்தார்.

"ஏன் ராசம் என்ரை நிலாக்குட்டி உன்னோடை இல்லையா? என்ரை நிலாக்குட்டியை நான் பார்க்க ஏலாதா? சொல்லன்..." என ராசத்தை கலக்கத்துடன் வினாவினார்...

ராசம் சேலைத் தலைப்பை இடுப்பிலிருந்து உருவி கண்களையும் முகத்தையும் துடைத்தபடி கூறினாள்...

"ஐயா... நிலாக்குட்டியை கொழும்புக்கு போகவிடாமல் தடுத்து எங்களோடை வைச்சிருக்கிறதுக்கு கந்தவேள் முயற்சி செய்தவன்... ஆனால் நிலாக்குட்டி அவன்ரை பேச்சைக் கேளாமல் கொழும்புக்கு போயிற்றா... அவா ஒரு நாள் திடீரெண்டு திரும்பி வந்து கந்தவேளின்ரை பிள்ளையொண்டு தன்ரை வயித்திலை வளருதெண்டு கூறினா... அதை கந்தவேள் ஏற்கேல்லை. என்ன நடந்ததெண்டு எனக்கு தெரியேல்லை ஐயா. கந்தவேள் என்னை அதட்டி அடக்கி வைத்துவிட்டு நிலாக்குட்டியை துரத்தி விட்டான். அதற்கு பிறகு நிலாக்குட்டி எங்கை இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் எண்ட விபரம் எனக்கு தெரியேல்லை ஐயா..."

ராசம் கூறுவனவற்றைக் கேட்டதும் ராஜநாதர் விறைத்துவிட்டார். தலைமைத்துவம் தப்பிய நிறுவனம் மட்டுமல்ல தகுந்த பாதுகாப்பு இல்லாத பெண்ணின் வாழ்க்கை கூட எப்படி சீரழிந்து போகின்றது என்பதை காலம் தாழ்த்தி அவர் இப்போ உணர்ந்தார்.

மீண்டும் ராசமே பேசினாள்...

"ஐயா... நீங்கள் வீட்டுக்கு வாங்கோ... நிலாக்குட்டி பக்க நியாயத்தை கதைக்க ஆளில்லை எண்டு ஒரு நிலைமை இருந்ததாலைதான் கொழும்புக்காரர்கள் அவளை பிள்ளை வயிற்றோடை துரத்திவிட்டிருப்பினை. நீங்கள் இப்ப இருக்கிறதாலை கந்தவேள் கொழும்புக்கு போய் நிலாக்குட்டியின்ரை வாழ்க்கையை சீரழிச்சவனை காதிலை பிடிச்சு இழுத்துக் கொண்டு வந்து நிறுத்துவான்..."

ராஜம்மாளின் மகனை நம்பி நிலாவினியை கொழும்புக்கு அனுப்பிய விவகாரத்தில் ராஜநாதரும் பங்கேற்றிருந்தார்... நிலாக்குட்டி குழந்தைப் பிள்ளை. விளக்கமற்ற தனமாக கொழும்பில் நடந்துவிட்டு கந்தவேளை நம்பி இங்கு வந்திருப்பாள் என்பதில் அவருக்கு ஐயம் ஏதும் இல்லை...!

"ஐயா... பொழுதுபடுகிற நேரமாய்ப் போச்சு... உங்களாலை எங்கடை வீடு காண நடக்கவும் ஏலாது...'ஓட்டோவிலை போவம்' எனக் கூறி 'ஓட்டோ' ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

'ஓட்டோ'வுக்கு பணம் செலுத்த ராசம் முந்தானை தலைப்பை உருவி அவிழ்த்தபோது ராஜநாதர் அவளது கையை தடுத்து தனது துணிப்பையிலிருந்து ஒரு கத்தை பணத்தை எடுத்து அவள் கையில் திணித்து...

"ராசம்... இனி எனக்கும் நிலாக்குட்டிக்கும் நீயில்லாமல் துணை இல்லை" என்று கூறி விம்மி விம்மி அழுதார்...

ராசம் பொங்கும் பாசத்துடன் அவரது நடுங்கும் கரங்களை பற்றி தனது கண்களில் ஒற்றியபடி...

"ஐயா... அக்காவிட்ட பிழையை நான் விடமாட்டன்" என்று உறுதியளித்தாள்...!

கந்தவேளுக்கு ராஜநாதர் வந்து சேர்ந்தது மிகவும் மகிழ்ச்சியை கொடுத்தது... நிலாவினி அவனது அன்பை மறுத்துச் சென்றவள். ஆனால் ராஜநாதர் கடைசிவரையில் கந்தவேளின் உதவியை நாடி நின்றவர்... தனது தந்தையைக் காட்டிலும் அவரில் பாசம் மிகக் கொண்டவனாக அவன் இருந்தான்... வைத்தியசாலையில் அவர் அநுபவித்த துன்பம்... மனைவியை மகனை இழந்ததால் உண்டான கவலை... தொழிலையும் சொத்துக்களையும் இழந்த பாதிப்பு... எல்லாவற்றிற்கும் மேலாக அவர் பாசம் மிகக் கொண்ட நிலாக்குட்டியின் அநாதரவானதும் பரிதாபகரமானதுமான நிலை! ஒரு குடும்பத்தலைவன் எத்தனை பாரிய பிழையை செய்திருந்தாலும் கூட இப்படி ஒரு பரிதாபமான நிலை அவனுக்கு வரக்கூடாது. தண்டனையே போல அவரது முகமும் ஆரோக்கியமும் கெட்டுவிட்ட நிலையில் அவர்முன் அவரது எந்த கட்டளையையும் நிறைவேற்ற ஆயத்தமானவனாக கந்தவேள் பணிந்து நின்றான்.

அந்த இரவு ராசம் அவரை சுடுநீரில் குளிப்பாட்டி அவருக்கு உகந்த உணவு வகைகளை சமையல் செய்து தேற்றினாள்... அவர் நாளாந்தம் எடுக்க வேண்டிய மருந்து வகைகளை கேட்டு தெரிந்து கொண்டாள்.

“ஐயா... நிலாக்குட்டியை நான் கடைசியாய் மகப்பேற்று ‘கிளினிக்கிலை’ சந்திச்சனான்... ‘வந்து அம்மாவோடை இரு’ எண்டு கேட்டதுக்கு அவா மாட்டன் எண்டு சொல்லிப் போட்டா... ஆனால் இந்த நகரிலைதான் அவா இருக்கிறா. எப்படியும் தேடிக் கண்டு பிடிக்கலாம்...” என்று கந்தவேள் நம்பிக்கை தெரிவித்தான்...

“கந்தவேள்... நீ எங்கடை குடும்பத்திற்கு செய்த உதவிகளுக்கு காலம் காலமாய் பணி செய்தாலும் கூட என்னாலை கடனை அடைக்க முடியாது. நான் நல்லாய் நொந்து போயிருக்கிற இந்த நேரத்திலை நீ எனக்கு செய்யவேண்டிய மற்றொரு உதவியை கேளாமல் என்னாலை இருக்க முடியேல்லை...”

ராஜநாதரின் கண்களிலிருந்து ‘அருவியென’ நீர் வழிந்தது... அது வெறும் கண்ணீரா அல்லது ஆனந்தக் கண்ணீரா என்பதை புரிந்து கொள்ளமுடியவில்லை. கந்தவேள் எழுந்து வந்து அவரது காலடியில் அமர்ந்து விட்டான்...

“ஐயா... எங்கடை குடும்பத்துக்கும் உங்கடை குடும்பத்துக்கும் இடையிலை இண்டைக்கு நேற்றுத்தான் பாசப் பிணைப்பு வந்ததெண்டு இல்லை. நாட்டின்ரை

யுத்த நிலைமை எங்களை சிதறடிக்கச் செய்திருந்தாலும் உங்களுக்கும் எங்களுக்குமிடையிலான அன்பை நான் ஒவ்வொரு கணமும் உள்ளுர உணர்ந்து கொண்டுதான் இருக்கிறன். நான் உங்களுக்கு என்ன உதவி செய்ய வேணும் எண்டு சொல்லுங்கோ அதற்கு பிறகு இந்த கந்தவேள் உங்களுக்கு ஆர் எண்டதை உணரச் செய்ய வேண்டிய பொறுப்பு என்னுடையது'' என்று உறுதியாக அடித்துச் சொன்னான் கந்தவேள்...

ராஜநாதர் சிறிது நேரம் சிந்தித்தார்... பின் நிதானமாக கூறினார்...

“கந்தவேள்... முதல்லை நீ நிலாக்குட்டியை எனக்கு கண்டு பிடிச்சு தரவேணும்... பிறகு என்னையும் அவளையும் கொழும்புக்கு கூட்டிக் கொண்டு போகவேணும்... ராஜம்மாளிடம் எப்படி நிலாக்குட்டியின் பொறுப்பை ஒப்படைப்பது எண்டது எனக்குத் தெரியும்...''

நிலாக்குட்டியின் பிரச்சனையை ராஜம்மாள் குடும்பத்துடன் எடுப்பதில் கந்தவேளுக்கு இருந்த ஒரே தடை அவளுக்கு உறவு முறையானவர் எவரும் இல்லாதிருந்ததே. இப்போ அவளது தந்தையே வந்து விட்டதால் அவன் தைரியம் பெற்றான்... நிலாக்குட்டியை கண்டு பிடித்து அவளை கொழும்புக்கு அழைத்துச் சென்று ராஜம்மாளின் மகனுக்கு விவாகம் செய்து வைக்காமல் ஓயப்போவதில்லை என அவன் திடசங்கற்பம் செய்து கொண்டான்...

“ஐயா... நீங்கள் இப்ப நல்லாய் படுத்து தூங்குங்கோ... காலையிலை நிலாக்குட்டியை எப்படியும் நான் தேடிக் கண்டுபிடிப்பன்... இது உறுதி... உறுதி... உறுதி ஐயா...!'' என்று அடித்து கூறினான்...

பல நாட்களின் பின்னர் ராஜநாதர் அன்றுதான் அமைதியாக தூங்கினார்...

இனி நிலாக்குட்டிக்கும் பிரதீப்புக்கும் விவாகம் நடந்துவிடும்!

*************************

மறுநாள் காலையில் ராஜநாதர் நேரகாலத்துடன் எழுந்தார். ராசம் அவருக்கு ஆகியவற்றை செய்தாள். கந்தவேள் அலுவலகத்திற்கு விடுமுறை கோரி விண்ணப்பித்தான்...

மூவரும் 'ஓட்டோ' ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வைத்தியசாலைக்கு சென்றனர்.. மகப்பேற்று ' கிளினிக்கில்' பல கர்ப்பிணிகள் இருந்தனர்... அவர்கள் மத்தியில் நிலாவினி இருக்கக் கூடும் என்று நம்பி கந்தவேள் ஓடிச் சென்று ஒவ்வொருவராக உற்றுப்பார்த்தான். தெரிந்தவர்களிடம் நிலாவினி பற்றி விசாரித்தான்... அவளுக்கு குழந்தை கிடைத்துவிட்டதாக தெரிவித்தார்கள்.

கந்தவேள் விரைந்து செயற்பட்டான்... தாதி ஒருத்தியின் உதவியுடன் 'கிளினிக்' பதிவில் நிலாவினியின் வசிப்பிடத்தை கண்டு பிடிக்க அதிக நேரம் எடுக்கவில்லை...

அவள் தங்கியிருக்கும் ஆச்சிரமத்திற்கு 'ஓட்டோ' பறந்தது... மூவரின் மனத்திலும் "நிலாக்குட்டி... நிலாக்குட்டி... உனக்கு ஒரு குழந்தையா...?" என்ற கேள்வியே குடி கொண்டிருந்தது.

ஆச்சிரமத்தை அடைந்ததும் கந்தவேள் அலுவலகத்தை நோக்கி ஓட முற்பட்டான்... ராசம் அவனை தடுத்து ஒரு மரத்தின் திசையை நோக்கி கைகளால் சுட்டிக்காட்டினாள்...

அங்கு நிலாவினி கைக்குழந்தையுடன் நிழலில் உலாவியபடி நின்றிருந்தாள்.

கந்தவேள் அதன் பின்னர் அசையவில்லை. ராஜநாதரும் 'ஓட்டோவால்' இறங்கி கந்தவேளுடன் இணைந்து கொண்டார்...

ராசம் ஓடிச்சென்று நிலாவினியிடமிருந்த குழந்தையை பறித்தெடுத்தாள்... அதனை புரட்டிப் புரட்டிப் பார்த்தாள்... நிழிலிலிருந்து அகற்றி வெயிலில் பிடித்துப் பார்த்தாள்... பின்னர் ஓவென்று குரல் வைத்து அழுதாள்... பித்துப் பிடித்தவள் போல ராஜநாதரையும் கந்தவேளையும் நோக்கி ஓடிவந்தாள்... நிலாவினியும் பின்னால் துரத்தி வந்தாள்... ராசம் அந்த பிள்ளையை அணைத்து அணைத்து கொஞ்சினாள். தனது கண்ணீரால் அந்த பிள்ளையை நீராட்டியபடியே...

"இந்தக் குழந்தை... இந்தக்குழந்தையை எனக்கு இப்ப போலவே ஞாபகம் இருக்கு... இருபத்தைஞ்சு வருசத்திற்கு முன்னாலை இரத்தம் தோய்ஞ்ச பாலகனாய் என்னிலையிருந்து பிரித்தெடுத்து அந்த தாதி காட்டிய குழந்தை இதுதான்யூ அந்த வேதனையான நேரத்திலையும் என்ரை மனதிலை படிஞ்ச அந்த குழந்தைதான்

இது... என்ரை மார்போடை அணைச்சு வைச்சு என்ரை உதிரத்தை பாலாய் குடுத்த எனக்கு எந்த ஞாபக மறதியும் இல்லை... இது கந்தவேள்... கந்தவேள்... கந்தவேளின்ரை அச்சுத்தான் இந்தக் குழந்தை" என்று ஆவேசத்துடன் கத்தியபடி கந்தவேளின் கைகளில் குழந்தையை கொடுத்தாள்.

கந்தவேள் அதிர்ந்து விட்டான். அவனது மூக்கு... கன்னத்துடன் இணைந்த காதுச்சோணை... கறுத்த கேசம்... அவன் அக் குழந்தையில் தன்னை தானே கண்டான்...! குழந்தையை வலது கையில் பற்றியபடி ஓடிச் சென்று நிலாவினியை இடது கையால் அணைத்துக் கெண்டே.....

"என்னை மன்னித்துவிடு நிலாக்குட்டி..." என்று மன்றாடினான்.

ராஜநாதரும் ராசமும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்...

முற்றும்.

## அன்பு வாசக நெஞ்சங்களே....!

### வசந்த காலம்

மரங்கள் பூத்து குலுங்கி நிற்கின்றன. பறவை இனங்கள் இணை தேடி பறந்து செல்கின்றன மயில் ஆடுகின்றது குயில் கூவுகின்றது. வண்ணத்திகள் பூக்களில் தேன் தேடி பறந்து செல்கின்றன. இளைஞனாக இருந்தவன் யுவதி ஒருத்திக்காக ஏங்குகின்றான். அவனது உள்ளம் இனம் தெரியாத மகிழ்ச்சியில் பூத்து பூரித்து நிற்கின்றது. அவளின் கடைக் கண் வீச்சில், பேச்சொலியில், ஸ்பரிசத்தில் அவன் மயங்கி விடுவதோடு ஆரம்பமாகின்றது அவனது வசந்த காலம். புலன் வழி இன்பத்திற்காக அவன் ஓடி ஓடி உழைக்கின்றான். தனக்கென ஒருத்தியை வரித்துக் கொள்கின்றான். அவளுக்காகவே அனைத்தையும் செய்கின்றான்.
அவளது மகிழ்ச்சியில் சுகம் காண்கின்றான். இருவரும் இணைந்து காணும் அந்த சுகத்தை என்னென்பது! ஓ! அந்த வசந்த காலம்!!

### வசந்த கால நினைவுகள்

கிழக்கில் காலையில் உதிக்கும் சூரியன் மாலையில் மேற்கில் மறைகின்றான். மொட்டுக்கள் பூத்துக் குலுங்குவதுடன் நிலைத்துவிட மாட்டா! உதிர்வு என்று ஒன்றை சந்தித்தே தீர வேண்டும்!
முப்பது வயது வரை வளர்ச்சிப் படியில் நின்றவன் முதுமையை நோக்கிய நகர்வை எதிர் கொள்கின்றான்.
நாற்பதின் பின்னர் பொறுப்புக்களுக்கு ஆளாகின்றான்.
புலன் வழி இச்சைகளுக்கு விடை கொடுக்க வேண்டிய கட்டாயம்.
இன்ப மயமான வசந்த கால நினைவுகள் அவனது வயோதிபத்தில் துணை நிற்கின்றது. ஆன்மீகம் முதற்றடவையாக கதவை தட்டுகின்றது. அவன் தயங்குகின்றான்.
வசந்த கால நினைவுகளே அவனை மீண்டும் ஆசை வலைக்குள் வீழ்த்தி விடுகின்றது!

### மீண்டும் வசந்தம்

ஆசைக்கு எல்லை இல்லை. தீனி போடப் போட மீண்டும் மீண்டும் என்று கேட்டபடி இருப்பதுவே அதன் இயல்பு. கட்டுப்பாடான வாழ்க்கையில் சலிப்பு ஏற்படுகின்றது. ஆன்மிக சிந்தனை தோல்வியைத் தழுவுகின்றது! வசந்த கால நினைவுகளின் சுகத்தில் திருப்தி காண வேண்டியவன் எதையோ தேடுகின்றான்.

அந்த தேடலின் தேடலே இந்த நாவல்

ISBN 955-98979-0-X

நன்றி
**திருமலை. வீ. என். சந்திரகாந்தி.**

தி/ஜெயகாந்தி கலை கலாச்சார
விளையாட்டு மேம்பாட்டு கழகம்
572/A, ஏகாம்பரம் வீதி. திருக்கோணமலை.
ஸ்ரீலங்கா. 026-2224706